9. The Hon. Thiru C. PONNAIYAN : (Minister for Law)—Law Courts, Prisons, Deputy Collectors, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legisaltion on Money Lending, Legisaltion on Chits and Molasses.

10. The Hon. Dr. H. V. HANDE : (Minister for Health)—Health and Environmental Pollution Control.

11. The Hon. Thiru S. MUTHUSWAMY : (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

12. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU : (Minister for Food)—Food, Price Control and Census.

13. The Hon. Thiru V. V. SWAMINATHAN : (Minister for Excise and Handlooms)—Prohibition excluding grant of Liquor Permits, Excise, Handlooms and Textiles.

14. The Hon. Thiru R. SOUNDARARAJAN : (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

15. The Hon. Thiru T. VEERASAMY : (Minister for Commercial Taxes)—Commercial Taxes.

16. The Hon. Thiru NALLUSAMY : (Minister for Housing)—Housing, Slum Clerance Board, Town Planning and Accommodation Control.

17. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN : (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries

18. The Hon. Thiru T. RAMASWAMY : (Minister for Rehabilitation and Employment)—Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

19. The Hon. Thiru A. ARUNACHALAM : (Minister for Adi Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

20. The Hon. Thiru M. R. GOVENDAN : (Minister for Backward Classes)—Backward Classes and Fisheries

21. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN : (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Beggers Home, Orphanages and Correctional Administration.

22. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY: (Minister for Khadi)—Khadi, Bhoodan and Gramdhan.

23. The Hon. Thiru Y. S. M. YUSUF : (Minister for Public Works)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

24. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN : (Minister for Co-operation)—Co-operation.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்கள்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு திரு. வி. பி. வேடசந்தூர் பாலசுப்பிரமணியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.

திரு. செ. செம்மலை.

திரு. சைதை சா. துரைசாமி.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

இணைச் செயலர்ளர்

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

துணைச் செயலாளர்

திரு. வெ. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

குழு அலுவலர்கள்

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.

திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு. ப. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ.ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு. ஜெ. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

திரு. வ. சா. ஜான், பி.ஏ.

திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.

திரு. மாகு. ஜோசப், பி.ஏ.

எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கேசவராம், பி.ஏ.,

திரு. டி. ஜேக்கப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.,

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. கோ. வெங்கட்டராமன்.

தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.,

துணைச் செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், எம்.ஏ., (தமிழ்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
1. அண்ணாதான் திரு எம்.	திருவரம்பூர்
2. அப்துல் சமத் திரு ஆ. கா. அ.	திருவல்லிக்கேணி
3. அப்துல் மஜீத் திரு எச்.	வாணியம்பாடி
4. அரங்கநாயகம் திரு செ.	தொண்டாமுத்தூர்
5. அரிக்குமார் திரு இரா.	பேரணமல்லூர்
6. அருணாசலம் திரு இரா.	நாமக்கல் (செ.வ.)
7. அருணாசலம் திரு எ.	வரகூர் (செ.வ.)
8. அன்பழகன் திரு க.	பார்க் டவுன்
9. அன்பழகன் திரு கே.	ஓமலூர்
10. அன்பழகன் திரு தி.	நாட்ராம்பள்ளி
11. அன்பழகன் திரு பொ.	இளையான்குடி
12. ஆண்டி அம்பலம் திரு மெ.	நத்தம்
13. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி திரு	ஆண்டிமடம்
14. ஆபிரகாம் திரு ம.	ஆலந்தூர்
15. ஆறுமுகம் திரு ஆ.	வந்தவாசி
16. ஆறுமுகம் திரு எச். ஜி.	பென்னாகரம்
17. ஆறுமுகம் திரு ஆர். எஸ்.	ஓட்டப்பிடாரம் (செ.வ.)
18. ஆறுமுகம் திரு ஏ. எஸ். ஏ.	விருதுநகர்
19. ஆறுமுகம் திரு சே.	மதுராந்தகம்
20. ஆறுமுகம் திரு மு.	சேலம்-2.
21. ஆனந்த கிருஷ்ணா திரு ஜி.	பூந்தமல்லி
22. ஆனந்தன் திரு மு.	உளுந்தூர்பேட்டை
23. இரகுபதி திரு கோ.	காட்பாடி
24. இரத்தினம் திரு எம். வி.	பொள்ளாச்சி
25. இரத்தினவேலு திரு சே.	முசிறி
26. உராசமாணிக்கம் திரு ஆர்.	அரூர் (செ.வ.)
27. இராசமாணிக்கம் திரு எல்ல.	தாம்பரம்
28. இராசரத்தினம் திரு எம்.	கொளச்சல்
29. இராசரத்தினம் திரு எம்.	விழுப்புரம்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
30. இராசாங்கம் திரு மு.	திருவிடைமருதூர்
31 இராசம்மாள் திருமதி த.	தலைவாசல் (செ.வ.)
32. இராசாராம் திரு க.	பனமரத்துப்பட்டி
33. இராசாராமன் திரு எஸ்.	பாபநாசம்
34. இராசு திரு வி. கெ.	அரக்கோணம் (செ.வ.)
35. இராசேந்திரன் திரு எஸ். என்.	தூத்துக்குடி
36. இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி.	ஆண்டிப்பட்டி
37. இராமச்சந்திரன் திரு கே. எஸ். எம்.	போடிநாயக்கனூர்
38. இராமச்சந்திரன் திரு கே. கே. எஸ். எஸ். ஆர்.	சாத்தூர்
39. இராமச்சந்திரன் திரு ச.	பன்ருட்டி
40. இராமச்சந்திரன் திரு சோ. ம.	அண்ணாநகர்
41. இராமச்சந்திரன் திரு ப. ந.	பட்டுக்கோட்டை
42. இராமசாமி திரு எஸ். என்.	சாத்தான்குளம்
43. இராமசாமி திரு த.	இராமநாதபுரம்
44. இராமநாதன் திரு மு.	கோயம்புத்தூர் மேற்கு
45. இராமலிங்கம் டாக்டர் கே. பி.	ராசிபுரம்
46. இளங்கோவன் திரு ஈ. வே. கி. ச.	சத்தியமங்கலம்
47. ஈஸ்வரன் திரு ஆர்.	வாசுதேவநல்லூர் (செ.வ.)
48. உச்சி திரு கே.	கூடலூர்
49. உத்திராபதி திரு பொ.	திருத்துறைப்பூண்டி (செ. வ.)
50. எத்திராசன் திரு கி.	அச்சரப்பாக்கம் (செ.வ.)
51. கணபதி திரு கே. ஆர்.	சிதம்பரம்
52. கதிர்வேலு திரு மா.	ராணிப்பேட்டை
53. கந்தசாமி திரு கா. வே.	கிணத்துக்கடவு
54. கந்தசாமி திரு பி.	பொங்கலூர்
55. கல்லன் திரு கே.	உதகமண்டலம்
56. கலிதீர்த்தான் திரு சோ.	சங்கராபுரம்
57. காளிமுத்து மாக்டர் கா.	மதுரை கிழக்கு
58. கிருஷ்ணசாமி திரு கே. ஏ.	ஆயிரம் விளக்கு
59. கிருஷ்ணசாமி திரு வி. இரா.	அணைக்கட்டு

TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
60. கிருஷ்ணமூர்த்தி திரு கி.	கும்பகோணம்
61. கிருஷ்ணராஜ் திரு ஜி.	சேலம்-1
62. குப்புசாமி திரு கே.	ஒட்டன்சத்திரம்
63. குப்புசாமி திரு வே.	செய்யாறு
64. குமர குருபர ராமநாதன் திரு ச.	விளாத்திகுளம்
65. குமரி அனந்தஅ திரு	ராதாபுரம்
66. குமாரதாஸ் டாக்டர் தே.	கிள்ளியூர்
67. கோமதி சீனிவாசன் திருமதி	வலங்கைமான் (செ.வ.)
68. கோவிந்தசாமி திரு ஆர்.	குடியாத்தம்
69 கோவிந்தசாமி திரு ச.	எடப்பாடி
70. கோவேந்தன் திரு எம். ஆர்.	பேராவூரணி
71. சங்கரலிங்கம் திரு ச.	சங்கரநாயனார் கோவில் (செ. வ.)
72. சண்முகம் திரு இரா.	திருத்தணி
73. சண்முகம் திரு என்.	சோளிங்கர்
74. சண் துகம் திரு ப. உ.	மேல் மலையனூர்
75. சண்முகையா பாண்டியன் திரு எம்.	ஆலங்குளம்
76. சந்திரசேகரன் திரு ஆ.	சோழவந்தான்
77. சந்திரசேகர் திரு மு.	முதையூர்
78 சசசுல ஆலம் திள வி. எஸ். டி.	பாளையங்கோட்டை
79. சமரசம் டாக்டர் கே.	காவேரிப்பட்டினம்
80. சரோஜா திருமதி இரா.	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
81. சாமிக்கண்ணு திரு த.	செங்கம் (செ.வ.)
82. சித்தன் திரு என். எஸ். வி.	திருமங்கலம்
83. சிந்தன் திரு வி. பி.	வில்லிவாக்கம்
84. சிவக்குமார் திரு ஆர்.	சமயநல்லூர் (செ.வ.)
85. சிக்க்குமார் திரு எம்.	நூனூர் (செ.வ.)
86. சிவஞானம் திரு ந.	திருவோணம்
87. சிவப்பிரகாசம் திரு சி.	சேந்தமங்கலம் (ஆ.வா.)
88. சிவராமன் திரு எஸ்.	சின்ன சேலம்
89. சிவராஜ் திரு ச	ரிஷிவந்தியம்
90, சின்னக்குழந்பித திரு மு.	ஆரணி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
91. சின்னச்சாமி திரு ரா.	தர்மபுரி
92. சின்னசாமி திரு வே. கு.	பவானிசாகர்
93. சின்னராசு திரு க. இர.	கிருஷ்ணகிரி
94. சின்னராசு திரு மா.	மேட்டுப்பாளையம்
95, சுந்தரதாஸ் திரு மா.	விளவன்கோடு
96 சுப்பராயன் திரு கு.	திருப்பூர்
97. சுப்பிரமணிய ஆதித்தன் திரு எஸ். ஆர்.	திருச்செந்தூர்
98. சுப்பிரமணியன் திரு உ.	சிவகங்கை
99 சுப்பிரமணியன் திரு வி.	கண்டமங்கலம் (செ.வ.)
100. சுப்புராயர் திரு சி.	கம்பம்
101. சுவாமிநாதன் திரு வி. வி.	புவனகிரி
102. செங்காளியப்பன் திரு ஆர்.	சிங்காநல்லூர்
103. செங்கோட்டையன் திரு கு. அ.	கோபிச்செட்டிப் பாளையம்
104. செங்கோட்டையன் திரு பெ.	கபிலர்மலை
105. செம்மலை திரு செ.	தாரமங்கலம்
106. செல்லமுத்து திரு எம்.	திருவாரூர் (செ.வ.)
107. செல்லப்பா திரு வி. கோ.	கடலூர்
108. செல்வராசன் திரு அ.	துறைமுகம்
109. சேகர் திரு கே. பி. கே.	பொன்னேரி (செ.வ.)
110. சைதை துரைசாமி திரு சா.	சைதாப்பேட்டை
111. சொர்ணலிங்கம் திரு கா.	திருவாடனை
112. சோலைராசு திரு க.	மருங்காபுரி
113. சௌந்திரராஜன் திரு ஆர்.	ஸ்ரீரங்கம்
114. சௌரிராஜன் டாக்டர் கே.	தியாகராயநகர்
115. ஞானசுந்தரம் திரு சா.	மன்னார்குடி
116. டேனியல்ராஜ் திரு எஸ்.	ஸ்ரீவைகுண்டம்
117. தங்கமணி திரு மு.	மாயூரம்
118. தங்கமணி திரு கே. எம்.	திண்டிவனம்
119. தங்கராசு திரு ஏ.	குறிஞ்சிப்பாடி
120. தங்கராசு திரு செ.	மங்களூர் (செ.வ.)
121. தங்கவேல்ராஜ் திரு பி. எம்,	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
122. தங்கவேலு திரு வி.	வால்பாறை (செ.வ.)
123. தமிழ்மணி திரு	திருப்போரூர் (செ.வ.
124. தமிழரன் திரு கு.	பேரணாம்பட்டு (செ.வ.)
125. தனபால் திரு ப.	சங்கரி (செ.வ.)
126. தாமரைக்கனி திரு இரா.	ஸ்ரீவில்லியுத்தூர்
127. தியாகராசன் திரு ஆர்.	விருத்தாசலம்
128. திருஞானம் திரு பி. ஆர்.	ஏற்காடு (ஆ.வ.)
129. திருநாவுக்கரசு திரு எஸ்.	அறந்தாங்கி
130. திருமலைசாமிக் கவுண்டர் திரு சு.	உடுமலைப்பேட்டை
131. தீர்த்தகிரிக் கவுண்டர் திரு டி.	மொரப்பூர்
132. தீர்த்தராமன் திரு ப.	பாலக்கோடு
133. துரை அன்பரசன் திரு	நெல்லிக்குப்பம்
134. துரை கிருஷ்ணமூர்த்தி திரு	தஞ்சாவூர்
135. துரை கோவிந்தராஜன் திரு	திருவையாறு
136. துரைராசு திரு எஸ். பி.	காரைக்குடி
137. துரை ராமசாமி திரு	வெள்ளக்காவில்
138. தெய்வநாயகம் திரு ஏ.	மதுரை சென்ரல
139. தேவராஜ் திரு வி. எம்.	வேலூர்
140. நடராசன் திரு ஆ.	பேரூர்
141. நரசிம்மபல்லவன் திரு க.	உத்திரமேரூர்
142. நரசிம்மன் திரு பூ. மு.	பள்ளிப்பட்டு
143. நல்லமுஎது டாக்டர் க.	பெரம்பலூர் (செ.வ)
144. நல்லசாமி திரு என்.	திருச்சிராப்பள்ளி-2
145. நாச்சிமுத்து திரு கே. பி.	மேட்டூர்
146.	திருநெல்வேலி
147. நாராயணன் திரு பு. கோ.	பவானி
148. நெடுஞ்செழியன் டாக்டர் இரா.	ஆத்தூர்
149. பட்டாபிராமன் திரு செ.	திருவள்ளூர்
150. பரமசிவம் திரு ப. ந.	பல்லடம்
151. பருதி இளம்வழுதி திரு	பெரம்பூர்
152. பழனி திரு த.	ஆற்காடு
153. பழனிச்சாமி திரு கா. செ.	காங்கேயம்
154. பழனிமுத்து திரு சி.	ஆத்தூர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
155. பாண்டியன் திரு பி. எச்.	சேரன்மாதேவி
156. பாண்டுரங்கன் திரு மு.	கலசபாக்கம்
157. பாப்பா சுப்பிரமணியன் திரு	குத்தாலம்
158. பாரதி திரு ஜி. கே. ஜெ.	திருவொற்றியூர்
159. பாரமலை திரு க.	மானாமதுரை (செ.வ.)
160. பாலகிருஷ்ணன் திரு ச.	மொடக்குறிச்சி
161. பாலகிருஷ்ணன் திரு வி.	சிவகாசி
162. பாலச்சந்திரன் திரு வை.	பத்மநாபபுரம்
163. பாலசுப்பிரமணியன் திரு க.	சீர்காழி (செ.வ.)
164. பாலசுப்பிரமணியன் திரு எஸ்.	அம்பாசமுத்திரம்
165. பாலசுப்பிரமணியன் திரு வேடசந்தூர் வி. பி.	வேடசந்தூர்
166. பாலன் திரு சு.	எழும்பூர்
167. பாலாஜி திரு கே.	காஞ்சிபுரம்
168. பாலுச்சாமி திரு ஏ.	பரமக்குடி (செ.வ.)
169. பாலுசாமி திரு அ.	நிலக்கோட்டை (செ.வ.)
170.	அருப்புக்கோட்டை
171. பிரணவநாதன் திரு அ.	கடலாடி
172. பிரேம்குமார் திரு ஆ.	திண்டுக்கல்
173. புருசோத்தமன் திரு எஸ்.	அரியலூர்
174. புஷ்பராசு திரு த.	திருமயம்
175. பெரியசாமி திரு அ.	தாராபுரம் (செ.வ.)
176. பெரியசாமி திரு ரா.	தொட்டியம்
177. பெருமாள் திரு தெ.	கடையநல்லூர்
178. பெருமாள் பிள்ளை திரு கோ.	கன்னியாகுமரி
179 பொன் முத்துராமலிங்கம் திரு	மதுரை (மேற்கு)
180. பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ்.	பழனி (செ.வ.)
181. பொன்னுசாமி டாக்டர் அ.	பெருந்துறை
182. பொன்னுரங்கம் திரு ப.	ராயபுரம்
183. போன்னையன் திரு சி.	திருச்செங்கோடு
184. மணவாளன் திரு எஸ். பி.	திருப்பத்தூர்
185. மணிமாறன் திரு மா.	நன்னிலம் (மெ. வ.)
186. மலர் மன்னன் திரு அ.	திருச்சிராப்பள்ளி-1

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
187.	மனோகரன் திரு கி.	புரசைவாக்கம்
188.	மனோகரன் திரு தி. நா. கோ. அ.	திருநாவலூர்
189.	மாசிலாமணி டாக்டர் ந.	ஜெயங்கொண்டான்
190.	மாதவன் திரு செ.	திருப்பத்தூர்
191.	மாதையன் திரு யு. பி.	அந்தியூர் (செ. வ.)
192.	மாரிமுத்து திரு த.	குளத்தூர் (செ. வ.)
193.	மாரிமுத்து திரு மு.	திருப்பரங்குன்றம்
194.	மீனாட்சிசுந்தரம் திரு மா.	வேதாரண்யம்
195.	முகம்மது கனி திரு ஜே.	புதுக்கோட்டை
196.	முகம்மது சலீம் டாக்டர் த.	பெரியகுளம்
197.	முசிறிபுத்தன் திரு பி.	குளித்தலை
198.	முத்துசாமி திரு பி.	ஈரோடு
199.	முத்துராமலிங்கம் திரு பி. க்க. எம்.	உசிலம்பட்டி
200.	முத்துவேல திரு கே.	முதுகுளத்தூர்
201.	முத்தையா திரு இரா.	சேடப்பட்டி
202.	முருகானந்தம் திரு டி. என்.	செஞ்சி
203.	முனிரத்தினம் திரு இரா. சா.	கும்மிடிப்பூண்டி
204.	யசோதா திருமதி டி.	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
205.	ரகுமான்கான் திரு அ.	சேப்பாக்கம்
206.	ரமணி திரு கு.	கோயம்புத்தூர் கிழக்கு
207.	ரவீந்திரன் திரு ஏ. எஸ்.	திருவண்ணாமலை
208.	ராமஜெயம் திரு மா. நா.	வானூர் (செ.வ.)
209.	ராமன் திரு கி.	ராஜபாளையம் (செ.வ.)
210.	ராஜாபாபு திரு ஜெ.	போரூர்
211.	ரெங்கசாமி திரு ஆர்.	கோவில்பட்டி
212	ரெத்தினராஜ் திரு எஸ்.	நாகர்கோவில்
213.	லட்சுமி திருமதி பி.	அவினாசி (செ.வ.)
214.	வடிவேல் திரு கு.	கரூர்
215.	வளர்மதி திருமதி பா.	மயிலாப்பூர்
216.	விஜயபாலன் திரு என்.	பூம்புகார்
217.	ரிஜயட்சுமி பழனிச்சாமி திருமதி	வீரபாண்டி
218.	வீரானம்பலம் திரு க. வெ.	மேலூர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
219. வீரையன் திரு கோ.	நாகப்பட்டினம்
220. வீராசாமி திரு தா.	ஒரத்தநாடு
221. வெங்கடரெட்டி திரு டி.	ஒசூர்
222. வெங்கடாசலம் திரு அ.	ஆலங்குடி
223. வெங்கடாசலம் திரு க.	லால்குடி
224. வெங்டாசலம் திரு டி. எம்.	பரகூர்
225. வெங்கடாசலம் திரு டி. ஆர்.	தென்காசி
226. வேணுகோபால் திரு எஸ்.	டாக்டர் ராதாகிருஷ்ண நகர்
227. வேணுகோபால் திரு கே. வி.	தல்லி
228. வேலு திரு கூடலூர் இ. வி.	தண்டராம்பட்டு
229. ஜகதீசன் திரு ஆனூர் பு. கோ.	செங்கல்பட்டு
230. ஜான் வின்செண்ட் திரு மு.	நாங்குநேரி
231. ஜெகதீசன் திரு சு.	அரவக்குறிச்சி
232. ஜெயசந்திரன் திரு சா.	காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
233. ஜெயராமன் திரு வெ. இரா.	தேவி
234. ஹேமச்சந்திரன் திரு ஜே.	திருவட்டாறு
235. பிரான்சிஸ் திரு ஜி. கே.	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்	அமைச்சர்
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே	அமைச்சர்
3. மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்	அமைச்சர்
4. திரு ஆர் கிருஷ்ணமூர்த்தி	தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே, 13, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 30, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்''

வரப் போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ள வல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

உருக்கு விலை நிர்ணயம்.

754— (*வினா எண். 5805) **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உருக்கு விலை நிர்ணயம் குறித்த முடிவை மறு பரிசீலனை செய்ய மாநில அரசு மைய அரசை வற்புறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன் : இல்லை.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, தற்போது போக்குவரத்துச் செலவை அதாவது 'பிரைட் சார்ஜஸ்' உள்ளடக்கி உருக்கு விலையினை நிர்ணயித்துக் கொண்டிருந்த போதிலும், 'ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா' என்ற மத்திய அரசு நிறுவனம் எதிர்காலத்தில் போக்குவரத்துச் செலவை அந்தந்த மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்வதாக நான் அறிகிறேன். அப்படி போக்குவரத்துச் செலவை மாநிலங்கள் ஏற்றுக் கொண்டால் அது பெரிய சுமையாக அமையும். அதோடு கூடுதல் விலைக்கு உருக்கை விற்க வேண்டிய நிலையும் ஏற்படும். ஆகவே இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அரசு என்ன நிலையை வற்புறுத்தி இருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது இந்தியாவில் இரும்பு எங்கே வாங்கப்பட்டாலும் ஒரே விலையென்ற கொள்கை இருக்கிறது. குறிப்பாக இந்தியாவில் தென்னகத்தில்தான் அதுவும் தமிழ்நாட்டில் என்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லக் கூடிய தொழில்கள் அதிகமாக உள்ளன. ஆகவே அவரவர்கள் ரெயில்வே சார்ஜசும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்ற நிலை வருமானால் தமிழ்நாடு மிகவும் பாதிக்கப்படும். ஆகவே தற்போதுள்ள நடைமுறை, இந்தியாவில் இரும்பு எங்கே வாங்கினாலும் ஒரே விலை "'freightequalisation'" என்று சொல்வார்கள், அதை அப்படியே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. அண்மையில் தென்னகத்தைச் சேர்ந்த தொழில் அமைச்சர்கள் மாநாட்டில், ஜூலை 1985 இல் நடந்த போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இப்போது இந்த உருக்கு விலையை நிர்ணயிக்கிற போது "ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா" எந்தெந்த அடிப்படையில் நிர்ணயம் செய்கிறது என்ற விவரத்தையும், அப்படி விலை நிர்ணயம் செய்கிறபோது மத்திய அரசு நிறுவனமான அந்த நிறுவனம் மாநில அரசை ஏதாவது ஒரு வகையில் கலந்து கொள்கிறதா என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எந்தெந்த அடிப்படையில் 'செயில்' (Sail) நிறுவனம் இந்த விலையை நிர்ணயம் செய்கிறது என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. பொதுவாக உற்பத்திச் செலவை வைத்து அவர்கள் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். நிலக்கரி, இரும்பு போன்ற மூலப் பொருள்கள்—தொழில்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்கு விலையை உயர்த்தும் போது, பெரும்பாலும் அவற்றை பயன்படுத்துவது மாநில அரசுகளாக இருப்பதன் காரணத்தால், மாநிலங்களை கலந்து கொண்டு இந்த விலையை உயர்த்துவது நன்றாக இருக்கும். மாநிலங்களுடைய சம்மதத்தைப் பெற்று என்று கூட இல்லை, மாநிலங்களை கலந்து கொண்டு இந்த விலை உயர்வு இருக்க வேண்டுமென்பதை நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்திய அரசு அதை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தேசம் முழுவதும் உருக்கைப் பொறுத்தவரையில் ஒரே விலை நிர்ணயம் செய்வது என்பது ஒரு சரியான முடிவாகும். மேற்கு வங்கம் போன்ற மாநிலம் இதை எதிர்த்தாலும் கூட இந்தியப் பேரரசு இந்தக் கொள்கையில் உறுதியாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, தென்னகத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் என்ஜி

1986 மே 13]

ணியரிங் இண்டஸ்ட்ரீஸ் அதிகமாக இருப்பதால், உருக்கைப் போல நிலக்கரியும் மின்சார உற்பத்தி போன்ற பல்வேறு பணிகளுக்கு தேவைப்படுகிறது. ஆகவே நிலக்கரிக்கும் உருக்கைப் போன்று ஒரே விலையை நிர்ணயம் செய்ய தமிழக அரசு இந்தியப் பேரரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சியில் வட்டார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு oregional imbalance மூலப் பொருள்கள் இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஒரே விலையில் கிடைப்பது என்பது நல்ல கொள்கை. நிலக்கரியும் அதே போல, சுரங்கங்கள் எப்புலத்தில் இருந்தாலும், ஒரே விலையில் இந்தியா முழுவதும் கிடைக்குமென்ற நிலை இருந்தால் பல மாநிலங்கள் அனல் மின் நிலையங்களைத் தொடங்குவதற்கு முன் வரும். ஆகவே நாமும் அந்தக் கொள்கையை வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருக்கு, நிலக்கரி போன்ற மூலப்பொருட்களின் விலை ஏற்றப்படுகிறபோது மாநிலங்களின் திட்ட மதிப்பீட்டை திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் நேரிடுகிறது. எனவே திட்ட மதிப்பீட்டை நிலைகுலையாமல் வைக்கக்கூடிய வகையில், இந்த விலையேற்றங்கள் ஏற்படுகிறபோது அவற்றால் பாதிக்கக்கூடிய இந்த மதிப்பீட்டை ஈடுகட்ட மத்திய அரசிடமிருந்து மாநில அரசு மானியம் கோருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மானியம் கொடுத்தால், விலையேற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கே பணம் இல்லாததினால் விலையேற்றம் செய்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு நமது அரசு 30 லட்சம் வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தை அறிவித்து இருக்கிறது. இந்தச் சமயத்தில் உருக்கு விலையை மத்திய அரசு இஷ்டம் போல் ஏற்றியிருக்கிறது. எனவே இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு உருக்கு விலையை குறைத்துத் தரும்படி மத்திய அரசை நமது அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய கருத்துரு எதுவும் இல்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது, உருக்கு விலை இந்தியா பூராவிலும் ஒரே விலைக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அதேநேரத்தில் தமிழகத்திற்கு அதை

எடுத்து வருவதற்கு நீண்ட தூரம் இருக்கிறது. ஆகவே அதை எடுத்து வருகின்ற அந்த டிரான்ஸ்போர்ட் சார்ஜ்ஜஸ்—அதாவது போக்குவரத்துச் செலவு அதிகமாக ஆகிறது என்று சொன்னார்கள். ஆகவே தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இந்த டிரான்ஸ்போர்ட்சார்ஜ்ஜஸ் என்று சொல்லக்கூடிய அந்தப்போக்குவரத்துச் செலவைக் குறைக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறதா? இல்லை என்றால் இனிமேல் கேட்டு அதைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது உள்ள நிலைமை நமக்கு சாதகமாக இருக்கக்கூடிய நிலைமை. அதாவது எவ்வளவு தூரம் என்பது முக்கியம் அல்ல. இந்திய அரசு அதற்கான கொள்கையை வகுத்து, ஆராய்ந்து இந்தியாவிலே எங்கே கிடைத்தாலும், இன்றைக்கு ஒரே விலைதான். ஆனால் அதை மாற்றவேண்டும் என்கிற முயற்சி நடக்கிறது. அதை எப்படி மாற்றப் போகிறார்கள் என்றால், இரும்பை அந்தந்த மாநிலங்கள் வாங்கிக் கொண்டு, போக்குவரத்துச் செலவை அவர்களே மேற்கொள்ள வேண்டும் என்று அதாவது ereight equalisation வேண்டாம் என்கிற ஒரு முயற்சி நடைபெறுகிறது. அந்த முயற்சியை எதிர்த்துத்தான் தமிழக அரசு வாதாடி வருகிறது. ஏற்கனவே உள்ள நடைமுறை இந்தியாவிலே நாம் எங்கே இருந்து வாங்கினாலும் ஒன்று என்ற நிலைமைதான் இருக்கிறது. போக்குவரத்துக்கு என்று தனியாக செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
வ

அய்யம்பேட்டையில் உபமின் நிலையம்.

755—(*வினா எண். 6135): **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, அய்யம்பேட்டை நகரில் உபமின் நிலைய வேலைகள் துவங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்பெறும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

30.413 லட்சம்.

1986 மே 13]

வில்லிவாக்கம் ராஜாஜி நகரில் டிரான்ஸ்பார்மர் மாற்றுதல்

756.—(*வினா எண் 8423) திரு. வி. பி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

வில்லிவாக்கம் ராஜாஜி நகரில் புதிய டிரான்ஸ்பர்மரை வைக்கும் பணி எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டிரான்ஸ்பார்மர் வைக்கும் கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 757 முதல் 759 வரை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்கள்

760—(*வினா எண். 3957) : திரு க. இரா. சின்னராசு : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் கிருட்டிணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா என்று கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கிருஷ்ணகிரி வட்டத்தில் ஏற்கனவே ஒரு சிப்காட் தொழிலகம் ஏற்பாடு செய்து, அது நல்லமுறையில் வளர்ச்சி பெறாத நிலைமையில் இருக்கிறது. இப்போது அந்தப் பகுதி பல்வேறு வகைகளில் வறட்சிப் பகுதியாக இருக்கிறது. ஆகவே அதைப் பின் தங்கிய வட்டமாக அறிவித்து வளாகத்தில் எந்தெந்த வகையில் மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் முயற்சிகள் செய்யப்பட்டு உள்ளன என்பதை அரசு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே ஏ. பி.சி. என்ற மூன்று பிரிவுகளின் கீழ், இவைகளை எல்லாம், ஆராய்ந்து வருகிறோம். தற்போது கிருஷ்ணகிரி தாலுக்காவை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கலாமா என்று அரசு

ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. ஆராய்ச்சி நிலையிலே இருக்கிற காரணத்தால், மேற்கொண்டு எதுவும் சொல்வதற்கு இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, No industry District என்பதற்குப் பதிலாக No industry Block என்ற செயற்குறிப்பை மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா? அப்படியானால் எந்தெந்த வட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிந்துரைகளை மத்திய பேரரசுக்கு மாநில அரசு அனுப்பி இருக்கிறது.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசால் தொழில் துறையில் பிற்படுத்தப் பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளை மைய அரசும் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்க மாநில அரசு முயற்சிகள் எடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சியை மாநில அரசு தொடர்ந்து எடுத்துக் கொண்டு வருகிறது. அநேகமாக அதில் நல்ல சூழ்நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையும் மாநில அரசுக்கு இருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்க செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்போல் தமிழ் நாடு முழுவதும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக புதிதாக வேறு பகுதிகள் இணைக்கப்பட்டிருக்கின்றனவா? அது பற்றிய உத்தேசம் அரசுக்கு உண்டா? அதில், சோவை மாவட் டத்திலே புதிதாக ஏதேனும் பகுதிகள் இணைக்கப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே புதிதாக பல இடங்களை அறிவிக்கவேண்டுமென்கிற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. தனி கேள்வி போட்டால் மற்றவைகளை விளக்கமாக சொல்ல ஆயத்தமாக இருக்கிறேன்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவித்ததற்கு நானும்

நன்றி சொல்லிக்கொள்கிறேன். கிருஷ்ணகிரியிலே தொழில் மையம்—தொழிற்பேட்டை இருக்கிறது. கிருஷ்ணகிரி வட்டத்திலே கிருஷ்ணகிரி, காவேரிபட்டிணம், பருகூர் போன்ற மூன்று தொகுதிகள் இருக்கின்றன. கிருஷ்ணகிரியிலே தொழிற்பேட்டை இருக்கின்ற காரணத்தினால், பருகூர் தொகுதியிலேயும், காவேரிபட்டிணம் தொகுதியிலேயும் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கி பல்வேறு தொழில்களை உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது கிருஷ்ணகிரிதான் அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. மற்றவைகளில் காலம் செல்லச் செல்ல வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

761.—(*வினா எண். 8170) : திருமதி டி. யசோதா : மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் வட்டாரத்தை தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு க. இராசாராம் : இல்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வட்டம் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே அதிகமான தொழிற்சாலைகள் இல்லாத சூழ்நிலை இருக்கின்றபோது, அதனை அரசாங்கம் கருணை உள்ளத்தோடு மறுபடியும் பரிசிலித்து, அதை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், ஏறக்குறைய 800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள அந்தப் பகுதியில் 372 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு தொழிற்சாலைகள் ஏற்கனவே இருக்கின்றன. ஆகவே, செங்கற்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, மதுராந்தகம் போன்றவைகள் மட்டும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டு அதனாலே அரசாங்கம் பல சலுகைகள் கொடுப்பதாக அறிவித்து அதனுடைய அடிப்படையிலே தொழில்

16 [1986 மே 13

அதிபர்கள் அங்கே போய் அதிலே பணத்தை செலவு செய்து காரியங்கள ஆற்றியதற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய தொழில் கொள்கையை மாற்றிக்கொண்டு அந்த உத்தர வினைத் திரும்ப பெறுவதுபோல நடைபெறுவது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை களை தடுக்கின்ற முயற்சி இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட, கொள்கையை மாற்றிக்கொண்ட செய்திகள் எனக்குத் தெரியாது. ஏற்கெனவே 3 இடங்கள் உங்களுடைய மாவட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அம்மையாருடைய தொகுதியிலே இல்லாதது அம்மையாருக்கு குறைதான். நாளா வட்டத்திலே நிறைவு செய்ய முயற்சிக்கலாம்.

வெல்லம்பட்டி பகுதியில் இரும்புத்தாது.

762—(*வினா எண். 6111) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அண்ணா மாவட்டம் வேடசந்தூர் வட்டம் வெல்லம் பட்டி பகுதியில் ஏராளமான அளவில் இரும்புத்தாது கிடைப் பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு க. இராசாராம்: (அ) இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சலுகைகள் மற்றும் ஊதியம்.

763—(*வினா எண். 3539) **திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் அனைத்து சலுகைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

1986 மே 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் சிலவற்றினை, அரசுநிதி உதவிபெறும் தனியார் பள்ளிஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது. ஆனால் மருத்துவச் செலவைத் திரும்பபெறும் சலுகை (Medical Reimbursement), விடுப்புக்காலப் பயணச் சலுகை (L.T.C.) போன்றவற்றை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நீட்டித்து ஆணை வழங்குவதனால் அரசுக்கு ஏற் படும் கணிசமான கூடுதல் நிதிச் செலவை முன்னிட்டு, நீட்டிக்க முடியவில்லை.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்கள் திறமையான ஆசிரியர்களாக இருக்கிறார்கள். திறமைக்கு ஊக்கம் தரும் வகையில் அவர்களுக்கு என்ன என்ன சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு தரப்படுகின்ற சலுகைகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்படுகின்றன. சிலவற்றை நாம் தரவில்லை. இதிலே 2 சலுகைகளை எடுத்து கணக்கிட்டுப் பார்த்ததில் கணிசமான அளவுக்கு செலவு ஏற்படும் என்ற காரணத்தால் அவைகளை இப்போது நடைமுறைப்படுத்தவில்லை என்று நான் தெரிவித்து இருக்கிறேன். மற்ற சலுகைகள் பொதுவாக இருக்கும்.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளை அரசு ஏற்கும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பதவி உயர்வு தருகின்ற போது ஆசிரியர்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் தராமல் அவர்களுக்கு விருப்பமானவர்களுக்கு தந்து கொண்டிருக்கின்ற நிலைமையைத் தடுக்கின்ற வகையில் தனியார் பள்ளிகள் அனைத் திலும் சீனியாரிட்டி அடிப்படையில் பதவி உயர்வு தர வேண்டும் என்று வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியாரிட்டியையும் அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ செலவு செய்யும் இந்த அரசு இந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வைத்திய வசதியை விஸ்தரிப்பதற்கு மீண்டும் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலித்துப் பார்த்தபோது அதற்கு அதிகச் செலவு ஆகும் என்ற காரணத்தால் இப்போது அதை நாம் நீட்டிக்கவில்லை.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தனியார் பள்ளிகளில் இன்றையதினம் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு தருகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? அப்படி பிடித்துக் கொண்டு கொடுக்கின்ற அந்த தனியார் பள்ளிகளுக்கு இருக்கின்ற உரிமையை ரத்து செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. அதற்குப் பிறகு இப்போது நாம் எடுத்துக் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக அப்படி இல்லாத நிலைமையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அப்படி எங்காவது இருக்குமானால் அதைப்பற்றி ஆசிரியர்கள் புகார் செய்தால் நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். அப்படிப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு நாமே நேரடியாக சம்பளம் தரலாம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள், தீங்குகள் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் கொடுக்காமல் குறைந்த தொகையை ஆசிரியர்களுக்கு கொடுப்பது, அத்தனை பேருக்கும், நமது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அவர் அதை எதிர்த்து பல நடவடிக்கைகள் கூட எடுத்து இருக்கிறார்கள். பிரச்சினை என்னவென்று சொன்னால் இன்றைக்கு அந்த நிலைமை தீவிரம் அடைந்து இருக்கிறது, குறைந்தபாடு இல்லை. ஆகவே ஒரு 'காம்பரஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன்'' இந்தத் தனியார் பள்ளிகள் இன்னமாதிரி வேலை முறைகளை, சம்பள முறைகளை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக சீரான, விளக்கமான, விரிவான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1986 மே 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்பு அப்படி அதிகமான அளவுக்கு இருந்து இருக்கலாம். இப்போது அப்படி இல்லை. அப்படி இருந்திருந்தால் என்னுடைய கவனத்திற்கு தாராளமாக கொண்டு வந்து இருப்பார்கள். நாங்களும் அதற்கான நடவடிக்கை எடுக்க முன் வந்து இருக்கிறோம். சில நேரங்களில் தேவையானால் அப்படிப்பட்ட பள்ளிகளை அரசே எடுத்து நிர்வகிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதை விட சம்பளத்தை நேரடியாக தருகின்ற முறையை நாம் பல பள்ளிகளில் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே சம்பளத்தை குறைத்துத் தருகிறார்கள் என்ற அந்த புகாருக்கு இப்போது அதிக ஆதாரம் இல்லை என்று கருதுகிறேன். குறிப்பிட்ட பள்ளிகளில் அப்படி இருக்குமானால் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் அதன்மீது தக்க நடவடிக்கையை நாம் எடுக்கலாம். மூன்பு ஆசிரியர்கள் சங்கம் அவ்வளவு பலமாக இல்லாமல் இருந்த காலத்தில் இப்படி நடந்து இருக்கலாம். இப்போது ஆசிரியர்கள் சங்கம் பலம் அடைந்துள்ள இந்தக் காலத்தில் அப்படி ஒரு நிர்வாகம் இருக்குமானால் ஆசிரியர்கள் சங்கம் நிச்சயமாக அதை விட மாட்டார்கள். அரசாங்கம் அவர்களுக்கு துணையாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லாமல் செய்து விடலாம். அவ்வளவு தைரியமாக இவற்றை எல்லாம் எதிர்த்து தவறு செய்கின்ற அளவுக்கு எந்த நிர்வாகமும் இருக்கும் என்று நான் கருதவில்லை. அப்படி குறிப்பிட்ட பள்ளி இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

764—(* வினா எண். 3835—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மைனாரிட்டி பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், 7 அல்லது 8 ஆண்டுகளாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க உடனடி நடவடிக்கை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மைனாரிட்டி பள்ளிகளில் அரசினரால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்ற புகார் எதுவும் பெறப்படவில்லை. முறையான பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கட்கும் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

[1986 மே 13

(ஆ) அரசினரால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுள் ஊதியம் வழங்கப்படாதோர் யாரும் இல்லை என்பதால் பிற நடவடிக்கைக்கு அவசியமில்லை.

(முற்பகல் 9-20)

திரு. மா சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, மைனாரிட்டி பள்ளிகளுக்கு ரெகக்னைஷன் கொடுக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு அங்கீகாரம் கொடுப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? பல பள்ளிகள் ஆறு ஏழு வருடங்கள் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு அப்ரூட் சேங்ஷன் கொடுப்பதில்லை. இதனால் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் போஸ்ட் சேங்க்ஷன் இல்லாமல் அப்ரூவல் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்களுக்கு உடனடியாக போஸ்ட்க்கு சேங்க்ஷன் கொடுத்து அங்கீகாரம் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் அரசினுடைய அனுமதியைப் பெறாமலேயே தங்களுடைய இஷ்டத்திற்கு பள்ளிகளை ஆரம்பித்துவிட்டு அரசாங்கத்தினிடத்தில் பணத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின்மீது ஒரு அதிகாரத்தைச் செலுத்துகின்ற முறையில் தங்களுக்கு உள்ள உரிமையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசு கவனித்துக் கொண்டு இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டியிருக்கிறது. தங்கள இஷ்டம் போல பள்ளிகளை ஆரம்பித்துவிட்டு, இஷ்டம் போல ஆசிரியர்களை அமர்த்திவிட்டு சம்பளத்தை நாம் தர வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது நியாயமானதும் அல்ல முறையானதும் அல்ல. தங்கள் இஷ்டப்படி நடத்த வேண்டுமென்றால் அரசினுடைய உதவியை எதிர்பார்க்கக்கூடாது. எதிர்பார்க்காமல் நடத்துவதுதான் சிறந்தது; எதிர்பார்த்து நடத்துவது சரியல்ல. ஆனால் எங்களால் அனுமதிக்கப்பட்டு அனுமதிதரப்பட்டு இருந்தால், அந்தப் பணிக்குரிய சம்பளத்தைத் அரசு தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள்ள ஃபண்டமெண்டல் ரைட்டின் காரணமாகத்தான் பள்ளிகளைத் தொடங்குகிறார்கள். கேரளாவில் கூட அப்படி ஆரம்பிக்க அனுமதி

கொடுத்து சம்பளம் கொடுக்கிறார்கள். இங்கே அவர்களை தொடங்குகிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னது உண்மை. ஆனால் அவர்கள் மனுச் செய்கின்றபொழுது சி.இ.ஓ., டி.இ.ஓ. போன்ற அதிகாரிகளெல்லாம் வந்து பார்க்கின்ற பொழுது அங்கே மாணவர்கள இருக்கிறார்கள் என்று ரெகக்னைஸ் செய்கிறார்கள். ஆனால் பிறகு ஆசிரியர்களுக்கு போஸ்ட் சேங்க்ஷன் செய்ய வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில்தான் சிக்கல் வருகிறது. ஐந்தாறு ஆண்டுகள் மாணவர்கள் படித்து எஸ்.எஸ்.எல்.சி., ஹயர் செகண்டரி போன்ற பரீட்சைகளை எழுதுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட பள்ளிகள் பற்றி ஒரு கமிஷனை நியமித்து எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று கண்காணித்து அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா ஆசிரியர்களுக்கும் பணம் தரும் அளவிற்கு நிதிநிலை இல்லை. அரசு பரிசீலிக்கவேண்டிய ஒன்று என்னவென்றால், இனிமேல் தனியார் யார் ஆரம்பித்தாலும் யாருக்குமே நிதி உதவி செய்ய முடியாது என்ற முடிவைத்தான் அரசு எடுக்க வேண்டுமே தவிர, நிதியுதவி செய்யக்கூடிய நிலைமையில் இன்று இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் ஒதுக்கீட்டு முறை சரியாகப் பின்பற்றப்படுவதில்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டுமென்று சொல்கின்றபொழுது, தற்காலிகமாக வேறு யாரையாவது லீவில் போகச் சொல்லி விட்டு அந்த இடங்களில் இவர்களை ஒரு இரண்டு மாத காலம் என்ற அளவிற்கு தாழ்த்தப்பட்டவர்களை அமர்த்தி, ஸ்டேட்மெண்ட் கொடுக்கின்ற அந்த நேரத்தில் தாழ்த்தப்பட்டவர்களுடைய வேலை செய்கிறார்கள் என்று சொல்வதற்காக நியமிக்கப்படுகிறார்களே தவிர, நிரந்தரமான முறையில் தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு அவர்கள் முன் வருவதில்லை. எனவே, அரசாங்கம் பரிசீலனை செய்து ஒதுக்கீட்டு முறை முறையாகப் பின்பற்றப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறை அல்லது குற்றங்கள் நிகழ்ந்து அது மெஜாரிட்டி வகுப்பினருடையதாக இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்க முடிகிறது. மைனாரிட்டி வகுப்பினருடையது என்றால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் இஷ்டத்திற்கு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது சமுதாயத்தில் உள்ள சங்கடமான நிலைமையின் காரணமாகத்தான் என்பதை அரசு உணர்கிறது. அவர்களுக்குள்ள அடிப்படை உரிமையின் காரணமாகத் தவறு செய்வார்கள். அரசின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வதில்லை.

திரு. சா. ஜெயச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி வகுப்பினா ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள நடத்துவதற்கும் பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற்கும் அரசாங்கப் அனுமதி அளிப்பதாகத தெரிவித்தார்கள். சில மைனாரிட்டி வகுப்பினர் தாங்களாகவே பள்ளிக்கூடங்கள ஆரம்பித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். கிருஸ்தவர்கள், முஸ்லீம்கள் என்ற இந்த இரண்டு சமுதாயத்தைச் சேராதவர்களும் மைனாரிட்டி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள வைத்திருக்கிறார்கள். இதை அரசு அறியுமா? அப்படி முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் அல்லாதவர்கள் மைனாரிட்டிப் பள்ளிக்கூடங்கள் வைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது யாருக்கும் அனுமதி தரவில்லை. அது வழக்குமன்றத்திற்குப் போய் அரசாங்கம் அந்த வழக்கில் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் சில பேர்கள், மெஜாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள்கூட மைனாரிட்டி நிறுவனம் என்று அவர்கள் சொல்வதற்குக் காரணம் அதிலே நிர்வாகியாக இருக்கிறவர்கள் கிருஸ்த்தவராகவோ அல்லது முஸ்லீம்களாகவோ இருப்பார்கள். அதை வைத்துக் கொண்டு சொல்கிறார்கள். ஆனால் சட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு இடம் இருக்கிற காரணத்தினால் அதைப் பயன்படுத்தி சொல்லி வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் தேவையில்லாத நிலைமையில் இப்படிப்பட்ட நிறுவனங்களை ஆரம்பிக்க வேண்டாம் என்றுதான் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிலயிடங்களில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனியாரால் நடத்தப்படுகின்றன. அவர்கள் மைனாரிட்டி வகுப்பைச் சார்ந்தவர்கள என்று காரணம் காட்டி பலயிடங்களில் அரசாங்க அனுமதி பெறாமலேயே வைத்து நடத்தி வருகிறார்கள். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள, தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடத்துகிறார்கள உச்ச நீதிமன்றத்தில் வழக்குதொடுத்து அவர்களுக்கு அதற்கு அனுமதி கொடுப்பதற்கு உச்ச நீதிமன்றம் மறுத்திருக்கிறது. அரசாங்க அனுமதி பெற்றுத்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நடத்த வேண்டும் என்று ஒரு ஆணை வழங்கி இருக்கிறது. ஆகவே தமிழக அரசாங்கம் அந்த ஆணைய பின்பற்றி அரசாங்க அனுமதி பெறாமல் தனியாரால் நடத்தப்படுகிற அனைத்து ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் மூடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூடுவது, வைத்திருப்பது அவர்கள் உரிமை, நாம் அனுமதி தருவதில்லை. அனுமதி தருவதில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம்.

1986 மே 13]

வேளச்சேரியில் விளையாட்டு திடல்.

765—(வினா எண். 8201) திரு. சு. பாலன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த வேளச்சேரியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, அகில உலக கால்பந்துப் போட்டிகள், நேருவின் பெயரால், கடந்த ஆண்டு சென்னையில் நடத்துவதாக இருந்தது. வேளச்சேரிக்குப் பக்கத்திலுள்ள தரமணியில் பெரிய இடத்தை கையகப்படுத்தி அங்கே விளையாட்டுத் திடல் அமைக்கப்பெற்று கடந்த ஆண்டு அங்கு கால்பந்து ஆட்டத்தை நடத்துவதற்கு அரசு உத்தேசித்து இருந்தது. அமைச்சர் அவர்கள் இப்போது இல்லை என்று சொல்கிறார்கள். அது ஏன் கைவிடப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை நெருக்கடி காரணமாக இப்போது அந்த ஆலோசனை கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1988 ஆம் ஆண்டு அகில உலக கால்பந்துப் போட்டி நடத்துவதாக உறுதியளித்திருக்கிறார்கள். அதையாகிலும் நடத்துவதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போட்டி நடத்துகிறவர்கள் வேறுவிதமான முறையில் நடத்துவதற்கு முன்வந்தால் அதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்யும்.

திரு. சைதை சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான விளையாட்டு மைதானங்கள் போதிய அளவிற்கு பராமரிப்பு வசதிகள் இல்லாதிருக்கிற காரணத்தினால் தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சித் துறை சார்பாக அந்த விளையாட்டுத் திடல்களை எடுத்து பராமரித்து கால்பந்து, கைப்பந்து, கிரிக்கட் போன்ற இப்படிப்பட்ட விளையாட்டுக்களை ஊக்குவிக்கிற

வகையில் உடல் பயிற்சிச் சாதனங்கள் அமைத்துத் தந்து மாண வர்களும் மற்றவர்களும் மாலை நேரங்களில் அங்கு பயிற்சி செய்ய வழிவகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலை வர் அவர்களே, அப்படிப்பட்ட வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சியை விளையாட்டுத் துறை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரிக்கு அருகிலே குதிரைப் பந்தய மை தானம் இருக்கிறது. பல நூறு ஏக்கர் நிலங்கள் சும்மாக் கிடக் கிறது, அது ஒரு பெரிய மைதானமாக இருப்பதாலும், கட்டட வசதி இருப்பதாலும், அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டியை அல்லது ஒலிம்பிக் போட்டியை அந்த இடத்தில் நடத்துவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் உயர்நிலைப் பள்ளி அல் லது மேல்நிலைப் பள்ளியில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக் கும் திட்டம் அல்லது செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ? நடப்பாண்டில் அது செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலை வர் அவர்களே, விளையாட்டு அரங்குகள் அமைப்பது என்ற ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து விளையாட்டுத் துறை மூலம் சில இடங்களில் முயற்சிகள் மேற்கொண்டு வரு கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆரம்பிக்கிற அளவிற்கு இப்போது நாம் தேவையை உருவாக்கவில்லை. முதலில் தேவையை உரு வாக்கிவிட்டு பிறகு அதைப்பற்றி நாம் பேசலாம்.

முற்பகல் 9-30

இலக்குமிபுரம் கலை விஞ்ஞானக் கல்லூரி.

766—(வினா எண். 8984) திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், இலக்குமிபுரம் கலை விஞ்ஞானக் கல்லூரியை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விபரம் என்ன?

1986 மே 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மேலாண்மையில் உட்பூசல் ஏற்பட்டதையொட்டி, 4-2-75 முதல் இக் கல்லூரி மேலாண்மையை அரசு எடுத்துள்ளது. இக்கல்லூரி மேலாண்மையைக் கல்வி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டாமென அரசு முடிவெடுத்துள்ளது. தக்க மறு நடவடிக்கைக்காக இம் முடிவு கல்லூரிக் கல்வி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தனிப்பட்ட ஒருவரால் உருவாக்கப்பட்டதல்ல. 1964-65-ல் பல பங்குதாரர்களால் கூட்டுறவு சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தற்போது அரசாங்கத்தின மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே கல்லூரி வளர்ச்சிக்காக பல்கலைக் கழக மானியக் குழு 1982-83-ல் இரு ஆணைகள் மூலமாக ஏறத்தாழ 6 இலட்சம் ரூபாய் வழங்க ஒப்புதல் அளித்தும் வழங்கப்படவில்லை. இப்படி பல பிரச்சனைகளை மனதிலே கொண்டு, அங்கே நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் ஓய்வு பெறும் நிலையில் இருப்பதாலும், கல்லூரியின் வளர்ச்சியை மனதிலே கொண்டு மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்ற உணர்வோடு செயல்படவில்லை என்ற கருத்துக்கள் இருந்து வருகிறது. எனவே, இப்படிப்பட்ட நிலை அங்கே இருப்பதை மனதிலே கொண்டு, அந்தக்கல்லூரி கூட்டுறவு சங்க சட்டத்தின்கீழ் பதிவு செய்திருப்பதை அகற்றி, அரசாங்கமே அதன் நிர்வாகத்தை ஏற்று, நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரசு கல்லூரியாக மாற்றியமைக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக இந்த நேரத்தில் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுத்து வருகிறோம்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கு செயல்பட்டு வருகின்ற நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும அறிவியல் கல்லூரி அரசாங்கத்தின் மேற்பார்வையில் செயல்பட்ட போது, 75 விழுக்காடு பங்குதாரர்கள, அக்கல்லூரி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற காலத்தில், அரசு செலவழித்த பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுக்கின்ற முறையில் எழுத்து மூலம் உறுதியை அளித்துள்ளார்கள். இவைகளை மனதிலே கொள்ளவேண்டும். இன்றைக்கு அக்கல்லூரியின் கட்டிடங்கள் என்றைக்கு இடிந்து விழுமோ என்ற அபாயகரமான நிலையில்

TRUTH ALONE TRIUMPHS

1[986 மே 13

இருப்பதால், அந்தக் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கும், புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்வதோடு, மேலும் அங்கே மேஜை, நாற்காலி போன்றவை இல்லாத சூழ்நிலை இருப்பதால் அவைகளை வாங்கிப் போடுவதற்கும், நிர்வாகத்திற்குச் சொந்தமான அந்த வைப்புத் தொகையை எடுத்து செலவழிக்கும் முறை இருக்கிறது. அன்றைக்கு 1000 மாணவர்கள் படித்த அந்தக் கல்லூரியில் இன்றைக்கு 500-க்கும் குறைவாக படித்து வருகின்ற ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் கல்லூரியைக் காப்பாற்ற அதற்கான கட்டிடத்தைக் கட்டுவதற்கும், மேஜை நாற்காலி வாங்கிப் போடுவதற்குமான நல்ல சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்குமா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

இருபது அம்சத் திட்டம்.

757* (வினா எண். 5285) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கடந்த மூன்று ஆண்டுகளாக 20 அம்சத் திட்டத்தை அமுலாக்குவதில் தமிழக அரசு எந்தெந்த திட்டங்களை அரசு நிர்ணயித்த குறியிலக்கை விட அதிகமாக நிறைவேற்றியுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அவை முன் விவர அறிக்கை** ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபது அம்சத் திட்டத்தை நாம் வெற்றிகரமாக நமது மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறோம். மத்திய அரசு நமக்கு அதற்காக விசேஷ நிதி உதவியை அளிக்கிறதா? விசேஷ நிதி உதவி அளிக்கவேண்டும் என வற்புறுத்தப்படுமா? மேலும், இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக நமது மாநிலத்தில் தான் இந்த 20 அம்சத் திட்டத்தை சிறப்பாக செய்து வருகிறோம். சட்டசபையிலேயே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்து பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் இந்த மாநிலத்திற்கு ஒரு சிறப்பு அந்தஸ்து கொடுக்கிற அளவில் ஒரு சிறப்பு பரிசு கொடுக்கிற அளவில் ஏற்பாடு செய்தால் மற்ற மாநிலங்களில் உள்ளவர்

** 242 பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1986 மே 13

களும் அந்தத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவார்கள். அதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, யாருடைய பாராட்டவேண்டும் அல்லது பாராட்டுக்களைப் பெறவேண்டும் என்பதற்காக அரசுகள் இந்த நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவது இல்லை. அரசுகள் அமைந்திருப்பதற்கு அடிப்படையே மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தான். ஆகவே, அந்த வகையிலே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த நல்ல திட்டங்களை நம்முடைய உணர்வுபூர்வமாகவும், மிகுந்த வேகத்தோடும் நிறைவேற்றுவதிலே நாம் முனைந்து கொண்டிருக்கிறோம். அப்படி முனைந்து நிறைவேற்றுகிற காரணத்தினாலே முதலிடத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு பாராட்டுகள் வழங்கினாலே போதும். பரிசு என்பதைப் பொறுத்தவரை, குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு அப்படி ஒரு பரிசு வைத்து இருக்கிறது. அதிலே நம்முடைய தமிழக அரசு இரண்டரைக் கோடி ரூபாயைப் பரிசாகக் கூடப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, பரிசுக்காகவோ அல்லது பாராட்டுக்கள் வரவேண்டும் என்பதற்காகவோ மாநில அரசு இந்தத் திட்டங்களை நிறைவேற்றவில்லை, மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்கள் என்கின்ற அந்த உணர்விலேதான் அதை இதயசுத்தியோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அறிவித்த இருபது அம்சத் திட்டத்திற்கும், தற்போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன எந்தத் திட்டத்தை அரசு அமல்படுத்துகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி மறைந்த இந்தியப் பிரதமர் அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த புதிய இருபது அம்சத் திட்டத்தைப் பற்றியது தான். ஆகவே, அந்தத் திட்டங்களைத்தான் அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இருபது அம்சத் திட்டத்திலே பல்வேறு திட்டங்களிலே தமிழக அரசு இந்தியப் பேரரசு நிர்ணயித்துள்ள குறியினை விட மிஞ்சியிருப்பது பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரி

]1986 மே 13

யது. ஆனால், ஒன்றிரண்டு திட்டங்களிலே, குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், செடி நடுதல், ஐ.ஆர்.டி.பி. என்று சொல்லப்படுகின்ற திட்டங்களிலே அந்தக் குறிப்பிட்ட ஆண்டுக்கு நாம் இலக்கை மிஞ்சி விட்டாலும் கூட, வருகின்ற ஆண்டுகளிலே — உதாரணமாக, செடி நடுதல் பல இடங்களிலே மிகப் பெரிய அளவிலே நாம் எடுத்துக் கொள்கிறோம். ஆனால், பின்னாலே அந்தச் செடிகள் உயிரோடு இருக்கின்றனவா, அது வளர்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைப் பற்றியும், வறுமைக் கோட்டின் அருகிலே உறவாடி இருக்கிற மக்களுக்கெனக் கொண்டு வருகின்ற திட்டங்களிலே அந்தத் திட்டங்கள், அந்தப் பண உதவிகள் எல்லாம் குறிப்பிட்ட அந்த இலக்கிலே இருக்கிற மக்களுக்குத் தான் போய்ச் சேருகிறதா, அந்தப் பயனைப் பெற்ற பின், வருகின்ற காலங்களிலே தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு துணையாக இருக்கின்றனவா என்பதற்கு 'மானிட்டரிங் சிஸ்டம்' ஏதாவது வைத்திருக்கிறோமா, சரி பார்ப்பதற்கு? அந்த வகையில் நாம் எய்தியுள்ள இலக்குகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக திட்டக் குழுவின் தொடர்பாக இந்திய அரசு அறிவிக்கின்ற அந்தத் திட்டங்களை மாநில அரசுகள் எப்படி நிறைவேற்றுகின்றன என்கிற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற, அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிற அந்தத் திட்டத்துறையின் சார்பில் இந்தப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் மொத்தமாக எந்த எந்தத் துறையிலே எந்த எந்தத் திட்டங்களிலே நாம் மிஞ்சி இருக்கிறோம், எந்த அளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம் என்கிற பொதுவான பதில்கள் இங்கே தரப்பட்டு இருக்கின்றன. இந்த இருபது அம்சத் திட்டத்தினுடைய ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு துறையைச் சார்ந்த திட்டங்கள். ஆகவே குறிப்பாக, எந்தெந்தத் திட்டங்களைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அந்த தனித் திட்டங்களைப் பற்றி நீங்கள் கேள்வி கேட்டால் அதற்குத் தொடர்பான துறைகள் பதில் அளிக்க இயலும். ஆனால் இங்கே நீங்கள் இந்த மரம் நடுகின்ற அந்தத் திட்டத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். அது, வனத் துறைக்கு நான் பொறுப்பாக இருக்கின்ற காரணத்தினால் பொதுவாக அந்தப் பதிலை மாத்திரம் சொல்லிவிடுகிறேன். அதையும் நான் விரிவாகச் சொல்ல முடியாது. அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு குறியீட்டு இலக்கை அடைய முடியாமல் போவதற்கு உள்ள காரணம், நாம் இந்தக் காரியத்தை நிறைவேற்றுவதிலே ஏற்படுகின்ற சுணக்கங்கள் இல்லை. ஒரு குறிப்பிட்ட காலத்திலேதான் மரம் நட முடியும். காரணம் எல்லாயிடங்களிலும் பல்லாயிரக்கணக்கான இலட்சக்கணக்கான செடிகளை வைத்து அதற்குத் தண்ணீர்

1986 மே 13

ஊற்றுவது என்பது முடியாது. ஆகவே, மழைக் காலங்களைப் பார்த்து, பருவ காலத்தைப் பார்த்துத்தான் அந்த மரங்களை நடுகிறோம், செடிகளை நடுகிறோம். ஆகவே, எதிர்பார்த்த ஒரு பருவகாலத்திலே, செடிகளை நடுவதற்காக எல்லாவற்றையும் தயாரித்து வைத்துக்கொண்டு, எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், மழை பொய்த்துவிட்டால் நாம் செடிகளை நட முடியாது. அப்படி மழை வருகிறதே என்று செடிகளை நட்டதற்குப் பிறகு அந்தப் பருவமழை எந்தக் காரணத்திலாவது குறைந்து அல்லது தவறிவிட்டால் நட்ட செடிகள் பட்டுப் போய்விடுகின்றன. ஆகவே, செடி நடுகின்ற அந்தத் திட்டத்தில் நாம் இலக்குகளை நிர்ணயித்தாலும் அந்த இலக்குகளை அடைய முடியாத ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். அதை, பிறகு மழை பெய்கின்ற காலத்திலே நிறைவேற்றிவிடுகிறோம். ஆகவே, அந்தத் திட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை அவர்கள் வைக்கிறார்கள், அந்த ஆண்டு என்று. அதற்குள்ளே அந்த மரம் அல்லது செடியை நடுகின்ற அந்தத் திட்டத்தில் இந்தக் குறைபாடுகள் தோன்றுகிறதே தவிர அதிலே நாம் முயற்சி இல்லாமல் இருக்கிறோம் என்று பொருள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சித்தன் : தலைவரவர்களே, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் கொண்டுவரப்பட்ட இருபது அம்சத் திட்டத்தில், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்க வேண்டுமென்ற ஒரு அம்சம் இருந்தது. ஆனால் இப்பொழுது நம்முடைய பிரதமர் இராஜிவ் காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட இருபது அம்சத் திட்டத்தில் அது இல்லை. தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு ஏற்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு வலியுறுத்துமா? இருபது அம்ச திட்டத்தில் அது சேர்க்கப்பட வேண்டுமென்று சொல்லியும் அதை கைவிட்டது தவறு என்று தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்குத் தொழில் நிர்வாகத்திலே பங்கு அளிக்க வேண்டுமென்ற கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது. ஏற்றுக்கொண்டிருக்கின்ற புதிய இருபது அம்சத் திட்டத்திலே அதை நிறைவேற்றிக்கொண்டும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற, இப்பொழுது இருக்கின்ற அந்தத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை என்கின்ற செய்தியைக் குறித்து தனியாக உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டால். அதைப் பற்றிய விவரங்களை அறிந்து அரசினுடைய நிலைமைகளைத் தெரிவிக்கமுடியும்.

1986 மே 13

குன்னூர் பைன் மரக்காடுகள்.

758—(வினா எண். 7456)—திரு. பரிதி இளம் வழுதி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்னூரில் உள்ள பைன் மரக்காடுகள் அழிந்து வருகின்றன என்பது உண்மையா?

(ஆ) இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) குன்னூரில் டெண்ட் ஹில் என்னும் பகுதியில் சாலையோரத்தில் 1.5 எக்டேர் பரப்பில் பைன் மரக் காடுகள் உள்ளன. அவை நல்ல நிலையில் உள்ளன. அவைகள் அழிந்து வருகின்றன என்பது உண்மை அல்ல.

(ஆ) எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

சீரணி அரங்கம்.

759—(வினா எண். 8917)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள சீரணி அரங்கத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:—(அ) இல்லை.

(ஆ) அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை சீரணி அரங்கம் என்பது இன்றைக்கு எல்லாவிதமான அரசியல் கட்சிகளும், ஆன்மீக சிந்தனை உள்ளவர்களும் பயன்படுத்துகின்ற ஒரு சிறந்த இடம். ஆனால் அங்கே பயன்படுத்துவதற்குரிய தகுதியில்லாதிருப்பதால் அதைப் புதுப்பித்து சரி செய்ய வேண்டும். அங்கே மேடையிலே பேசும்பொழுது அந்த ஒலி சரியாகக் கேட்காத

1986 மே 13

நிலையில், இன்று கூடபார்த்தால் தெரியும், அருகிலே தட்டி வைத்துக் கட்டி அதைப் பயன்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, இதை முக்கியமான பணியாகக் கருதி எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சியை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே அவர்கள் தொடங்கிய அந்தச் சீரணி என்கின்ற திட்டத்தின் அடிப்படையில் அந்தச் சீரணி படையினரை வைத்து, பொதுமக்களினுடைய நன்கொடையால் அந்தச் சீரணி அரங்கம் அங்கே உருவாக்கப்பட்டது. அது நீண்டகாலமாக இருந்து கொண்டு வருகின்ற காரணத்தினாலும், கடற்காற்றினாலே அரிப்பு ஏற்படுகின்ற காரணத்தினாலும் கொஞ்சம் பழுதுபட்டிருக்கிறது. அதை இன்னும் பெரிதாகவும், நல்ல உறுதியுள்ளதாகவும் மாற்ற வேண்டுமானால் அதற்கு நிறைய செலவிட வேண்டியிருக்கிறது. இப்பொழுதுகூட சிறிய பழுதுகளைப் பார்ப்பதற்காக சுமார் 7,500 ரூபாய்க்கு ஒரு ஆணை வேண்டி—அனுமதி வேண்டி அந்தப் பொதுப் பணித் துறையைச் சார்ந்த பொறியாளர் அனுப்பி வைத்திருக்கிறார். அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று அதிலே அரசு முதலீட்டிலே அந்தச் சீரணி அரங்கம் என்ற பெயருக்கு அடிப்படையாக அமைந்திருக்கிற கொள்கைக்கு மாறாக, அரசு முதலீடு செய்து, அதைப் பெரிதாக, அல்லது வசதி உள்ளதாக மாற்றினால், அதற்கு அந்தப் பொதுக் கூட்டங்களை நடத்துகிறவர்கள் அல்லது அந்த அரங்கத்தைப் பயன்படுத்துகிறவர்களிடத்திலேயிருந்து அதிகமான வாடகையைப் பெற வேண்டிய அவசியமும் ஏற்படும். அதைப் பற்றியெல்லாம் பரிசீலித்துதான் அரசு ஒரு இறுதியான முடிவு எடுக்க இயலும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா சீரணி அரங்கத்தில் வாரந்தோறும் சனி, ஞாயிறு நாட்களில் மக்களுக்கு நல்ல சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறும் திரைப்படங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் காட்ட அரசு ஏற்பாடு செய்யுமா? எனது தொகுதியிலுள்ள எலியட்ஸ் பீச்சில், மக்கள் பொழுது போக்குக்கு வசதியாக, அங்கேயும் சீரணி அரங்கம் போன்ற ஒரு அரங்கம் நிர்மாணிக்க அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சீரணி அரங்கில் அரசினுடைய துறைகளான குடும்ப நலத்துறை மற்றும் நம்முடைய சமுதாய நலத்

துறையின் சார்பில் மதுவிலக்குத் திட்டங்கள், குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டங்களை விளக்குகின்ற வகையில்நாடகங்களை கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அனுமதி வழங்கியிருக்கிறோம், மாதத்திற்கு ஒரு முறை இரண்டுமுறை நடத்தலாம் என்று, அதற்காக நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், வாரத்திற்கு இரண்டு என்று நடத்துவது பயனுள்ள வகையில் அமையுமா என்பது ஒரு பிரச்னை. அப்படி வாரத்திற்கு இரண்டு நாளைநாமே ஆக்கிரமித்துக் கொண்டு விட்டால், பொதுமக்களுடைய பிரதிநிதிகள் அல்லது, கட்சிகள் அல்லது நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் அந்த அரங்கத்தைப் பயன் படித்த முடியாமலும் போய்விடக்கூடும். ஆகவே அது அவ்வளவு உகந்த யோசனையாகத் தெரியவில்லை. எலியட்ஸ் பீச்சிலே அப்படி ஒரு அரங்கம் ஏற்படுத்துவது என்பது அந்த பீச்சினுடைய அமைப்பை, அழகை மக்களுக்கு இப்பொழுது இருக்கிற வசதியைக் குலைப்பதாகவோ அல்லது குறைப்பதாகவோ இருக்கும். அதை நல்ல யோசனையாக அரசு கருதவில்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்களால் கொடுக்கப்பட்ட நிதியிலிருந்து சீரணி அரங்கத்தை விரிவுபடுத்துகின்ற செயற்குறிப்பு இல்லையென்றாலும் பழுதுபார்க்கின்ற பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் அரசு நிகழ்ச்சிகளும் மற்ற நிகழ்ச்சிகளும் நடக்கும்போது கலைவாணர் அரங்கம், இராஜாஜி மண்டபம், வள்ளுவர் கோட்டம் போன்ற இடங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே, இயற்கையாகக் காற்றோட்ட வசதியுள்ள கடற்கரை சாலையில்இது போன்ற ஒரு மண்டபத்தைக் கட்டுகின்ற செயற்குறிப்பு உள்ளதா? இல்லையென்றால், அதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா? அரசு நிகழ்ச்சிகள் பகலிலே நடைபெற வசதியாக அப்படிப்பட்ட பணியை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடற்கரையில் கடல் காற்றோடு நிகழ்ச்சிகளை நடத்த முடியும். கடற்கரை சாலை என்றாலோ, அல்லது வேறு எங்கேயாவது இருக்கிற சாலை என்றாலோ, மண்டபம் என்று வந்துவிட்டாலே மண்டபத்திற்குள்ளே தான் இருக்க முடியும். ஆகவே, மண்டபத்தை அமைப்பது என்பது எந்த இடத்திலே தேவைப்படுகிறது, எந்தப்பகுதி மக்களுக்குத்தேவைப்படுகிறது என்பதுதான் பிரச்சினையே தவிர, கடற்கரை சாலையில் மண்டபம் அமைத்துவிட்டால் மாத்திரம் கடல்காற்று உள்ளே வராது. மண்டபம் என்றாலே மூடித்தான் இருக்கும்

ஆகவே, அதற்குள்ளே குளிர் சாதன வசதி பொருந்த வேண்டு மென்ற பிரச்சனை அடுத்தாற்போல் வரக்கூடும். மண்டபம் என்று கட்டினால், குளிர்சாதனம் பொருத்தப்பட்ட மண்டபம் என்றால் கடற்கரையில் இருந்தாலும் வேறு எங்காவது கான கத்திற்குள்ளே இருந்தாலும் ஒன்றுதான். ஆகவே எந்தப் பகுதிக்குத் தேவைப்படும் என்பதை ஒட்டித்தான் பிரச்சனை கள் கவனிக்கப்படுகின்றன. அந்த வகையில் கலைவாணர் அரங்கம் என்பதும் ஏறத்தாழ கடற்கரையை ஒட்டித்தான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தப் பிரச்சனை இப்பொழுது எழவில்லை.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாநிலம் முழுவதிலும் சீரணி அரங்கங்கள் இல் லாத ஒவ்வொரு ஒன்றியத்திலும் சீரணி அரங்குகள் அமைக் கின்ற திட்டம் உள்ளதா? அப்படி இல்லையென்றால் இனியா வது அமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய அந் தச் சீரணி அரங்கம் அமைக்கின்ற திட்டம் என்பது முன்பே கைவிடப்பட்டு விட்டது. இப்பொழுது அது நடைமுறை யிலே இருப்பதாகத் தெரியவில்லை. என்றாலும் அங்கங்கே, பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான அத்தகைய அரங்குகளைக் கட்டுகின்ற முயற்சியை அந்த, அந்த ஒன்றியங்கள் அல்லது நகராட்சிகள் எடுத்தால், அதற்கு எந்த அளவிலே அரசு உதவி செய்வது என்பதைப் பற்றி பரிசீலிக்க இயலும்.

சட்டமன்ற LEGISLATURE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கடையநல்லூர் மருத்துவ மனை.

767. (*வினா எண். 5041): திரு. தெ. பெருமாள் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடங் கள் கட்டி அதிக படுக்கைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர், எச். வி. ஹாண்டே : இல்லை.

[1986 மே 13

(முற்பகல் 9-50)

திரு. தெ. பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, கடைய நல்லூர் அரசு மருத்துவ மனையில் 52 படுக்கைகள் கொண்ட அறைகள் 20 ஆண்டுகளுக்கு முன்பாக காங்கிரஸ் ஆட்சியிலே கட்டப்பட்டது. இப்போது மக்களுடைய ஜனத் தொகை இலட்சத்திற்கு மேற்பட்டுள்ளதால், அதை விரிவுபடுத்தி, படுக் கைகள் வருகின்ற ஆண்டிலாவது புதியதாக புதுப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையை பொறுத்த வரையில் அது 54 படுக்கைகள் கொண்டது. இதிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற மாதிரி உள் நோயாளி களுடைய எண்ணிக்கை சராசரியாக 95 ஏறத்தாழ இரண்டு மடங் காக இருக்கிறது. புற நோயாளிகள் 515 ஆக இருக்கிறது. மாண்பு மிகு உறுப்பினர் சொல்லியிருக்கக்கூடிய இந்தவாதம் நியாயமானது வாதமாக இருந்தாலும் நிதி நிலைக்கு ஏற்ப தற்போது முடியாது என்று முதல் கேள்விக்கு பதில் அளித்தேன். மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 54 படுக்கை களை கொண்டிருப்பதாக அறிவித்தார்கள். எங்களுடைய கடைய நல்லூரை பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 150-க்கு மேற்பட்ட உள் நோயாளிகள் படுக்கைகள் இல்லாமல் தரையிலே படுத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலிருந்து 2,000-க்கு மேற்பட்ட நோயாளிகள் தினம் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் பெரிய ஆஸ்பத்திரியான அந்த ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் தியேட்டர் இருந்தும் ஆபரேஷன் செய்வதற்கு எம்.எஸ். படித்த டாக்டர் இல்லாத குறை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு எம்.எஸ். படித்த டாக்டரை அங்கே போட்டு விரைவுபடுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கோரிக்கை உடனடி யாக நிறைவேற்றப்படும். அங்கே உள் நோயாளிகளுடைய படுக் கைகளின் எண்ணிக்கை 54 ஆக இருந்தாலும் மற்றவர்களை தரை யிலே போடக்கூடிய படுக்கைகளில் படுக்க வைக்கவேண்டி இருப்ப தால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப் படும் என்று சொன்னேன்.

1986 மே 13]

அரசு மருத்துவ மனைகளில் நிர்வாக அலுவலர்கள்

768—(*வினா எண். 5707)— திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை, தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் போன்ற பெரிய அரசு மருத்துவமனைகளில் நிர்வாக அலுவலர் (Administrative Officers) பதவிகள் ஏற்படுத்துவது பற்றி அரசிடம் கருத்துரு ஏதாவது உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கோயம்புத்தூர், தஞ்சாவூர், மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் நிர்வாக அதிகாரி பணியிடம் (Post of Administrative Officers) உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. சேலம் மாவட்டம் மருத்துவ மனையை பொறுத்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவமனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நிர்வாக அலுவலர் பதவி, மருத்துவமனையில் முதல்வர் போன்றவர்க்கு உதவியாக இருக்கக்கூடிய பதவியாகும். மூன்று மருத்துவ மனைகளில் இருப்பது போல் சேலம் மருத்துவ மனையில் நியமிக்கின்ற செயற் குறிப்பை இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற் கட்டமாக கவர்ன்மெண்ட் ஸ்டான்லி மெடிக்கல் ஹாஸ்பிடலில் அண்டர் செக்கரட்டரி கிரேடில் ஒருவரும், கவர்ன்மெண்ட் ஜெனரல் ஹாஸ்பிடலில் அண்டர் செக்கரட்டரி கிரேடில் ஒருவரும, ராயப்பேட்டை மருத்துவ மனையில் டெப்டி கலெக்டர் கிரேடில் ஒருவரும், கவர்ன்மெண்ட் கீல்பாக் மெடிக்கல் ஹாஸ்பிடலில் லே செக்ரட்டரி அண்டு டிரஷரி கிரேடில் ஒருவரும் என்கின்ற வகையிலும், ராஜாஜி மருத்துவ மனையில் அண்டர் செக்கரட்டரி கிரேடில் ஒருவருமாக நாம் 5 இடங்களில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களை நியமித்திருக்கிறோம். அது போதாது என்று செயற்குறிப்பு சொல்லுகின்ற நேரத்தில் இன்னும் சில இடங்களில் ஏற்கனவே சொன்னமாதிரி கோவை தஞ்சை மற்றும் நெல்லை மருத்துவ மனைகளில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களை அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். டீன்கள் மூலமாக நிர்வாகத்தை முழுவதுமாக இயக்கமுடியவில்லை என்பதால்தான், இவர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகவேதான் நிர்வாகத் துறையைப் பொறுத்தவரையில் மேற்

பார்வை செய்ய அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற புதிய திட்டத்தை தமிழக சர்க்கார் கொண்டு வந்திருக்கிறது. 3 இடங்களில் அதை ஏற்படுத்திய பிறகுதான சேலததை பற்றி சிந்திக்க முடியும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் தற்காலிகமாக எவ்வளவு ஊழியர்கள் பணி புரிகிறார்கள்? நிரந்தரமாக எவ்வளவு ஊழியர் கள் பணி புரிகிறார்கள்? தற்காலிகமாக வேலை செய்யும் ஊழியர் களை நிரந்தரமாக்க செயற் குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலை வர் அவர்களே, எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை; ஏனென்றால் இது தொடர்பு இல்லாத கேள்வியாக இருப்பதால். இருந்தாலும் அரசாங்கத்தி னுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு நாம் தற்காலிகமாக இருக் கக்கூடியவர்களை நிரந்தரமாக ஆக்கக்கூடிய பணியில் ஈடுபட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மருத் துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய டீன்களின் வேலைப்பளு அதிகமாகி அவர்கள் டீச்சிங் வேலையைச் சரியாகச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதால், அந்த இடத்தில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீஸர்கள் இருக்கவேண்டும், என்ற அடிப் படையில் அண்டர் செக்கரட்டரி போன்ற கேடரில் ஆஃபீசர்கள் போடப்பட்டு அந்தக் கல்லூரியின் வசதிகளை உறுதிப்படுத்தவும், அதிகப்படுத்தவும், அந்த வகையில் டீனுடைய பொறுப்புக்களை முறையாகச் செய்து மருத்துவமனை நிர்வாகத்தைச் சீரமைக்க வும் ஏற்படுத்தப்படக்கூடிய நடவடிக்கை என்பதைப்பற்றி அமைச் சர் அவர்கள் குறிப்பிட்டது சரியானது. இரண்டு வருஷங்களுக்கு முன்பிருந்தே கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இவ்வாறு ஒருவரை நியமிக்கவேண்டும் என்று நான் அவருக்கு கடிதங்கள் எழுதி இருக்கிறேன். எனவே, இனிமேலாவது கால தாமதம் இல்லாமல், குறிப்பிட்ட காலத்திற்குள் அப்படிப்பட்ட ஒரு கேடரை அங்கே நியமிப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு பதில் சொல்லும்போதே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் மன நிறைவு அடை யக் கூடிய அளவுக்குத்தான் அந்தக் கருத்தும் அதிலே அடங்கி இருக்கிறது. கோவை, தஞ்சை மற்றும் நெல்லை மருத்துவமனை களில் அவ்வாறு ஒரு நிர்வாக அதிகாரி போஸ்ட்டை அதாவது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆஃபீசர்ஸ் போஸ்ட்டை உருவாகக்

1986 மே 13]

வேண்டும் என்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியிருக்கிறேன். வெகு விரைவில் அதை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே வெகு விரைவில் ஏற்படுத்தப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. என். முருகானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் மற்றும் செஞ்சி அரசு மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லாததால் நோயாளிகள் மருத்துவமனைகளில் சேரும்போதே கையில் தண்ணீரைக் கொண்டு வர வேண்டும் என்ற நிலைமை இருந்து வருவதை அரசு அறியுமா? அந்த அவல நிலையைப் போக்க அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றாலும், இந்தக் கேள்வி அனுமதிக்கப் பட்டுவிட்ட காரணத்தால் நான் தெளிவுபடுத்துகிறேன். டவுன் போர்ட் மூலமாகத் தொடர்பு கொண்டு திண்டிவனம் மருத்துவ மனைக்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி யிருக்கிறோம். அங்கே கிணறு வெட்டிப்பார்த்தும் தண்ணீர் வரவில்லை. மிகவும் பிரச்சினையுள்ள இடம் அது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில் வாட்டர் ஷார்ட்டேஜ் என்பது பல ஆண்டுகளாக இருந்து வருகிற இடம். அங்கே தண்ணீர் டேங்குகள் மூலமாக, தொட்டிகள் மூலமாக, லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடுசெய்யவேண்டுமென்று மாநகராட்சியிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைச் செய்வதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே சுமுகமான நிலைமை ஏற்படக்கூடும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுப்புகிற கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிற சாத்தியக்கூறு இருந்தாலும், தஞ்சை மருத்துவமனையில் நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றுகிற தர்மராஜ் என்பவருடைய மகனுக்கு, 6 வயது மகனுக்கு காலிலே ஏற்பட்ட............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்பற்ற இக்கேள்விக்குப் பதில் அமைச்சரிடத்தில் இருக்காது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்விக்குப் பதில் கூறப்பட்ட காரணத்தால்தான் இந்தக் கேள்வியை நான் எழுப்புகிறேன். பல இடங்களில் மருத்துவ மனைகளில் தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருப்பதால் நோயாளிகளுக்குக் குடிநீர் கூட இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இதன் காரணத்தால் அங்கேயுள்ள வார்டு

களில் இருக்கின்ற படுக்கைகள் எல்லாம் சுருட்டி வைக்கப்பட்டு அந்த மருத்துவ மனைகளே உபயோகமற்றுப்போய் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது இரண்டு மருத்துவ மனைகளில் அப்படிப்பட்ட நிலைமை இருப்பதைப் பார்வையிட்டார்கள். அதற்கு உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் பிரச்சினை என்பது பொதுவாக பல மருத்துவமனைகளில் ஏற்பட்டு இருக்கக்கூடிய பிரச்சினையாகும். போர்க்கால அடிப்படையில் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் மூலமாக இலாகாவிற்கு நாம் ஆணையிட்டு இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நா. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவமனையில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆஃபீஸர் என்ற நிர்வாக அலுவலர் பதவி விரைவில் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது காலில் மருத்துவர்கள் ஆப்பரேஷன் செய்யவேண்டுமென்றால் தலையில் ஆப்பரேஷன் செய்கிறார்கள். அந்த அளவுக்குக் கவனக் குறைவாகவும், மெத்தனமாகவும் இருக்கிறார்கள். தஞ்சையில் அண்மையில் கூட சுரேஷ் என்ற பையனுக்கு காலில் இருக்கின்ற கட்டியை அகற்றுவதற்குப் பதிலாக சிறுநீரகத்தில் அடைப்பை நீக்குகின்ற ஆப்பரேஷன் செய்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு மருத்துவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அவர்களுடைய பளுவைக் குறைக்கிற வகையில் மிக விரைவாக ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் அட்மினிஸ்ட்டிரேட்டிவ் ஆஃபீசர்ஸ் என்ற பதவியை உடனடியாக ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கக்கூடிய கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. அவர்கள் அங்கே மருத்துவமனையிலே நடைபெற்றிருக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்திற்கும் அட்மினிஸ்ட்டிரேடிவ் ஆபீசர்களைப் போடுவதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அது மருத்துவத்திலே ஒரு மருத்துவர் செய்திருக்கக்கூடிய ஒரு தவறு. அந்த மருத்துவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அதாவது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அது மட்டும் அல்ல. என்குயரியும் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அட்மினிஸ்ட்டிரேடிவ் ஆபீசர் நியமனத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை..................

(மணியடிக்கப்பெற்றது).

1986 மே 13]

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்— விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: அட்மினிஸ்ட்டிரேட்டிவ் ஆபீசர்களைப் பொறுத்தவரையில், அந்த மருத்துவமனை முழுவதையும் நிர்வாகம் செய்யக் கூடிய பணிகளைத்தான் அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் மருத்துவத் துறை என்னும் அந்தப் பகுதியிலே, As far as the treatment is concerned, it is the duty of the Doctors to do the treatment. அதை டாக்டர்கள் தாம் செய்வார்கள். ஆகவே, நிர்வாகப் பொறுப்பிற்கு போடக்கூடிய அதிகாரிக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளிலே அண்டர் செகரட்டரி கேடரிலே அந்த நிர்வாக அலுவலர்களைப் போட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களே. ஒரு மருத்துவர் இப்போது எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் எல்லாம் கூட நிர்வாகத் திறமையில் ஐ.ஏ.எஸ். அளவிற்கு திறமை பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இதுபோன்ற நிர்வாகம் செய்யும் பதவிகளுக்கு அந்த மருத்துவர்களையே நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் மருத்துவர்களின் சங்கத்திலேயிருந்து வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே இதுபோன்ற பதவிகளுக்கு மருத்துவர்களையே நியமனம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அருமையான யோசனை. நான் கூட இது பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மருத்துவர்களுக்கு நிர்வாகத் துறையிலேயும் நல்ல பயிற்சி இருக்க வேண்டும். அப்படி நல்ல பயிற்சி கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கினால் இன்னும் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டிலே கூட பல்வேறு இடங்களில் இப்படி எக்ஸ்பெரிமெண்ட் செய்து பார்க்கிறார்கள். அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் கூட அப்படி டாக்டர்கள் அல்லாதவர்கள் நிர்வாகத்தை நடத்துவதாக தகவல் இருக்கிறது. அங்கே கூட அது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு ஆராய்ச்சிக்கு உரிய விஷயம். This has to be examined in depth என்று சொல்லவேண்டும். ஆகவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எழுப்பியிருக்கக்கூடிய கேள்வி நியாயமான கேள்வி. நிச்சயமாக

அந்த வகையிலே கூட நாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, பரீட்சார்த்தமாக ஓரிரு இடங்களில் நியமிக்கலாம் என்று கூட என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லுகிறபோது பல அரசு மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே அவைகளை விரிவுபடுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இப்போது வறட்சிப் பணிகளின் கீழ் பல்வேறு இடங்களில் பொதுவாக கிணறுகள் அமைத்துக் கொடுக்கின்ற பணிகள் நடைபெற்று வருகிற காலக் கட்டத்தில், அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அந்த டிரவுட் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, தண்ணீர் வசதிகளை அந்தந்த ஆஸ்பத்திரிகளில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி வறட்சிப் பணிகளின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிற இந்த நேரத்திலே, எந்தெந்த மருத்துவமனைகளிலே தண்ணீர் இல்லையோ அந்த மருத்துவமனைகளுக்கு முதலில் முக்கியத்துவம் அளித்து தண்ணீர் வசதியைத் தரவேண்டும் என்று அரசாங்கம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறது. நான் கூட பல அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன். மாவட்ட கலெக்டரிடத்திலே கூட மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லை என்ற பிரச்சனை எங்கு இருக்கிறதோ அதை முதலில் தீர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அந்தந்த மருத்துவமனைகளில் இருக்கக் கூடியவர்களும் மாவட்ட கலெக்டரிடம் தொடர்புகொண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

கருத்தடை அறுவை சிகிச்சைகள்.

769—(*வினா எண். 7195) திரு மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85-ல் கருத்தடை அறுவை சிகிச்சைகள் திருமணம் ஆகாதவர்களுக்கும் செய்யப்பட்டுள்ளதாக அரசிற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். இரண்டு புகார்கள் வந்துள்ளன.

1986 மே 13]

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வாணியம்பாடி தாலுக்காவில் உள்ள முசிலம்பூரில் உள்ள திருமணமாகாத ஒருவருக்கு அரக்கோணம் அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக புகார் வந்துள்ளது.

சேலம் பாரதிநகரைச் சேர்ந்த திருமணமாகாத ஒருவருக்கும் சேலம் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக மற்றொரு புகார் வந்துள்ளது. இவ்வாறு இவர்களை அறுவைச் சிகிச்சைக்குக் கூட்டிச் சென்றவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட இருவருக்கும் ரி-கானலைசேஷன் செய்யவும் உத்திரவிடப்பட்டு உள்ளது.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, தவறுதலாக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட அந்த இளைஞர்களுக்கு அரசு ஏதேனும் நிதியுதவி செய்வதற்கு முன் வந்திருக்கிறதா? அப்படியில்லை என்றால் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ரீ-கானலைசேஷன்' செய்து உதவித் தொகை கொடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, திருமணம் ஆனவர்களுக்குத்தான் குழந்தைகள் பிறக்க வேண்டுமென்ற நிலை இல்லை. திருமணம் ஆகாதவர்கள் கூட இந்த நாட்டினுடைய ஜனத்தொகையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே திருமணம் ஆகாதவர்களுக்கு கருத்தடை அபரேஷன் செய்யக்கூடாது என்று சட்டம் ஏதாவது இருக்கிறதா? ஆகவே அதற்காக கொண்டு வரப்பட்டவர்களை நாம் எதற்காக தடுத்து நிறுத்த வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மனிதாபிமான அடிப்படையில் அவர்களை தடுத்து நிறுத்த வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறோம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : Mr. Speaker Sir, the answer is not perfect. It is for the party who has been operated upon to complaint. No action can be taken on the basis of the complaint of any Hon. Member.

இங்கே திருமணம் ஆகாத இளைஞர்கள் தங்களுக்கு தவறுதலாக கருத்தடை ஆபரேஷன் செய்து விட்டார்கள், அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் குற்றம் சாட்டவில்லை. அவர்கள் அதுபற்றி சொல்லாதபோது

சட்டமன்ற உறுப்பினர்களோ, மற்றவர்களோ, திருமணம் ஆகாதவர்களுக்கு கருத்தடை அப்ரேஷன் செய்து விட்டார்கள் என்று சொல்வதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I would like to tell the Hon'ble Member that it is not on the basis of the complaint of the Hon'ble Member action has been taken. Suo Motu the Department itself is taking action. The enquiry part of it consists the whole gammut which includes the complaint of the Hon. Member. A detailed enquiry is being conducted and all necessary actions are taken.

திரு. டி. என். முருகானந்தம் : தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் சமுதாயத்தில் குடும்பக் கட்டுப்பாடு என்பது இந்தியாவினுடைய வளர்ச்சிக்கு அடிப்படை திட்டமாக இருக்கின்ற நிலையில், ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று அரசு சட்டம் கொண்டு வருமா? அதற்கு மேல் பிறக்கும் குழந்தைகளுக்கு அரசாங்கம் எந்தச் சலுகையும் கொடுக்காது என்று அறிவிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நான் மிகவும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டியது மத்திய சர்க்கார் தான். ஏனென்றால் நாம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தீவிரமாக குடும்பக் கட்டுப்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பீகார் ஆகிய இந்த நான்கு மாநிலங்களில் இதனை அவர்கள் சரியான முறையில் கொண்டு வரவில்லை. அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இலக்கு பற்றி இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். உத்திரப் பிரதேசத்தில் $11\frac{1}{2}$ கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆறு லட்சத்து 50 ஆயிரம் பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு இலக்கு வைத்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கக்கூடிய ஜனத்தொகை 4.8 கோடியாகும். 1981-ஆம் ஆண்டு சென்சஸ் அடிப்படையில் சொல்கிறேன். நமக்கு அவர்கள் கொடுத்திருக்கிற இலக்கு 5.6 லட்சம் என்று இருக்கிறது. இது எந்த அடிப்படையில் நியாயம்? ஆகவே நல்ல கருத்தாக இருந்தாலும், அப்படிப்பட்ட நியாயமான கருத்துக்கள் அகில இந்திய ரீதியாக ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அதை மத்திய அரசு கொண்டு வர வேண்டும். ஆகவே முதலில் அவர்கள் நான் குறிப்பிட்டிருக்கிற இந்த நான்கு மாநிலங்கள் உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

1986 மே 13]

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே, திருமணம் ஆகாதவர்களுக்கும், அறுவை சிகிச்சைக்கு தகுதியற்றவர்களுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இலக்கை அடைய வேண்டுமென்று இப்படி அறுவை சிகிச்சை செய்கிற மருத்துவர்கள் மீது நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு பதில் சொல்கிறபோதே அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லி இருக்கிறேன். இரண்டு விஷயங்களிலும், மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்கள் எழுப்பிய இந்தக் கருத்துக்கும், மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் எழுப்பியிருக்கும் கேள்விக்கும் சரிசமமாக யோசனை செய்யவேண்டியிருக்கிறது. It has to be in between the two points of view. இரண்டு கருத்துக்களுக்கும் இடையில் இருக்கிற கருத்துதான் அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே. இந்த நிரந்தர அறுவை சிகிச்சை செய்த பிறகு கூட சில தம்பதிகளுக்கு குழந்தை பிறந்து விடுகிறது. அது தம்பதிகளுடைய குறை இல்லையென்பதை நாம் அறிவோம். அப்படி அறுவை சிகிச்சைக்குப் பின்னால் குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தைகளை பாதுகாக்கிற பொறுப்பை அரசோ அல்லது அறுவை சிகிச்சை செய்த மருத்துவரோ ஏற்க வேண்டுமென்ற நிலையை அரசாங்கம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை, ஏன் என்றால், இந்த 'லாப்ரோஸ்கோபிக்' என்று ஒரு புதிய முறையில் நாம் ரப்பர் பேண்ட், ஸ்டைலேசன் பேண்ட் போடுகிற நேரத்தில் ஏறக்குறைய ஒரு சதவீதம் அது, மீண்டும் குழந்தை பெறக்கூடிய இந்த டியூப் சரியான வகையில் லொகேட் ஆகாத காரணத்தால வரக்கூடிய நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் சொன்ன கருத்து, நேசனல் ஹெல்த் பாலிசி உருவாக்கக் கூடிய நேரத்தில் அங்கே சமர்ப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று அரசாங்கம் சட்டம் வைத்திருக்கிறது. ஆனால் ஒரே

நேரத்தில் சில தாய்மார்கள் 2 அல்லது 3 குழந்தைகள் பெற்றுவிடுகிறார்கள். அதைத் தடுக்க முடியுமா? மேலும் வெளி நாட்டில், திருமணம் ஆகாமலேயே இன்ஜெக்சன் மூலமாக குழந்தைகள் பிறப்பதாகச் சொல்கிறார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று 3 குழந்தைகள் பெற்றுக்கொள்பவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது நம் கையிலே இல்லை. ஆனால் இந்த இன்ஜக்சன் மூலமாக பரிட்சார்த்தமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். It is still in experimental stage.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் ஆகாதவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். அதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அவர்களாகவே பெட்டிசன் கொடுத்தால் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்லுகின்ற காரணத்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள இங்கே சொல்கிறார்களே ஒழிய வேறு அல்ல. அடுத்து இன்றைய தினம் இந்த அறுவைச் சிகிச்சையைப் பொறுத்தவரையில், அதைச் செய்தவர்களுக்கே மீண்டும் செய்வதாகச் சொல்கிறார்கள். அதாவது செய்த கேசுக்கே திரும்பச் செய்கிறார்கள். இதுபோன்ற தவறான புள்ளி விவரங்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுவரையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன் பகுதியில் சொல்லியிருக்கக்கூடிய கருத்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக இருக்கிறது. இரண்டாவது பகுதியில் அவர்கள் எழுப்பி இருக்கக்கூடிய கேள்வி நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பது, ஏராளமான தவறுகள் செய்தவர்கள் மீது தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் சொள் கிறேன்.

நவீன அரிசி ஆலைகள்.

770—(*வினா எண். 7796)—**திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1966 மே 13)

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) ரூபாய் 1 1/4 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு 100 டன் புழுங்கல் நெல் அரைக்கும் திறன் கொண்ட நவீன அரிசி ஆலை ஒன்று பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், மானாமதுரையில் சிப்காட்டுக்குச் சொந்தமான நிலத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினால் அமைக்கப்படவுள்ளது.

திரு. கா. சொர்ணலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலையில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாகவும், அதோடு சம்பந்தப்பட்ட வகையிலேயும் சுமார் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அரிசி ஆலையைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்த நவீன அரிசி ஆலை எப்போது வேலையைத் துவங்கும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இறுதிக்குள், இல்லை என்றால் அடுத்த ஆண்டு முதல் வாக்கில் துவங்கும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, இந்த நவீன அரிசி ஆலையைத் தொடங்குகின்ற திட்டங்கள் தமிழக முழுவதும் எத்தனை இடங்களில் தொடங்கி இருக்கிறார்கள்? குறிப்பாக என்னுடைய செங்கை மாவட்டத்தில் தொடங்குகின்றதிட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைப் பொறுத்தது. இருந்தாலும் மொத்தம் உள்ள நான்கு இடங்களில், தென் ஆர்க்காடும் அதிலே ஒன்று. இடம் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒன்று. மீதி இரண்டு இடங்களில் இடம் பார்க்கப்பட்டு வருகிறது. அநேகமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் இல்லை என்றுதான் குறிப்பு இருக்கிறது. காரணம் ஏற்கனவே நவீன அரிசி ஆலை அங்கே இயங்கிக் கொண்டு இருக்கிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக நவீன அரிசி ஆலைகளை ஏற்படுத்துவதைவிட ஏற்கனவே தமிழ்நாடு முழுவதும் புட் கார்ப்பரேசன் ஆப் இந்தியாவால் நடத்தப்பட்டு வந்த மாடர்ன் ரைஸ்மில்கள் இன்று வேலையில்லாமல் சும்மா இருந்து கொண்டு இருக்கின்றன. அந்த ஆலைகளை புட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா நம்முடைய மாநிலத்திற்குத் தரத் தயாராக இருப்பதாகவும் சொல்கிறார்கள். அதிலே வேலை செய்பவர்கள் தற்போது வேலை வாய்ப்பு இழக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. எனவே அந்த ஆலைகளை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, அவற்றை நடத்துமா? அவற்றில் வேலை செய்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்.சி.ஐ.-யால் நடத்தப்படுகிற நவீன அரிசி ஆலைகளை, தமிழகத்தில் இருக்கிற ஆலைகளை விற்க மத்திய அரசு முன்வந்து, தமிழக அரசு மத்திய அரசின் அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறது. அவர்கள் புக் விலைக்குத் தரவேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அவர்கள் அதிக விலையைச் சொல்லிக்கொண்டு இருகிறார்கள். எனவே விலை வித்தியாசத்தினாலே இன்னும் முடிவு ஆகாமல் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது. இதற்கிடையில் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிற அலுவலர்கள் தமிழக அரசு எப்.சி.ஐ. ஆலைகளையெல்லாம் எடுத்துக்கொண்டால் இங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிற சுமார் 500 பேர், நாங்கள் குஜராத்துக்கோ, உத்திரப் பிரதேசத்துக்கோ, வேறு மாநிலங்களுக்கோ மாற்றப்படக்கூடிய ஒரு அபாயமான நிலைமை ஏற்படும். எனவே நீங்கள் எடுக்கக்கூடாது நிர்வாக அடிப்படையிலே எப்.சி.ஐ.யே நடத்தட்டும் என்று பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர்கள் வேறு இந்தப் பிரச்சனையை எழுப்பி முதல்வர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மனுக்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாம் சேர்ந்து அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவீன அரிசி ஆலை அமைப்பது சம்பந்தமாக தமிழகத்திலே அதிகமாக இப்போது புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு தருமபுரி மாவட்டத்திலே 12 நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே விளைகிற நெல்லையெல்லாம் தனியார் ஆலைகளுக்கு கொடுக்கிறார்கள். தனியார் ஆலையிலே பல்வேறு தவறுகள் நடப்பதாகவும், மணல் போன்றவைகள் எல்லாம் அரிசியிலே கலக்கப்படுவதாக அரசுக்குத் ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? இப்போது தனியாரிடத்திலே கொடுத்து அரிசி ஆக்குகின்ற சூழ்நிலையை மாற்றி தருமபுரி மாவட்டத்திலே இந்த நவீன அரிசி ஆலை ஒன்றை அமைப்பதற்கு அரசினிடத்திலே செயற் குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 மே 13,

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் ஆகிற நெல்லில் பெரும் பகுதி—தஞ்சை மாவட்டத்திலேயிருந்தும் ஏகபோக கொள்முதல் பகுதிகளாக இருக்கின்ற திருச்சி, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய முக்கால்வாசி நெல் கொள்முதல் ஆகிறது; சிவில் சப்ளைஸ் மூலமாக கொள்முதல் ஆகிற நெல்லிலே — ஏற்கனவே இங்கிருந்து கொள்முதல் ஆகின்ற நெல்லை வேறு மாவட்டங்களுக்கு, தொலை தூரங்களுக்கு கொண்டு போனால், அதனால் டிரான்ஸ்போர்ட் செலவும், பல் வேறு செலவுகளும் ஏற்படுகின்றன. அந்த அடிப்படையிலே தஞ்சை மாவட்டத்திலே தான் பெரும்பாலும் துவக்கப்படு கின்றன. இப்போது தஞ்சை மாவட்டத்தையொட்டி இருக் கின்ற சில மாவட்டங்களிலேயும் டிரான்ஸ்போர்ட் மூலமாக அரிசியை மற்ற பகுதிகளுக்கு கொண்டு போவதற்கு வசதியாக இருக்கின்றதன் அடிப்படையிலே, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தருமபுரி மாவட்டத்தைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றி இப்போது எதுவும் பதில் சொல்ல முடியாது. ஆய்வு செய்து பின்னாலே பதில் தருகிறேன்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே நவீன அரிசி ஆலை தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. புதுக்கோட்டை மாவட்டத்தில், எந்த ஊரில், எந்த நாளில் அந்த அரிசி ஆலை தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலே அமைக்கலாம் என்று அதிகாரிகள் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. ஆலங்குளம் பக்கத்திலே இடம் பார்த்திருக்கிறார்கள். வெகு விரைவிலே இடம் முடிவுபெற்று பணிகள் தொடங்கப்படும்.

771—(*வினா எண். 8885)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் உள்ள நவீன அரிசி ஆலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) பட்டுக்கோட்டையில் இயங்கி வரும் நவீன அரிசி ஆலையின் தற்போதைய குறியீட்டுச் செயல் திறன், மாதம் ஒன்றுக்கு 1,400 டன் நெல் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது இயங்கி வரும் இயந்திரங்களோடு, மேலும் இன்றியமையாத ஒரு சில இயந்திரங்களை இணைத்து, இவ்வாலையின் செயல் திறனை மாதம் ஒன்றுக்கு 2,000 டன் நெல் என உயர்த்துவதற்குத் திட்டம் தீட்டப்பட்டு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 12.50 இலட்சம் ஆகும். இத்திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் முழுமையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையில் இருக்கின்ற நவீன அரிசி ஆலையை விரிவுபடுத்துவதற்கு 12.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். புரட்சித் தலைவருக்கும், இந்த அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நவீன அரிசி ஆலையில் இப்போது நெல் அதிகம் வருகின்ற நேரத்தில், சேமிப்புக் கிடங்கு வசதியையும் சேர்த்து உருவாக்கித் தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து அங்கே பணியாளர்கள்—தற்காலிகப் பணியாளர்கள்—மூட்டை தூக்குபவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு தொழிற்சாலைச் சட்டத்தின்படி 460 நாட்கள் பணியாற்றுகின்றவர்களை நிரந்தரமாக பணியில் அமர்த்துகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்புக் கிடங்கைப் பற்றி தனியாகப் பரிசீலித்து உரிய வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களைப் பொறுத்தவரைக்கும் நிரந்தர பணியாளர்கள் ஏற்கனவே பல்வேறு அரிசி ஆலைகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மூட்டை தூக்குவது மற்றும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அங்கே நிரந்தரப் பணியாளர்களாக இல்லாமல் டிரான்ஸ்போர்ட் காண்டிராக்டேர்ஸ்இடத்திலே அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இதுகுறித்தெல்லாம் ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 772 மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

1986 மே 13]

நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

*773—(*வினா எண். 9125)*—திரு. மா. சின்னராசு மற்றும் திரு. கே. உச்சி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம் (NCMS) காய்கறிகளை பக்குவப்படுத்தி பாதுகாத்து விற்பனை செய்ய குளிர் பதனிடும் நிலையத்தை அச்சங்கத்தின் விற்பனை மையமான மேட்டுப்பாளயத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார். மிக்க நன்றி. ஆனால் ஆராயப்பட்டு எப்போது அந்தப் பணிகள் தொடங்கப்படும்? காரணம் அங்கேயுள்ள காய்கறி வியாபாரிகள் மிகவும் அவதிப் படுகிறார்கள். அதிகமாக விளையும் நேரத்தில் போதுமான விலை கிடைப்பதில்லை. குறைந்த நேரத்தில், அதை பக்குவப் படுத்துவதற்கு இடம் இல்லை. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்களும் நானும் சேர்ந்துதான் அந்த இடங்களை எல்லாம் பார்த்தோம். அங்கே சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகிறது என்று சொன்னால், அங்கே எந்த அளவுக்கு கெப்பாசிட்டி உள்ள குடோன் வேண்டும் என்பதைப் பார்த்து எந்த எந்த மாதிரி அங்கே அதிகமாக ஸ்டாக் வைத்து செயல் படுத்தலாம் என்பதைப் பார்த்து, அதற்கு ஏற்றவாறு கட்டுவதற்குவேண்டிய நடவடிக்கைகளைத் தான் — சாத்திய கூறுகளை ஆராய்ந்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 மே 13

திரு. கே. கல்லன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை தலைமையகத்தில் வைத்தால் 'மெயின்டனன்ஸ் காஸ்டு' குறைவாகவும், டிமாண்டுக்கு ஏற்ப சப்ளை செய்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே இந்த ஏர் கண்டிஷன் நிலையத்தை உதகையில் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். ;எஸ். ஆர். இராமச்சந்திரன் : ம்ாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கே வேண்டியது இல்லை. அதைவிட கீழே தான் அந்த விவசாயிகள் அவைகளை விற்பதற்கு மேட்டுப்பாளையத்திற்கு தான் கொண்டு வருவார்கள். அங்கே தான் அவைகளை வைத்து இருப்பதற்கான வசதிகள் இல்லை. ஆகவே தான் விற்க வேண்டிய அளவுக்கு வைத்து இருப்பதற்கு வசதி செய்வதற்காக நாங்கள் செய்ய இருக்கிறோம். மேட்டுப்பாளையத்தில் தற்போது வைப்பதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம்.

திரு. கே.ா வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வந்து மேட்டுப்பாளையத்தில் விற்பதற்கான அந்த நீலகிரி மாவட்ட கூட்டுறவு அமைப்பு இப்போது கீழே செயல்படுத்த முடியாமல் கீழே இருக்கக்கூடிய சில தனிப்பட்ட வியாபாரிகள் இதன் செயல்பாட்டை தடுத்து அந்த கூட்டுறவு அமைப்பு செயல்படாமல் தடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதை அரசு அறியுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைத் தடுத்து அந்த கூட்டுறவு நிறுவனம் மேட்டுப் பாளையத்தில் செயல்படுவதற்கு உரிய ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் அங்கே இருக்கக்கூடிய சில தனிப்பட்ட வியாபாரிகள் அங்கே என்.சி.எம்.எஸ். சரியாக செயல்படாமல் இருப்பதற்கு வேண்டிய அந்தத் தடைகளை செய்து கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு போன்றவர்களும் மிகவும் ஆர்வத்தோடு அதிலும் கோர்ட் வரை வந்தார்கள். வந்து இருந்து அதை முடிவு செய்து இப்போது மிக சிறப்பாக பழையபடி என்.சி.எம்.எஸ். அங்கே தொடர்ந்து தன்னுடைய பணியை தொடர்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1986 மே 13]

மாண்புமிகு பேரவை தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறிவிடாத வினாக்கள் :

1—

அனல் மற்றும் அனுமின் உற்பத்திக்கு சிறப்புத் திட்டம்

வினா 509— திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர் மின் உற்பத்தி குறைந்துள்ள நிலையில் அனல் மற்றும் அணு மின் உற்பத்திக்காக சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசு மேற்கொண்டுள்ளதா?

(ஆ) இதற்காக நிபுணர் குழு அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

2—

வினா 664— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசிடம் மாநில அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

[1986 மே 13

3

திருவில்லிபுத்தூர் பனை ஆராய்ச்சி நிலையம்.

வினா—764 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

4—

போக்குவரத்துக் கழகம் மூலம் பாலிடெக்னிக்குகள்.

வினா-880 மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போக்குவரத்துக் கழகங்களின் மூலம் மாநிலத்தில் பாலி டெக்னிக்குகள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன?

விடை—

எங்குமில்லை.

5—

திண்டுக்கல் மருத்துவ மனையில் காசநோயாளிகளுக்கு கூடுதல் படுக்கைகள்.

வினா-894 மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தவைவர்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் காச நோயாளிகளுக்கான படுக்கை வசதி மிகவும் குறைவாக உள்ளதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1986 மே 13,]

விடை

(அ) அரசுக்கு புகார்கள் எதுவும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

6—

பத்திரிக்கையாளர்களுக்கு வீடுகள்.

வினா 1351—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

7—

வினா 2189—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பீட்டர்ஸ் காலனியில் வாடகை வீட்டில் வசித்து வரும் பத்திரிகை நிருபர்கள், தொலைக் காட்சி, வானொலியைச் சார்ந்த ஊழியர்களுக்கு அந்த வீடுகளைச் சொந்தமாக்கிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1936 மே 13

8—

சென்னையில் திறந்தவெளி சாக்கடைகளுக்கு குழாய்கள்.

வினா 1481— திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீராணம் திட்டம் பணிகளுக்காக வாங்கப்பட்ட குழாய்களை சென்னை மாநகரில் திறந்த வெளிச் சாக்கடைகளில் பயன்படுத்துவதற்காக பொதுப் பணித்துறையில் இருந்து வாங்கி பெருநகர் கழிவு நீர் வடிகால் வாரியம் பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

9—

திருநெல்வேலி மாவட்டம் சுரண்டையில் அரசு மருத்துவமனை.

வினா 1493— திரு. டி. ஆர். வேங்கடமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சுரண்டையில் ஒரு அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

10—

மின் வாரியத்திற்கு உலக வங்கி உதவி :

வினா 1560— மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிய மின் திட்டங்களை செயல்படுத்தவும், செயல்படும் திட்டங்களை அபிவிருத்தி செய்யவும் மின் வாரியம் உலக வங்கியிடம் நிதி உதவி ஏதும் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

சானார்பட்டி யூனியனில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்

வினா 1693 திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன் எல்லைப்பட்டி மற்றும் தி. பாரைப்பட்டி ஆகிய கிராமங்களில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

விடை

இல்லை.

12—

மின் கம்மியர்கள்

வினா 1725—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கம்பியர்கள் அந்தந்த ஊரில் குடியிருப்பதில்லை என்று புகார்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளபட்டுள்ளது?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

56 [1986 மே 13

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

சமூக நலக்காடுகள் பராமரிப்பு

வினா 2012—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமூக நலக் காடுகள் திட்டத்தில் 100 கன்றுகளுக்கு ஒரு காவலர் என்ற அடிப்படையில் நியமிக்க பரிசீலனை எதுவும் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

14—

வினா 2353—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடு வளர்ப்பின் கீழ் நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் வைக்கப்பட்டுள்ள மரக் கன்றுகளை பராமரிக்க முழு நேர ஊழியர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1986 மே 13

15—

துறைமுகங்களை ஆழப்படுத்த மணல்வாரி கப்பல்.

வினா 2054—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறிய துறைமுகங்களின் முகத்துவாரங்களை ஆழப் படுத்துவதற்காக மணல்வாரி கப்பல் வாங்க அரசு முடிவு செய் துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

கோவையில் பாதாள இரயில் பாதை திட்டம்.

வினா 2091—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாநகரில் பாதாள இரயில் பாதை திட் டத்தை உருவாக்குவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதும் செய்ய திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1986 மே 13

17—

தஞ்சையில் கடல் ஆமைகள் ஆராய்ச்சிக் கூடம்.

வினா 2096—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல் ஆமைகள் ஆராய்ச்சிக் கூடம் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(அ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

18—

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சிறுசேமிப்பு.

வினா 2300—திரு க. வே வீரானம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனும் மான்யமும் பெற மனு பொது மக்கள் கொடுக்கும் போது சிறுசேமிப்பு நான்கு சதவீதம் மான்யத் தொகை மீது வசூல் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) அரசு அவ்விதம் ஆணையிடவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1986 மே 13]

19—

அர்ஜீனாபுரம் நல்லதங்காள் கோவில் மற்றும் கிணறு சீர்படுத்தல்

வினா 2507—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அருகே அர்ஜீனாபுரத்தில் உள்ள 'நல்ல தங்காள்' கோவிலையும் கிணற்றையும் சீர் அமைக்கும் திட்டம் அரசிடம் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

20—

கோட்டையூர், ஊராட்சி மருத்துவமனை.

வினா 2513—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி, கோட்டையூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு மேற்கொள்ளும் உத்தேசம் உண்டா?

விடை—

இல்லை.

21—

உணவு விடுதிகளில் வழங்கும் குடிநீர்.

வினா 2514—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவு விடுதிகளில் வழங்கப்படும் குடி நீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறதா?

விடை—

உணவு விடுதிகளில் வழங்கப்படும் குடிநீரை பரிசோதனை செய்வதில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1986 மே 13

22—

நாய்க்கடியில் இறந்தவர்கள்.

வினா 2520— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1977 முதல் 1984 முடிய மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, கிராமப் பகுதிகளில் நாய் கடியில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) நாய்க்கடிக்கு போதிய மருந்துகள் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) 1977 முடிய 1984 முதல் 2,196 பேர்கள் இறந்துள்ளனர்.

(ஆ) ஆம்.

23—

திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம்

வினா 2553— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் 24 படுக்கைககள் கொண்ட கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1986 மே 13]

24—

பள்ளிக்கட்டிடங்களை பழுதுபார்த்தல்.

வினா 2632—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டிடங்களை உலக வங்கி உதவியுடன் பழுது பார்க்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

25—

விராலி மலையில் மயில்கள் சரணாயம்.

வினா 2720—திரு. க. சோலைராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் விராலி மலையில் மயில்கள் சரணாலயம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

26—

தாமிரபரணி நீர்மின் திட்டம்

வினா 2822—திரு. ப. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி நீர்மின் திட்டத்திற்கு மைய அரசு அனுமதி வழங்கி உள்ளதா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

27—

பம்மல் பேரூராட்சியில் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

வினா 2765—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி பம்மல் பேரூராட்சியில் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

28—

பார்வையற்றவர்களுக்கு தனி பாலிடெக்னிக்.

வினா 3063—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பார்வையற்றவர்களுக்காக தனி பாலிடெக்னிக் தொடங்கும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

1986 மே 13]

29—

ஹெலிகாப்டர் மூலம் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம்

வினா 3068—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஹெலிகாப்டர் மூலம் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்யும் முறையினை பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

விடை—

இல்லை.

30—

மெரினா கடற்கரை மகாபலிபுரம் படகு போக்குவரத்து

வினா 3080—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலா பயணிகளை கவருவதற்காக சென்னை மெரினா கடற்கரையிலிருந்து மகாபலிபுரம் வரை படகு போக்குவரத்தை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

31—

குமரி மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரி

வினா 3166—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைவாணர் பெயரில் குமரி மாவட்டத்தில் தொழில்நுட்பக்கல்லூரி தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

32—

வால்பாறை சின்கோனா தோட்டம்

வினா 3232—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள சின்கோனா அரசு எஸ்டேட்டில் 7,500 ஏக்கர் நிலம் சரியாக பயன்படுத்தப்படாததால் போதிய வருமானம் கிடைக்கவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

33

தமிழகத்தில் தனியார் வேளாண்மைக் கல்லூரி

வினா 3268—மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார்கள் வேளாண்மைக் கல்லூரி தொடக்க அனுமதி கோரியுள்ளதா ?

1986 மே 13]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

34—

வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களின் எண்ணிக்கை.

வினா 3497—திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ், வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு எண்ணியுள்ளதா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

35—

கூடலூர் மைசூர் இணைப்பு சாலையை மாற்றி அமைத்தல்

வினா 3584 – திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்த்த கூடலூர்-மைசூர் இணைப்புச் சாலையை மாற்றியமைக்க புதிய திட்டம் ஏதேனும் உண்டா ?

128-121—8

(ஆ) அச்சாலையை மாற்றுவதில் பொது மக்கள் ஏதேனும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்களா ?

விடை—

(அ) மேற்கூறிய புதிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

36—

கூக்கல் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம்.

வினா 3613—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியம் கூக்கல்தொரை உயர்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) அப்பணி எப்போது துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

37—

அரசு அச்சக அலுவலர்களுக்கு மெட்டல் பாயிசன் அலவன்ஸ்

வினா 3641—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசு அச்சகங்களில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் மெட்டல் பாயிசன் அலவன்ஸ் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1986 மே 13]

38—

அரசு அச்சக பணியாளர் வாரிசுகளுக்கு முன்னுரிமை.

வினா 3648—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அச்சகத்தில் ஆட்களை வேலைக்கு எடுக்கும்போது பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

விடை—

இல்லை.

39 —

கன்னியாகுமரி பொழியூர் கடற்கரை சாலை

வினா 3661—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி முதல் பொழியூர் வரையிலான கடற்கரை சாலை அமைக்கும் வேலை எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இடைஇடையே கட்டப்படவேண்டிய இணைப்புப் பாலங்கள் கட்டுவதற்கு அரசு உத்திரவிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினா எழ இடமில்லை.

40—

கும்பகோணம் சாக்கோட்டை சாலையில் புதிய பாலம்

வினா 3697—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகுப் போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் சாக்கோட்டை ஊர்களை இணைக்கும் பழுதுபட்ட அரசலாறு பாலத்திற்கு பதில் புதிய பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மேற்கூறிய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

41 —

கோவையில் அனல்மின் திட்டம்.

வினா 3713 – திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் அனல் மின் நிலையம் நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை —

இல்லை.

42 —

குடுமியாமலை சாரையூர் சாலையில் வெள்ளத்திற்கு பாலம்.

வினா 3709 – திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குடுமியாமலை–சாரையூர் சாலையில் (வழி கைவேலிப்பட்டி) வெள்ளாற்றில் பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

43 —

இரணியல்–முட்டம் சாலை

வினா 3792 – திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

1986 மே 13]

(அ) குமரி மாவட்டம் இரணியல்— முட்டம் சாலையை, அகலப்படுத்தி அதன் இரு பக்கங்களிலும் சுவர் கட்டிடும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

44 —

மணவாளக்குறிச்சி — குளச்சல் சாலையை சீர் அமைத்தல்

வினா 3793 — திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டத்தில், மணவாளக்குறிச்சி — குளச்சல் சாலையை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

45 —

ஆசாரிப்பள்ளம் — பெருஞ்செல்வவிளை சாலை

வினா 3794 — திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளம் — பெருஞ்செல்வ விளை சாலையில் உள்ள பாலத்தை அகலப்படுத்துவதற்கும், சாலை சீரமைக்கவும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

46 —

புதுப்பட்டி அருகே அர்ச்சனா நதியில் மேம்பாலம்

வினா 3795— திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி எம். புதுப்பட்டி அருகில் உள்ள அர்ச்சனா நதியில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இலலை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

47—

கடலூரில் இரயில்வே மேம்பாலம்

வினா 3882 — திரு. துரை அன்பரசன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் இரயிவே மேம்பாலம் அமைக்கும் பணி அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்போது துவங்கப்பெறும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1986 மே 13

48—

திருவக்கரையில் சங்கராபரணி ஆற்றில் தரைப் பாலம்

வினா 3883 — திரு துரை அன்பரசன்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திருவக்கரையில் இருக்கின்ற அருள்மிகு வக்ர காளி ஆலயத்தின் அருகிலுள்ள சங்கராபரணி ஆற்றில் தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

49—

சக்தி — கோபி குள்ளம்பாளையம் பாதையின் குறுக்கே பாலம்

வினா 3890 — திரு வே. கு. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானிசாகர் தொகுதி சக்தி கோபி மெயின் ரோடிலிருந்து குள்ளம்பாளையம் செல்லும் பாதையின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழ இடமில்லை.

50—

குடியிருப்புப் பகுதிகளில் கள்,, சாராயக் கடைகள்

வினா 3929 — திரு மு. மாரிமுத்து: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியிருப்புகளின் ஒதுக்குப்புறமான இடங்களில் கள், சாராயக் கடைகளுக்கான இடம் ஒதுக்கித் தந்து வாடகைக்கு விடுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

51—

கிருஷ்ணகிரியில் சர்க்கரை ஆலை

வினா 3956 — திரு க. இரா. சின்னராசு: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

52—

நம்பியூர் பேரூராட்சி பேருந்து நிலையம்

வினா 3982 — திரு வே. கு. சின்னசாமி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நம்பியூர் பேரூராட்சியில் நகரப் பேருந்து நிலையம் கட்ட திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1986 மே 13]

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

53—

நம்பியூர் தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர்கள் விடுதிக்கு கட்டிடம்.

வினா 3983 — திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நம்பியூரில் இயங்கிவரும் தாழ்த்தப்பட்டோர் (ஆண்கள், பெண்கள்) மாணவ விடுதிகளுக்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.

54—

ரோடு கார்ப்பரேஷன்.

வினா 3997 — டாக்டர் அ. பொன்னுசாமி, திரு கா. செ. பழனிச்சாமி, திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. யு. பி. மாதையன், மற்றும் திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரோடு கார்ப்பரேஷன் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

55—

மூப்பம்பட்டி பஞ்சாயத்தை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைத்தல்.

வினா 4109 — திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி ஒன்றியம் மூப்பம்பட்டி பஞ்சாயத்தை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைக்கும் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

56—

ஆதமங்கலம் துணை மின் நிலையம்.

வினா 4287 — திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஆதமங்கலம் கிராமத்தில் (கலசப்பாக்கம் தொகுதி) அமைக்கப்பட்டு வரும் துணை மின் நிலையம் எப்போது திறக்கப்படும்?

விடை—

31 7–1985 அன்று இயக்கப்பட்டு விட்டது.

57—

கடலாடி ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா 4302 — திரு அ. பிரணவநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1986 மே 13]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் டாக்டர் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பெண் டாக்டர் நியமிக்கப்படுவாரா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒரு பெண் உதவி அறுவை மருத்துவரை நியமித்து ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.

58—

பேரூர் தொகுதி வேலாண்டிபாளையத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி.

வினா 4351 — திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வேலாண்டி பாளையத்தில் உயர்நிலைப்பள்ளி துவங்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

59—

சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை.

வினா 4403 — திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட சாலிக் கிராமம் 112 வது வட்டம், எம்.ஜி.ஆர். நகர், கே. கே. நகர், ஜாப்பர்கான்பேட்டை 113 வது வட்டங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

60 —

நத்தம் — செந்துரை ரோடிலுள்ள வஞ்சி ஊற்று நீர்.

வினா 4430 — திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம்—செந்துறை ரோட்டிற்கு மேற்கில் உள்ள வஞ்சி ஊற்றிலிருந்து வரும் நீரைத் தேக்கி பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

இல்லை.

61—

கோவையில் நவீன வசதி இறைச்சி, மீன் அங்காடி.

வினா 4645 — திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் நவீன வசதி செய்யப்பட்ட இறைச்சி-மீன் மார்க்கெட் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

62 —

கோடை வாசஸ்தலங்களில் மத்திய தரக் குடும்பங்களுக்கு ஓய்வு அறைகள்

வினா 4673 — திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1986 மே 13]

கோடை வாசஸ்தலங்களான கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற இடங்களிலும் குற்றாலத்திலும் சாதாரண மத்தியத் தரக் குடும்பங்கள் சென்று தங்குவதற்கு வசதியாக ஓய்வு அறைகளை பொதுப் பணித்துறை மூலம் கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

விடை —

இல்லை.

63 —

பகல் காட்சி சினிமாவை ரத்து செய்தல்.

வினா 4927— வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாநிலத்தில் பகல் காட்சி சினிமாவை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

64—

முசுகுந்து நதியில் ராவுத்த நல்லூருக்கும் பிரும்ம குண்டத்திற்கும் அருகில் பாலம்.

வினா 5004 — திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்கராபுரம் தொகுதி முசுகுந்தா நதியின் குறுக்கே ராவுத்த நல்லூருக்கும், பிரும்ம குண்டத்திற்கும் அருகில் கரும்பு சாலைத் திட்டத்தின் கீழ் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

65—

தோட்டக் கலைக் கல்லூரி.

வினா 5296 — திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தோட்டக்கலைக் கல்லூரி தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது, எங்கு, எவ்வளவு செலவில் அமைக்கப்படும்?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

66—

கோவை காந்திபுரம் ரோட்டை அவிநாசி வரை நீட்டித்தல்.

வினா 5626 — திரு மு. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் செல்லும் கோவை-காந்திபுரம் 100 அடி ரோட்டை, கிழக்குப் புறமாக மேலும் நீட்டித்து அவிநாசி மெயின் ரோட்டில் இணைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

(ஆ) இது பற்றி மாநகராட்சி மன்றத்திற்கு அரசு உத்தரவு போட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மேற்கூறிய திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

1986 மே 13]

67—

முறைசாராக் கல்வித் திட்டம்.

வினா 5802 — திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முறைசாராக் கல்வித் திட்டத்தில் (Non-Traditional Course) அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது அறிமுகப்படுத்தப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ இடமில்லை.

68—

அனுப்பர்பாளையத்தை திருப்பூர் நகராட்சியோடு இணைத்தல்.

வினா 5891 — திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 15, வேலம்பாளையம் பேரூராட்சியிலுள்ள அனுப்பர்பாளையத்தை திருப்பூர் நகராட்சியோடு சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

69—

காவேரி மேம்பாடு திட்டத்திற்கு உலக வங்கி கடன்.

வினா 6480 — திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் காவேரி மேம்பாடு திட்டத்தில் உலக வங்கி மூலமாக கடன் பெற்று வாய்க்கால்கள் வெட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

70—

மரம் நடும் பணியை ஒரே துறையால் செயல்படுத்தல்.

வினா 689) — திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இப்பொழுது பல்வேறு துறைகளின் மூலம் நிறைவேற்றப்படும் மரம் நடும் பணி ஒரே துறையால் (Under one Agency) நடைபெற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2 ஒழுங்குப் பிரச்சனை.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலை 11.08 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு நடைபெற இருக்கிறது. அதிலே உங்கள் கட்சித் தலைவர் வருவார்கள். அங்கே தெரிந்து கொள்ளுங்கள். ஆகவே இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இதை யெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவச்சலம் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: தலைவர் அவர்களே, முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. பக்தவச்சலத்தின் 89-வது பிறந்த நாளை முன்னிட்டு இந்த அவை சார்பாக அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு என் சார்பாகவும், இந்த அவையின் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 265 (1)-வது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1986–87 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன் :—

1. மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்).
2. திரு. கோ. பெருமாள் பிள்ளை.
3. திரு. எஸ். ரத்தினவேல்.
4. திரு. கே. வடிவேல்.
5. திரு. இரா. சண்முகம்.
6. திரு. அ. பாலுசாமி.
7. திரு. கே. ஆர். கணபதி.
8. டாக்டர் ந. மாசிலாமணி.
9. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்.
10. திரு. எஸ். ரெத்தினராஜ்.
11. திரு. கோ. வீரய்யன்.
12. டாக்டர் தே. குமாரதாஸ்.

பேரவையின் 266-ஆவது விதியின் கீழ் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

(ஆ) அரசு உறுதி மொழிக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 274(1)-ஆவது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை

[பேரவைத் தலைவர்]

1986-87 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன் :—

1. திரு. கே. பி. கே. சேகர்.
2. திரு. மு. ஆனந்தன்.
3. திரு. எஸ். பட்டாபிராமன்.
4. திரு. மு. ஆறுமுகம்.
5. திரு. வே. குப்புசாமி.
6. திரு. இரா. தாமரைக்கனி.
7. திரு. எம். வி. இரத்தினம்.
8. திரு. வி. தங்கவேலு.
9. திரு. மெ. ஆண்டி அம்பலம்.
10. திரு. ந. சிவஞானம்.
11. திரு. ப. பொன்னுரங்கம்.
12. திரு. பொ. உத்திராபதி.

பேரவையின் 275(1)-வது விதியின் கீழ் திரு. ட. பொன்னுரங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(இ) மனுக்கள் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 287(1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, 1986-87-ஆம் ஆண்டிற்கான ''மனுக்கள் குழு'' விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு. செ. தங்கராசு.
2. திரு. வ. பாலகிருஷ்ணன்.
3. திரு. தி. அன்பழகன்.
4. திரு. மா. சின்னராசு.
5. திரு. செ. செம்மலை.
6. திரு. எம். என். இராமஜெயம்.
7. திரு. என். எஸ். வி. சித்தன்.
8. திரு. சி. பழனிமுத்து.

9. திரு. அ. ரகுமான்கான்.

10. திரு. கு. சுப்பராயன்.

11. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

பேரவையின் 287 (2)-வது விதியின் கீழ், திரு. தி. அன்பழகன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

(ஈ) பேரவை நூலகக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 290 (1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1986–87-ஆம் ஆண்டிற்கான "பேரவை நூலகக் குழு" விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு. மு. தங்கமணி.

2. திரு. எம். அண்ணாதாசன்.

3. திரு. மு. சந்திரசேகர்.

4. திரு. செ. செம்மலை.

5. திரு. சு. பாலன்.

6. டாக்டர் கே. சமரசம்.

7. திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்.

8. திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்.

9. திரு. டி. என். முருகானந்தம்.

பேரவையின் 290(3)-ஆவது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(உ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 294(1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை

1986–87 ஆம் ஆண்டிற்கான ''பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு'' விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு. யு. பி. மாதையன்.
2. திரு. வி. ஆர். கிருஷ்ணசாமி.
3. திரு. வே. தமிழ்மணி.
4. திரு. மு. சின்னக்குழந்தை.
5. திரு. எஸ். சங்கரலிங்கம்.
6. திரு. எஸ். பி. துரைராசு.
7. திரு. ஆ. சந்திரசேகரன்.
8. திரு. சா. ஜெயச்சந்திரன்.
9. திரு. பொன் முத்துராமலிங்கம்.
10. திரு. எஸ். என். இராமசாமி.
11. திரு. வை. பாலச்சந்திரன்.

பேரவையின் 294 (2)-வது விதியின் கீழ் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(முற்பகல் 10-30)

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) விதி 112-ன் கீழ் தொழிலாளர்கள் பணிக்கொடை நிதி பற்றி நிதியமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 112-ன் கீழ் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் 'தொழிலாளர்களுக்கு பணிக் கொடை நிதி ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது, மாநில அரசுக்குத் தெரியுமா?' என்பது குறித்து விடுத்த உடுக்குறியிட்ட வினா எண். 260 (வரிசை எண் 4169)-க்கு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 25–3–1986 ஆம் நாளன்று சட்ட மன்றப் பேரவையில் விடை அளித்தார்கள். அந்த விடைக்கு ஒரு திருத்தத்தோடு கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட நான் விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

'தொழிலாளர்கள் ஓய்வு பெறும் போது, பணிக் கொடை வழங்குவதற்காக பணிக் கொடை நிதி (கிராஜுட்டி ஃபண்ட்) ஒன்றினை அமைப்பதற்காக 1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தைத் திருத்தி அமைக்க உத்தேசித்துள்ள மத்திய அரசின் செயற்குறிப்புக்கு இந்த அரசு ஆதரவு தெரிவித்து மத்திய அரசிற்குக் கடிதம் அனுப்பியுள்ளது. நிர்வாகங்களினால் அளிக்கப்படும் தொகையிலிருந்து உருவாக்கப்படுகின்ற நிதி தான் இது. இந்த நிதிக்கு தொழிலாளர்கள் பணம் செலுத்த வேண்டியது இல்லை. எனவே, இந்த நிதிக்கு தொழிலாளர்களிடமிருந்தும் தொகை பிடிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு முயற்சி எடுத்தால், அதை இந்த அரசு எதிர்க்குமா என்ற கேள்விக்கு இடமில்லை. ஒரு வேளை அப்படி ஒரு பரிந்துரை இந்த அரசுக்குக் கிடைக்கப் பெற்றால் அதனை மாற்றி அமைக்கும்படி மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளும்.'

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை தங்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரி அறிக்கைகளை எங்களுக்கு 'சர்குலேட்' செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், இந்த அறிக்கை படித்ததோடு நின்று விடுகிறது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : லைப்ரரியிலே டேபிளிலே வைக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் அங்கே சென்று பார்த்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

திரு. கு. ரமணி : லைப்ரரியிலே ஒவ்வொருவரும் போய் பார்த்துக் கொண்டிருப்பது சிரமம். எனவே இந்த அவைக்குள்ளே இருக்கிற எங்களுக்கு உள்ள உரிமையாக, அதை சர்க்குலேட் செய்தால், மெம்பர்களுக்கு செய்யக் கூடிய நல்ல வசதியாக இருக்கும் என்பதற்காக நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதியிலே 'லைப்ரரியிலே தான் வைக்கப்பட வேண்டும்' என்று இப்போது இருக்கிறது. வேண்டுமானால், அதை ரூல்ஸ் கமிட்டியில் சொல்லி மாற்றி விடலாம்.

தி . கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது என் கேள்வி சம்பந்தப்பட்ட அறிக்கையாக இருப்பதால், எனக்காவது தரப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

1986 மே 13]

(ஆ) விதி 112-ன் கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த அறிக்கை, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 112-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகுதுணைத் தலைவர் அவர்களே, 'ஸ்டான்லி மருத்துவமனை அருகிலே உள்ள ரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் திட்டம் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. செல்வராசன் அவர்களது வினா எண். 545-க்கு வரிசை எண் 2157 இப்பேரவையில் 8-7-1985 அன்றுதுணை வினாக்களுக்கு விடை அளிக்கும்போது கீழ்க்காணும் பதில் என்னால் அளிக்கப்பட்டது.

"எனவே மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சப்வே கட்டுகிறார்கள். அதற்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ரூபாய் 10 இலட்சம் இப்போது ஒதுக்கப்பட்டு அந்த வேலை துவங்க இருக்கிறது. எனவே இரண்டுமே செய்கிறார்கள். இதில் யாருக்கும் வருத்தம் இருக்காது என்று கருதுகிறேன். இந்த சப்வே மக்கள் நடந்து செல்வதற்காக, மேம்பாலம் என்பது வாகனங்கள் செல்வதற்காக. மேம்பாலம் கட்டுவதற்கு அதிகத் தொகை ஆகும். அதிலே பாதியை மத்திய அரசாங்கமும், மீதிப் பாதியை நாமும் போட்டுக் கொள்வோம். அந்த அடிப்படையில் தான் மேம்பாலம் கட்டப்படுகிறது. எனவே, மத்திய அரசாங்கத்திலிருந்து எப்போது நிதி கிடைக்கிறதோ, அப்போது தான் இந்த வேலை தொடங்கப்படும். மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் சப்வே மாநகராட்சியினுடைய சார்பாக இருக்கிற காரணத்தினால் ரூபாய் 100 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டு இருப்பதாக எனக்கு குறிப்பு தரப்பட்டு இருக்கிறது. இதிலே, ஏறத்தாழ 1 கோடி ரூபாய் செலவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது".

மேற்கண்டவாறு கூறிய விடையை கீழ்க்கண்டவாறு திருத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

"சென்னை ஸ்டான்லி மருத்துவமனை அருகேயுள்ள இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக, ரயில்வே சுரங்கப் பாதை (ரயில்வே அண்டர் பிரிட்ஜ்) கட்ட சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தோராயமாக ரூபாய் 100 லட்சம் தேவைப்படும் என மதிப்பீடு திட்டம் பார்ட்-2 ஸ்கீமில் நடப்பு அண்டில் சேர்க்கப்பட்டு, நடைமுறை நியதிகளின் படி ரயில்வேக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகைக்காகவும், குடிநீர்க் குழாய்கள், மின் வாரியம் மற்றும் தொலைபேசி இலாக்

[1986 மே 13

காக்களின் கம்பிகள் ஆகியவற்றை மாற்றி அமைக்கும் பணிக்காகவும் ரூபாய் 10 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால் முதற்கட்டமாக இத்திட்டத்தின் ஸ்தல வரைபடங்கள், திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணி துவங்கப்படும்.''

6. கவன ஈர்ப்புகள்.

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவரி வசூல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், கோ. வீரய்யன், மா. மணிமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவரி வசூலில் வயல்களில் சிகப்புக் கொடி நட்டு அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதினால் அம்மாவட்ட விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சிறு உழவர்களிடமிருந்தும், வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் உழவர்களிடமிருந்தும் வலுக்கட்டாயமாக நிலவரி வசூலிப்பதில்லை என்ற அரசின் கொள்கை செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுகளில் அடிக்கடி புயல் மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்டதினால் வரி வசூலில் ''மெதுவாகச் செல்லும்'' முறை தஞ்சை மாவட்டத்தில் பின்பற்றப்பட்டதினால் வருடாந்திர நில வருவாயின் கேட்பு சேர்ந்து கொண்டு வந்தது. நிலுவை ரூ. 12.59 கோடியாக உயர்ந்து விட்டது. கடந்த பசலி ஆண்டு 1394 இல் (1984–85) கேட்பு 21.07 கோடி ரூபாயில் ரூ. 7.72 கோடி மட்டும் வசூலிக்கப்பட்டது. அதுவும் கடந்த 12 பசலி ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச வசூலாகும். பசலி ஆண்டு 1395-ன் ஆரம்பத்தில்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதாவது 1-7-1985 இல் நிலவரியின் நிலுவையின் கேட்பு ரூ. 13.99 கோடியாக இருந்தது. பசலி ஆண்டு 1395 நடப்பின் கேட்பு ரூ. 4.17 கோடியாகும்.

	(ரூபாய் கோடியில்.)
நிலுவையில் கேட்பு	13,99
நடப்பின் கேட்பு	4.17
மொத்தம் கேட்பு	18,16

நிலுவையின் கீழ் 1.40 கோடி ரூபாயும் நடப்பின் கீழ் ரூ. 1.35 கோடியும் ஆக மொத்தம் 2.75 கோடி ரூபாய் மட்டுமே 27-3-1986 வரை வசூலிக்கப்பட்டது. இது மொத்தத்தில் 15 சதவிகிதம் தான்.

2. மேலும், ரூ. 1,000-க்கும் இதற்கு மேலும் நிலவரி செலுத்தும் பெரிய நிலப்பட்டாதாரர்களிடமிருந்தும் மற்றும் பெரிய நிறுவனங்களிடமிருந்தும் வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையிலும் நடப்பிலும், ரூபாய் 10 கோடிக்கு மேலாக இருக்கிறது என்று தஞ்சை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இவர்கள் போதிய வசதியிருந்தும் அரசின் 'மெதுவாக செல்லும்' கொள்கையை தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு நிலவரியை செலுத்த மனமில்லாது உள்ளனர். எனவே, பெரிய பட்டாதாரர்களிடம் நிலவரி வசூல் செய்யும் விஷயத்தில் நடவடிக்கை எடுப்பதென 1984 அக்டோபர் மாதத்தில் அரசு முடிவு செய்தது. அதன்படி, 10 ஏக்கருக்கு மேலாக நிலம் இருந்து 50 சதவீதமும் அதற்கு மேற்பட்டும் விளைச்சல் கிடைத்த விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூலிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. ஜப்தி நடவடிக்கையின் நோக்கத்தின்படி இத்தகைய விவசாயிகள் சிறு விவசாயிகளாகக் கருதப்பட மாட்டார்கள். நிலவருவாயை வசூலிப்பதில் சிறு விவசாயிகளிடம் இணங்கச்-செய்யும் (Persuasive) முறையை கடைப்பிடிக்குமாறு வருவாய் அதிகாரிகளை கேட்டுக் கொள்ளப்பட்டது. சம்பா மற்றும் தாளடியில் 10.13 இலட்சம் ஏக்கரில் இது வரை 8.84 இலட்சம் ஏக்கர் அறுவடை செய்யப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் அறுவடை ஏறக்குறைய முடிந்திருந்தும் நடப்பு கேட்பில் 50 விழுக்காடு கூட வசூலிக்கப்படவில்லை. இது, வரி வசூலிப்பதில் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற உண்மையை புலப்படுத்துகின்றது.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 4—2—1985 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் சங்கத் தலைவர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அதற்கு முன்னால் பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்ற நிலவரிக்கு வட்டி விதிப்பதில்லை என்றும், அதற்காக ஜப்தி செய்வதில்லை என்றும், விவசாயிகளைப் பொறுத்த வரையில் நிலுவையில் உள்ள நிலவரியில் பழைய நிலுவையில் ஒரு ஆண்டுக்கும், நடப்பாண்டில் உள்ள நிலவரிக்கும் என்று சேர்ந்து ஒன் பிளஸ் ஒன் என்ற அடிப்படையில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று 4—2—1985இல உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் அந்த உடன்பாட்டை அதிகாரிகள் மீறி, இந்த ஆண்டு மகசூலை ஜப்தி செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுத்து விவசாயிகளைத் துன்பத்திற்கு ஆளாக்கியிருப்பதை அரசு உணர்ந்திருக்கிறதா ? அந்த உடன்பாட்டைச் சரியாக அமல் நடத்த வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, விவசாயிகளுக்கு விரோதமான இந்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் கைவிடச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உடன்பாட்டினுடைய அடிப்படையிலே வசூலாக வேண்டிய அளவிற்குக்கூட அந்த நிலவரி வசூலாகவில்லை என்பதைத்தான் புள்ளிவிவரங்கள் நமக்குக் காட்டுகின்றன. நிலவரியின் நிலுவையின் கேட்பு ரூ. 13.99 கோடி; நடப்பின் கேட்பு ரூ. 4.17 கோடி; மொத்தம் கேட்பு ரூ. 18.16 கோடி. ஆனால், நிலுவையின் கீழ் 1.40 கோடி ரூபாயும், நடப்பின் கீழ் ரூ. 1.35 கோடியும் தான் ஆக மொத்தம் 2.75 கோடி ரூபாய்தான் வசூலாகியிருக்கிறது 27—3—1986 வரையில், ஆகவே, அந்த நிபந்தனையின் அடிப்படையில் வசூலாக வேண்டிய அளவிற்குக்கூட வசூலாகவில்லை. ஆகவே, கெடுபிடியாக இல்லை. கெடுபிடி ஆகாத அளவிற்குத் தான் வசூல் செய்ய வேண்டுமென்ற முறையில் செய்கிறோம். ஆனால், இந்த வரியைத் தர வேண்டியவர்களில் வசதி படைத்தவர்கள் தந்துவிட வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை. ஆகவே, ஏழை எளியவர்கள், மிகமிகச் சிறிய விவசாயிகள் கொடுமைப்படுத்தப்பட வேண்டுமென்பது அரசின் நோக்கம் அல்ல.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு அமல் நடத்துகின்ற விவசாயிகள் மீது கூட இந்த ஆண்டு மகசூலை ஜப்தி செய்கின்ற அளவிற்குக் கெடுபிடி நடத்தப்பட்டிருக்கிறது. கேட்புத் தொகை வசூலாயிற்றா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு அமல் நடத்திக் கொண்டிருப்பவர்களின் மீதே கூட கெடுபிடி வசூலில் அதிகாரி

கள் ஈடுபடுகிறார்களே, அது போன்ற நடவடிக்கைகளை நிறுத்து வதற்கு அரசு முன் வருமா, அதற்கான உறுதிமொழி கொடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடன்பாட்டின்படி நடைபெறாவிட்டால் அதுபற்றிக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் உடன்பாட்டின்படியேகூட வசூலாக வில்லை என்ற குறிப்புதான் வந்திருக்கிறது. உடன்பாட்டின்படி என்ன பாதுகாப்பைத் தர வேண்டுமோ அந்தப் பாதுகாப்பைத் தந்து, எந்த வகையிலே வசூல் செய்வதற்கு இயலுமோ அந்த வகையிலே வசூல் செய்யும்படியும், கெடுபிடி செய்ய வேண்டா மென்றுதான் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்தப் பாதுகாப்பு தரப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 13 கோடி ரூபாய் நிலுவை என்று சொல்லப்படுகிறது. ஒட்டுமொத்தமாக வெள் ளத்தின் காரணமாக அங்கேயுள்ள விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாய் வரையில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கரில் உற் பத்தி செய்வதற்கு 1,400 ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளது. வாய்தா 60 ரூபாய், 80 ரூபாய்க்குள்ளாகத்தான் இருக்கிறது. 1,400 ரூபாய் செலவு செய்கின்ற விவசாயிகள் 60 ரூபாய், 80 ரூபாய் என்று வாய்தாவில் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். கடந்த வெள்ளத்தின்போது நீங்கள் 13, 14 தாலுக்காக்களில்கூட இன்னும் அணாவாரி சர்ட்டிபிகேட் வழங் கப்படாததன் காரணமாகக் கூட்டுறவுச் சங்கக் கடன்களை வசூ லிப்பதற்காகக் கெடுபிடி நடக்கிறது. எல்லா சாமான்களையும், அண்டா, குண்டா, குவளைகள் போன்றவைகளைக் கூட ஜப்தி செய்கிறார்கள். 250 ரூபாய்க்காக அண்டா, குண்டாக்களை ஜப்தி செய்கிறார்கள். தண்ணீர் குடிக்கக் கூடிய நிலைகூட இல் லாத அளவிற்கு சில வீடுகளில் ஜப்தி தொடர்ந்து நடக்கிறது. வாய்தாவைப் பொறுத்தவரையில் ஒட்டுமொத்தமாக 43 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 13 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. தமி ழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக 43 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. எனவே, அரசாங்கம் பெரிய மனது வைத்து, ஏற் கெனவே சிவில் சப்ளை இலாக்காவில்.....(மணியடிக்கப் பட்டது). ஆகவே, ரூ. 43 கோடியைப் பொருட்படுத்தாமல், அந்த ஒட்டு மொத்தமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், ஆண்டுக்காண்டு வறட்சி, வெள்ளம் இதுபோன்ற உபாதைகளால் பாதிக்கப்படு கின்ற விவசாயிகளுக்கு இந்த ரூ.13 கோடியைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது கூட்டுறவுக் கடன் வசூலிப்பு பொறுத்து அல்ல. நிலவரி நிலுவை வசூலைப் பொறுத்தது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும்கூட ரூ. 1,000, அதற்கு மேலும் நிலவரி செலுத்து பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து மற்றும் பெரிய நிறுவனங்களிடமிருந்து வசூலாக வேண்டிய நிலவரி மட்டும் ரூ. 10 கோடி என்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வசதியிருந்துங்கூட, அரசு கொஞ்சம் மெதுவாக வசூலிக்கிறது என்பதைத் தங்களுக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு, கட்ட வேண்டியவர்கள் கூட கட்ட மறுக்கிறார்கள். பெரிய பட்டாதாரர்களாக இருப்பவர்களிடம் நிலவரி வசூல் செய்யும் விஷயத்தில், நிலவரி வசூல் செய்வதென அரசு முடிவெடுத்தது. அவர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்பதைவிட, ஏழை, எளியவர்களுக்கு இருப்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்தலாம். 10 ஏக்கர்களுக்கு மேல் நிலம் இருந்து, 50 சதவீதம் வரை விளைச்சல் கிடைத்த விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூலிப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால், நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அப்படிப் பட்டவர்களும் தர மறுக்கிறார்கள். சென்ற ஆண்டிலே மட்டும் நாம் குறிப்பிட்டிருப்பது போன்று 10.13 இலட்சம் ஏக்கரில், 8.84 இலட்சம் விளைவு வந்து அறுவடையில் பெரும்பகுதி முடிந்து விட்டது. அதிலே 50 சதவீதம் கூட வசூலாகாமல் இருக்கிறது. ஏழை, எளியவர்களை பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் பற்றி கவனத்திலே வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், இவர்கள் கொடுமைப்படுத்தப்பட வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கிறோம். ஆனால், வசதி படைத்தவர்களிடத்திலே வசூலிக்கத்தான் வேண்டும். அவர்கள் கொடுமைப்படுத்தப்பட வேண்டுமென்பதல்ல. இந்த நில வரியை அவர்கள் முறைப்படி கொடுத்துவிட வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். ஆனால், கெடுபிடி செய்கின்ற தன்மையை உள்ளபடியே கடுமையாக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பொறுத்தவரை, இன்றைக்கு அவர்களுடைய வரியைக் கட்ட வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி ஆராய, அரசாலே உயர்மட்டக் குழு போடப்பட்டு, அந்தக் குழு அரசுக்குப் பல அறிக்கைகள் தந்திருக்கிறார்கள். அவற்றின் மீது, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அறிவிக்காத காரணத்தாலே, அரசாங்கம் நிவாரணம் தரும் என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் இருக்கிற காரணத்தாலே, தொ

டர்ந்து அந்த நம்பிக்கைக்கு ஒரு முடிவு கொண்டு வராத காரணத்தாலே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் கிடைக்கும், என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். எனவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு அறிக்கையை பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து, அடுத்து, என்ன என்ன உதவிகள் விவசாயிகளுக்கு அளிப்போம் என்ற உறுதியோடு அரசு முன்வந்தால், கட்டாயமாக, விவசாயிகள் எந்தவித நடவடிக்கைக்கும் தயாராக இருப்பார்கள். எனவே, அரசு உயர் மட்டக் குழு அறிக்கைகளைப் பரிசீலித்து, உடனடியாக அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன, என்ன சலுகைகளும் முறைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரக் குறிப்புகளை நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், நிலவரியைப் பொறுத்தவரையில், 1931-லே வகுத்த வரியினுடைய அளவைத் தவிர, அதற்குப் பிறகு, ஏற்றமே இல்லை. வேறு எல்லாத் துறைகளிலும் ஏற்றம் இருந்தாலும் ஏற்றம் இல்லாத ஒரே துறை இதுதான். ஆனாலும், நான் முதலிலே சொல்லியபடி, வசதி படைத்தவர்களிடமிருந்து அப்படிப்பட்ட பாக்கியிருக்கிறது. அவர்கள் தங்களுக்கும் சேர்த்து, வரி வஜா கிடைக்கும் என்ற அளவுக்கு நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேனே தவிர, முடியாதவர்கள், நலிந்து போனவர்கள், மற்றவர்கள் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையின் பேரில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) திருவில்லிப்புத்தூர் கோவில் கோபுரம் துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலையைப் புகையினால் பாதிக்கப் பெற்றுள்ளதாக கூறப்படுவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''காமராஜர் மாவட்டம், ஆலங்குளம் மற்றும் துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையினால் திருவில்லிப்புத்தூர் கோயில் கோபுரம் பெரிதும் பாதிக்கப்படுவதால் அப்பகுதி மக்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை.

திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், ஆலங்குளம் தொழிற்சாலை, காமராஜர் மாவட்டத்தில் இராசபாளையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1970 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் போர்ட்லண்ட் போஸலோனா சிமெண்ட்டும் மாதம் ஒன்றுக்கு 3,300 மெட்ரிக் டன் சாதாரண போர்ட்லண்ட் சிமெண்ட்டும் தயாரிக்கிறது. இத்தொழிற்சாலை ஈரமுறையில் சிமெண்ட் தயாரிக்கிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு பிரதான மூலப் பொருள் சுண்ணாம்புக்கல் ஆகும். சுண்ணாம்புக்கல் தேவையான அளவுக்கு உடைக்கப்பட்டு கலவை மில்களுக்கு அனுப்பப்படுகிறது. அங்கு சுண்ணாம்புக்கல் கலவையாக்கப்பட்டு அக்கலவையானது சூளைகளில் எரியூட்டப்பட்டு கிளிங்கர் தயாரிக்கப்படுகிறது. தூளாக்சப்பட்ட நிலக்கரி எரியூட்டுவதற்குப் பயன்படுகிறது. பின்னர் கிளிங்கருடன் ஜிப்ஸம் சேர்க்கப்பட்டு சிமெண்ட் ஆலையில் தூளாக்கப்பட்டு சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலையில் உள்ள இரண்டு சூளைகள் மற்றும் இரண்டு சிமெண்ட் மில்கள், தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றும் தூசுக்கு ஆதாரமாகும். இரண்டு சூளைகளுக்கும் பொதுவாக 60 மீட்டர் உயரத்தில் மாசுப் பொருட்களை வெளியேற்ற புகைபோக்கி அமைக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் மில்களிலிருந்து வெளிவரும் மாசுப் பொருட்களை வெளியேற்ற 18.5 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி அமைக்கப்பட்டுள்ளது. சூளைகளில் இருந்து வெளிவரும் மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த இத்தொழிற்சாலை ஒவ்வொரு சூளையிலும் எலெக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களைப் பொருத்தியுள்ளது. சிமெண்ட் மில்லிலிருந்து வெளிவரும் மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த ஒரு சிமெண்ட் மில்லுக்கு இரண்டு தூசுத் தடுப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. சிமெண்ட் மில்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு தூசுத் தடுப்பான்களும் எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களுடன் இணைக்கப்பட்டு மாசுப் பொருட்கள் வெளியேறுவது கட்டுப்படுத்தப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் காற்று மாசுத் தடுப்பு எல்லைக்குள் தொழிற்சாலையை நடத்த மேற்படி தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் கோரி விண்ணப்பித்திருந்தது. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்குட்பட்டு தூசினை வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையிட்டு மேற்படி தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. திருவாளர்கள் மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், காமராஜர் மாவட்டத்தில் விருதுநகருக்கு அருகில் துலுக்கப்பட்டியில் அமைந்துள்ளது. இத் தொழிற்சாலை 1961 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு

40,000 முதல் 50,000 மெட்ரிக் டன் சிமெண்ட் தயாரிக்கிறது. இத்தொழிற்சாலை உலர் முறையில் சிமெண்ட் தயாரிக்கிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு சுண்ணாம்புக்கல் பிரதான மூலப் பொருளாகும். உடைக்கப்பட்ட சுண்ணாம்புக்கல்லுடன் களி மண் கலக்கப்பட்டு தூளாக்கப்படுகிறது. பின்னர் தண்ணீர் சிறிதளவு சேர்க்கப்பட்டு இந்தத் தூள்கள் உருண்டைகளாக்கப் படுகிறது. இந்த உருண்டைகள் சூளைகளுக்கு அனுப்பப்பட்டு கிளிங்கராக்கப்படுகிறது. தூளாக்கப்பட்ட நிலக்கரி எரியூட்டுவதற்கு பயன்படுகிறது. பின்னர் கிளிங்கர்கள் ஜிப்ஸத்துடன் கலக்கப்பட்டு தூளாக்கப்பட்டு சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது. இத் தொழிற்சாலையிலுள்ள ஒரு சூளை மற்றும் இரண்டு சிமெண்ட் மில்கள் தொழிற்சாலை வெளியேற்றும் தூசுகளின் முக்கிய ஆதாரமாகும். சூளைகளிலிருந்து வெளியேறும் மாசுப் பொருளை வெளியேற்ற 55.08 மீட்டர் உயரமுள்ள புகை போக்கி அமைக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் மில்களில் இருந்து வெளிவரும் மாசுப் பொருளகளை வெளியேற்ற ஒவ்வொரு சிமெண்ட் மில்லிலும் 20 மீட்டர் உயரமுள்ள புகை போக்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலை மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த சூளைப் பகுதியில் ஒரு எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டரும் இரண்டு சிமெண்ட் மில்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களையும் அமைத்துள்ளது. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி காற்று மாசுத் தடுப்பு எல்லைக்குள் தொழிற்சாலை நடத்த மேற்படி தொழிற்சாலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதல் கோரி விண்ணப்பித்திருந்தது. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்குட்பட்டு தூசியை வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. திருவில்லிப்புத்தூரில் ஸ்ரீ ஆண்டாள் ஆலயம் மற்றும் ஸ்ரீ சிவன் ஆலயம் என்ற இரண்டு முக்கியமான ஆலயங்கள் உள்ளன. திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், ஆலங்குளம் திருவில்லிப்புத்தூருக்கு தெற்கே 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. திருவாளர்கள் மெட்ராஸ் சிமெண்ட் லிமிடெட், துலுக்கப்பட்டி, திருவில்லிப்புத்தூருக்கு தென்கிழக்கில் 28 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

4. மேற்படி தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் தூசுகள் திருவில்லிப்புத்தூரில் உள்ள கோயில்களில் சென்றடையாது என்று தெரியவருகிறது. கோயில்களுக்கருகில் உள்ள பொது மக்கள் மற்றும் திருவில்லிப்புத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரையும் விசாரித்தபோது இது உறுதியாக்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(1986 மே 13) (டாக்டர் : எச். வி. ஹண்டே)

5, மேற்படி தொழிற்சாலைகளில் மாசுக் கட்டுப்பாடு முறைகளின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையை நன்றாகப் படித்துப் பார்த்தேன். படித்தவுடன் மிகவும் வருத்தம் அடைந்தேன். உலகத்திலேயே 7 அதிசயங்களில் ஒன்றாக தாஜ்மகால் இருக்கிறது. அதில் சுற்றுப்புற ஆபத்து ஏற்பட்டுள்ளது. எப்படி என்றால் வட இந்தியாவில் மதுரா எண்ணெய் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் தூசுகளினால் அந்த பளிங்கு கட்டிடத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது போன்று இந்த கோபுரத்திற்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அந்த ஊரிலுள்ள பொது மக்கள் கோபுரம் இடிந்து போகக்கூடிய சூழ்நிலையில் இருப்பதால், அவர்கள் ஊரைவிட்டே வெளியே போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கே ஏற்கனவே நமது மாண்புமிகு அமைச்சர் ஒரு விவர அறிக்கை கொடுத்திருக்கிறார்கள. அந்த அறிக்கையில் 1970 ஆம் ஆண்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளது, 1961 ஆம் ஆண்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு தான் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் துறையின் கீழ் அவர்கள் அனுமதி கேட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்னொன்றையும் சொல்கிறார்கள். திருவில்லிப்புத்தூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளரையும் விசாரித்திருக்கிறோம். இதனால் கோயிலுக்கு ஆபத்து இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக அந்த கோபுரத்திற்கு ஆபத்து இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது திருப்பணி நடக்க இருக்கிறது. திருப்பணி செய்வதற்கு வேண்டிய தொகையை அரசாங்க தொழிற்சாலைகளிலிருந்து, அரசு வாங்கித்தர முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவர அறிக்கையிலே தெளிவாக கருத்துகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. திருவில்லிப்புத்தூரில் ஸ்ரீ ஆண்டாள் ஆலயம் மற்றும் ஸ்ரீ சிவன் ஆலயம் என்ற இரண்டு முக்கியமான ஆலயங்கள் உள்ளன. திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், ஆலங்குளம் திருவில்லிப்புத்தூருக்கு தெற்கே 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

என்று அந்த குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இங்கிருக்கக் கூடிய சிமெண்ட் ஆலையிலிருந்து வரக்கூடிய சிமெண்ட் டஸ்ட்டினால் கோயில் பாதிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். பாதிப்பு இல்லை என்று அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். இருக்கிறதா, இல்லையா? என்று நானே நேரடியாகச் சென்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். அதிகாரிகள் கொடுத்திருக்கக் கூடிய தகவல்கள் தவறு என்று உறுப்பினர் கூறுகிறார். தவறு இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல் அந்த தொழிற்சாலையை நடத்தக் கூடியவர்கள் எலெக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக செய்வதாக கூறியிருக்கிறார்கள். உடனடியாக ஏற்படுத்தவில்லை என்றால் அவர்களுடைய அனுமதியை கூட ரத்து செய்வதற்கு அரசாங்கம் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோபுரம் தமிழக அரசின் முத்திரை சின்னத்தை மாடலாகக் கொண்டது. இது தமிழ்நாடு சர்க்காருக்கு சவால் விட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களே வருத்தப்படக் கூடிய விஷயம். இந்த கோபுர திருப்பணிக்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், ஆர். எம். வீ. அவர்கள் ஸ்ரீபெரும்புத்தூர் சாமி அவர்களும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த கோவிலுக்கு, திருப்பணிக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் பல்வேறு நிதியிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து நஷ்ட ஈடு வேண்டும். 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு வேண்டுமென்று கோர்ட்டிலே பக்தர்கள் சார்பில் வழக்கு தொடர்வதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கோவிலினுடைய பிரசித்தத்தைப் பற்றியும், வரலாற்றைப்பற்றியும் மாணபுமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். இந்த கோவில் தொன்மையான கோவில். பல முறை அந்த கோவிலுக்கு நான் சென்றிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடன் கூட சென்றிருக்கிறேன். அற்புதமான கோவில் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. பக்தர்கள் வழக்கு கொண்டு வரலாமா என்று கேட்டார். பக்தர்கள் வழக்கு கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறது. அதைத் தடுக்க முடியாது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த கோவிலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1986 மே 13]

(முற்பகல் 10.50)

7. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குச் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்ரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை (தடுத்தல், திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குச் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப் படுத்தலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

[1986 மே 13

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணய) திருத்தச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) திரையரங்குகள் (ஒழுங்குமுறைப்படுத்துதிருத்தச்) சட்டமுன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

[1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை ஆரம்ப ஸ்டேஜிலேயே நான எதிர்க்கிறேன். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் தேர்தல்கள் நடந்ததற்குப் பிறகு மாநகராட்சித் தேர்தலகள் நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால் அதைத் தள்ளி வைக்கும் வகையில இப்போது காம்ப்ரஹென்சிவ் பில கொண்டு வருகிறார்கள். அதற்காக சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட குழு போடுகிறோம் என்று சொல்கிறார்கள். எலக்டட் பாடி வேண்டும். ஆனால் தேர்தலைத் தள்ளி வைககத்தான் இப்படி சாக்கு போக்கு சொல்லி இவ்வாறு மசோதா கொண்டு வருவதால் நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் ஜனநாயகத்தைப் பற்றி ரொம்ப தூரம் விவாதம் பண்ணி பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி ஜனநாயகத்தை நிறைவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்ற பெயரைச் சொல்லி தேர்தலை ஒத்திப் போடுவதற்கும், மக்கள் பிரதிநிதிகள் இருந்து நிர்வாகத்தை நடத்துவதற்கும் முடியாதபடி இருக்கக் கூடிய நிலைமையைத்தொடர்ந்து கொண்டு வருவதற்காகவும்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. ஆகவே இதை இன்ட்ரோடக்ஷன் செய்யக் கூடாது என்றும், இதைப் பின் வாங்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்பத்திலேயே ஜனதா கட்சி எதிர்க்கிறது. மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்குப் பல சட்ட திட்டங்களைப் போடுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் சேலம், திருச்சி, திருநெலவேலி, போன்ற நகராட்சிகளுக்கெல்லாம தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. அதைப் போல் தானே இதுவும். எனவே இந்த மாநகராட்சிகளுக்கும் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித் தேர்தல் எல்லாம் நடந்த பிறகு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து ஒரு ஆலோசனைக் குழுவைப் போடப் போவதாகச் சொல்கிறார்கள். இவ்வாறு மசோதா கொண்டு வருவது தேவையற்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தினை ஆரம்பத்திலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். ஏனென்றால், எலக்டட் பாடி செய்ய வேண்டிய காரியங்களை எக்ஸிகியூட்டிவ் பாடிகளைக்கொண்டு செய்விக்கின்ற வகையில் இந்தச் சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. டிஸ்ட்டிரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசர் மற்றும் அடிஷனல் டெவலப்மெண்ட் ஆபீசர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். என்ன பொறுப்பை என்றால் வைஸ் சேர்மேனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை...............

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலிலே சொன்ன மாதிரி அப்போஸ் மட்டும் பண்ணிவிடுங்கள். டிஸ்கஷன் ஸ்டேஜ்லே நிறைய பேசலாம்..........

திரு. ப. பொன்னுரங்கம்: ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லியாக வேண்டும். சொல்லாமல் அப்போஸ் பண்ண முடியாது. இங்கே நாம் உதாரணமாக சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கிறோம். துணைத் தலைவரையும் பேனல் ஆப் சேர்மேனையும் அவர்தாம் தேர்ந்தெடுக்கிறார். செக்ரட்டரியிடமா விடுகிறோம். ஆகவே, ஜனநாயகத்திற்கு விரோதமான இந்தச் சட்டமுன்வடிவை அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். ஏனென்றால் ஏற்கெனவே சில பஞ்சாயத்து யூனியன்களில் தலைவர்கள் துணைத் தலைவர்கள் தேர்தல் நடந்து முடிந்துவிட்டன. அந்தத் தேர்தலை என்ன செய்யப் போகிறீர்கள், அதன் மீது என்ன நடவடிக்கை என்பதைப் பற்றியெல்லாம் இதில் குறிப்பிடவில்லை. ஆகவே, ஆரம்ப நிலையிலேயே நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு அவர் இதில் தலைமை தாங்க முடியாத நிலை என்பது இதில் ஒன்று. இரண்டாவது கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்கள் இதற்குத் தலைமை தாங்க வேண்டும் என்பது. அப்படியானால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இதைப் பொறுத்தவரையில் எந்தவித பிரயோஜனமும் இல்லாமல் அவர்களுடைய நடவடிக்கை தடுக்கப்படுகிறது. அவருக்குப் பதிலாக அங்கே இருக்கிற ஒரு அதிகாரியைக் கொண்டு துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை சரியல்ல. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் சரியாக நடக்கவில்லை தவறு நடந்துவிட்டது என்று இப்படிக் கொண்டுவருவது சரியல்ல. அப்படி தவறு நடந்திருந்தால் அதில் நடவடிக்கை எடுத்து அதை ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டுமே தவிர அதை விட்டுவிட்டு இது மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தலைமை தாங்கக் கூடாது என்று சொல்லுவது சட்ட விரோதமானது..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதையெல்லாம் டிஸ்கஷனிலே பேசுங்கள். இப்போது விளக்கம் எதற்கு?

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, அதன் விரிவான விளக்கத்திற்குள் நான் வரவில்லை. அந்த விளக்கத்தைச் சொல்லித்தான் எதிர்க்க வேண்டியிருக்கிறது. அது ஒரு

டெமாக்ரடிக் பிராஸஸ். ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர்கள் என்ன ஆவது ? அப்படி தலைவரால் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்களையெல்லாம் என்ன செய்யப் போகிறீர்கள் ? அவைகளை ரத்து செய்யப்போகிறீர்களா ? அது பற்றி ஒன்றுமே இதில் இல்லை. இது சட்ட விரோதமானது. அப்படி சட்ட விரோதமாகக் கொண்டு வரப்படுகிறது என்பதனாலேயே இதை இன்டிரொடக்டரி ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவினை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மன்றத்தின் தலைவர்தான் அந்தத் தேர்தலை நடத்த வேண்டும். அதுதான் நியாயம். ஆனால், இந்தச் சட்ட முன்வடிவு அந்த நியாயத்திற்கு விரோதமாகக் கொண்டு வரப்பட்டிருப்பதால், அதை அமைச்சர் அவர்கள் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, எதிர்த்து அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட ஒரு அரசு என்று சொல்லப்பட்டு வந்த நிலை இன்றைக்கு கேலிக்கூத்தாக மாறி வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தலைவர் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக அதிகாரிகள் துணைத் தலைவர் தேர்தலுக்கு தலைமை தாங்க வேண்டும் என்று ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிற இந்த ஆட்சி படிப்படியாக அதிகாரிகளால் ஆட்டிப்படைக்கப்படுகிற சர்வாதிகாரத்திற்கு நாட்டை ஒப்படைத்துவிடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆள்வதை, தலைமை தாங்குவதை கேலிக்கூத்தாக ஆக்குவதற்குத்தான் இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். இது நல்லது அல்ல. இந்தச் சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது ஆரம்ப நிலையிலேயே என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தலைவர், துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதை விட, தலைவரை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய, புதிய ஜனநாயக மரபைக்கொண்டு வர வேண்டிய இந்த அரசு, அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருடைய அதிகாரத்தையே குறைப்பதற்காக இப்படி ஒரு சட்ட முன்வடிவினைக் கொண்டுவந்திருப்பதை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தத்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஊ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(முற்பகல் 11—00)

7. அரசினர் சட்ட முன் வடிவுகள்—(தொடர்ச்சி)

(எ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(எ) கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (1986) ஆ.இ.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்."

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(எ) கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஐ) கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

1986 மே 13]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திருமதி விஜயலஷ்மி பழனிச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஒ) இனாம் எடுத்து விடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை) செல் திறனாக்குதல்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான சட்டங்களின்கீழ் நடுவர் மன்றமாக செயல்பட திருச்சிராப்பள்ளி ஐந்தாவது கூடுதல் துணை நீதிபதியினுடைய நடவடிக்கைகளை செல்திறனாக்குவதற்காக சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளி கூடுதல் உதவி நீதிபதி 14–12–1976 முதல் 16–2–1977 வரையில் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் ஒழித்தல் மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 26/1963 தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறிய இனாம்கள் ஒழித்தல் மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 30/1963) தமிழ்நாடு 1963 இனாம்கள் துணைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1963) ஆகியவற்றின் விதித்துறைகளின்கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்வதை செல்திறனாக்க வகை செய்யும் சட்டம் பேரவைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஆணையை எதிர்நோக்கி இனாம் ஒழிப்புச் சட்டங்களில் அதாவது தமிழ்நாடு சட்டங்கள் 26/1963, 30/1963, 31/1963-ன் கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்யுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிபதி ஐந்தாவது கூடுதல் துணை நீதிபதிக்கு 3–12–1976 நாளன்று உத்தரவிட்டதன் பேரில் திருச்சிராப்பள்ளி ஐந்தாவது உதவி கூடுதல் நீதிபதி 14–12–1976 முதல் 16–2–1977 வரையிலான கால

**1986 ஆம் ஆண்டு சனவரி 29–ஆம் தேதியிடப்பட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அளவிற்குள் மேற்படி சட்டங்களில் 94 வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்துள்ளார். இவ்வாறு இனாம் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்வது தொடர்பாக வணிக வரித்துறை, அறநிலையத் துறைக்கு 17-2-1977 நாளிட்ட 241 ஆம் எண். அரசாணையில் அரசு திருச்சி கூடுதல் நீதிபதிக்கு அதிகாரம் வழங்கியது. தீர்ப்பாயங்களின் முடிவு முந்தேதியி லிருந்து அமைக்க மேற்படி சட்டங்களில் அரசுக்கு அதிகாரம் இல்லையாதலால், திருச்சி ஐந்தாவது கூடுதல் உதவி நீதிபதி 14-12-1976 முதல் 16-2-1977 வரையிலான கால அளவிற்குள் இனாம் வழக்குகளை விசாரித்து முடிவு செய்தவைகளை சட்டத்தின் மூலமாக செல்திறன் ஆக்குவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதி மன்றப் பதிவாளர் அரசைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார். ஏற்கெனவே அரசினுடைய ஆணையின் மூலமாக வழக்குகளை விரைவாக தீர்க்கவேண்டும் என்பதற் காக 94 வழக்குகளை விசாரிப்பதற்காக திருச்சி ராப்பள்ளி ஐந்தாவது கூடுதல் நீதிபதி கேட்டுக்கொள்ள ப்பட்டார். அதனால் தீர்ப்பு வழங்கினார். ஆனால், அரசுக்கு இந்த அதிகாரம் இல்லை என்றும், சட்ட மன்றம் தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என் றும், அப்படி நிறைவேற்றினால்தான் அந்த நீதிபதியினுடைய நடவடிக்கை செல்திறனாகும் என்றும் உயர்நீதிமன்றம் சொல்லி யிருப்பதன் காரணமாக, அதைச் செல்திறனாக்குவதற்காகத் தான், இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதற்கு முன்னால், வருவாய் வாரியமும் இசைவு அளித்து உள்ளது. இதன் தொடர்பாக சட்டத்துறையோடு கலந்து ஆலோசித்து, சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் தெரி வித்தவாறு, சட்டம் ஒன்றை இயற்றி அரசு நடவடிக்கை எடுத்து ஒரு சட்ட முன்வடிவைத் தயாரித்து, அதற்கு மத்திய அரசி னுடைய ஒப்புதலும் பெறப்பட்டு உள்ளது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவு முதற்கண் 1983 ஆவது ஆண்டே கொண்டு வரப்பட்டு, பல்வேறு காரணங்களினால், ஒத்திவைக்கப்பட்டு, இன்று கொண்டுவரப்படுகிறது. ஆகவே, ஏற்கெனவே தீர்ப்பு அளிக்கப்பட்டு விட்டதன் காரணமாக, இந்தச் சட்டமன்றம், தராவிட்டால், அது செல்திறன் ஆகாது. அதைச் செல்திறன் ஆக்குவதற்காகத்தான் இங்கே அது எளிதாக அமைய வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்த அவை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர் கள் இந்தச் சட்டமுன்வடிவை இங்கே சமர்ப்பித்துப் பேசும்போது குறிப்பிட்டார்கள். குறிப்பாக இனாம் சட்டத்தினுடைய 26/63, 30/63, 31/63 இந்த மூன்று சட்டங்களின் கீழ் 94 வழக்குகள்

விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த தீர்ப்பு செயலாக்கம் பெறுவதற்கு அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத் தான் சாத்தியம், எனவே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் சொல்லி இங்கே, முன் மொழிந்து இருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது, குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த இனாம் கிராமங்கள் என்பது, அந்தச் சட்டங்களின் கீழ் எடுக்கப்பட்டு மைனர் இனாம்கள், அதற்குப் பிறகும், விடுபட்ட மைனர் கிராமங்கள் என்றும் இருந்து, 88 கிராமங்களை அதற்குப் பிறகு எடுத்து, அது தீர்க்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதிலே இப்போது ஏற்பட்டு இருக்கக்கூடிய பிரச்சினை என்பது அரசைப் பொறுத்தவரையில், இந்த இனாம் ஒழிப்பு முடிந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். செட்டில்மென்ட் ஆபீசர்களும் அந்த செட்டில்மென்ட் முடிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இந்த இனாம் ஒழிப்பு வரும்போது, அதிலே பரம்பரையாக உழுது கொண்டு இருந்த அந்த விவசாயிகளை ரயத்தாக மாற்றி, அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்குப்பதிலாக, பழைய இனாம் தாரர்களை ரயத்தாக மாற்றி, பட்டா அவர்களுக்கு கொடுக்கப்பட்டு, பழைய இனாம்தாரர்கள் நிலச்சுவான்தாரர்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்களே தவிர, அதிலே உழைத்துக்கொண்டு இருக்கிற விவசாயிகள், பரம்பரையாக இருக்கக்கூடிய விவசாயிகள், அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்களாக மாற்றப்படவில்லை. இப்படி ஏராளமான பிரச்சினைகள் அந்த மாவட்டம் முழுவதும் இருக்கிறது. எனவே இந்த இனாம் ஒழிப்புச்சட்டத்தை முழு செயல்திறனோடு அமல்படுத்தி, அங்கே இருக்கக்கூடிய முழு விவசாயிகளுக்குள், பரம்பரையாக விவசாயம் செய்து வருகின்ற அந்த விவசாயிகளை அந்த நிலத்தினுடைய உரிமையைப் பெற்று, அவர்கள் அந்த நிலத்தினுடைய ரயத்தாக மாற்றக்கூடிய முறையில், இந்த இனாம் சட்டங்கள் முழுவதும் திருத்தப்பட்டு அமல் நடத்தக்கூடிய முறையிலே, இந்த இனாம் ஒழிப்புச் சட்டம் என்பது நிறைவேற்றப்படக்கூடிய முறையில், அது அமல் நடத்தப் படவேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் அந்த விவசாயிகளுக்கு பயன் அளிக்கக்கூடியதாக இருக்குமே தவிர, இந்தப்பழைய இனாம்தாரர்களை ரயத்தாக மாற்றி, நிலச்சுவான் தாரர்களாக மாற்றுவது என்பது பொருத்தமல்ல. அது அந்த விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடியதாக இருக்காது. அந்த முறையிலே, முழு செயல்திறனோடு அந்த விவசாயிகளுக்கு பட்டா கொடுக்கக்கூடிய முறையிலே இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அந்த வகையில் இந்த அவைக்கு முன்னால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து, அந்த முறையில், முழுத் திருத்தங்களோடு இந்த இனாம் சட்டம் திருத்தப்பட்டு, அங்கே உழுதுகொண்டு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அதை ரயத்தாக மாற்றிக்கொடுக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி அந்தத் திருத்தத்தை இந்த அவையிலே கொண்டு

வருவதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

முற்பகல் 11.10

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில் சில கருத்துக்களைக் கூறாமல் இருக்க முடியவில்லை. இந்தத் திருத்தத்தின் முக்கியமான நோக்கம் 14—12—1976 முதல் 16—2—1977 வரை ஐந்தாவது துணை சார்பு நீதிபதி, திருச்சிராப்பள்ளி, அவர்கள் போட்ட உத்தரவினை செல்திறன் உள்ளதாக ஆக்குவது. நான் சொல்ல விரும்புவது எல்லாம்—இந்த அரசாலே காரியங்கள் தாமதமாக நடைபெறுகின்றன. நிலை ஸ்தம்பித்துவிட்டது என்று எல்லாம் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்ற இந்த நேரத்தில், இந்தத் திருத்தத்தை இவ்வளவு காலம் கடந்து கொண்டுவருவது முறையானதுதானா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், சென்னை உயர்நீதி மன்றம் 3—12—1976-லே திருச்சி மாவட்ட நீதிபதி அவர்கள் போட்ட உத்திரவினை அரசின் கவனத்திற்கு 1978ஆம் ஆண்டு 11ஆம் மாதமே கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அதற்குப்பிறகு 1977 ஆம் ஆண்டு ஒரு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலே ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நீதிபதி பிறப்பித்த உத்தரவு செல்லுபடியாகுமா, செல்லுபடியாகாதா என்ற பிரச்சனைக்கு முடிவுகட்டுவதற்காக 86-லே இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இந்த இடைப்பட்ட 10 ஆண்டு காலத்திலே இந்த வழக்குகளில் போடப்பட்ட தீர்ப்புகளுடைய முடிவு ஸ்திரமற்ற தன்மையிலே ஊசலாடிக்கொண்டு இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் காலகட்டத்திலே ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு யார் பொறுப்பு என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், ஒருக்கால், இந்த நீதிபதி விசாரிக்கும் போது யாரேனும் ஒருவர் இந்த நீதிபதிக்கு இந்த வழக்கை விசாரிப்பதற்கு உரிமையில்லை, அருகதையில்லை. சட்டபூர்வமான அந்தஸ்து இல்லை என்று போராடி அந்த அடிப்படையில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தீர்ப்பால் பாதிக்கப்படுபவர்களின் நிலைமை என்ன என்பதை யோசிக்கவேண்டும். இந்த நிலையிலே இந்த வழக்கை நடத்துவதற்கு செலவிடப்பட்ட தொகையும் இருக்கிறது. இந்த வழக்கின் முடிவால் மனம் நொந்து சிலபேர் தவறான முடிவுகளைக்கூட மேற்கொண்டு இருக்கலாம். அவர்களுடைய குடும்பத்துக்கு பெரும்பாலான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கலாம். எனவே தயவுசெய்து திருத்தங்களை உடனுக்குடன் கொண்டுவருவது அரசுக்கு மட்டும் அல்ல மக்களுக்கும் நன்மையாக இருக்கும். 10 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட ஒரு செயலுக்கு, 10 ஆண்டுகளுக்குப் பின்பு அரசு அங்கீகாரம் வழங்குவது என்பது மிகமிக் கேவலமானது. எனவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள்

1986 மே 13] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

வருங்காலத்திலேயாவது இத்தகைய அநாவசியமான காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1983-லேயே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது அதற்குப் பிறகு 3 ஆண்டு ஆகியிருக்கிறது. எனவே தயவுசெய்து மற்ற எதில் காலதாமதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை; இத்தகைய வழக்குகளில் மானப் பிரச்சனை, உயிர்ப் பிரச்சனை போன்ற பிரச்சனைகள் இருக்கின்றன. தயவுசெய்து அரசு இதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். கால தாமதத்தைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இடம் சாருகிறேன். வணக்கம்.

டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவினுடைய முக்கியமான நோக்கம், இங்கே முதலிலேயே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 1976-க்கும் 77-க்கும் இடையில் 96 வழக்குகள் மீது அளிக்கப்பட்ட தீர்ப்பை செயல்திறனாக ஆக்குவதுதான். ஆகவே அதில் சட்ட சிக்கல்கள் ஏற்பட்டு, இந்தத்துறை ஆராய்ந்து, பிறகு சட்டத்துறையும் ஆராய்ந்து, உயர்நீதி மன்றமும் ஆராய்ந்து, மத்திய அரசினுடைய அனுமதியும் பெற்று இந்தக் கடிதப் போக்குவரத்துக்களெல்லாம் இருந்ததன் காரணமாக சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. 1983 ஆவது ஆண்டிலே இந்த அவையிலே அதை அறிமுகப்படுத்தியதற்குப்பிறகும், அப்பொழுதே நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் அலுவல் ஆய்வுக் குழுவில் இப்படிப்பட்ட சட்டங்கள் வருகின்றபோது கடைசிநேரத்திலே விரைவாக சட்டமன்றத்தை முடிக்கவேண்டுமென்று கோரிக்கைகள் வரும்போது சிலபல சட்டங்களை, அடுத்த தடவை பார்த்துக்கொள்ளலாம்; அடுத்த தடவை பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப் போடப்பட்டு தள்ளிப்போடப்பட்டுபுறக்கணிக்கப்படுகின்றசட்டங்களிலே இதுவும் ஒன்றாக ஆக்கப்பட்டு இருந்ததன் காரணமாக 83 ஆவது ஆண்டும் தள்ளப்பட்டு, 84 ஆவது ஆண்டும் தள்ளப்பட்டு, 85 ஆவது ஆண்டும் தள்ளப்பட்டு, நல்லவேளையாக இப்போது 1986ஆம் ஆண்டு வந்து சேர்ந்திருக்கிறது. அதுதான் இந்தக் காலதாமதத்துக்கு காரணமே தவிர காலத்தாழ்வு ஏற்படுத்தவேண்டும் என்று அல்ல. அதனுடைய முக்கியமான நோக்கம், எளிமையான ஒன்றுதான். ஆக அந்த வழக்குகளை செயல் திறனாக ஆக்கவேண்டுமென்று உயர்நீதி மன்றம் சொன்னதை சட்டத்துறையும் ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய அனுமதியைப்பெற்று அதைச் சட்டவடிவிலே கொண்டுவருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் இனாம் ஒழிப்புச் சட்டத்தில் இருக்கின்ற சிலபல குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள். அந்தக் குறைபாடுகளைத் தனியாக கவனித்து

தான், அதன்பேரிலே தனியாக திருத்தங்கள் கொண்டுவர வேண்டும். இன்று கொண்டு வந்த ஒரு திருத்தத்தோடு அதை இணைக்க இயலாது. அதைத் தனியாக கொண்டுவரலாம். தனியாக ஆலோசிக்கலாம் என்று எடுத்துச் சொல்லி இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்து விடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர் பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1986) நிறை வேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) நில அளவை எல்லைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்

1986 மே 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வடிவு எண். 24/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை எல்லைகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 12ஏ பிரிவில் எல்லை வரையறுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட நபர் அந்த ஆணைகளை, எதிர்த்து 3 மாத காலத்திற்குள்ளாக மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேல்முறையீடு செய்து கொள்வதற்கான 3 மாத கால அளவு அதிகமாக இருப்பதால் அந்தச் சட்டத்தில் 13 ஆவது பிரிவின்கீழ் எல்லைகள் குறித்து இறுதி அறிக்கைகள் வெளியிடப்படுவதை பெரிதும் தாமதப்படுத்துகிறது. இதனால் தற்போது செயல்பட்டு வரும் நில உடைமைப் பதிவு மேம்பாடு திட்டத்தை குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிப்பதில் கால தாமதம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை விரைவு படுத்தும் நோக்கத்தோடு மேல் முறையீடு செய்து கொள்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள 3 மாத கால கெடுவை ஒரு மாதமாக குறைக்க கருதப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ப இந்தச் சட்டத்தின் 12ஏ பிரிவு திருத்தி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள விதிமுறைகளின் படி எல்லை வரையறை செய்யப்படுவதை எதிர்த்து மேல் முறையீடு செய்து கொள்ள வழி இருக்கிறது. ஆனால், 2-ஆவது மேல் முறையீடு சமர்ப்பிக்கவோ அல்லது தாமாக மறு விசாரணை செய்யவோ சட்டத்தில் தற்போது விதிமுறை எதுவும் இல்லை. மேல் முறையீடு மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை எதிர்க்க பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தில் நிவாரணம் பெறத் தான் வழி இருக்கிறது. மேல் முறையீடு செய்து கொள்வதற்கான காலக் கெடுவைக் குறைக்க இருப்பதால் பாதிக்கப்பட்ட நபருக்கு அவர் தம்முடைய தரப்பிலே எடுத்துக் கூறும் மேலும் ஒரு வாய்ப்பினை அளிப்பது அவசியம் ஆகும். காலக் கெடுவை குறைப்பதனால் மேல் முறையீடு மனுக்கள் மீது ஆணை பிறப்பிப்பதில் தவறு ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்றும் அப்படி தவறு ஏதும் ஏற்பட்டால் அந்தத் தவறினைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு அளிக்கும் விதத்தில் இரண்டாவது மேல் முறையீடு '' செகண்டு அப்பீல் '' செய்து கொள்ளவும் உயர் அதிகாரிகள் தாமாகவும் மறு பரிசீலனைச் (Suo Motu Revision) செய்யவும் வகை செய்வது உசிதம் என்று கருதப்பட்டு இந்தச் சட்டத்திற்கு 2-ஆவது மேல் முறையீடு செய்து கொள்ள புதிதாக 12ஏ பிரிவும், உயர் அதிகாரிகள் தாமாகவே மறு பரிசீலனை செய்யக்கூடிய 12 பி, பிரிவையும் சேர்த்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிதாக பிரிவுகள் சேர்க்கப்பட இருப்பதால் அந்தச் சட்டத்திலே 13 மற்றும் 14 பிரிவுகளில் முறையான திருத்தங்கள் இயற்றுவது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தில் 14-ஆவது பிரிவில் காணப்படும் 1908 ஆம் ஆண்டு இந்திய ஆணை வரையறை சட்டம் மத்தியச் சட்டம் 11/1908 ரத்து செய்யப்பட்டு 1963 ஆம் ஆண்டு கால வரையறைச் சட்டம்,

*1986 ஆம் ஆண்டு சனவரி 29 ஆம் தேதியிட்ட அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(மத்தியச் சட்டம் 36/1963) வும் ஆக்கப்பட்டு உள்ளதால் இந்தச் சட்டத்தில் 14-ஆவது பிரிவில் தகுந்த மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவுக்கு மத்திய அரசு இசைவு அளித்துள்ளது. தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைகள் சட்டமுன்வடிவு 19-3-1983 ஆம் நாள் அன்றும். 13-10-1984 ஆம் நாள் அன்றும் தமிழ்நாடு சட்டப் பேரவை கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும்

(முற்பகல் 11-20)

போதிய அவகாசம் இன்மை காரணத்தினால், அக்கூட்டத்தொடரில் விவாதிக்கப்படவில்லை. எனவே, நடப்பு கூட்டத்தொடரில் சட்டமுன்வடிவு பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படியாக அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த நில அளவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மறு நில அளவை செய்யப்பட்டு, அதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள், மேல் முறையீடு செய்ய வேண்டுமானால, 12-ஏ பிரிவின் கீழ் 90 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம் என்று இருக்கக்கூடிய அந்த வாய்ப்பை 90 நாட்கள் என்று இருப்பதற்குப்பதிலாக 30 நாட்களாகக் குறைத்துக் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத திருத்தத்தை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். குறிப்பாக இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, ஏராளமான குறைபாடுகளும், தவறுகளும் ஏற்பட்டிருக்கின்றன. சம்பந்தப்பட்ட நிலவுடைமையாளர்களை வைத்துக்கொண்டு, இந்த நில அளவை செய்யாமல், நிலம் ஒருவர் போல் இருந்து, அவர்கள் பதிவு வேறு ஒருவர் பேரில் செய்து, அந்த ரெக்கார்டுகள் அனுப்பப்படக்கூடிய நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழ்நாட்டில் நடந்து, ஏராளமான தவறுகள், குறைபாடுகள், புகார்கள் எல்லாம் அரசுக்கும் வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், இந்த மேல் முறையீடு செய்வதற்கு 90 நாட்களை 30 நாட்களாகக் குறைப்பது என்பது போதிய அவகாசம் இல்லாத நிலையை ஏற்படுத்துகிறது. ஆனால், நில அளவையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மேல முறையீடு செய்வதற்கு இந்த 30 நாட்கள் அவகாசம் என்பது போதிய அவகாசம் அல்ல. எனவே, நான் நிதி அமைச்சரிடம் வேண்டுகோளாகக் கூறுவது, இந்த 90 நாட்களை 30 நாட்களாகக் குறைப்பதற்குப் பதிலாக, இடையில் இரண்டுமல்லாமல், 60 நாட்களாக ஆக்குகின்ற அளவில், இந்த அரசே இந்த மசோதாவிலே குறிப்பாக முன்மொழிந்து, 30 நாட்களுக்குப் பதிலாக 60 நாட்களாக, அதை ஆக்கி, மேல் முறையீடு செய்வதற்கு

1986 மே 13] [*திரு. கோ. வீரய்யன்]

அளிக்கக் கூடிய முறையீட்டிற்கு, 90 நாட்களாக இல்லாமல், 30 நாட்களாகவும் இல்லாமல, 60 நாட்களாக ஆக்கும் அளவில வாய்ப்பளித்தால், பாதிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு உதவயாக இருக்கும் வகையில, இந்தத் திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று என்னுடைய கருத்தைச் கூறி முடிக்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் என்பது, ஒரு நல்ல திட்டம் தான். ஆனால, இந்த நில அளவு என்பது அளக்கிற வரையிலும் ஏராளமான கோரிக்கை மனுக்கள் எல்லாம் வந்திருக்கின்றன. ஆனால், அளக்கப் போகிறவர்கள் நிலத்திற்குச் சம்பந்தப்பட்டவர்களைச் கூப்பிட்டு வைத்து, யார் யாருக்கு எந்த இடத்தில் நிலம் இருக்கிறது என்று பார்ப்பது கிடையாது. ஏனென்றால் ஒரு நேரத்தில, ஒரு சர்வே நம்பரில உள்ள ஒருவரிடத்தில், இன்னொருவருடைய 10 செண்ட் நிலம் இங்கேயிருக்கும். அந்த கிராமத்தினுடைய கணக்குப் பிள்ளை யார் யாருக்கு எவ்வளவு நிலம் என்று குறித்துக் கொடுக்கின்றாரோ, அந்தக் கணக்கின்படிதான் இருக்கிறதே தவிர, உண்மையான நிலையில் யாருக்கு எவ்வளவு நிலம் என்பது கிடையாது. ஒழுங்கான முறையில அளக்கப்பட்ட நிலமாக இல்லை. இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால், நிலத்தினுடைய சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம், அவர்களே போய், சர்வே நம்பர்களை வைத்து, அதனுடைய அடிப்படையில் அவர்களே அளக்கிறார்கள். அப்படி அளக்கிறபோது ஒருவருடைய நிலத்தில் இன்னொருவருடைய 10 செண்ட் நிலம் இருக்கிறது. அதை அளந்து, பட்டா புத்தகம் போட்டுச் கொடுத்து விடுகிறார்கள். இதனால் இவரும் அவரும் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் இவற்றுக்கெல்லாம் போகும் அளவிற்கு இன்றைக்கு நிறைய புகார்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நிறுத்தி, நிலத்திற்கு சம்பந்தப்பட்டவர்களை வைத்து, இந்த நில அளவைச் செய்வதற்கு, ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அமைச்சரவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

அதே நேரத்தில், 90 நாட்கள் அவகாசம் என்பதில், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு காலத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். அவர்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். இப்போது கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த 30 நாட்கள் என்பது போதாது. மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் சொன்னமாதிரி, இடையிலே 60 நாட்களாக அதை உயர்த்திக்கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நில அளவில் ஒழுங்குபடுத்தக்கூடிய அளவிற்கு விவசாயிகளுக்குப்

பாதிப்பும், பிரச்சினைகளும் இல்லாத அளவிற்கு, இதை ஒழுங்கு படுத்துவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கூறி, இந்த பில்லை ஆதரித்து, அமர்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது ஓரிரண்டு கருத்துக் களைச் சொல்கிற நேரத்தில் இது நல்ல மசோதா என்று சொன் னார்கள். நிலத்தை அளந்து அறிவிப்பது என்பது நல்ல நோக்கம் தான். ஆனால், 90 நாட்களை, 30 நாட்களாகக் குறைப்பது என்பது மிகவும் சங்கடமானது ஆகும். காரணம், நிலத்தை அளப்பது என்பதில் வசதி வாய்ப்பு படைத்தவர்கள்தான் நிலத்தை அளக்க முன் வருகிறார்கள். அப்படி வசதியானவர் கள் நிலத்தை அளந்ததற்குப் பிறகு வறியவர்கள், ஏழைகளாக இருக்கின்றவர்களிடத்திலே அந்தச் சட்டங்கள் பயன்படுத்தப் படக்கூடாது. அவர்களிடத்திலே உண்மையான நிலங்களை அவர்களுக்கு சேரக்கூடாது என்பதிலே வசதி வாய்ப்புள்ளவர் கள் மிகவும் குறியாக இருக்கிறார்கள். அதே நேரத்தில், வசதி யானவர்கள், அரசியல் வாதிகளிடத்திலே அடைக்கலம் புகுந்து, அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி, தாறுமாறாகக் காரியங்களை ஆற்றுவதற்கு நோக்கம் கொண்டு இருக்கிறார்கள். உங்களுக்கு மாதிரிக்குச் சொல்ல வேண்டுமானால், ஒரு ஊரில் கர்ணம் வி.ஏ.ஓ. அளந்து அவர்களிடத்திலே 90 நாள் வரை சால்ஜாப்பு செய்து, 90 நாட்கள் கடந்ததற்குப் பின்னாலே தான், அளந்ததே தெரிய வருகிறது. 90 நாளை வேண்டுமென்றே அவகாசம் செய்து, அப்பீல் செய்ய முடியாத நிலையை அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் நிலம் அளந்ததற்குப் பிறகு கல் பதித்த பிறகு, அவர்கள் முறை யிடுவதற்கு முன்னாலே அளந்த இடம் அல்லது அளக்கப்பட்டது என்ற விவரம் முழுமையாக வருவாய்த் துறையைச் சார்ந்தவர் கள் சென்று யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், மனு கொடுக் கிறார்கள் என்று அவர்கள் இரண்டு தரப்பிலேயும் கையெழுத்து பெற்று அளக்கப்பட்டதனுடைய உறுதிப் பாட்டை அவர் களிடத்திலே பெற்றால்தான் தெரிந்தால்தான், அப்பீல் முறையிடுவதற்குச் சரியாக இருக்கும். எனவே அந்தக் காரியங் களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, நிலம் அளந்ததற்குப் பிறகு, தாசில்தார் சர்வேயரை அனுப்புகிறார். அவர்கள் எல்லாம் அளந்து, அடையாளமாக, அதற்கு குச்சி அடிக்கிறார்கள், முன்கூட்டியே. குச்சி அடிப்பது என்பதைத் தவிர்த்து அளந்த பிறகு உடனடியாக கற்களைப் பதித்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அப்படி பதிக்கப்பட்ட கற்களை என்ன செய்கிறார்கள் என்று கேட்டால் காவல் துறையிலே சொல்லி வைத்து விடுகிறார்கள். அரசியல் செல்வாக்கின் காரணமாக, வசதி வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், பணத்தின் காரணமாக, அந்த வசதிகளைப்

1986 மே 13] [திரு. மா. மணிமாறன்]

பெற்று விடுகிறார்கள். அவர்கள் அளந்ததற்குப் பிறகு, சர்வேயர், தாசில்தாரிடம் மனு கொடுத்து, ஆர். ஐ. சர்வேயரை அனுப்பி அளந்து, குச்சி அடித்ததற்குப் பிறகு, அடித்துச் சென்றவுடனே அடையாளம் தெரியாமல் செய்து விடுகிறார்கள் வசதி உள்ளவர்கள். இப்படிப்பட்ட இடையூறுகள் வந்து இன்றைக்கு ஏழை எளியவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை.

காவல்துறையினரிடம் சென்றால், மேல் முறையீட்டுக்குச் செல்லுங்கள் என்கிறார்கள். ஒரு தாசில்தார் அளப்பீடு செய்கிற நேரத்தில் சர்வேயரை அழைத்துச் செல்லும்போது உடனடியாக அவர்கள் கல் பதிப்புக்கு வேண்டியவற்றை பெற்று, உடனடியாக அளந்ததற்குப் பிறகு, அந்த உறுதியான கல்லைப் பதித்து அதற்கு தாசில்தார் உத்தரவாதம் கொடுத்து விடவேண்டும். அதன் மீது ஏதாவது குறை பாடுகள், மற்றவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது வசதியுள்ளவர்கள் அந்தக் கல்லை அகற்றவோ குச்சியைப் பிடுங்கவே நடவடிக்கை எடுக்கும்போது அதை கிரிமினல் குற்றமாக்கி காவல்துறையில் புகார் செய்து, தாசில்தார் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இன்னொன்று, அளக்கின்ற நேரத்திலே சர்வேயர் ஒன்று அளக்கிறார். வி.ஏ.ஓ. அவர்கள தனியாக அளக்கிறார். அதற்குப் பின்னாலே டெபுடி சர்வேயர் அளக்கிறார். பிறகு, டிஸ்டிரிக்ட் சர்வேயர் அளக்கிறார். இந்த 4 பேரும் கணக்கை ஒன்றாகக் கற்றவர்கள் தான். 4 பேரும் அளக்கிற போது, ஒருவருக்கொருவர் வித்தியாசம் வருகிறது. யார் பாதிக்கப்பட்டவர்கள் என்று பார்க்கிறார்கள். வசதியானவர்களிடத்திலே சாதகமாக அவர்களிடத்திலே கையூட்டைப் பெற்று விட்டு, அல்லது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு, முதலில் அளக்கிறதற்கும், இரண்டாவது அளக்கின்றதற்கும் வித்தியாசம் வருகிறது. பிறகு, தவறான அளப்பீடுகள் இருப்பதாக அறிவிக்கிறார்கள்.

எனவே, கணக்கை ஒழுங்காக படித்து இருந்து, முறையாக வேலை செய்து இருந்தால், வித்தியாசமான எல்லைகள் வருவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? அப்படி ஏதாவது ஒரு அளப்பீடு செய்கிறபோது, பாதிக்கப்படுகிறது என்றால், இரண்டு பேருக்கும் வித்தியாசம் வருகிறது என்றால் ஒரே ஒரு அப்பீலோடு நிறுத்திக் கொண்டு, தாசில்தாரோ, ஆர். டி. ஓ.வோ பக்கத்திலே இருந்து முறையாக அளந்து அவர்களிடத்திலே நிலங்களை ஒப்புவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் கற்கள் இல்லாமல், அடையாளம் இல்லாத இடங்களில், வசதியானவர்கள் சொத்துக்களை அபகரித்துக் கொள்கிறார்கள். மரம் இருக்கிறது என்றால், அதை முன்கூட்டியே தாசில்தார் அல்லது காவல் துறையினிடத்திலே,

அரசாங்கத்தினிடத்திலே சென்று செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த மரத்தை அடியோடு வெட்டி, கொல்லைப் பக்கத்திலே குழி வெட்டி, மரத்தை ஒதுக்கிவிட்டு, இதுவும் என்னுடைய எல்லைதான் என்று சொல்கிறார்கள். அதற்கு அரசியல்வாதிகள் தலையீடு இருப்பதால் அதிகாரிகளும் 'ஆமாம்' என்று சொல்கிற நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலை இருப்பதன் காரணமாக, ஏதாவது தவறு நடந்தால், அப்படிப் பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏதாவது இடையூறுகள் இருந்தால் சொத்துக்களை அளப்பீடு இல்லாமல், தானாகவே அத்து மீறி செய்கிறபோது, தாசில்தாரால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, அவர் அளந்து, கற்களைப் பதித்து பிறகுதான் யாரும் பிரவேசிக்கிற நிலையை உருவாக்க வேண்டும்.

அளப்பீடு செய்வது, ஒரே ஒரு தடவைதான் அளப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்குப்பிறகு குச்சி அடிக்கின்ற, பழக்கம் தவிர்க்கப்பட வேண்டும். அளப்பீடு செய்ததற்குப் பிறகு கற்களைப் பதித்து விட்டு தாசில்தார் உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும். யார் அகற்றினாலும் சரி, தாசில்தார் இருந்து அளந்து கற்களைப் பதித்ததற்குப் பிறகு அதை யார் அகற்றினாலும் அதை கிரிமினல் குற்றமாக கொண்டு வந்து தண்டனை கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் ஏழை எளியவர்களாக இருக்கிறவர்கள், நாதியற்றவர்கள், ஆதா வற்றவர்கள் நியாயம் பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். எனவே அப்படிப்பட்ட நிலைமைகளை அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-30)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இத்தகைய நில அளவைகளைத் திருத்தியமைக்கின்ற பணிகளை மேற் கொள்ளுகின்ற பொழுது நிலத்தின் உரிமையாளர்கள் யார் என்பதைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லாமல், யாரோ ஒருவர் அனுபவிக்கிறார் என்றால் அவருக்குத் தாக்கீது அனுப்பப்படுகிறது. இதனால் உண்மையான உரிமையாளருக்கு இதைப் பற்றி மேல் முறையீடு செய்துகொள்வதற்கோ அல்லது முறையிட்டு தமக்குள்ள உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கோ வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, இத்தகைய நில அளவையைத் தீர்மானிக்கின்ற பணியில் ஈடுபடுகின்ற பொழுது, நிலத்திற்கு உண்மையான சொந்தக்காரர்கள் யார் என்று தெரிந்து கொண்டு, அல்லது உண்மையான சொந்தக்காரர் இறந்து விட்டிருந்தால் அவருக்குச் சட்டபூர்வமான வாரிசு யார் என்பதைத் தெரிந்து கொண்டு அவருக்கும் தாக்கீது அனுப்பி, பிறகு ஆட்

சேபங்களைத் தெரிந்துக்கொண்டு அதை முறைப்படுத்தினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் முக்கியமான நோக்கத்தைப் பற்றி நான் முதன் முதலிலேயே விளக்கிக் கூறினேன். ஆகவே, நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் அண்மைக் காலத்திலே நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டு, இந்தத் துறையில் செம்மை செய்யப்படும் நிலை நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுப்பினர்கள் நன்கறிவார்கள். எட்டாயிரத்திற் கும் மேற்பட்ட நில அளவையாளர்கள் இந்தப் பணியில் நான்கைந்து ஆண்டுக் காலத்திற்கும் மேலாக ஈடுபடுத்தப்பட்டு, மேலும் ஈடுபடுத்தப்படும் அளவிற்கு இந்த முறை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த நில அளவையைப் பொறுத்த வரையில அரசினிடத்தில் கிடைக்கின்ற சர்வே எண் உரிமையாளர்கள் ஆகியவற்றை வைத்துத் தான் அளக்க முடியுமே தவிர, யாருக்குச் சொந்தம், எது என்பதைப் பற்றி நில அளவையாளர்கள் மற்றவர்கள் சொல்வது என்பது இயலாத ஒன்று. சிவில் கோர்ட்டின் மூலமாகப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். சில பலயிடங்களில் பினாமியாகக்கூட அமையும், சிலபல இடங்களில் அண்ணன் தம்பிக்குள் ஏற்பட்ட தகராறுகள், பங்காளிகளுக்கிடையிலே ஏற்படுகின்ற தகராறு போன்ற இவைகளைத் தீர்த்து வைப்பது என்பது நில அளவை யாளர்களுக்கும், இந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் அமையாது. அப்படியே தலையிட்டாலும்கூட அது சட்டப்படி பொருந்தி வராது. வேறு வகைகளிலேதான் அவைகள் தீர்க்கப் பட வேண்டும். ஆனால் இருக்கின்ற சட்டத்தினுடைய அடிப் படையில், சர்வேயின் அடிப்படையில் இதை அளந்து முறைப் படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு, அந்த வகையிலே இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதாலும், அனாவசியமான காலத் தாழ்வு ஏற்படுகிறது என்பதாலும், நிலவுடைமைப்பதிவு மேம்பாட்டுத் திடடத்தில் காலத்தாழ்வு ஏற்படுவதால்தான், 90 நாட்கள் என்பதை 30 நாட்களுக்குள்ளாக மேல் முறையீடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆனால், ஏற்கனவே இருந்ததைவிட இப்பொழுது என்ன கூடுதலாக வசதி செய்திருக்கிறோம் என்றால், சாதாரணமாக 90 நாட் களில் மேல்முறையீடு செய்யும்பொழுது அடுத்த மேல் முறை யீட்டுக்கு ஏற்கனவே இருந்த சட்டத்தில் இடமில்லை. ஏதாவது முறையீடு செய்ய வேண்டுமென்றால் வழக்கு மன்றத்திற்குத் தான் சென்று செய்ய வேண்டும். இப்பொழுது என்ன வழி என்றால், Second Appeal ஆகவே இதிலே ஏதாவது குறைபாடு இருந்தால் மேலும் ஒரு மேல் முறையீடு செய்யலாம் என்று சொல்லுகின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்களும், உத்திராபதி அவர்களும் சொன்னது மாதிரி 60 நாள் என்பதுகூட வந்துவிடும். முதலில் 30 நாட்கள் தருகி

றோம். மசகன்ட் அப்பீல் என்று சொல்லுகின்ற பொழுது அதற்கும் ஒரு குறிப்பிட்ட நாட்களை எடுக்கும் நிலை ஏற்படும். ஆகவே, மேல் முறையீடு செய்வதற்கு வழி வகை தருகிறோம் என்பது மட்டுமல்லாமல், உயர் அதிகாரியேகூட தாமாகவே மறு பரிசீலனை செய்வதற்கான வழிவகையையும் செய்கிறோம். Suo motu revision இன் மூலமாகப் பரிசீலனை செய்யலாம் என்கிறோம். ஆகவே, இதிலே குழப்பத்திற்கு இடமில்லாத வகையிலே நில அளவையைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்திச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேதான், அதற்கு உதவி செய்யும் முறையிலே தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். ஆகவே, இதிலே ஏதாவது இடர்ப்பாடுகள் நடைமுறையிலே இருந்தால் அதைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம். இப்பொழுது இரண்டாவது முறையீடு வைத்திருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று 60 நாட்கள் என்று கணக்கு வந்து விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. முதலில் 30 நாட்கள், பிறகு 30 நாட்கள் என்று தானாகவே வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அளந்து சரி பார்த்து, கற்களை நட்டதற்குப் பிறகு அந்தக் கற்களை யாராவது மாற்றினால் அல்லது வேறிடத்தில் மாற்றி வைத்தால் அதற்கு இப்பொழுதே சட்டம் இருக்கிறது என்று கருதுகிறேன். கிரிமினல் குற்றமாகத்தான் அது கருதப்படவேண்டுமென்றே நான் கருதுகிறேன். அப்படியில்லாவிட்டால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அரசே அளந்து, கற்களை நட்டதற்குப் பிறகு ஊரிலே இருப்பவர்கள், தங்கள் தங்கள் விருப்பப்படி கற்களை மாற்றினாலும் அல்லது ஆக்கிரமிப்பு செய்கின்ற முறையில் கையகப்படுத்துகின்ற நிலைமை ஏற்பட்டாலும் அவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறோம்.

ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அமைந்திருப்பதன் காரணமாக, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 24/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

1986 மே 13] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்றுநிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

'' தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 24/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஔ) சட்ட மன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 26/1986) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'',

இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகின்ற பொழுது, நான் குறிப்பிட விரும்புவது, 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1967) இரண்டாம் பிரிவின்படி அந்தச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள பதவி இடங்களில் எதுவும், அதை வகிப்பவரைச் சட்டமன்ற உறுப்பினர் ஒருவராக தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினராக இருப்பதற்கு, தகவின்மையுறச் செய்தலோ, எப்போதுமே தகவின்மையுறச் செய்திருப்பதாகவோ கொள்ளப்படுதலாகாது. ஆதாயப் பதவிகள் குறித்த கூட்டுக்குழு ஏழாவது மக்கள் சபைக்களித்த தனது ஐந்தாம் அறிக்கையில் செய்துள்ள, பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, நேரு இளைஞர் மையங்களுக்கான (நேரு யுவகேந்திரங்களுக்கான) மாநில

** 1986-ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அமைப்புக் குழுவில் உள்ள ஒரு சில பதவிகளை மேற்சொன்ன இணைப்புப் பட்டியலில் உள்ளடக்குவதென அரசு முடிவு செய்துள்ளது. அரசு, தமிழ் நாடு பிற்பட்டோர் வகையினர் பொருளாதார மேம்பாட்டுக் கூட்டு நிறுவனத்தின் (தனியார்) (வரையறுக்கப்பட்டது), இயக்குநரின் பதவியையும் கூட மேற்சொன்ன இணைப்புப் பட்டியலில் உள்ளடக்குவதென்றும் முடிவு செய்துள்ளது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு குறித்து, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக, என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கின்ற பொழுது இந்தச் சட்டத்தை வரவேற்கின்றேன் என்று கூறுவதோடு, என்னுடைய நோக்கம் நிறைவேறாது என்றாலும் தாலே, மற்றொரு கருத்தினை நான் இணைத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க முடியாமல் சில அரசு நிறுவனங்களுடைய அல்லது அரசு அங்கம் வகிக்கின்ற அல்லது அரசு சார்புடைய துறைகளிலே பதவிகள் வகிக்கும்போது, அது சட்டமன்ற உறுப்பினர்களுடைய பதவிக்கு இடைஞ்சலை ஏற்படுத்தாமல், அல்லது if it amounts to disqualification என்று பாராளுமன்றத்திலே இருக்கக்கூடிய Joint Committee on Offices of Profit in its 7th Lok Sabha, fifth Report இதுபோன்ற தகவின்மையை, அதாவது, இந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்கி, சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல்பாட்டுத்திறனை பாதிக்காத அளவிலுள்ள ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று ஒரு சட்டம் இயற்றப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், ஒவ்வொரு தடவையும் இது வருகிறபொழுது, இந்த அவையினுடைய நேரத்தை எடுக்கின்ற வகையிலே, அதற்காகத் திருத்தங்கள் மூலமாக, சட்டத்தைத் திருத்துகிறோம். ஒரு கருத்தை நாம் ஏற்றுக்கொண்டோம். ஒரு சட்டப் பிரச்சனை, அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் அதாவது இன்னும் சில நாட்கள் வரை—இருக்கிற வரை—அவரவர்கள் அரசு நிறுவனங்களிலே இருந்தால், அதனால், ஏற்படக்கூடிய இழப்புகள், அரசினுடைய பொறுப்பிலே இருப்பவர்களுக்கு அதன் காரணமாக, அவர்களுக்கு இழப்பு ஏற்படக் கூடாது என்ற கொள்கையை நாம் ஏற்றுக்கொண்ட பிறகு, ஒவ்வொரு முறையும் தனித்தனியாக அதற்காக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமா ?

1986 மே 13] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

(முற்பகல் 11-40)

எத்தனையோ சட்டங்களிலே நாம் இவற்றையெல்லாம் ஒரு ஷெட்யூலாகத்தான் போட்டிருக்கிறோம். இந்த ஷெட்யூலை மாற்றுகின்ற அதிகாரத்தை நாம் ஏன் எக்ஸி கியூட்டிவ் அதிகாரியிடம் கொடுத்துவிடக்கூடாது? ஒவ்வொரு தடவையும் இது போன்ற புதிய நிறுவனங்களை அரசு நிறுவனங் களாக ஏற்றுக்கொள்கின்றபோது தனியாக ஒரே ஒரு செக்ஷன் ஒரு அமெண்ட்மென்ட் in the form of introduction of an amendment அந்த அதிகாரத்தை அரசுக்கு கொடுத்து விட்டு, ஒரு ஷெட்யூலை அமுல்செய்து புதியவற்றைச் சேர்க்கவும், ஏற்கனவே உள்ளவற்றிற்கு வழங்குகின்ற அந்த அதிகாரத்தை அரசுக்கு கொடுத்துவிடுவோ மானால் இது போன்று சட்டமன்றத்தினுடைய அலுவல் நேரங் களை மிச்சம் பிடிக்கலாம். அவ்வாறு செய்கின்ற அமெண்ட் மென்ட்களை இந்த சட்டசபையிலே அவைகள் ஏற்படுத்தப்பட்ட 7 நாட்களுக்குள் வைக்க வேண்டுமென்றோ, சட்டசபை கூடாத நேரங்களிலே, கூட்டப்பட்ட பிறகு 7 நாட்களுக்குள் வைக்க வேண்டுமென்றோ சொல்லிவிட்டால் பல பிரச்சனைகளை நாம் எளிதாகத் தீர்த்துவிடலாம். இந்த பிரச்சனைகளை நாம் சிக்கன மாகவும் முடித்து விடலாம். ஏனென்றால் ஏற்கனவே இது போன்ற ஒரு நிறுவனத்தில் ஒருவர் உறுப்பினராக இருக்கும் போது திடீரென்று ஒரு இடைத்தேர்தலோ அல்லது தேர்தலோ வருகின்றபோது, அந்தத் தேர்தலில் அவர் வெற்றியும் பெற்ற பிறகு, இந்தச் சட்டத்திலே அது சேர்க்கப்படவில்லை என்ற காரணத்தினால், உயர்நீதிமன்றத்திலே இந்தத்தேர்தல் செல்லுமா செல்லாதா என்று வழக்குகள் தொடரப்பட்டு அதன் பின்னால் பல லட்சக்கணக்கான ரூபாய்களை செலவழித்து தேர்தல் நடத் தப்பட்ட பிறகு இந்தத் தேர்தல் இதன் காரணமாக செல்லாது என்று சொல்லி நாம் இங்கே அமெண்ட்மென்ட் கொண்டு வரு வதை விட இந்த பவரை--

we can simply vest the power with the Executive by a simple amendment in the Act saying that the Executive shall have the power to amend provided that such a notification shall be placed on the Table of the House within seven days of such an amendment or when the House is not in session, immediately after seven days of its re-constitution.

என நாம் கொண்டு வருவோமானால், இதற்குரிய பிரச்சனை களை நாம் சந்தித்துவிட முடியும் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தை வரவேற்றாலும்கூட, எதிர்காலத்திலாவது இது தொடர்பாக நீங்கள் ஒரு திருத்தத்தை கொண்டுவந்து அந்த திருத்தத்தின் மூலமாக—நாம் எத்தனையோ பில்கள் விவாதிக்க வேண்டியிருக்கிறது. 15 பில்களை இன்றைக்கு நாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது. மாலையிலும் கூடும் என்று சொல்லியிருக் கிறார்கள். நாளைக்கும் கூட சிலவற்றை எடுத்துக் கொள்ள

லாம்—இதுபோன்ற ஒரு புரொசீஜரல் மேட்டரை, பாலிசி மேட்டரை, நாம் ஏற்றுக்கொண்ட ஒரு விஷயத்தை ஒட்டி, நம்முடைய சட்டசபையினுடைய நேரத்தை வீணடிக்காமல் நம்முடைய அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற பேரவை உறுப்பினர், சட்ட மன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப் படுவதாக இருந்தால் அல்லது நியமிக்கப்படுவதாக இருந்தால் சில தகுதியற்றவர்கள் அந்தப் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடாது, நியமிக்கப்படக்கூடாது என்று இந்தியாவின் அரசியல் சட்டத்தினுடைய 191 ஆவது பிரிவு தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஆக அரசியல் சட்டத்தினுடைய 191 ஆவது பிரிவின்படி அன் சௌண்ட்மேன் சாதாரண வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால் புத்தி சுவாதீனம் இல்லாத லூசுகள் எம்.எல்.ஏ. வாக ஆக்கப் படக் கூடாது, எம்.எல்.சி. ஆக ஆக்கப்படக் கூடாது என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அதைப் போலவே Undischarged Insolvent person திவாலானவர்கள், மஞ்சள் கடுதாசி கொடுத்தவர்கள் எம்.எல்.ஏ. வாக ஆக்கப்படக் கூடாது. எம்.எல்.சி. யாக ஆக்கப்படக் கூடாது. அது டிஸ்-குவாலிபிகேஷன் என்று சொல்லப்படுகிறது. அதைப் போலவே ஃபாரினர்ஸ் இந்தியாவினுடைய சிட்டிசனாக இல்லாதவர்கள் எம்.எல்.ஏ. வாக ஆக்கப்படக் கூடாது. எம்.எல்.சி.யாக நியமிக்கப்படக் கூடாது என்று அரசியல் சட்டத்தினுடைய 191 ஆவது பிரிவு தெரிவிக்கிறது. அதைப் போலவே office of profit மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் பதவிகளிலே ஆதாயம் தரக்கூடிய பதவிகளில் யாராவது இருப்பார்களானால் அவர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவோ, மேலவை உறுப்பினராகவோ நியமனம் செய்யப்படக்கூடாது, தேர்ந்தெடுக்கப்படக் கூடாது என்று அரசியல் சட்டம் தெளிவாக தெரிவித்திருக்கிறது. ஆனால் 1967 ஆம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்திற்கு பெயர் The Madras Legislature (Prevention of Disqualification) Act, 1967. Office of Profit சட்டமன்ற தகுதியின்மை தடுத்தல் சட்டம் 1967 ஆம் ஆண்டு இதே பேரவையிலே கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆக அந்தச் சட்டத்தின் மூலம் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அந்த சட்டத்தினுடைய இரண்டாவது பிரிவிலே, ஒருவர் அரசாங்கத்தினுடைய மத்திய, மாநில அரசாங்கத்தினுடைய பணியாளராக ஆதாயம் தரக்கூடிய பணியாளர்களாக இருந்தால், சில அலுவலர்களை பொறுத்தமட்டில் அவர்கள் எம்.எல்.ஏ.—வாக, எம்.எல்.சி. யாக ஆவதற்கு தகுதி உடையவர்கள் என்று இந்தச் சட்டம் ஒரு பட்டியலை போட்டு காட்டி அதிலே ஒரு 28 பேரைச் சொல்கிறது.

உதாரணமாக செரீப் அவர்களை எம்.எல்.ஏ. வாக, எம்.எல், சி.யாக ஆக்குவதற்கு இங்கே காம்பிடன்ட் அதாரிட்டி என்ற வகையில் அதிகாரம் கிடைக்கிறது. அதே போல் நெய்வேலி

கார்ப்பரேஷனுடைய சேர்மனாக இருப்பவரை, ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட் என்று சொல்லி தடுத்துவிட முடியாது. 67-வது வருட மூலச் சட்டம் என்ன சொல்கிறது என்றால் மத்திய சர்க்கார் அல்லது மாநில சர்க்காரிலே ஆதாயம் தருகிற பதவிகளை வகித்தாலும், இந்தச் சட்டத்தின் பட்டியலில் யாராவது வருவார்களேயானால் அவர்கள் எம்.எல்.ஏ.வாக, எம்.எல்.சி.யாக ஆவதற்குத் தகுதி உடையவர்கள் என்று மூலச்சட்டம் சொல்கிறது. இப்போது இந்த அரசாங்கம் அந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருகிறது. என்ன திருத்தம் என்று கேட்டால்—நான் உதாரணம் சொல்கிறேன். 'Director of the Tamil Nadu Backward Classes Economic Development Corporation' அதாவது தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர் ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட்டிலே வரமாட்டார். அவர் இந்தப் பட்டியல் இணைக்கப்பட்ட காரணத்தால், இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிற காரணத்தால் அவர் எம்.எல்.சி. ஆவதற்கு, எம்.எல்.ஏ. ஆவதற்குரிய தகுதி பெற்றவராக, க்வாலிஃபைட்-ஆக ஆக்கப்படுகிறார். நீங்கள் கொண்டு வருகிற இந்தச் சட்டத்தின் மூலம் அவர் அவ்வாறு ஆக்கப்படுகிறார்.

அதைப்போலவே இன்னொன்றையும் நினைவுபடுத்த நான் விரும்புகிறேன். நேரு இளைஞர் மையங்களுக்கான மாநில அமைப்புக் குழுவில் உள்ள தலைவர், செயலாளர், உறுப்பினர் ஆகியவர்கள் எல்லாம் ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட்டிலே வர மாட்டார்கள். இவர்களும் எம்.எல்.ஏ., எம்.எல்.சி. ஆக ஆக்கப்படுவதற்கான தகுதி பெற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள். ஆகவேதான் இந்தத் திருத்தத்தை இந்த அரசு கொண்டு வருகிறது. இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய ஷரத்துக்கள் இதுதான். ஆனால் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே உங்கள் மூலம் நான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்று கேட்டால் நேரு இளைஞர் மையங்கள் மாநில அமைப்பு குழுவினுடைய தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் ஆகியவர்கள் எல்லாம் எம்.எல்.ஏ.-வாக, எம்.எல்.சி.-யாக ஆவதற்குரிய தகுதி உடையவர்கள் என்றும் அதைப்போலவே இன்னொரு பதவி வகிக்கக்கூடிய அதாவது தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர் எம்.எல்.ஏ.-வாக ஆகலாம், எம்.எல்.சி.-யாக ஆகலாம், அதற்கான தகுதியை அவர்கள் பெறுகிறார்கள் என்றும் அவசரம் அவசரமாக பல்வேறு அலுவல்களுக்கு மத்தியில் இங்கே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு இங்கே பட்டியலில் இணைக்கப்படுகிறது. இதற்கு ஏன் அவசரம்? இதில் என்ன முக்கியத்துவம்? இந்த ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட் இவர்களுக்குப் பொருந்தாது என்று நீங்கள் சட்டம் கொண்டு வருவதில் யாரை மனதில் கொண்டு திடீரென்று அவர்களுக்கெல்லாம் தகுதி இருக்கிறது என்று சட்டத்

திருத்தம் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் உங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும். மேலவையைக் கலைப்பதற்கான தீர்மானத்தை முன்மொழிவதற்கான நோட்டீஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. நான் அது குறித்து இங்கே இப்போது பேச விரும்பவில்லை. நாளை கூட அந்த விவாதம் இருக்கிறது. அது சட்ட மேலவை பற்றிய மசோதா. அந்த விவாதம் வேறு ஒரு புறத்திலே இருக்கட்டும். நான் கேட்க விரும்புவது எல்லாம்— நிதியமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும் என்பதற்காக உங்கள் மூலம் கேட்கிறேன்—மேலவைக்கு ஒருவர் உறுப்பினர் ஆக ஆவதற்கான தகுதியைப் பெறுகிறார். இவ்வாறு இவர்கள் மேலவை உறுப்பினர்களாக வருவதற்கான தகுதி பெறுவதற்குரிய சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டு இன்னொரு புறத்திலே மேலவை கலைக்கப்படுகிறது என்று தீர்மானம் கொண்டுவர இருக்கிறீர்கள். அப்படி மேலவை கலைக்கப்பட்டு விட்டால் இவர்கள் எப்படி உறுப்பினர்களாக இருப்பார்கள்? இவர்கள் மேலவை உறுப்பினர்களாக ஆவதற்கான சட்டம் நீங்கள் கொண்டு வந்தால், மேலவை இருந்தால் தானே! ஆக மேலவையைக் கலைப்பதற்கும் ஒரு தீர்மானம். மேலவை உறுப்பினர்களாக இருப்பதற்கு தகுதி உடையவர்கள் இன்னின்னார் என்றும் சட்டம் கொண்டு வருகிறீர்கள். இது என்ன நியாயம்?

துறவறம் என்று சொல்லிவிட்டு மணப் பெண்ணினுடைய தகுதியைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்? எனக்கு விளங்கவில்லை. துறவறம் தான் உங்கள் கொள்கை என்ற முடிவுக்கு வந்த பிறகு மணப்பெண் தேவையா? மணப்பெண் அழகு பற்றி, திறமை பற்றி, குணநலன்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வது அவசியமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆக சுவர் இல்லாத சித்திரம் போல் மேலவை கலைக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டு மேலவை உறுப்பினர்களாக இவர்கள் எல்லாம் இருப்பதற்கான தகுதியைப் பெறுகிறார்கள் என்று சட்டத் திருத்தம் கொண்டு வருவது எதற்காக

(முற்பகல் 11–50)

என்று கேட்கிறேன்.** இது நியாயம் தானா? இது அவசியம் தானா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் உங்கள் மூலம் (குறுக்கீடு).

அது பார்லிமெண்டரி போர்டுதான். வேண்டுமானால் எடுத்து விடுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY HALL TRIUMPHS

1986 மே 13] [திரு. அ. ரகுமான்கான்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : **என்று சொன்ன வார்த்தையை எடுத்துவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் ; துணைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொண்டு வருவது அர்த்தமற்ற செயல் அல்லவா ? நியாயம் அற்ற செயல் அல்லவா ? இதில் ஏதாவது பொருள் இருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே' இன்னொன்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும். எம்.எல்.ஏ., எம்.எல்.சி., ஆவதற்கும், நான் ஏற்கெனவே சொன்ன அந்த டைரக்டர், இன்னும் அந்த இளைஞர் அமைப்பிலே பணியாற்று கின்ற பணியாளர்கள், அவர்கள் பட்டியலிலே வந்து விடுகிற காரணத்தால், அவர்களும் எம்.எல்.சி. ஆவதற்கு தகுதி பெறு கிறார்கள் என்று சொல்லி விடுகிறீர்கள். ஆக இந்தச் சட்டத் தின் மூலம் நீங்கள் சொல்ல வருவது என்ன ? மேலவையில் பணியாற்ற சிலருக்கு வாய்ப்புக் கொடுப்பதற்கு இந்தச் சட் டத்தைக் கொண்டு வருகிறீர்கள்.

ஆனால், ஏற்கெனவே மேலவையில் பணியாற்றிக் கொண் டிருப்பவர்கள், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து நகராட்சி அவர்களுடைய பிரதிநிதிகள், இப்போது வர இருக்கிறார்களே 21 இடங்களில் போட்டியிட்டு, அந்த இரண்டு பேர்களும் மேல வையில் உறுப்பினர்களாக இருப்பதற்குத் தகுதி பெறுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் பணி ஆற்ற வேண்டும் என்று பஞ்சா யத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்துவிட்டு மேலவை யைக் கலைப்பதற்கும் தீர்மானம் கொண்டு வந்து விட்டு, ஏற்கெனவே மேலவையில் பணியாற்ற வேண்டியவர்களுக்காகத் தேர்தல் கமிஷன் தேர்தலை வைக்க தேதியை அறிவித்து விட்ட பிறகு, இந்த 21 பேர்களும் வர முடியாத சூழ்நிலையில் இலட் சக் கணக்கான நபர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பஞ்சாயத்து யூனியன் மற்றும் நகராட்சிகளின் பிரதிநிதிகள் அங்கே செயல் பட முடியாத அளவுக்கு சபையையே கலைக்கக் கூடிய நிலைமையில் இருக்கிற அது முரண்பாடாக கொண்டு வரப்பட்ட சட்டம் அல்லவா ?

அதுபோலவே படித்தவர்கள், பட்டதாரிகள் சார்பாக ஏற் கெனவே இப்போது மேலவையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் யாரோ இரண்டு பேர்களை, இரண்டு அமைப்பு உறுப்பினர்களை (குறுக் கீடு) அது வேறு இது வேறு. இது மேலவையைப் பற்றியது. மேலவையில் இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான பட்டதாரி களின் பிரதிநிதிகள், இலட்சக் கணக்கான ஆசிரியர்களின் பிரதி நிதிகள், அங்கே பணியாற்றும் வாய்ப்பைக் குறைக்கிற விதத்தில், பட்டதாரிகளின் தொகுதி சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மேலவையில் பணியாற்றக்கூடிய அந்த வாய்ப்பையும் குறைத்து விட்டு, ஒரு பக்கம் கதவை அடைத்து விடுகிற நீங்கள் இன்றைக்கு ஒரு டைரக்டரை, அதைப்போலவே நேரு யுவ கேந்திராவில் வேலை செய்யக்கூடிய செயலாளர், உறுப்பினர், தலைவர் போன்றவர்களையும், எம்.எல்.சி., ஆக்குவதற்குத் தகுதி உடையவர்களாக ஆக்குகிறோம் என்று சொல்வதிலே எந்தவிதமான நியாயமும் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு வேளை இன்றைக்கு அந்த மேல்சபை கலைக்கப்படுவதற்கான பல்வேறு காரணங்களைக் கூட நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லலாம். இதுவரையில் அவர்கள் அதுபற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால் நான் கேட்பது மேலவைக்குச் செல்ல இவர்கள் எல்லாம் தகுதி உடையவர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு சட்டம். அப்படியானால் ஏன் அந்த மேலவையைக் கலைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது என்பதைக் கேட்க இந்தச் சட்டத்தின் மூலம் எங்களுக்கு உரிமை இருக்கிறது. எனவே நான் கேட்கிறேன். ஆந்திரா மற்றும் பல மாகாணங்களில் அப்படி கலைக்கப்பட்டு விட்டது, ஆகவே, நாங்களும் கலைக்கிறோம் என்று நீங்கள் சொன்னால், ஆந்திரத்திலே இருக்கக்கூடிய முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்கள் இலவச மொட்டைத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காக, இங்கேயும் இலவச மொட்டைத் திட்டம் கொண்டு வர முடியுமா நீங்கள்? எனவே, மேலவை உறுப்பினர்களாக ஆவதற்குத் தகுதி உடையவர்கள் இன்னார் என்று சட்டம் கொண்டு வருகிற போது, அந்த மேலவையை கலைப்பதற்கும் ஏன் முயற்சிக்கிறீர்கள்? என்ன காரணம்?........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பில்லுக்கு உள்ளே பேசுங்கள். எங்கேயோ போய் மொட்டைத் திட்டம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்—அல்லது நாளைக்குப் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளை பேசுவது என்பது வேறு. இன்றைக்கு வந்திருக்கக் கூடிய இந்தச் சட்டத்திலே நான் உங்களிடத்திலே நியாயம் கேட்கிறேன். தவறு இருந்தால் சொல்லுங்கள், ஏற்றுக் கொள்கிறேன். சட்டமன்றம், சட்ட மன்ற மேலவை-இவைகள் லெஜிஸ்லேச்சர்ஸ். அதிலே இருக்கக் கூடிய தகுதி, தகுதியின்மை பற்றி ஒரு சப்ஜெக்ட். அது சம்பந்தமாகத்தான் இந்த பில் வருகிறது. அப்படியானால் பில்லைப் பற்றி அதிலே சம்பந்தம் உள்ளதைப் பற்றித்தான் சொன்னேனே தவிர, ஏதோ அறியாமை காரணமாக அல்ல. எம்.எல்.சி. ஆவதற்கு இவர்கள் தகுதி உடையவர்கள் என்று.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதை ஒரு இடத்திலே சொல்வதோடு நிறுத்திக் கொண்டிருந்திருக்கலாம்.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, அபாலிஷ் பண்ணு கிறீர்களே என்று 6, 7 தடவை சொல்லியிருக்கிறீர்கள். ஒரே விஷயத்தை பற்றி ப்ரொசீடிங்ஸ் வேண்டுமானால் எடுத்து படித்துப் பாருங்கள். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு தகுதி இருக்கிறது என்று சொல்லிவிட்டு மேலவையை கலைக்கிற போது, நீங்கள் யாருக்கு வாய்ப்புக் கொடுத்து அவர்கள் மேலவை உறுப்பினராகத் தகுதி பெற வேண்டுமென்று சொல்கிறீர்களோ, அது இந்த மேலவை இல்லாத போது எப்படி முடியும் ? எனவே, மேலவையை கலைப்பது நியாயம் தானா ? அதற்காக சொல்லப்படுகிற காரணங்கள் நியாயம் தானா ? பணச் செலவு என்று சொல்வது சரியாக இருக்குமா ? பல்வேறு பணச் செலவை நாம் செய்யவில்லையா ? மந்திரிகளுக்குச் சம்பளத்தை உயர்த்தவில்லையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாளைக்கு, ரெசலூஷன் வருகிறபோது தான் என்ன காரணமென்பது தெரியும். நீங்களாக ஹைபதெடிக்கலாக கேள்விகளை கேட்டுக் கொண்டு போக வேண்டாம். நாளைக்கு ரெசலூஷன் வரப் போகிறது. அப்போது பேசலாம்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ரெசலூஷன் வந்ததற்குப்பிறகுதான் பேச வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால், ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். வந்திருக்கிற பில் எதைப் பற்றி? மேலவையைப் பற்றியது, சட்ட சபையைப் பற்றியது, மேலவை உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள் டிஸ்குவாலிபிகேஷன், குவாலிபிகேஷன் பற்றியது. இந்த பில்லிலே பேசாமல் எதிலே பேசுவது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கடுமையாக பேசுவதென்றால் அதிலே ஒரு முறை வேண்டும். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரைப் பற்றி வந்தால், 24 அமைச்சர்களின் துறைகளையும் மாவட்ட அளவிலே அவர் கவனிக்கிறார். ஆகவே, 24 அமைச்சர்களைப் பற்றியும் பேசுகிறேன் என்றால் அது முறையாக இருக்காது. ஆகவே, முதல் பகுதி பேசினீர்கள். அதோடு முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் திரும்பவும் சொல்கிறேன். நாளைக்கு சபையினுடைய உறுப்பினர்கள் டீடெய்ல்டாக பேசவிருக்கிறார்கள். ஆகவே இப்போது இர்ரெலவண்டாகவோ, அல்லது விஸ்தாரமாகவோ, மற்றவைகளுக்கு போகவில்லை. கலைப்பிற்கான காரணங்களைச் சொல்லாத நிலையில், மெம்பர்களை தேர்ந்தெடுப்பது, அவர்களுக்கு தகுதியிருக்கிறது என்று சொல்வது எந்தவிதத்தில், நியாயம் என்று கேட்பதற்காகச் சொல்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[திரு. அ. ரகுமான்கான்] [1986 மே 13

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டமன்றத்தின் சட்டப் பேரவை, சட்ட மேலவை உறுப்பினர்களாவதற்கு நாம் சில தகுதிகளைச் சொல்கிறோம். அந்தத் தகுதிகளைச் சொல்கிற போது '' ஆபிஸ் ஆப் புராபிட் '' இருந்தாலும் கூட இங்கே திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்படுகிற பிற்பட்ட துறையினுடைய டைரக்டர், நேரு யுவகேந்திரா செயலாளர், தலைவர், உறுப்பினர் இவர்களெல்லாம் எலிஜிபில், குவாலிபைட் பெர்சன்களாக ஆக்கப்படுகிறார்கள். தகுதியுடையவர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிற போது நான் இன்னொன்றையும் சொன்னால் நீங்கள் தடுப்பீர்கள். காரணம், இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் யாரை வேண்டுமானாலும் எம்.எல்.ஏ., பதவிக்குத் தகுதியுடையவர்கள் என்று கொண்டு வரலாம். யாரை வேண்டுமானாலும் மேலவை உறுப்பினர்களாக சட்டத் திருத்தத்தின் மூலம் கொண்டு வரலாம். அதை நான் ஆதரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். காரணம் இப்போது கொண்டு வந்திருக்கிறீர்களே இந்த டைரக்டரை சட்ட திருத்தத்தின் மூலம், அதே போல நேரு யுவகேந்திராவில் இருந்தவர்களை கொண்டு வந்திருக்கிறீர்களே சட்ட திருத்தத்தின் மூலம், ஆகவே, சட்டத்திற்கு உட்பட்டு யாரை வேண்டுமானாலும் கொண்டு வரலாம் குவாலிபைடாக இருந்தால் ; இல்லையென்று சொன்னால் அவர்களை குவாலிபைடாக்கி நாம் கொண்டு வரலாம். நாம் ஒரு அரசாங்கம் நடத்துகிறோம். அரசியல் சட்டம் இருக்கிறது. இந்த உறுப்பினர்களுடைய தகுதியை, தகுதியின்மையை, தகையாமையைப் பற்றி பேசுவதற்கு ஒரு அரசாங்கம் இருக்கிறது. அதற்கு சி.ஐ.டி.க்கள் இருக்கிறார்கள். ஒருவரை எம்.எல்.சி. ஆக்குகிற போது, எம்.எல்.ஏ., ஆக்குகிறபோது, அவர்கள் மஞ்சள் கடுதாசி கொடுத்தவர்களா, திவால் ஆனவர்களா.......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இன்றைக்கு அதிகமான சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொண்டாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அனுபவம் பெற்றவர்கள். பொது விவாதத்தில் பேசுவதைப் போல கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். தேவையற்ற விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருப்பதால் என்ன பலன் ? இங்கே இரண்டு பேர்களை நியமிக்க வேண்டும், ஒரு பட்டியலில் இணைப்பதா வேண்டாமா என்று சொல்ல வேண்டுமே தவிர, தெரிந்ததை யெல்லாம் சொல்வது என்றால் சரியாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களே இப்படி பேசினால் மற்றவர்கள் என்ன ஆவார்கள்?

திரு. அ. ரகுமான்கான் ; நம்முடைய நாவலர் அவர்கள் இப்படி பேசுகிறபோது எனக்கு வருத்தமாக இருக்கிறது. காரணம்......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற பட்டியலில் இரண்டு

பேரைச் சேர்க்கிறோம். வேண்டுமா? வேண்டாமா? சேர்க்க வேண்டும், சேர்க்க வேண்டாமென்று சொல்லுங்கள். எல்லோரையும் கொண்டு வந்து எம்.எல்.ஏ.-யாக, எம்.எல்.சி.-யாக ஆக்குவது என்பதல்ல. யாராவது ஆக விரும்பினால் அவர்களுக்குத் தடை இருக்கக்கூடாது என்பதே தவிர வேறல்ல. யுவ கேந்திராவிலிருந்து வருகிறவர்களையெல்லாம் எல்.எல்.ஏ. ஆக்க வேண்டும், எம்.எல்.சி. ஆக்க வேண்டும் என்பதற்கில்லை இந்தச் சட்டம். அப்படி யாராவது விரும்பினால் அவர்களுக்குத் தடையிருக்கக் கூடாது என்பது சட்டம், வேறில்லை. நாளைக்குப் பேசவேண்டியதையெல்லாம் இன்றைக்குப் பேசி விட்டால் அவை எதற்கும் நான் பதில் சொல்லப் போவதில்லை. நாளைக்கு தான் எடுத்துப் பேசப்போகிறார்கள். அப்படியிருக்கிறபோது இன்றைக்கே எதற்காகப் பேசுவானேன்?

(நண்பகல் 12-00)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் புகழ் பெற்றவர். 'குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி, கணமேயும் காத்தல் அரிது'. சபைக்குள்ளே அவர்கள் இவ்வளவு அதிகமாகக் கோபப்பட வேண்டியதில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எனக்கு வருத்தம் எல்லாம் கிடையாது. இருப்பது எல்லாம் நாளை மறுநாளுக்குள் 32 சட்ட முன்வடிவுகளை முடிக்க வேண்டும் என்று வருகிறபோது, தேவையில்லாமல், மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்களே என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. தேவையோடு பேசுங்கள். நான் பதில் சொல்வதற்கு கடமைப்பட்டு இருக்கிறேன். மேலவையிலே ஏற்பட்டது பற்றி, ஏற்கனவே நடந்த விவகாரங்கள், எல்லாவற்றையும் எடுத்து வைத்து, ஒருபொது விவாதமாக ஆக்குவது நல்லது அல்ல. அனுபவம் பெற்ற உறுப்பினர் இப்படிப் பேசுவது நல்லதல்ல என்றுதான் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தவறாக கருதிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நாவலர் அவர்கள் மன்னிக்க வேண்டும். பட்டியலிலே இரண்டு பேர்களை இணைக்கிறோம். மேலும் நேரு யுவகேந்திரா ஆகியவற்றிலே இருப்பவர்கள் அதைப்போலவே Director of the Tamil Nadu Backward Classes Economic Development Corporation (Private) Ltd. ஆகியவர்களை இந்தப் பட்டியலிலே இணைத்து எம்.எல்.ஏ. யாகவோ, எம்.எல்.சி யாகவோ ஆக்க வேண்டும் என்றால், அந்தப் பதவியிலே அவர்களுக்கு எந்த தடையும் கிடையாது. தகுதி உடையவர்கள், ஆகவே ஒத்துக் கொள்கிறீர்களா, இல்லையா

என்று சொல்லி, கற்பில் சிறந்தவள் கண்ணகியா, மாதவியா என்று பட்டி மன்றம் நடக்குமானால், நான் ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போக முடியும். ஆனால் அதே நேரத்தில் இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேசுகிறபோது, சில விளக்கங் களையும், இந்த Qualifications, disqualifications என்று சொல்லி விட்டு, நீங்கள் டிஸ்குவாலிபிகேசன் என்று தெரிந்தும்கூட சில காரியங்களைச் செய்கிறீர்கள், அந்தப் போக்கு கூடாது என்பதற்காக பெயரைச் சொல்லாமல், ஊரைச் சொல்லாமல், இந்தச் சட்டம் கொண்டு வருவதினுடைய நோக்கம் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறபோது, ஊர் விஷயங்களை எல்லாம், தேவை இல்லாததை எல்லாம் பேசுகிறாயே என்று கேட்டால், மேலவைக்கு உறுப்பினராக நியமிக்கப்படுகிறபோது, தகுதி பற்றித்தான் அங்கே வருகிறது. தகுதி இல்லாதவர்கள் மேலவைக்கு உறுப்பினராக ஒரு அரசாங்கம் சிபாரிசு செய்வது கூடாது, அல்லவா? ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் கண்டிக்காமல் வேறு எந்தச் சந்தர்ப் பத்தில் கண்டிப்பது. ஆனால் நீங்கள் தகுதி பற்றி பேசுகிறீர்கள், குவாலிபிகேஷன் பற்றி பேசுகிறீர்கள். இவர்களுக்கு எல்லாம் குவாலிபிகேஷன் அளிக்கப்படுகிறது பட்டியலிலே இணைக் கிறோம் என்று சொல்கிறீர்கள். எனவே நீங்கள் குவாலிபிகேஷனுக்கு சட்டம் கொண்டு வந்து விட்டு, டிஸ்குவாலிபிகேஷன் உள்ளவர்களை பொறுப்பிலே உட்கார வைக்கலாமா? இது தான் என் கேள்வி. ஆகையினாலே இதிலே கோபப்படுவதற்கு ஒன்றும் இல்லை. எனவே இந்தச் சட்டம், சட்டமன்ற உறுப்பினர்களாக, மேலவை உறுப்பினர்களாக, அவர்கள் ஆபிஸ் ஆப் பிராபிட்டிலே இருப்பவர்கள், மீண்டும் தகுதி பெறுகிறார்கள் என்று சொல்கிற நேரத்தில், சட்ட சபையை கலைத்து விட்டு, தகுதி உள்ளவர்களை உள்ளே அனுப்பி விட்டு—மேலவையை கலைத்து விட்டு, நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்து அவர்களை மேலவை உறுப்பினராக ஆக்குகிற வாய்ப்பை உருவாக்குகிறோம் என்று சொல்வீர் களானால், நாளைக்கு இந்தச் சட்டசபையை கலைத்துவிட்டு நீங்கள் வேறு காரியங்களில் ஈடுபடக் கூடிய நிலைமைகள் எல்லாம், ஏற்படும். காரணம் மேலவையைக் கலைக்கின்ற போக்கை நீங்கள் கடைப்பிடித்தால், ஒரு நாள் நீங்களும் கலைக்கப்படுகிற நிலைமை ஏற்படும் மக்களால் என்பதைச் சொல்லி அமர் கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யார் யார் உரிமை உள்ள வர்கள் என்பது சம்பந்தமாக ஏற்கனவே ஒரு பட்டியல் வைக்கப் பட்டு இருக்கிறது. அந்தப் பட்டியலோடு இப்போது 2 State Organising Committee என்று Nehru Yuvak Kendras அதே போன்று Director of the Tamil Nadu Backward Classes Economic Development Corporation (Private) Ltd. என்ற அந்த

1986 மே 13] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

ஸ்தாபனத்தினுடைய டைரக்டரையும் சேர்த்துக் கொள்ளப் படுகிறது. இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இன்று பல ஸ்தாபனங் களிலே அவர்கள் அதிகமான சம்பளத்தை பெறாமல் இருந்தாலும் கூட, டி.ஏ. என்றும் டி.ஏ. என்றும், ஹான ரோரியம் என்றும் சில இடங்களில் ஒரு அமைச்சருக்குக் கொடுப் பதைவிட அதிகமாக பிராபிட்டை வாங்கிக் கொண்டு, அவர்கள் இப்படிப்பட்ட இந்த விலக்குக்கு உட்பட்டு வருவது என்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பொறுத்த வரையில், அவர்கள், அவருடைய பணியின் காரணமாக அல்லது தொகுதி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற அந்த எண்ணத்திலே சில நேரங்களில் சில குழுக்களிலே உறுப்பினராக இருக்க வேண்டிய நிலை ஏற் படுகிறது. அந்த முறையில் உள்ள இடத்திலே டி.ஏ. என்றும், டி.ஏ. என்றும் வாங்குவது என்பது இன்றைக்குக் கூட நமக்குத் தெரியும். மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு மாதிரி உள்ள ஸ்தாபனங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அங்கே கூட்டங்களுக்கு செல்லக் கூடிய நேரத் தில், அதற்கான டி.ஏ. வாங்கப்படுகிறது. அல்லது டி.ஏ. வாங்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் சில ஸ்தாபனங்களிலே இன்று ஹானரோரியம் என்ற முறையிலே பணத்தைப் பெற்றுக் கொண்டு இருக்கக் கூடியவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வைத்துக் கொள்வது அனுமதிக்கக் கூடிய முறையில் நிலைமை களை அமைத்துக் கொள்வது சரியாக இருக்காது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே ஹரியானா மாநிலத்திலே ஆளும் கட்சிக் குள்ளே சில பிரச்சினைகள் ஏற்பட்ட நேரத்திலே எல்லோரை யுமே அமைச்சர்களாக மாற்றிக் கொள்வதற்கு முடியாததன் காரணமாக ஆளும் கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களுக்கெல்லாம், அமைச்சர்களுக்கு கிடைப்பது போல உள்ள வசதியையும் மற்ற ஏற்பாடுகளை யும் செய்வதற்கு என்று சில போர்டுகளையும், வாரியங்களை யும் அமைத்து அவர்களை அந்த இடங்களிலே தலைவர்களாக வும், டைரக்டர்களாகவும் வைக்கப்படும் ஒரு நிலை ஏற் பட்டது. ஆகவே, அந்த முறையிலே இன்று விஷயங்களை அமைத்துக் கொள்வதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. இன்று பொது வாழ்விலே மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் செயலாற்றக் கூடியவர்கள் பலர் இருக்கிறார் கள். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள்தான்; இந்த குழுவிலே இருந்து ஆக வேண்டுமென்று இல்லை ; சட்டமன்ற உறுப்பினர் ஒரு பதவி என்ற பொறுப்பிலே இருந்து செயல்பட வேண்டுமென்ற கொள்கைக்கு இணங்க இப்படிப்பட்ட ஸ்தா பனங்களிலே வேலை செய்யக் கூடியவர்கள் இன்று சட்டமன்ற உறுப்பினர்களாக வருவதற்கு தற்செயலாக சில காரணங்களால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம் ; ஆனால் நிரந்தரமாக

(ஜே. ஹேமச்சந்திரன்) [மே 13, 1986

இப்படிப்பட்ட ஸ்தாபனங்களிலே செயலாற்றக் கூடியவர்களை சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து பணியாற்றுவதற்கு அனுமதிக்கக் கூடிய ஒரு வழக்கம் நல்ல வழக்கமாக இருக்காது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையிலே இப்படிப்பட்ட ஸ்தாபனங்களிலே, அதாவது இங்கே குறிப்பிட்டிருக்கக் கூடிய ஒரு ஸ்தாபனம் Tamil Nadu Backward Classes Economic Development Corporation (Private) Ltd. என்று போடப் பட்டிருக்கிறது. பப்ளிக் லிமிடெட் ஸ்தாபனம் கூட அல்ல. பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தில் உறுப்பினராக இருக்கிறார் என்றால் நிச்சயமாக அங்கே அவருக்கு சில வசதிகளும் பிராபிட்களும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் உள்ளவர்களை இதிலே சேர்த்துக் கொள்வது சரியாக இருக்காது. அந்த முறையில், பிரச்சினையைப் பொறுத்த அளவிலே தெளிவான ஒரு பட்டியல், யார் யார் சட்டமன்ற உறுப்பினராக இருந்து எந்தெந்த ஸ்தாபனங்களில் இருந்து கொள்ளலாம் என்ற முறையில் வகுக்கப்பட வேண்டும்; அல்லது அந்தந்த நேரத்திலே இப்படி தேவைகளுக்கு ஏற்ற முறையில் இதைக் கொண்டு வருவது என்பது சில பிரச்சினைகளையும், சிரமங்களையும் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையும் என்று சொல்லி என்னுடைய கருத்தைக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய முக்கிய நோக்கத்தை நான் முதலிலேயே குறிப்பிட்டு கூறினேன். ஆகவே, ஏற்கனவே 1967 ஆவது ஆண்டு தமிழ் நாடு சட்டமன்ற தகவின்மை தடுத்தல் சட்டத்தின் கீழ் பல்வேறு பட்டியல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே பொது வாழ்க்கையில் இருப்பவர்களும் ஆதாயம் பெறுகின்ற சில பல பதவிகளுக்கு வருகின்றார்கள். ஆகவே முறைப்படி அதிகாரிகளாக வருகின்ற நிலைமை வேறு. பொது வாழ்க்கையிலே இருப்பவர்கள் சில ஆதாயம் பெறுகின்ற தகுதியைப் பார்க்கின்ற போது, தேர்தல் விதிமுறைகளுக்கு, அரசினுடைய ஆதாயம் பெறுகின்ற எந்தப் பதவியைப் பெறுவதாய் இருந்தாலும் சட்டமன்ற பேரவைக்கோ அல்லது மேலவைக்கோ உறுப்பினராக இருக்கக் கூடாது என்ற விதி இருக்கின்றதன் காரணமாக அந்தத் தகவின்மை தடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக இந்தச் சட்டம் இயற்றப்பட்டது. அதிலே ஏற்கனவே பட்டியல் இருக்கிறது. அந்தப் பட்டியலிலே ஆதாய பதவிகள் குறித்து கூட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அது தன்னுடைய அறிக்கையை ஏழாவது மக்கள் சபைக்கு அளித்தது. ஐந்தாவது அறிக்கையாக அளித்த அந்தப் பரிந்துரைகளினுடைய அடிப்படையிலேதான் இந்த நேரு இளைஞர் மையங்களுக்கான மாநில அமைப்புக் குழுவிலே உள்ள சில பதவிகளும், அவை போன்ற தமிழ்நாடு பிற்பட்டோர் வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டு

1986 மே 13] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

கூட்டுக் குழு நிறுவனத்தின் இயக்குநர் பதவியும் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டுமென்பதுதான் இந்தச் சட்ட முன்வடிவினுடைய முக்கிய நோக்கம் ஆகும். ஆக, பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் இப்படிப்பட்ட ஆதாயத்தை தரக் கூடிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்கின்றபோது இந்தத் தேர்தல் விதி சட்டத்தின்படி தடுப்பதன் காரணமாகத்தான் அதிலே நாம் இந்தத் தகவின்மை தடுத்தல் சட்டத்தைக்கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, இதை சட்டமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றும், அரசாங்கத்தினுடைய நிர்வாக ஆணையின் மூலமாக நிறைவேற்றப்படலாம் என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனால் Manual of Election Law-லே என்ன சொல்லப்படுகிறது என்று சொன்னால் 'if he holds any office of profit under the Government of India or Government of any state, specified in the first schedule, other than office declared by the Legislature of the state by law, not to disquaify this holder. என்று இருக்கிற காரணத்தாலும் சட்டமன்றம் தான் அதற்கு வேண்டிய வழிவகைகளை செய்யவேண்டும். ஆகவே தான் சட்டமன்றத்தின் மூலம் இவை கொண்டு வரப்படுகின்றன. ஆகவே எல்லோரும் இந்த பட்டியலில் இருப்பவர்கள் எல்லாம் எம்.எல்.ஏ. யாக ஆகித் தீரவேண்டும் என்றோ, எம்.எல்.சி.யாக ஆகித் தீரவேண்டும் என்றோ அல்ல. இதில் இருப்பவர்கள் யாராவது எம்.எல்.ஏ. ஆக, எம்.எல்.சி. யாக விரும்பினால் அவர்களுக்கு தடையாக இருக்கக்கூடாது என்பது தான் இந்தச் சட்டம்.

(பிற்பகல் 12—10.)

இன்றைக்கு இருக்கிற நிலைமைக்கு இந்தச் சட்டம், நாளை என்ன ஆகும் என்பதை நாளைக்குத்தான் கவனிக்க வேண்டும். இன்றைக்கு இருக்கிற சட்டப்படி இந்தச் சட்டம் வருகிறது. நாளைக்கு நிறைவேற்றப்படுகின்ற சட்டம் எந்த நிலையில் வரும், என்பதும் அது எப்போது அமலுக்கு வரும் என்பதையும் பொறுத்து இருக்கிறது. இதற்கு முன்னால் வருகிற பட்டியலுக்கு என்ன கதி வருகிறதோ அந்த கதி தான் இதற்கும் வரும். ஆக நாளைக்கு வரும் சட்டத்திற்கும், நாளைக்கு வருகிற தீர்மானத்திற்கும், இன்றைக்கு நிறைவேற்றப்படுகிற சட்டத்திற்கும் முரண்பாடோ எந்தத் தன்மையும் இல்லை. ஆகவே அப்போது கூட இதற்கு நிற்க விரும்பினாலும், அதற்கு நிற்க விரும்பினாலும் மேல் சபை இல்லாத போது நிற்க விருப்பம் இல்லாத, நிற்க இடமே இல்லாதபோது சட்டத்திலே இருந்தாலும் ஒன்றுதான், இல்லாமல் போனாலும் ஒன்று தான். அது பின்னால் கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணை தலைவர் அவர்களே நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இன்றைய நிலைக்கு இந்தச் சட்டம், நாளைய நிலைக்கு நாளைய சட்டம் என்று சொல்கிறார்கள். நான் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது மேலவை கலைக்கப்படும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்து விட்டு மேல்சபை உறுப்பினருக்கு தகுதி பற்றி பேசுவது காலையில் கல்யாணம், மாலையில்....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த காலை கல்யாணம் உதாரணம் எல்லாம் இதற்கு பொருந்தி வராது. காரணம் என்னவென்று கேட்டால் இந்தச் சட்டம் நாளைக்கு கூட இது இருக்கலாம். நாளைக்கு சட்டமன்றத்திலே உறுப்பினராக ஆக விரும்பினால், மேலவை உறுப்பினராக விரும்பினால் இந்த விதி தடையாக இருக்காது என்பது தான். மேலவை இல்லாத போது விருப்பத்திற்கும் இடம் இருக்கப் போவது இல்லை, ஆக யாரும் முயற்சி செய்ய போவது இல்லை, சட்டத்திலே இது இருக்கும். ஏற்கனவே 20, 28 பேருக்கு இருக்கிற விதிமுறைகள் இப்போதும் இருக்கும். இன்றைய நிலையில் நாம் சேர்க்கவில்லை என்று எடுத்துக்கொள்ளுங்கள். அப்போது திரு ரகுமான்கான், அவர்கள் எழுந்து கேட்பார், அந்த மேலவை என்ன ஆகியது மேலவையை ஏன் விட்டீர்கள், எதற்காக விட்டீர்கள், என்பதை எல்லாம் கேட்பார்கள். நாளைக்கு தீர்மானம் நிறைவேற்றினாலும் பாராளுமன்றம் அதை ஏற்றுக் கொண்டதற்கு பிறகு தான் இது நடைமுறைக்கு வரப்போகிறது. ஆகவே இவை எல்லாம் கவனிக்கப்படும்போது அப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம், வராது, ஆகவே அதற்கும், இதற்கும் முரண்பாடு இல்லை என்பதும், ஒரு இடத்திற்கு வசதி செய்து தருவது தானே தவிர இது கம்பல்சரி அல்ல. இதில் இருப்பவர்கள் எல்லாம் எம்.எல்.ஏ., எம்.எல்.சி. ஆக வேண்டும் என்பது அல்ல. 2 பேரை பட்டியலில் சேர்க்கிறோம், அந்தத் தன்மை தான் இது. ஆகவே இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி; "1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 26/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

1986 மே 13] (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(அஅ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1986) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்*''

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய்த் துறை வாரியம் கலைக்கப்பட்ட சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 36/1980 மூலம் வருவாய்த்துறை வாரியம் கலைக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ் நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி சட்டத்தில் தமிழ்நாடு சட்டம் 12/1966, 22 (1), 30, 32 (1) ஆம் பிரிவுகளின் கீழ் முன்னால் வருவாய்த் துறை வாரியம் கொண்டு இருந்த செயல் வரம்புக்கு பகுதி கொண்டு இருக்கவும், நிலைப்பெற்று இருந்த அதிகாரங்கள் செலுத்தவும், செய்து வந்த பணிகளை, செய்யவும் இந்தச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒரு அறிவிக்கை படிநிலச் சீர்திருத்த ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு 12 ஆம் சட்டத்தில் வருவாய்த்துறை வாரியம் நகர்ப்புற நிலவரி ஆணையர் என்ற குறிப்புகள் வரும் இடங்களில் எல்லாம் அவற்றை முறையே நிலச் சீர்திருத்த ஆணையாளர், நகர்ப்புற நில வரி இயக்குநர் என்று மாற்றம் செய்து, அது தற்போது அவசியம் என்று கருதப்படுகிறது. அதன் விளைவாக இந்தச் சட்டத்தில் வேறு சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று உத்தேசிக்

* 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு மேற்கண்ட நோக்கத்தை எய்த விழைகிறது. எனவே இந்தச் சட்ட முன்வடிவை ஏற்று, நிறைவேற்றித் தரும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தளநாயகர் அவர்களே, நம்முடைய நகர்ப்புற நிலவரி திருத்த சட்டமுன்வடிவின் மீது சில கருத்துக்களை குறிப்பிடலாம் என்று விழைகிறேன்.

நம்முடைய நகர்ப்புற நிலவரிச் சட்டத் திருத்தத்தின் மூலமாக நம்முடைய நகரங்களிலே தனியார் அறக்கட்டளைகள், பொது அறக் கட்டளைகள் மூலமாக பல்வேறு நிலங்களை, பல்வேறு இடங்களை அவர்களுடைய புழக்கத்திற்கு வைத்துக் கொண்டு, சரியான முறையிலே நிர்வகிக்கின்றார்களா என்பதை நல்லமுறையில் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நோக்கம் சிறப்பாக இருக்கிறதா? உபரி நிலத்தைத் தந்திருக்கிறார்களா? அப்படித் தந்திருந்தால், உபரி நிலங்கள் எவ்வளவு என்கின்ற புள்ளிவிவரங்களை நம்முடைய அரசு தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் பல்வேறு அறக் கட்டளைகள் செய்திருக்கின்ற சீர் திருத்தங்களையெல்லாம் தவிர்த்துவிட்டு, அந்த உபரி நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, நல்லமுறையில், நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு மாடிக் கட்டிடங்கள், 5 அடுக்கு 7 அடுக்கு மாடிக் கட்டிடங்களைக் கட்டி, அவர்கள் அப்பகுதிகளிலே சுகாதாரக் கேடுகளை விளைவிக்கின்றார்கள். எனவே உயர்ந்த நிலையை அடைய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்ற அடிப்படையில் பார்க்கிறபோது, அதனால் பயனுற்றவர்கள் அதிகமாக இருக்கிறார்களா என்று சொன்னால், இல்லை என்ற சூழ்நிலையைத் தான் நாம் பார்க்கிறோம். 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்பதற்கு ஒரு டெபனிஷன் சரியான முறையில் குறிப்பிடப்படவில்லை. அப்படி சரியான சட்டம் இல்லாத சூழ்நிலையில், நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் புஞ்சை நிலங்களில் ஆண்டுக்கு ஒரு முறை தான் விளைவிக்கிறார்கள். மீதமுள்ள 6 மாதங்களில் பயிரிடமுடியாத சூழ்நிலையில், விவசாய நிலம் இல்லை என்று சொல்லி, 'அர்பன் லாண்ட் டாக்ஸ்' என்று தனியாக வரி விதிக்கின்ற நிலையைத் தவிர்க்க வேண்டும்.

பல்வேறு இடங்களில் திடீர் திடீர் நகர்கள் அடிக்கடி எழும்புகின்றன. அதனால் அடையாற்றிலிருந்து மகாபலிபுரம், அமைந்தகரையிலிருந்து ஸ்ரீபெரும்புதூர், ஆலந்தூரிலிருந்து தாம்பரம் வரையில் உள்ள நிலங்களை அதிகமாக

எடுத்து, நிலங்களை உபரியாக விற்றுவிடுகிறார்கள். ஆகவே சென்னைப் பெருநகர்களில் உள்ளவர்கள் நிலங்களை வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நம்முடைய அரசும், அமைச்சர் பெருந்தகை அவர்களும் அறிவார்கள் மாநகராட்சி நிலங்களையும், பொதுப்பணித் துறை நிலங்களையும் செல்வந்தர்கள், பணக்காரர்கள், 99 ஆண்டு என்று லீஸ் எடுத்துக்கொண்டு, அதனால், மெரினாக் கடற்கரை, அண்ணா சாலை போன்ற பகுதிகளில் அந்த நிலங்களை எல்லாம் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை யெல்லாம், மீண்டும் அவர்களிடத்திலிருந்து எடுத்து, வீட்டுவசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் போன்ற அரசாங்க அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள முடியுமா ? அப்படி எடுத்துக்கொள்கின்ற ஒரு வாய்ப்பை, ஒரு கொள்கை அளவில், பாலிசி எடுத்து, அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பொது அறக்கட்டளைகள் மூலமாக பல்வேறு இடங்களை மடக்கி வைத்து இருக்கின்ற மிகப் பெரிய செல்வந்தர்கள், 10 ஏக்கர் உள்ள இடங்களில், சிறிய கட்டிடங்களாக கட்டி வைத்துக்கொண்டு, உல்லாச வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க முடியுமா ? அதைத் தகர்க்க இந்த அரசு முன்வருமா ?

எனக்குத் தெரிந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை குரோம்பேட்டையில் 10, 15 ஏக்கர் நிலங்களை சொந்தமாக வைத்துக்கொண்டு, அதிலே சவுக்குத் தோப்பு வைத்துக்கொண்டு, 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்று அந்த நிலத்திற்கு வருகின்றபோது, சில அதிகாரிகளே கூட, அதற்காக ஒரு ட்ரஸ்ட் வைத்துக்கொள்ளுங்கள், விதி விலக்கு கொடுத்து விடலாம் என்ற ஓர் ஓட்டையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று சொல்லி, நகர்ப்புற வாய்ப்பிலே எல்லா நகரங்களிலும், திடீர் நகர் என்று உருவாகி, அதனால் விளையும் கேடுகளைத் தவிர்க்கவும், செல்வந்தர்களின் பிடியிலிருந்து நகர்ப்பு சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று நினைவுப் படுத்தி, அதற்கான அறிவிப்பை அமைச்சர் பெருந்தகை அவர்கள் விளக்க வேண்டுமென்று கூறி, இந்த திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன்.

(பிற்பகல் 12.20)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்பு மிகு உறுப்பினர் பாரதி அவர்கள் குறிப்பிட்டது போல, இன்று நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையில், பலர் 'டிரஸ்ட்டுகள்'

என்ற பெயரில் இடங்களை பினாமியாகக் கையிலே வைத்துக் கொண்டு காரியங்களை நடத்திச் செல்வதற்குள்ள முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ஏற்கனவே ரெவின்யு போர்டு ஒழிக்கப்பட்டது என்றாலும் அதற்குப் பிறகு அந்தப் பொறுப்பிலே வந்திருக்கிற அதிகாரிகள் என்னென்ன முறைகளில் நடவடிக்கை எடுத்து நவற்றை எல்லாம் தடுக்க வேண்டுமோ அந்த முறைமில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இன்றுகூட நமக்குத் தெரியும்—பல இடங்களில் 'ரியல் எஸ்டேட்ஸ்' என்ற பெயரில் இடங்களை, 100 ஏக்கர், 200 ஏக்கர் 300 ஏக்கர் என்ற முறையில் வாங்கி அதை பிளாட் டாகப் போட்டு விற்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி, அதன் வழி யாகவும், நகரங்களிலே உள்ள நிலங்களைப் பொறுத்தவரையில், என்ன என்ன முறையிலே அது ஏழை மக்களுக்குச் செல்ல உரிமை உண்டோ அதை தடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக் கப்படுகின்றன.

'லேண்ட் சீலிங் ஆக்ட்டைப்' பொறுத்தவரையில் இன் றைக்கு அந்தச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு கொடுக்கக் கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அவையிலே கூட இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு விஷயம் பேசப்பட்டது. திருச்சி நகரத்தில் எப்படி, வி.ஜி.பி. கம்பெனி 1,000 ஏக்கர் நிலத்தை அங்கே உள்ள ரெவின்யூ அதி காரிகளை சுவாதீனப்படுத்தி தங்களுடைய தேவைக்காக பல ஆட்கள் பெயரில் பினாமி பட்டா போட்டு, வாங்கி, இன்று அவர்கள் தங்களுடைய இடமாக மாற்றிக்கொள்ளக்கூடிய அப் படிப்பட்ட நடவடிக்கைகள் நகரங்களைப் பொறுத்தவரையில் நடந்துகொண்டிருக்கின்றன. இதைச் சொல்லக்கூடிய நேரத்தில் இன்னும் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

அதாவது, இன்று 'அப்பார்ட்மென்ட்ஸ்' என்ற முறையில் நகரத்தில் ஒரு இடத்திலேயே 3 மாடிகள், 4 மாடிகள், 8 மாடிகள் கட்டிடத்தைக் கட்டி, அது விற்கப்படுகிறது. ஆனால், அந்த இடங்களை வாங்கக்கூடியவர்களுக்கு பட்டா இல்லாது அல்லது அது தங்களுக்குச் சொந்தமானது என்ற முறையில் சொந்தம் கொண்டாட முடியாத நிலை இருந்து கொண்டிருப்பதன் காரண மாக, அவர்களுக்கு அந்த இடத்தை வைத்துக்கொண்டு, வங்கி களில் லோன் வாங்க முடியாத நிலை இருக்கிறது.

ஆகவே, 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்ற முறையில், இந்தப் பிரச்சினைகளைப் பார்க்கிறபோது, இப்படி மக்களுக்கு, நகர்ப்புறங்களிலே உள்ள மக்களைப் பொறுத்தவரையில் அதுவும் சின்ன இடங்களைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் 'கிளியரான பட்டா இல்லாததன் காரணமாகவும், முறையான ரிக்கார்டு இல்லாததன் காரணமாகவும், அவர்களுக்கு பல பிரச் சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1986 மே 13) [திரு ஜே. ஹேமச்சந்திரன்]

அந்த முறையிலே ஒரு வேளை இந்த ரெவின்யூ போர்டு ஒழிக்கப்பட்டதற்குப் பிறகு, இன்றைக்கு அந்த 'டைரக்டர்' என்ற போஸ்ட்டும், கமிஷனர் ஆஃப் லேண்ட் ரிபார்ம்ஸ்' என்ற முறையில் உள்ள போஸ்ட்டும் இல்லாத காரணத்தால்தான் அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டுவிட்டதா என்று தெரியவில்லை. ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று 'லேண்ட் ரிபார்ம்ஸைப்' பொறுத்த வரையில், கமிஷனர் ஆஃப் லேண்ட் ரிபார்ம்ஸ் என்ற ஆபிசர் போடப்பட்டு இருக்கிறார். அந்த லேண்ட் ரிபார்ம்ஸ் சம்பந்தமாக இன்றைக்கு எடுக்கப்பட்டு இருக்கிற நடவடிக்கைகள் மிகவும் கம்மியாக இருக்கிறது. லேண்ட் ரிபார்ம்ஸைப் பொறுத்த வரையில், என்னென்ன முறையில்—மிக முக்கியமாக நிலத்தைப் பொறுத்த வரையில் இன்று அதிலே, soil to the tiller என்ற முறையில் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு என்ன என்னமுறையில் உள்ள 'லேண்ட் ரிபார்ம்ஸ்' இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டுமோ, அந்த முறையில் லேண்ட் ரிபார்ம்ஸ் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. அந்த முறையில் இந்த லேண்ட் ரிபார்ம்ஸை ஏற்படுத்தும் வகையில், இந்த ஆபிசர்களுடைய வேலைகளை அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, லேண்ட் ரிபார்ம்ஸைப் பொறுத்தவரையில் இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், பல இடங்களிலே பட்டா வழங்கப்படுகிறது என்று விளம்பரம் செய்யப்படுகிறதே தவிர, ஆனால் யதார்த்த நிலையில் பார்த்தால் அந்த விவசாயிகளுக்கு பட்டா போய்ச் சேராத நிலைமை இருக்கிறது. விழாக்களில் பத்து பேர்களுக்கு பட்டாக்களைக் கொடுத்துவிட்டு, மீதியுள்ளவர்களை பிறகு அலுவலகத்தில் வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அலுவலகத்திற்குப் போகும் நேரத்தில் பட்டா கொடுக்கப்படாமல் இழுத்தடிக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இன்று பல இடங்களில் அதுவும் குறிப்பாக வீடுகட்டும் திட்டத்தின் கீழ் அவர்கள் வீடு கட்டுவதற்கு லோன்வாங்குவதற்காகச் செல்லக் கூடிய நேரத்தில், இந்த நிலத்தினுடைய சொந்தக்காரர் என்று காட்டுவதற்கு அந்த அத்தாட்சி தேவைப்படுகிறது. அந்த அத்தாட்சி இல்லாததால் காலா காலத்திலே அது கொடுக்கப்படாததால் இன்று மக்களுக்கு அதுவும் குறிப்பாக நடுத்தர மக்களுக்கும், ஏழைமக்களுக்கும் பல பிரச்சனைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நிலத்தைப் பொறுத்தவரையில் உடைமை என்று கொண்டாடத் தகுந்த அளவிற்கு என்னென்ன சட்டப் பாதுகாப்புகள் கொடுக்கப்பட வேண்டுமோ, என்னென்ன நடைமுறைப் பாதுகாப்புகளைக் கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே நகர்ப்புற நிலவரிச் சட்டத்திலே இருக்கின்ற சிலபல தன்மைகளையும், குறைபாடுகளையும், அதில் செய்யப்பட வேண்டியவைகளையும் பற்றிச் சொன்னார்கள். அது தனியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்தச் சட்ட முன் வடிவினுடைய நோக்கம், ஏற்கனவே வாரியமாக இருந்து செய்த பணிகளை இப்பொழுது சிறப்பு ஆணையர்கள் ஏற்றுச் செய்கின்றார்கள். 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தில் வாரியம் வாரியம் என்று வருகின்றது. ஆக அந்த இடத்தில் ஆணையர் ஆணையர் என்று மாற்றுவதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். ஆகவே, அந்த வகையில் எங்கெங்கு ஆணையர் என்று வருகிறதோ, ஆணையாளர் என்று வருகின்ற இடத்தில் அதற்கு மாறாக—வாரியம் என்று வருகின்ற இடத்தில் ஆணையாளர் என்றும் மற்றைய இடங்களில் அதை மாற்றி மாற்றி அமைக்க வேண்டுமென்றும், ஆணையாளர் என்ற சொல்லுக்குப் பதிலாக இயக்குநர் என்ற ஒரு சொல்லையும், வாரியம் என்று வருகின்ற இடத்திலே—ஆணையாளர் என்று வருகின்ற இடத்தில், என்ற சொல்லுக்குப் பதிலாக இயக்குநர் என்ற சொல்லும், ''அதன்'' என்று வருகின்ற இடத்தில் ''அவருடைய'' என்றும், ''அதாகவே'' என்னும் இடத்தில் ''அவராகவே'' என்றும் இப்படிப்பட்ட முறையில் இந்த வாரியம் என்ற சொல்லை எடுத்து விட்டு ஆணையாளர் என்ற சொல்லையும், இயக்குநர் என்ற சொல்லையும்—அப்படி இயக்குநர் என்ற சொல்லச் செய்வது தான் இதன் முக்கிய நோக்கம். ஆகவே, இந்த நோக்கத்தோடு கொண்டுவரப்படுகிறதே தவிர, மற்றைய குறிப்புகளைப் பற்றியெல்லாம் தனியாக, விவாதித்து அதுபற்றித் தனி முடிவெடுக்க வேண்டும். ஆகவே, இந்தப் பெயர் மாற்றம் மட்டும்தான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்று சொல்லி, இதை மட்டும் நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(1986 மே 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆஆ) புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (த விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

(பிற்பகல் 12—30)

1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 32/84) இல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதும், அவ்வட்டவணையில் பின்னர் ஓர் அறிவிக்கை மூலம் சேர்க்கப்பட்டுள்ளதுமான பகுதி களில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்களுக்கு, 30—6—1984 உடன் முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்கோ, அல்லது அதற்கு முந்தைய எந்தவொரு விளைச்சல் ஆண்டுக்கோ, செலுத்தத்தக்க குத்தகையை செலுத்தாமைக்காக நிலத்திலிருந்து வெளி யேற்றப்படாமல் 15—1—1985 (இந்நாள் உட்பட) பாதுகாப்பு அளிக்கப்பட்டது. பயிரிடு குத்தகைதாரர்கள், நிலச் சொந்தக் காரருக்கோ அல்லது பொதுப் பொறுப்புக் கழகத்திற்கோ செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி கணிசமான அளவு நிலுவை யாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வறட்சி நிலவியதாலும், இதனைத் தொடர்ந்து வெள்ள

**1986 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1986 மே 13

மேற்பட்டதாலும், சேர்ந்து வந்த நிலுவைத் தொகைகளை ஒட்டு மொத்தமாக செலுத்துவது பயிரிடு குத்தகைதாரர்களுக்கு இடர்ப்பாடாக அமையும். 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் சில பகுதிகள் பெரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நில வெளியேற்றத்தினின்று பாதுகாப்பளிப்பது தொடர்பாக தனியொரு சட்டமியற்ற அரசு முடிவு செய்துள்ளது.

1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 32/84) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதும் பின்னர் அவ்வட்டவணையில் ஓர் அறிவிக்கை மூலம் சேர்க்கப்பட்டுள்ளதும், 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தவிர, ஏனைய பகுதிகளில், உள்ள பயிரிடு குத்தகைதாரர்களுக்கு 30–6–1985 வரை நிலுவையிலுள்ள குத்தகையை செலுத்துவதில் அவகாசம் அளிப்பதன் மூலம் நிவாரணம் அளிக்க அரசு தீர்மானித்துள்ளது. குத்தகை நிலுவை கீழ்க்கண்டவாறு செலுத்தப்படத் தக்கதாகும்:—

(1) 30–9–1986 அன்று அல்லது அதற்கு முன்பு முதல் தவணை.

(2) 31–3–1987 அன்று அல்லது அதற்கு முன்பு இரண்டாவது தவணை.

(3) 30–9–1987 அன்று அல்லது அதற்கு முன்பு மூன்றாவது தவணை.

(4) 31–3–1988 அன்று அல்லது அதற்கு முன்பு நான்காவது தவணை.

(5) 30–9–1988 அன்று அல்லது அதற்கு முன்பு ஐந்தாவது தவணை.

30–6–1985 அன்றுடன் முடிவடையும் விளைச்சல் ஆண்டிற்கும் முந்தைய விளைச்சல் ஆண்டு யாதொன்றுக்கும் குத்தகை நிலுவை செலுத்தாததற்காக 1–7–1984 அன்று அல்லது அதற்குப் பின்னரும் செய்யக் கருதியுள்ள சட்டம் வெளியிடப்படும் நாளுக்கு முன்னதாகவும், நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்களுக்கு சுவாதீனத்தை மீட்டுக் கொடுக்கவும் கருதப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது. எனவே, இச்சட்டமுடிவை நிறைவேற்றித் தருமாறு அவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசும் பொழுது அடுத்து வருகின்ற சட்டமுன்வடிவு பற்றியும் சேர்த்து கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அதுவும் இதே போன்ற சட்டமுன்வடிவுதான்.

தி. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, பயிரிடும் குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கக் கூடிய குத்தகை நீடிப்பு மசோதாவையும் தமிழ் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பெய்த மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, குத்தகை நீடிப்பு மசோதாவையும் வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

தமிழகத்தில், குறிப்பாக, 1977 ஆம் ஆண்டு கடுமையான புயல் அடித்தது. அந்தப் புயல் சேதாரத்தால் தஞ்சை மாவட்டம் முழுமையாகப் பாதிக்கப்பட்டது, அதே போல், 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மழையால், தஞ்சை மாவட்டத்தில் பெரும் பகுதி இடங்களுக்கு, குறிப்பாக, திருத்துறைப்பூண்டி தாலுக்கா, மன்னார்குடி தாலுகா போன்ற இடங்களில், 15 தினங்கள், 20 தினங்கள் யாரும் கிராமங்களுக்குச் செல்லமுடியாத நிலைமைக்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

1985 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 தினங்கள் விடாத மழையால் தமிழகத்தின் பெரும் பகுதி பாதிக்கப்பட்டிருந்தது. இப்படி அதற்கிடையில் 1979–80 ஆம் ஆண்டு கடுமையான வறட்சியால் விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டது. இதற்கு முன்பு தி.மு.க. ஆட்சியில் 1973-ம் ஆண்டும், அதற்குப் பிறகும் கடுமையான வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு 5-ல் 1 தவணையை ஒரே நேரத்தில் கட்டினால் மீதி 4 தவணைகள் தள்ளுபடி செய்யப்பட்டதாக அறிவித்தார்கள். ஆனால் ஒரே தடவையில் கட்டமுடியாத பெரும் பகுதி விவசாயிகள் அந்த காலம் கடந்துவிட்டதால் அந்த குத்தகை பாக்கி இன்றைக்கும் அவர்கள் பெயரிலே இருந்து கொண்டு வருகிறது. அதற்கு பிறகு 1977 புயலுக்கு பிறகு, 1983 டிசம்பரில் கடுமையான மழை பெய்து வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றபோது, 5-ல் 1 பகுதி தவணையை குத்தகை கட்டினால் மீதி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த ஒரு தவணையும் கூட கட்டுவதற்கு முன்னால் கட்டியிருந்து, மீதியை பின்னால் கட்டினால் கூட சேர்த்துக்கொள்ளப்படும் என்ற இந்த அடிப்படையில் தள்ளுபடி செய்தார்கள். பெரும்பகுதி விவசாயிகள் அதனால் பலன் அடைந்தது உண்டு. ஆனால் குத்தகை விவசாயிகளைப் பொறுத்த வரையிலும் இன்னொரு பக்கம் நிலச் சொந்தக்காரர்களுக்கு அல்லது மடம், கோயில்களுக்கு நெல் அளிக்க வேண்டிய ஒரு

(திரு. பொ. உத்திராபதி) [1986 மே 13

கட்டாயம் இருக்கிறது. இன்னொரு பக்கம் கூட்டுறவு கடன் வாங்கியிருந்தால், அந்தக் கடன் கட்டாயமாக இந்த பாதிப்பில் கட்ட முடியும் என்று சொன்னால் இன்றைக்கு ரூ. 5,000 கடன் வாங்கிய ஒரு சிறிய விவசாயி, வட்டி 10,000, 15,000 என்று பெருகி அது ஒரு பக்கம் குத்தகை விவசாயிகளை இன்றைக்கு பாதித்துக்கொண்டு இருக்கிறது, ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த குத்தகை விவசாயிகள் பிரச்னையில் ஒரு நிரந்தரமான தீர்வை காண்பதற்கு நடவடிக்கை எடுத்தால் தான் இதில் ஒரு நிரந்தர தீர்வு காணமுடியும். இந்த புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இந்த குறிப்பேட்டில் கூட ஒரு இடத்தில் குறிப் பிடப்பட்டு இருக்கிறது. ''இச்சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்னர் உட்பிரிவு (1)-இல் குறிப்பிடப்பட்ட குத்தகை பாக்கியை வசூலிப்பதற்காக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையைப் பொறுத்தமட்டில், பயிரிடு குத்தகைதாரர் ஒருவர், (1) உட் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு தவணைத் தொகை யைச் செலுத்தத் தவறினால், செலுத்தத் தவறிய தவணைத் தொகையைப் பொறுத்தமட்டில், நீதிமன்றத் தீர்ப்பாணை பெற்றவர் அதனை நிறைவேற்ற உரிமை உடையவராவார்'' என்று இதிலே ஒரு ஆபத்தான அம்சம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இடத்தை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்பு கிறேன். ஆகவே இன்றைக்கு தமிழகத்தில் இந்த குத்தகை விவசாயிகளுடைய பாக்கியை வசூலிப்பதற்கு நீதி மன்றம் திறக்கப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நீதி மன்றம் திறப்பதற்கு நாம் அனுமதி அளித்தால் தமிழகத்தில் இன்றைக்கு உண்மையிலேயே உணவை உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகள் பெரும்பகுதி பேர்கள் நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூடிய அபாயம் இருக்கிறது. நிலத்தை விட்டு வெளியேற்றிய பிறகு அவர்களை பாதுகாப்பதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளியேற்றிவிட்டால் சாதா ரண விவசாயிகள் மீண்டும் அவர்கள் நீதி மன்றத்திற்கு சென்று, அவர்கள் நெல் அளித்ததற்கான நிரூபணம் செய்து, அதற்கு பிறகு நிலத்தை கொடுப்பது என்பது முடியாத காரியமாக விவ சாயிகள் மத்தியில் ஒரு அவல நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கொள்கை அளவிலே எற்றுக் கொண்டு இருக்கிறார்கள். குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தை சொந்தமாக்குவோம் என்று சென்ற சட்டமன்ற தொடரில் கூட அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்லுகின்றபோது, இந்த அரசு கொள்கையளவில் குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தை சொந்தமாக்கும் என்று இந்த சட்டமன்றத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

இந்தச் சட்டசபைக்கு வருவதற்கு முன்னால், அதாவது 1977-க்கு முன்னால் இந்தத் தேர்தல் காலத்தில் வாக்குறுதி

1986 மே 13] [திரு பொ. உத்திராபதி]

அளிக்கிறபோது, ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கேரள மாதிரி தமிழக விவசாயிகளுக்கும் நிலத்தைச் சொந்தமாக்குவோம்'' என்று சொன்னீர்கள். குத்தகை விவசாயிகளைப் பொறுத்த வரையில் இன்னொன்றும் அரசின் தரப்பிலே சொல்லப் படுகிறது. இன்றைக்கு பெரிய வசதி படைத்தவர்களின் நிலங் கள், அதாவது கோவில் நிலங்கள், மட நிலங்கள், தனியார் நிலங்கள் ஆகியவற்றை எல்லாம் பினாமியாகப் பிரித்து, பிரித்து வைத்து கொண்டு மொத்தமாகச் சாகுபடி செய்கிறார்களே அவர் களுக்கும் நிலத்தைச் சொந்தமாக்க முடியுமா என்று கேட்கி றார்கள். நேற்று கூட இங்கே நமது நிதியமைச்சர் அவர்கள் தமிழகத்திலே பல இடங்களில் பெரிய வசதி படைத்தவர்கள் எல்லாம் கூட கிஸ்தி கட்டாமல் இருக்கிறார்களே அவர் களுக்கும் கூடவா உதவி கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். நாங்கள் சொல்வது எல்லாம் அப்படி பினாமியாக சட்டத்தை ஏமாற்றி ஆயிரம் ஏக்கர், 500 ஏக்கர் என்று பிரித்து வைத்து குத்தகை விவசாயம் செய்வார்களேயானால் அந்த நிலத்தை எடுத்து நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அப்படிச் சட்டம், கொண்டு வந்தால் நிச்சயமாக நாங்கள் அந்தச் சட்டத்தை வர வேற்போம்.

ஆனால் ஒரு குடும்பம் என்பது 5 பேர் கொண்டது. ஆகவே அப்படி ஒரு குடும்பம் 5 ஏக்கரோ, 7 ஏக்கரோ அல்லது மிகத் தரக்குறைவான நிலம் 10 ஏக்கரோ வைத்திருந்தால் அந்த நிலத்தை நம்பி வாழக்கூடிய குத்தகை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்கவேண்டும். அப்படி சொந்தமாக்கினால் தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். இல்லை என்றால் இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்ற நிலைமையில் சட்ட மன்றத்தில் ஒவ்வொரு தடவையும் இப்படி காலத்தை நீட்டித்துக் கொண்டு போவது என்பது விவசாயிகள் மேலும், மேலும் கஷ்டப்படக்கூடிய நிலைமையைத்தான் ஏற்படுத்தும். இப்படி நீட்டித்துக்கொண்டு போவதால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்பதோடு, சின்னஞ்சிறு மிராசுதாரர்களின் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் உரிய முடிவினை எடுக்கவேண்டும். எல்லா விவசாயச் சங்கத்தினரையும் அழைத்து வைத்துப் பேசி இந்தப் பிரச்சினையை நிரந்தரமான வகையில் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே, அந்த அடிப் படையில் இந்தக் குத்தகை விவசாயிகளுக்கு ஒரு முழுமையான பாதுகாப்பு கொடுத்து அந்த விவசாயிகளை நிரந்தரமாக நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புயலாலும், வெள்ளத்தாலும், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, வேதாரண்யம், நாகப்பட்டினம் போன்ற கடலோரப் பகுதிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக திருத்துறைப்பூண்டி தாலுக்கா, முத்துப்பேட்டை தாலுக்கா, போன்றவை புயலால பாதிக்கப்பட்டவை என்று முன்பு அறிவிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த மழையிலேயும் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஆகியவை முழுமையாக பாதிக்கப்பட்டது என்று சர்க்காரே அறிவித்திருக்கிறது. ஆனால் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் குறிப்பில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருத்துறைப்பூண்டி வட்டம் எந்தக்காரணத்தாலோ விடப்பட்டிருககிறது. அது குறித்த ஒரு திருத்தத்தையும் நான் கொடுத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனமாகப் பார்த்து திருத்துறைப்பூண்டியையும் தஞ்சை மாவட்டத்திற்கென்று உள்ள பட்டியலில் இணைக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடத்திலே கேட்டு ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு 30-9-1988 வரையிலும் 5 தவணை அளிப்பதற்கு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி 5 தவணை என்பது இல்லாமல் ஒட்டு மொத்தமாகக் கணக்கெடுத்து ஒரே தவணையாக நெல்லை அளந்துவிட்டால் போதும் என்ற வகையில் ஒரே தவணை கொடுத்தால் தான் விவசாயிகளைப்பாதுகாக்க முடியும் என்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

*THIRU T. VENKATA REDDY: Mr. Temporary Chairman Sir, I would like to place some of my suggestions on behalf of the Congress party.

With regard to Bills (L.A.Bill Nos. 37 and 38/1986) I feel that they have come in a hurry. While coming forward with the Bills, the Government have committed some mistakes in the Bills. All the affected persons under natural calamities like flood, drought and cyclone have to be included under these Bills. There are many places where the people were affected due to acute shortage of water, drought, etc. Consequently, the crops have failed considerably even though they have invested a lot of money They are therefore not able to pay rents even for two years. Even though the crops in certain places were good subsequently, still they are not able to pay the rents. So such tenants must be included in the Relief Act itself I find in the Relief Act, eviction clause has been introduced. If a tenant fails to pay one instalment, he is liable to be evicted. Such a provision is a very stringent clause so far as the tenants are concerned.

Another point I would like to submit is that if a man suffers due to natural calamities, he has to withstand the impact of the natural calamities and the loss thereby for another five years. Therefore, he may not be able to pay any instalment even if the next crop is good. So, such persons have to be protected and given relief. Even in the Debt Relief Act. where a person who has borrowed money from the Landlord or money lender is given relief and the entire debt is wipedoff. Similarly a man who has lent money foregoes the amount. Similarly because of natural calamities like drought, cyclone, etc. relief has to be given to the tenants who has sufferred a lot due to continuous and endless natural calamities.

In the case of such persons, the entire amount of rent has to be wiped off. The Government should not collect the rent from such tenants. If it is collected, the Landlord will come with a petition for eviction for non-payment of arrears.

The other submission is that these Bills should be brought on a permanent statute like Tenants Protection Act. Because we find every two or three years the natural calamities like drought or flood or cyclone is coming and affecting the farmers. No tenant is free from such natural calamities. Therefore, instead of bringing in such a legislation quite often, the legislations should be made permanent and also the time of the Assembly can be avoided. There are many Relief Acts enacted on permanent basis by both the Central and State Governments. So, here also such an Act can be brought on a permanent statute and giving of temporary reliefs can be dispensed with.

The other aspect is that these Acts must be made applicable throughout Tamil Nadu and there should not be any enumeration of villages as given in the Schedule, because enumeration will be misleading. Many of the tenants in villages who are affected by drought, flood, cyclone, etc., will be eliminated. The Collectors when approached for their aid, would say that they would not consider their request because it was not included in the Schedule. The Collectors or the Revenue Divisional Officers should have their discretion to decide the matter of giving relief to the tenant depending upon the circumstances.

With these words. I request the Government to issue a suitable amendment to the provisions in the Bills so that permanent relief can be given to all the tenants affected by natural calamities.

Thank you.

[1986 மே 13

(பிற்பகல் 12–50)

திரு டி. ஆர். வெங்கடரமணன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி விதித் துறைகள்) சட்ட முன் வடிவின் கீழ் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் எழுகிறபொது, இந்தச் சட்டம் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயன் தருகிறது என்று சொல்லி, அதிலே திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தையெல்லாம் சேர்த்திருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால் இந்தச் சட்டமானது, 'It is a cruel joke on the farmers' என்று சொல்லலாம். ஏனென்றால் சென்னையை ஒட்டியுள்ள சில பகுதிகளில் இன்றைக்கு வெள்ளம் வந்திருந்தாலும்கூட, தெற்குப் பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளம் வந்தால்தான் நாங்கள் சட்டத்தில் பலன் தருகிறோம் என்றால், நான் சொன்னதைப்போல அது 'It is a cruel Joke' இருந்தாலும்கூட அந்தச் சட்டத்தினுடைய நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு திருத்தங்களை நான் கொடுக்க இருக்கிறேன். அவற்றை மட்டும் இங்கே விளக்கு வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். ''மன்னவன் எவ்வழி மன்னுயிர் என்று சொல்லுகிற ஒரு பழமொழி இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னால் இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட தமிழ்நாடு தேர்வாணைக் குழு அறிக்கையில் மாணவர்கள் செய்த தவறுகள் Howlers made by students in the Examination என்று அத்தனை தவறுகளையும் அதிலே குறிப்பிடிருந்தார்கள். பத்திரிகைகள் எல்லாம் கூட பக்கம் பக்கமாக அவற்றையெல்லாம் எழுதி மாணவர்கள் இவ்வளவு தவறுகளை செய்திருந்தார்கள் என்று வேடிக்கையாகப் போட்டிருந்தார்கள். நான் கேட்டுக்கொள்வ தெல்லாம் இன்றைக்கு நீங்கள் ஒரு சட்டம் கொண்டு வந்திருக் யறீர்கள். இந்தச் சட்டம் பற்றிய குறிப்பை தமிழிலும், ஆங்கிலத் திலும் தந்திருக்கிறீர்கள். இதில் தமிழக அரசினுடைய ஆளுகைக் குட்பட்ட தென்காசி மற்றும் செங்கோட்டை தாலுக்காக்களின் கிராமங்களின் பெயர்களை நீங்கள் தந்திருக்கிறீர்கள். உங்களுடைய ஆளுகைக்குட்பட்ட தாலுகாக்களின் கிராமங்கள் பெயர்களை நீங்கள் சரியாக அச்சிட்டிருக்கிறீர்களா? சிலவற்றை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். நெட்டூர் என்பதை நேட்டூராகவும், பாட்டப்பத்து என்பதை பட்டாபது என்பதாகவும், மத்தளம் பாறையை மத்தலம்பாறை என்றும், திப்பணம்பட்டியை திப்பனாம் பட்டி என்றும் திருச்சிற்றம்பலத்தை திருச்சிட்ரம்பலம் என்றும்.....

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே அச்சுப்பிழை என்பது வேறு, கருத்துப் பிழை என்பது வேறு.

அச்சுப் பிழையைத் திருத்திக் கொள்ளலாம். அதில் மாறுபாடு இல்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாற்றுத் தலைவர் அவர்களே, கீழப்பாலூரை கேலப்பாலூர் என்றும், நேலை பொத்தை என்ற கிராமத்தை தென்போதை என்றும் போட்டிருக்கிறார்கள். ஏதோ அந்த ஊர்க்காரர்கள் எல்லாம் எப்போதும் மது மயக்கத்தில் இருப்பவர்கள் என்று எண்ணக்கூடிய அளவில் அதைப் போட்டிருக்கிறார்கள். அடுத்து பலபொழி என்ற கிராமத்தை பண்போலி என்றும், ஆயிரப்பேரி என்பதை ஆயிரபேரை என்றும், இலஞ்சி என்ற அழகான பெயரை. . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்கான திருத்தம் வந்திருக்கிறது. அந்தத் திருத்தத்தையும் சேர்த்து பார்த்தால் நல்லது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : அந்தத் திருத்தத்தை நான் தான் கொடுத்திருக்கிறேன். இலஞ்சி என்ற அருமையான கிராமத்தை இரஞ்சி என்று செய்து ஏதோ அந்த ஊர்க்காரர்கள் பிச்சையெடுத்துக்கொண்டிருப்பதைப் போல போட்டிருக்கிறார்கள். அதைப்போல மாறாந்தை என்பதற்கு மரந்தை என்றும், செங்கோட்டை வட்டத்தில் புளியரை என்ற இனிமையான பெயரை உடைய கிராமத்தை புலியரை என்று எல்லோரும் பயப்படுகிற அளவில் அச்சடித்து இருக்கிறார்கள். எதற்காக சொல்கிறேன் என்றால் நாம் போடுகிற சட்டங்கள் தமிழிலே இருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, தமிழ்ப் பெயர்களை தவறாக எழுதினால், ஏதோ சொல்வார்களே அப்பா அடித்தால் அம்மாவிடம் சொல்லலாம், அம்மா அடித்தால் தெய்வத்திடம் சொல்லலாம், தெய்வமே அடித்தால் யாரிடம் போய் சொல்வது என்பதைப் போல, நீங்களே நம்முடைய ஆளுகையில் இருக்கிற கிராமங்களின் பெயர்களை எல்லாம் தவறாக எழுதுவீர்களானால், நாளைக்கு இந்தச்சட்ட முன்வடிவு சட்டமாக்கப்படுமானால், புளியரையில் இருக்கிற நபர், இது புலியரைக்குத்தான் பொருந்தும், புளியரைக்குப் பொருந்தாது என்று ஹைகோர்ட்டில் ரிட் போட்டால் நாம் போட்ட சட்டம் என்ன ஆவது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இது தவறாக அமைக்கப்பட வேண்டுமென்றோ, பெயர்களை மாற்றியமைக்க வேண்டுமென்றோ, அந்த எண்ணத்தில் செய்யப்பட்டவைகளாக இருக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். பிரிண்டர்ஸ் டெவில் என்று இதற்குப் பெயர். ஆகவே அச்சுப்பிழையின் காரணமாக இது ஏற்பட்டிருக்கக் கூடும். ஏராளமான பிரதிகள் அச்சடிக்கிற போது கவனக்குறைவால் ஏற்பட்டிருக்கக் கூடும். இப்படிப்

பட்ட குறைகள ஏற்படாமல் எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ள லாம். இந்தத் தவறுகள் இருக்கவேண்டுமென்று நினைத்து செய்யப்பட்டவை அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும்.

திரு. டி. ஆர். வேங்கட மணன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இவைகளை யாரும் வேண்டுமென்று செய்யமாட்டார்கள். வேண்டுமென்று செய்தால் அது விபரீதமாகிவிடும். கவனக் குறைவால் செய்திருக்கிறார்கள். ஒரு சட்டத்தைப் போடுகிற போது எவ்வளவு கவனமாக, உன்னிப்பாக, கடமையுணர்வோடு இருக்க வேண்டும் என்பதை உணர வேண்டும். இந்தச் சட்டத்தில் தென்காசி தாலுகாவை மட்டும் பார்க்கிற போது இப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது. அதைப்போல் இதனை சர்குலேட் செய்தபோது பல உறுப்பினர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். அவர்களுடைய பகுதிகளிலும் ஊர்கள் பெயர்கள் தவறுதலாக இருக்கின்றன என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை). தவறுகளைத் திருத்துவதற்குத்தான் இந்த விவாதம். ஆகவே அதையே சொல்லிக் கொண்டிருக்காதிர்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மற்ற உறுப்பினர்களும் இதுபற்றி என்னிடம் சொன்னார்கள். ஆகவே இரண்டாவது அமென்ட்மென்டை கொடுத்திருக்கிறேன். இந்த ஊர்களின் பெயர் தமிழில் தான் தவறாக இருக்கிறதென்றால். ஆங்கிலத்திலும் தவறு இருக்கிறது. ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிற இரண்டு கிராமங்களுடைய பெயர்களும் தப்பாக அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. அது பிரிண்டர்ஸ் டெவில் அல்ல. ஆங்கிலத்தில் இருந்து தமிழிலே எழுதுகின்றபோது, ஏற்பட்ட கவனக் குறைவால் ஏற்பட்ட பிழை. அதை பிரிண்ட்டர்ஸ் டெவில் என்று கண்டிப்பாக நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். சட்ட முன்வடிவைத் தயாரிக்கின்றவர்கள கவனக்குறைவாக இருந்தார்கள். இந்தச் சட்ட முன்வடிவைச் செய்தவர்கள் அந்த ஊர் பெயர் என்ன, கிராமங்களுடைய பெயர் என்ன? என்பதை கவனிக்காமல் செய்தார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், சட்டத்தைத் தயாரிக்கின்றவர்கள் கவனமாகச் செயல்படவேண்டும். சட்ட முன்வடிவைச் செய்கிறவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். அவர்கள் செயல்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே அதற்கு மாற்றாகத்தான் இன்னொரு சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறேன். ஆகவே ஒவ்வொரு கிராமத்தினுடைய பெயரையும் மீண்டும் மீண்டும் நாம் இந்த அவையிலே கொண்டு வந்து, இங்கே திருத்திக் கொண்டு இருந்தால், அது ஒரு கேலிக்கு உரிய

[திரு. டி. ஆர். வேங்கடரம்மணன்] 1986 மே 13]

விஷயமாக ஆகிவிடும் என்ற காரணத்தாலேதான் இந்தச் சட்டத்திலே 14-வது ஏ என்ற விதியை நான் சேர்த்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில் உள்ள பெயர்கள் தவறாக எழுதப்பட்டு இருக்கிறதோ அதை அவர்கள் ஒரு நோட்டிபிகேஷன் அல்லது அரசு ஆணையின் மூலமாக அவற்றை திருத்தி, அவ்வாறு திருத்தப்பட்ட ஆணையினை இந்த மன்றத்திலே, மன்றம் நடந்து கொண்டு இருந்தால் 7 நாட்களுக்குள்ளாக வைக்க வேண்டும், அல்லது நடைபெறாமல் இருக்கிறபோது, திருத்தப்பட்டவைகளை எல்லாம் மன்றம் கூடிய நாளிலிருந்து 7 நாட்களுக்குள்ளாக இந்த மன்றத்திலே வைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தான் சொல்லி இருக்கிறேன். எனவே இதைக் கேலி செய்யவேண்டும் என்றோ, அல்லது குற்றம் சொல்லவேண்டும் என்றோ, சொல்லவில்லை. செய்கின்றவற்றை ஒழுங்காகச் செய்யவில்லை, சரியாகச் செய்யவில்லை, செய்யவேண்டிய பொறுப்பிலே உள்ள அதிகாரிகள் அல்லது அது யாராக இருந்தாலும் சரி, அவர்கள் சரியாக நடந்து கொள்ள வில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான் சொல்கிறேன். என்னுடைய தென்காசி தாலுக்காவைப் பொறுத்துத்தான் எனக்குத் தெரியும். தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு கிராமத்தின் பெயரையும் யாருமே தெரிந்து வைத்திருக்க முடியாது. ஆகவே அரசில் உள்ளவர்கள் இவைகளைத் தெரிந்து வைத்திருக்கவேண்டும். ஏன் என்றால் இந்த புரப்போசல்கள் எல்லாம் கீழே இருந்துதான் வருகின்றன. எனவே திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் என்று இப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தான் இந்த புரப்போசல்களை அரசுக்கு அனுப்புகிறார்கள். அந்த புரப்போசல்களினுடைய அடிப்படையிலேதான் சட்டங்கள் செய்யப்படுகின்றன. நீங்கள் செய்யவேண்டியது அவற்றைச் சரி பார்க்க வேண்டும். அவைகளுக்கு நீங்கள் இன்டெக்ஸ் வைத்திருக்க வேண்டும். அந்த இன்டெக்சோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்து இருக்க வேண்டும். அவ்வாறு பார்க்காமல் இந்த அவைக்கு வந்ததே தவறு. மாணவர்கள் படித்துவிட்டு வந்து பரிட்சையில் தவறு செய்தால், அவர்களை நாம் கேலி செய்வது உண்டு. எனவே நாம் அவற்றைக் கேலி செய்யும் போது, நாளைக்கு நம்மை ஒருவர் கேலி செய்யக்கூடாது. நம்மை ஒருவர் கேலி பேசக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடுதான் நல்ல எண்ணத்தோடுதான், நல்ல கருத்தோடு தான், நான் மீண்டும் இதை வலியுறுத்துகிறேன். ஆகவே நான் கொடுத்திருக்கக்கூடிய இரண்டு திருத்தங்கள், ஒன்று, இந்த தவறான பெயர்களை எல்லாம் சரியான பெயர்களாக மாற்றி கொடுத்திருக்கிறேன். நேற்றைக்கே நான் கொடுத்துவிட்டேன். ஆகவே அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக அந்தத் துறையோடு தொடர்பு கொண்டு நான் கொடுத்துள்ள பெயர்கள் சரிதான், என்பதை அவர்கள் இதற்குள்ளாக கண்டுபிடித்து இருப்பார்கள் என்று

நம்புகிறேன். ஆகவே இந்த தீர்மானத்தை அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அதைப்போன்று, பெயர்களில் எல்லாம், பல தவறுகள் பல தாலுக்காக்களைப் பொறுத்து இருக்கின்ற காரணத்தால், அதற்கு ஒவ்வொரு தடவையும் சட்டத்தைத் திருத்துவதற்கு சட்டமன்றத்திற்கு நாம் வரவேண்டும் என்று சொன்னால், அது சரியாக வராது. இந்தச் சட்டத்திலே 14, 15 செக்சன்கள்தான் இருக்கின்றன. 3 பக்கத்திலே சட்டம் இருக்கிறது. அதற்கு 30 பக்கத்திலே செட்யூல் போட்டிருக்கிறார்கள். சுண்டைக் காய் கால் பணம் சுமைக்கூலி முக்கால் பணம் என்று சொல்வார்களே, அதைப்போல சட்டம் 3 பக்கம், செட்யூல் 30 பக்கம் என்று போட்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு செட்யூலையும், திருத்திக் கொண்டு இருந்தால், அதற்கு நாம் 15 சட்டங்களைப் போட வேண்டிய நிலைமை இருக்கிறது. நமக்கு நேரம் கிடையாது. அதற்காக சரியான பெயர்களை எல்லாம் கண்டுக் கொண்டு இருக்க முடியாது. ஆகவே அந்தத் தவறுகளைத் திருத்துகின்ற வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுக்கின்ற திருத்தத்தை இந்த மன்றத்திலே வைப்பது தான் சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்ற காரணத்தால், இரண்டாவதாக கொடுத்திருக்கின்ற அந்த திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை எல்லாம், இன்று விவசாயிகள் எல்லாம் கோர்ட்டுக்கு அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். விளைய வில்லை என்றால் முழுமையாகத்தள்ளுபடி செய்யுங்கள். விளைந்துவிட்டால், உடனடியாகக் கொடுக்கச் சொல்லுங்கள். அதைப் பகுதி பகுதியாக கொடுக்க வேண்டும் என்று சொல்கிறபோது, நான் வழக்கறிஞராக இருந்தபோது, இதுபோன்ற வழக்குகளிலே ஏற்படுகின்ற பணச் செலவிலே, கொடுக்க வேண்டிய பணத்தை விட விவசாயிகள், பாவம், அதிகமான பணத்தை இழந்திருக்கிறார்கள். அதேபோன்று நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குச் சென்று கொண்டு இருக்கிறார்கள். எனவே இதுபோன்ற சட்டங்களை நீங்கள் இயற்றுகிறபோது, ஒரு தொலை நோக்குப் பார்வையோடு, ஒரு தூரப்பார்வையோடு, சரியான முறையிலே நீங்கள் மக்களுக்கு நன்மை பயக்கின்ற சட்டமாக இயற்ற வேண்டும் என்று சொல்லி, இந்த தீர்மானத்தை வலியுறுத்துகிறேன் என்று சொல்லி, அமர்கிறேன்.

*திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டு இருக்கக்கூடிய தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் சட்ட முன்வடிவு, 37/1986, மற்றும் அதைத் தொடர்ந்து வந்திருக்கக்கூடிய தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி களிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் சட்ட முன்வடிவு 38/1986

1986 மே 13] [திரு. கோ. வீரய்யன்]

ஆகிய இரண்டு சட்டங்களைப் பொறுத்து நான் சொல்லவேண்டிய கருத்துக்களை உங்களுக்கு முன்னாலே இந்த அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகின்றன்.

(பிற்பகல் 1–00.)

இந்த இரண்டு சட்டங்கள் கொண்டு வந்திருப்பதினுடைய நோக்கங்கள் இதிலே விளக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக இந்த முதல் சட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கக் கூடிய அந்த விவசாயிகளுக்கு வெள்ளத்தாலும் மற்ற பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு, 5 தவணைகளில் 1986 செப்டம்பரில் துவங்கி 1988 செப்டம்பர் முடிய, 5 சம தவணைகளில், அவர்கள் இதுவரையில் இருக்கக்கூடிய பாக்கிகளை திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற அந்த ஒரு சந்தர்ப்பத்தையும், அதே போல் குத்தகை பாக்கிக்காக வெளியேற்றப்பட்டாலும் அந்த குத்தகைதாரர்கள் மீண்டும் நிலம் பெறுவதற்கு ஒரு சாத்தியமும் இன்னொரு சட்டத்தில் அளிக்கப்பட்டு இப்படி இரண்டு சட்டங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இந்த இரண்டு சட்டமும் இந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் ஏதோ புதிதாக கொண்டு வரக்கூடிய ஒன்று அல்ல. ஏறத்தாழ 1980 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இப்படி வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வும், மற்ற பகுதிகளுக்கு ஒரு தற்காலிகமான தீர்வும் என்ற முறையில் ஒவ்வொரு ஆண்டும் 1980, 1981, 1982, 1983 என்று ஒவ்வொரு ஆண்டும் இயற்கையினால் பாதிப்பு ஏற்பட்டு, ஏற்பட்டு ஒத்தி வைத்து, ஒத்தி வைத்து ஒரு தொடர்ச்சியாக தொடர்ந்து நீட்டித்துக் கொண்டு போகக்கூடிய ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இப்படியே சென்ற ஆண்டும் இதேபோல் கோரினோம். சென்ற ஆண்டு ஏற்பட்ட பாதிப்புக்கு 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள் முதல் தவணை கட்டினால் போதும் என்று சென்ற ஆண்டு திருத்தினோம். இந்த ஆண்டு 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள் முதல் தவணை கொடுத்தால் போதும் என்று இந்த ஆண்டு திருத்துகிறோம். இப்படியே 1980-லிருந்து திருத்திக் கொண்டு வருகிறோமே தவிர இந்தப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

எனவே கிட்டத்தட்ட 1971 ஆம் ஆண்டு ஆரம்பித்து 16 ஆண்டு காலமாக வறட்சியாலும், புயலாலும், வெள்ளத்தாலும் இப்படி தொடர்ச்சியாக இந்த குத்தகைதாரர்கள் பாதிக்கப்பட்டு வரக்கூடிய நிலைமை நீடித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சேர்ந்து, சேர்ந்து அந்த வெள்ளத்தாலும், புயலாலும், பாதிக்கப்பட்டு இழந்த அந்த விவசாயிகள் மீண்

1986 மே 13] (திரு. கோ. வீரய்யன்)

டும் தங்கள் குத்தகைகளை பாக்கியாக கொடுக்க வேண்டும் என்றும், இழப்பு ஏற்பட்டதை அந்த பாக்கியாகக் கருதி திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி அவர்கள் தலையில் சுமத்தி தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இந்தச் சட்டத்தை நாம் நீட்டித்துக் கொண்டு போகிறோம். இப்படி 16 ஆண்டு காலமாக ஏற்பட்டு இருக்கக்கூடிய இந்த பாதிப்பு தொடர்ந்து அந்த விவசாயிகள் தலையில் சுமத்தப்படுகின்றன. எனவே தான் இதற்கு பிறகாவது ஒரு நிரந்தர தீர்வு காணுவதற்கான முயற்சியில் அரசு யோசிக்க வேண்டும். இந்த விவசாயிகள் பிரச்சினை இப்படி. நாம் 1980-ல் இந்த சட்டத்தை நிறை வேற்றியதின் விளைவாக குத்தகை விவசாயிகளுக்கும் பாதுகாப்பு இல்லை, குத்தகை விவசாயிகளையும் திருப்திப்படுத்த முடிய வில்லை. அவர்களுக்கு நிவாரணம் இல்லை. கொஞ்சம் நிலம் வைத்து இருக்கக்கூடிய நிலச்சொந்தக்காரர்களுக்கும் நிவா ரணம் இல்லை, பாதுகாப்பு இல்லை. அல்லது கோவில்களுக் கும், மடங்களுக்கும் வசூல் இல்லை. எனவே எந்த தரப்புக் கும் திருப்திப்படுத்தாத, எந்த தரப்புக்கும் உதவி செய்யாத, எந்த தரப்புக்கும் நிவாரணம் அளிக்காத முறையில் தான் நம் முடைய இந்தச் சட்டம் நீட்டிப்பது என்பது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. எனவே இந்தச் சட்ட திருத் தத்தை நாம் நிறைவேற்றும் போது முன்னால் 1971 ஆம் ஆண்டு இதே அவையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பதை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அன்றைக்கு அவர்கள் அமைச்சராக இருந்து நிறைவேற்றப்பட்ட சட்டம். நடப்பு பசலிக்கான குத்தகையை அந்த விவசாயிகள் செலுத்திவிட்டார்கள். ஆனால் அதற்கு முன்னால் உள்ள பாக்கிகள் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று நிறைவேற்றப்பட்டது. அப்படி 1971-ல் இருந்து 1986 வரை நீட்டிக்கப்பட்டு இருக்கக்கூடிய இந்த குத் தகை பாக்கிகளுக்கு ஒரு நிரந்தர தீர்வு காணவேண்டுமானால் 1986–87 ஆம் ஆண்டுக்கான குத்தகையினை 75 சதவிகிதம் : 25 சதவிகிதம் என்ற அடிப்படையில் அந்த குத்தகை விவசாயி கள் அந்த நிலச்சொந்தக்காரர்களுக்கு, கோவில்களுக்கு, தனி யார்களுக்கு அல்லது டிரஸ்டுகளுக்கு இந்த நடப்பு பசலிக்குரிய குத்தகையை 75 : 25 என்று சட்டப்படி அவர்கள் செலுத்தி விடுவார்களானால் பழைய பாக்கிகள் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்ற முறையில் அதற்கு தீர்வு காண வேண்டும். இப்படி ஒரு தீர்வு காண்பதால் அந்த நிலச் சொந்தக்காரர்கள் கூட இந்த ஆண்டு குத்தகை நமக்கு கிடைத்துவிட்டால் போதும் பழைய பாக்கிக்கான பணம் கிடைக்கவில்லை என்றால் கூட பரவாயில்லை என்ற உணர்வில் அவர்கள் இருக்கிறார்கள். எனவே ஒத்திப் போடுவதால் இந்த ஆண்டு 4 கலம் கிடைப்பதும் கிடைக்காமல் போய்விடுகிறது என்ற நிலையில்தான் அவர் கள் கருதுகிறார்கள். எனவே தான் நடப்பு பசலியினுடைய குத்தகையை 25% அடிப்படையில் அந்த வகையில் அவர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு குத்தகையை சரிப்படுத்தி பழைய

(திரு. கோ. வீரய்யன்) [1986 மே 13

பாக்கி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்ற முறையில் சட்டத்தைத் திருத்துவதன் மூலமாகத்தான் இந்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண முடியுமே தவிர அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய பிரச்சினை தீருமே தவிர அது இல்லாமல் இப்படி நீட்டித்துக் கொண்டே போவது சரியல்ல. எனவே ஒவ்வொரு ஆண்டும் இயற்கை பாதிப்புகள் வருகின்றன. அப்படி இயற்கை பாதிப்பு வருகிறது என்று சொல்லி, அதில் எவ்வளவு கண்டுமுதலாகிறது, அதில் 75, 25 என்ற அடிப்படையில் களத்து மேட்டிலேயே அந்த விவசாயிகள் 75-ம் நிலச்சொந்தக்காரர்கள் 25-ம் எடுத்துக்கொள்ளவேண்டும். முழுவதுமாக பாதிக்கப்பட்டிருந்தால், முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற முறையிலே தீர்வு காணப்படுவது தான் அதிலே ஒரு நிரந்தரமான நிலைமையை ஏற்படுத்த முடியும். இரு தரப்பினருக்கும் நியாயம் வழங்கியதாக இருக்க முடியும். அந்த வகையில் முழுமையாக ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதேபோல் இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது பற்றி அறிவிக்கப்பட்டதில் திருவாரூர், கொடவாசல் வருவாய் வட்டம் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருந்தும், இப்போது அதிலே சில கிராமங்கள் மட்டும் அறிவிக்கப்படாது இருப்பது சரியல்ல. அந்த இரண்டு வட்டங்களில் முழுமையாக பாதிக்கப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பது கலெக்டர் அவர்களாலே டிசம்பரிலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சில பகுதிகள் சேர்க்கப்படவில்லை. நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கிராமத்தைச் சுற்றியிருக்கக்கூடிய கிராமங்கள் முழுவதும் பாதிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மையத்தில் இருக்கின்ற ஒரு கிராமம் பாதிக்கப்படாத ஒரு நிலைமையில் வருகிறது. இது எப்படி? அந்த ஊரைச் சுற்றியுள்ள கிராமங்கள் முழுவதும் வெள்ளத்தால், பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, சித்தரடி என்ற கிராமம் மட்டும் விடப்பட்டிருக்கிறது. இது வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு தெரியும். சித்தரடி என்ற கிராமம் இதிலே பாதிக்கப்படவில்லை என்று இது வருகிறது.

ஆடிப்புலியூர், பிரதாபராமபுரம், சிறுகளத்தூர், வடவேறு என்ற சுற்றியிருக்கக்கூடிய கிராமங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய கிராமங்களாக இருக்கின்றன. இடையிலே ஒரு கிராமம் பாதிக்கப்படாத கிராமம் என்றிருக்கிறது. இப்படியெல்லாம் பார்த்து விட்டு வருவது சரியல்ல. திருவாரூர் வெள்ளத்தால் முழுவதும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். கொடவாசல் பகுதியும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி

யாகும். எனவே கொடவாசல், திருவாரூர் தாலுக்காக்களை பாதிக்கப்பட்ட பகுதி தாலுக்காக்களாக அறிவிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு குத்தகை பாக்கிகளைப் பொறுத்தவரையில், ஒரு நிரந்தரமான முடிவிற்குக் கொண்டு வந்து, அந்த விவசாயிகளை அந்தக் கடன் சுமையிலிருந்து விடுவிப்பதற்கும், நிலச் சொந்தக்காரர்களுக்கு, ஒரு ஆண்டு என்ன நடந்தாலும், அதிலே கிடைக்க வேண்டிய 25 சத வீதம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் இந்தச் சட்டத்திற்கு முழுமையாக ஒரு சட்டத் திருத்தத் தைக் கொண்டு வந்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமே தவிர, ஒவ்வொரு ஆண்டும் நீட்டித்துக்கொண்டு போகக் கூடிய ஒரு தொடர் கதையாக இல்லாமல், அதற்கு முடிவு கட்டவேண்டு மென்ற முறையிலே அரசு சிந்திக்கவேண்டுமென்று கேட்டு முடிக்கி றேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று: அதிலே இருக்கின்ற குறைபாடுகளை உங்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இங்கே தொடர்ந்து வெள்ளம், புயல், வறட்சி மாறி மாறி விவசாயிகளை வதைத்துக் கொண்டிருக்கின்ற காலக்கட்டத் தில், நீங்கள் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிகளை கூட்டிக்கொண்டே, வருகிறீர்கள். அதை வசூலிப்பதை ஒத்திப்போட்டுக்கொண்டே வருகிறீர்கள். கூட்டுறவுச் சங்கக் கடன்களாக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக ஒத்தி வைத்து பின்னர் வசூலிப்பதும், அதேபோன்று நில வரியாக இருந்தா லும், ஒட்டுமொத்தமாக கூட்டி வைத்து ஒத்திப் போட்டு வசூ லிப்பதும் குத்தகை பாக்கியாக இருந்தாலும், ஒட்டுமொத்த மாக ஒத்திப் போட்டு வசூலிப்பதும், இப்படி நம்முடைய அரசாங்கம் ஒத்தி அரசாங்கமாக இருந்துகொண்டேயிருக்கிறது. பொது மக்களைப் பொறுத்தவரையிலும் மிகவும் சிரமப்படக் கூடிய ஒரு காலக் கட்டத்தில் இந்த அரசு தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் குத்தகை பாக்கியை வசூலிக்க வேண்டுமென்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத் திற்குள் நீங்கள் வசூல் செய்யுங்கள். இல்லையென்று சொன் னால், தள்ளுபடி செய்துவிடுங்கள். இல்லையென்று சொன் னால், ஒரு ஆண்டு ஒத்திப்போட்டதற்குப் பின்னால், அதனால் எந்த வகையில் ஈடுகட்டமுடியும்? என்று எண்ணிப் பாருங்கள். ஒரு அண்டுக்கால இழப்பின் காரணமாக நீங்கள் ஒத்திவைக் கிறீர்கள். அந்த வகையில் அவர்கள் இழப்பை ஈடு செய்வதற்கு என்ன வழிவகைகள் இருக்கின்றன? இப்படி எல்லா காலங் களிலும் தொடர்ந்து, வறட்சி, வெள்ளம், புயல் மாறி மாறி வந்துகொண்டிருக்கிற காலத்திலே, நீங்கள் ஒத்திவைப்பது மிக்

வும் துன்பங்களை அதிகமாக்கும். எல்லா வகைகளிலும், நில வரியாக இருந்தாலும், கூட்டுறவுச் சங்கக் கடன்களாக இருந்தாலும், குத்தகை பாக்கிகளாக இருந்தாலும், இப்படி ஒரு ஒட்டுமொத்தமாக ஒத்திவைத்து, விவசாயிகளின் தலையிலே சுமையை வைப்பது, மிகச் சிறு விவசாயிகளுக்கு தொந்தரவுகளையும் தொடர்ந்து அனுபவிக்க வேண்டி வழி செய்திருக்கிறீர்கள் என்பதாக நான் மெத்த வருத்தத்தோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே வசூலிப்பதில் கூட ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். 30.9-க்குள் வசூல் செய்வதிலே நீங்கள் சேர்த்திருக்கிறீர்கள். மார்ச் மாதமும் வசூல் செய்கிறார்கள். பின்னர் செப்டம்பர் மாதமும் வசூலிக்கிறார்கள். மார்ச் மாதம், செப்டம்பர் மாதம் இந்த இரண்டு மாதங்களின் இடையிலே விவசாயிகள் பாக்கித் தொகையைக் கொடுப்பதற்கு என்னவழி இருக்கிறது? செப்டம்பர் மாதத்தில் கடுமையான வறட்சி இருக்கக் கூடிய காலம். சாகுபடி செய்துகொண்டிருக்கக் கூடிய இந்தக் காலத்தில் விவசாயக் கடனை திருப்பிக் கட்டமுடியுமா என்பதை இந்த அரசு எண்ணிப் பார்த்ததா? மார்ச் மாதம் கூட பரவாயில்லை. ஆனால் செப்டம்பர் என்று வைத்திருப்பதை தள்ளி வைத்து, அக்டோபர் அல்லது நவம்பர் மாதம் என்று அதை ஒத்தி வைத்தால், ஓரளவு குறுவை சாகுபடியில் ஏதாவது ஈடுகட்டமுடியும். எனவே 30.9. என்பதை, அக்டோபர் மாதக் கடைசியில் அல்லது நவம்பர் மாதத் தொடக்க காலமாக மாற்றி அமைத்தால், வசூலிப்பதில் கொஞ்சம் சுலபமாக இருக்கும். எனவே இவற்றையெல்லாம்விட, எல்லா குத்தகை பாக்கிகளையும் தள்ளுபடி செய்துவிட்டு, உடனடியாக ஆண்டுக்காண்டு வசூலிப்பதைக் கடைப்பிடித்தால் குத்தகைச் சுமை இருக்காது.

(பிற்பகல் 1-10)

சிறு நிலச் சுவான்தார்களுக்கும் நிவாரணம் கிடைக்கமுடியும். வீரய்யன் அவர்கள் பேசியது போல, எல்லா குத்தகைச சீட்டையும் ரத்துச் செய்துவிட்டு, ஒரு ஆண்டுக்கு என்ன விளைச்சல் இருக்கிறதோ அந்த விளைச்சலில், களத்து மேட்டில் பங்கிட்டுக்கொள்வதற்கு, விவசாயிகளும், நிலச்சுவான்தார்களும் பங்கிட்டுக்கொள்வதற்கு ஒரு வழியை இந்த அரசு கடைப்பிடித்தால் இப்படி ஒத்திப்போடுவதும் விவாதிப்பதும், சட்டத்திருத்தம் கொண்டு வருவதுமான ஒரு நிலை இல்லாமல் போய்விடும். எனவே இந்த அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அப்படி இல்லையெனில், உழைக்கின்ற விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தம் ஆக்குவதற்காவது அரசு முயற்சிக்க

வேண்டும். காரணம், தொடர்ந்து நிலம் வைத்து இருக்றார்கள், சாகுபடியாளர்கள், குத்தகைதாரர்கள் நிலத்தை வைத்து இருக்றார்க. நிலச் சொந்தக்காரர்கள் குத்தகைக்கு விட்டு இருக்கிறார்கள். குத்தகைதாரர்கள் அவர்களிடத்தில் விளையாததன் காரணமாக எந்தவிதமான வருமானமும் கொடுக்கமுடியவில்லை. அப்படி கொடுக்கமுடியவில்லை என்றால், நிலச்சுவான்தார்களிடம் நாம் வாய்தா கேட்கிறோம் கிஸ்தி வசூலிக்க வேண்டும் என்று கேட்கிறோம். நில வரி கேட்கிறோம். வீட்டு வரி கேட்கிறோம். இப்படிப்பட்ட வரி வசூல்கள் எல்லாம், நிலம் வைத்து இருக்கிறவர்கள், சாதாரணமாக 4 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கிற நில உடைமையாளர்கள் எந்த வகையிலே அரசுக்கு செலுத்தவேண்டிய கிஸ்தி, பாக்கிகளை செலுத்தமுடியும் என்பதை அரசு எண்ணிப் பார்த்து இருக்கிறதா? அப்படி எண்ணிப்பார்த்தது என்றால், விவசாயிகள், குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் கொடுப்பதைப் போல், 1 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கிற சாதாரண நில உடைமையாளர்களுக்கு, ஏழையாக இருக்கிற நிலச் சொந்தக்காரர்களுக்கு என்ன நிவாரணம் இந்த அரசு அளிக்க இருக்கிறது. எனவே, இந்த அரசு அதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குக் கூட, பள்ளியிலே படிக்க வைப்பதற்கும், குழந்தைகளை வளர்ப்பதற்கும் கூட எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் விதவையாக இருக்கக்கூடியவர்கள் ஒரு ஏக்கர் குத்தகை எடுத்துவிட்டால் அவர்களிடத்திலே வழி இல்லாமல் இருக்கிறது. எனவே, அரசு பரிசீலித்து அப்படிப்பட்ட விதவைகளுக்கும், மைனராக இருக்கிற குழந்தைகளுக்கும், ஓய்வு பெற்ற அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள், 1 ஏக்கர் அல்லது 2 ஏக்கர் வைத்துக் கொண்டு இருக்கிறவர்கள் ஏதாவது நிலங்களை மீண்டும் அவர்கள் பெறுவதற்கான வழிவகைகளைக் காண அரசு ஆராயவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகைதாரர்களுக்கு நிலத்தைக் கொடுத்துவிட்டு, வேறு அவர்கள் 'காம்பன்சேஷன்' நஷ்ட ஈடு வாங்கிக் கொடுக்கவாவது, அரசு ஆராய்ந்தால்தான் நிலச்சுவான்தார்களாக இருக்கும் சிறுநில சொந்தக்காரர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் நிவாரணம் கிடைக்க முடியுமே தவிர, ஒத்தி வைப்பதில் இந்த அரசு காட்டுகிற அக்கறையை நிதானமாக பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே அரசு ஆராய்ந்து பரிசீலித்துப் பார்த்து முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

*திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, நமது அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்

கிற இந்த இரண்டு மசோதாவையும் நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஏழை குத்தகைதாரர்களுக்கு ஆதரவானது இந்த மசோதா.

தென்னாற்காடு, தஞ்சாவூர், வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் பெய்த அளவுக்கு திருநெல்வேலியிலே மழை கிடையாது. இருந்தபோதிலும் கூட, குத்தகைதாரர்களையும், விவசாயிகளையும் கெடுக்கக்கூடிய அளவில் மழை பெய்தது. காலத்திலே அறுவடை நடைபெறவேண்டும். அந்த நேரம் பார்த்து அறுவடை செய்யவிடாமல் மழை பெய்து, அறுவடையும் செய்ய முடியவில்லை. பயிர்களுக்குள்ளே தண்ணீர் நிற்கக்கூடிய அளவுக்கு மழை பெய்தது. அறுவடையும் ஒரு மாத காலமாகத் தாமதம். நெல் முளைத்துப் போய் விட்டது. வைக்கோலும் கொண்டு வரமுடியவில்லை. அந்த அளவுக்கு பல கஷ்டங்கள், தொல்லைகள் குத்தகைதாரர்களுக்கும், விவசாயிகளுக்கும் கொடுத்தது.

கால்மேனி தான் போனது. குத்தகைதாரர்கள் எங்கே கட்டுக் குத்தகை கொடுக்க முடியும்? அங்கே விவசாயிகள் கஷ்டப்பட்டார்கள். இருந்தாலும் நிலச்சுவான்தார்கள் விடுவார்களா விவசாயிகளை, குத்தகைதாரர்களைக் கஷ்டப்படுத்தி எப்படியாவது வாங்கவேண்டும் என்று பார்க்கிறார்கள். என் போன்றவர்கள் எல்லாம் தலையிட்டு, சில இடங்களில் சமாதானம் செய்து வைத்தோம். மிக அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரிச் சட்டங்கள், மசோதாக்கள் இந்தக் குத்தகைதாரர்களுக்கு சாதகமாக அமையும். மேலும் நல்ல முறையில் உதவுவதாக இருக்கும். ஆகவே நான் இதைப் பாராட்டுகிறேன். நலிந்த மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குத்தகைதாரர்களுக்கும் சாதகமாக இது இருக்கும். எனக்கு முன்பு பேசியவர் சொன்ன மாதிரி பல அச்சுப் பிழைகள் இருக்கின்றன. நான் கூட 20 அச்சுப் பிழைகளை எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதை திருத்துவீர்கள் என்று எனக்குத் தெரியும். மேலும் இரண்டு பிர்க்காக்களிலே பாதிக்கப்பட்டபகுதியை அறவே விட்டுவிட்டார்கள். அதைச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்தக் குத்தகைதாரர்கள், விவசாயிகளை நீக்குவதற்கு நிலச்சுவான்தார்கள் ஒரு சுருக்கு வழியைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இவன் குத்தகைதாரரே இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அதற்காகத்தான் ஐவரைக் கொண்ட கமிட்டியை நமது அரசு அமைத்திருக்கிறது. நெல்லையிலே அந்தக் கமிட்டியில் யார் யார் இருக்கிறார்கள் என்று நான் நிதியமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். மாண்புமிகு நாவலர் அவர்களே,— நலிந்த மக்களை, ஆதிதிராவிட மக்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்று அறிக்கையில் இருக்கிறது. நல்லவர்களாக அதில் போட்டு, அவர்

களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் செய்ய வேண்டுமென்றால் அந்தக் கமிட்டி நல்லமுறையிலே வேலை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன் என்று தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக்கொள்கிறேன்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா : பெருமை மிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவு 37/1986 மற்றும் சட்டமுன் வடிவு 38/1986 ஆகிய மசோதாக்களின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலே ஏற்கனவே இருக்கின்ற பாக்கியை ஐந்து தவணைகளிலேயும், நடப்பாண்டிற்கு இருக்கின்ற குத்தகை பாக்கியை செப்டம்பர் மாதத்திற்குள்ளும் செலுத்த வேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. எங்களுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையில் குத்தகைதாரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக ஆக்குகின்ற ஒரு சட்டத்தை வெகு விரைவிலே அரசு கொண்டு வர வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாக வைக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புயலாலும், வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். இங்கே ஏற்கனவே இருக்கின்ற பாக்கியையே கொடுக்க இயலாத நிலைமை இருக்கிறது. எனவே, இந்தப் பாக்கியைத் தள்ளுபடி செய்கின்ற முறையில் இந்தச் சட்டம் வரும் என்றால் அது வரவேற்கத் தக்க சட்டமாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இன்றைக்கு ஐந்து தவணைகளில் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஐந்து தவணைகளில் முதல் தவணை இந்த ஆண்டு செப்டம்பர் மாதமே துவங்கப்படுகிறது. இந்த வருஷம் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டவர்கள் முதல் தவணையை எப்படி செப்டம்பர் மாதத்தில் செலுத்த முடியும்? அதே முறையில் நடப்பாண்டு குத்தகைக்கு நான்கு மாத தவணை என்பது செப்டம்பரோடு முடிகிறது. இந்தப் பாக்கியின் முதல் தவணையையும், நடப்பாண்டிற்கான குத்தகையையும் செப்டம்பரில் செலுத்துவது என்பது இயலாத ஒரு காரியமாகும். இந்தப் பாக்கியைத் தள்ளுபடி செய்யமுடியாவிட்டால் முதல் தவணையை 30-9-86 என்பதை 30-3-87 ஆக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே முறையில் நடப்பாண்டு குத்தகை செலுத்தும் தவணையாக நான்கு மாத தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 4 மாத காலக்கெடுவை ஒரு வருஷமாக நீட்டிக்க வேண்டும். இந்த வருஷம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே,

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா] [1986 மே 13

நெல் பயிரிடக்கூடிய நிலை ஏற்படாததால், இன்றைக்குப் பயிரிட்டு இருக்கின்ற வேர்க்கடலைப் பயிருக்கு 10 சதவீதம் 15 சதவீதம் கூட மகசூல் கிடையாது. ஆகவே, இந்த வருஷத் திற்குச் செலுத்தும் தன்மை விவசாயிகளுக்குக் கிடையாது என்பதை அரசு உணர வேண்டுமென்று சொல்ல ஆசைப்படு கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்திலே நான் சார்ந்திருக்கின்ற ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் கிட்டத் தட்ட நான்கு பெரிய ஏரிகளும், 18 சிறிய பாசன ஏரிகளும உடைந்ததால் இந்த வருஷத்திலே பயிரிட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு 37-இல் நான்கு கிராமங்கள்தான் ஸ்ரீபெரும்புதூர் தாலுக்காவில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. அந்தத் தாலுக்கா முழுவதுமே புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. இன்றைக்கு அனைத்துக் கிராமங்களிலும் உள்ள குடிசைகளுக்கும் வெள்ள நிவாரணப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் குத் தகைதாரர்கள் சட்டம் என்று வருகின்றபொழுது ஸ்ரீபெரும் புதூர் தாலுக்காவிலே ஆறு கிராமங்கள்தான் இன்றைக்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 1–20)

மொத்த தொகையும் இந்தக் குத்தகைதாரர்கள் நிவாரண சட்டத்திலே சேர்க்கப்பட வேண்டும். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் சொன்னதைப்போல பக்கத்தில் இருக்கிற சுற்றுப்புற கிராமங்களைச் சேர்த்து விட்டு, நடுவில் இருக்கிற பல கிராமங்களை விட்டிருக்கிறார் கள். இந்த எனுமரேஷன் செய்வதிலே, கிராமப் புறங்களிலே எனுமரேஷன் செய்வதற்கு, பிர்கா வாரியாக எனுமரேஷன் செய்திருந்தால், மக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். ஒரே பகுதியிலே, பூந்தமல்லி பிர்க்கா முழுவதுமாக விடப்பட்டி ருக்கிறது. தெற்கே உள்ள திருமழிசை கிராமத்தை சேர்த்திருக் கிறார்கள். அந்தத் திருமழிசை கிராமத்தைச் சேர்ந்து, அந்தப் பஞ்சாயத்திற்குள்ளே 5 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 5 கிராமங்களும் விடப்பட்டிருக்கின்றன. இந்த நிலையிலே 6 கிராமங்களுக்குத்தான் இந்தச் சட்டம் அந்த தாலுகாவிலே பயன் அளிக்கும் என்றால், இந்தச் சட்டத்தினுடைய பயன் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்காமல் போகும என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள தாலுகா முழுவதுமாக அந்தச் சட்டத்தைத் கொண்டு வரவேண்டும். செவ்வாய்பேட்டை தாலுகா, பொன்னேரி தாலுகா போன்ற உண்மையாக பாதிக்கப்பட்ட பகுதிகள் எல்லாம் விடப்பட்டிருக் கின்றன. அந்தப் பகுதிகளை எல்லாம் சேர்த்து, இந்தச் சட்ட முன்வடிவை நான் சொன்னபடி, திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன.

1986 மே 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இரண்டு சட்ட முன்வடிவுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றி விரிவாகக் கூற வேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன். 37/86, 38/86, ஆகிய இரண்டு சட்ட முன்வடிவுகளின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடாரமணன் குறிப்பிட்டது போன்று கிராமங்களுடைய பெயர்கள் தவறாகவோ, பிழையாகவோ, குறிப்பிடப்பட்டிருப்பதை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கலந்து, அந்தப் பிழைகளை திருத்துவதற்கான அளவில் காக் கீது அனுப்பப்படும் என்பதையும் அவை பற்றி, இந்தத் திருத்தத்தினை ஏற்றுக்கொண்டு, தக்க முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக தகுந்த முறையில் திருத்தி அமைக்கப்படும் என்பதையும் இங்க வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் குறிப்பிடும்போது, திருத்துறைப்பூண்டியும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் இணைக்கப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள், திருத்துறைப்பூண்டியும் அதனை அடுத்துள்ள அனைத்துக் கிராமங்களும் தற்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகச் சேர்க்கப்பட்டு, முழு நிவாரணமும் பெறுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். 38/86 சட்ட முன்வடிவில் அது சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குத்தகைதாரர்களுக்குக் கூடுமானவரையில் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவுகள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, குத்தகைதாரர்களை நாம் ஓரளவுக்குப் பாதுகாக்க வேண்டும். நில உடைமையாளர்களில் பெரிய நில உடைமையாளர்களை நாம் காப்பாற்றாவிட்டாலும் கூட சிறுசிறு நில உடைமையாளர்கள், குத்தகைக்கு விடுவதைத் தவிர வேறு வழியில்லாதவர்கள், விதவை மார்கள், மிகமிகச் சாதாரணமானவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வை ஓரளவுக்குக் கவனிக்க வேண்டும். குத்தகைதாரர்களை ஒரு பக்கம் கவனிக்க வேண்டும். நிலவுடைமையாளர்களை மற்றொரு பக்கம் கவனிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று நில உடைமையாளர்களை, குத்தகைதாரர்களை வைத்து, ஒரு உடன்பாடு செய்து கொண்டு, அவர்கள் சொல்வது மாதிரி, ஏற்கனவே இருப்பதையெல்லாம் தள்ளிவிட்டாலும், இனிமேல் கொடுப்பதை மட்டும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற ஒரு உடன்பாடு இரு தரப்பினருக்கிடையிலே ஏற்பட்டால் அதைக் கூட அரசு ஏற்றுக்கொள்ள

தயாராக இருக்கும். மறுபடியும் நிலுவை ஏற்படாது என்பதற்கு யார் காரண்டி செய்வது என்பதுதான் ஏற்கனவே உள்ள தகராறு. ஆகவே, உடன்பாடு ஏற்பட்டுவிடும், ஏற்கனவே நிலுவைகள் வந்து, அதைத் தள்ளிவிட்ட முறையில், மறுபடியும் 6 ஆண்டு காலம் கழித்து, மறுபடியும் நிலுவை வருமானால் என்ன ஆவது என்பதைப் பார்க்க வேண்டும்.

சிறுசிறு நில உடைமையாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவற்றை எல்லாம் கண்டறிந்து, அதற்கேற்றபடி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று, இரு சாராருக்கும் கேள்வி ஏற்படாத அளவுக்கு, முறை வகுக்கப்படுமானால், அந்த உடன்பாட்டினுடைய அடிப்படையில், வகுப்பதற்கு, அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குத்தகைதாரர்களுக்கே நிலத்தை உடைமையாக்குவது என்ற கருத்து, கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதும் அதுபற்றி நிதித் துறை, வருவாய்த் துறை, மற்றும் அறநிலையத் துறை அது மட்டும் அல்லாமல், வங்கிகள் ஆகியவற்றோடு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பேச்சு வார்த்தைகள் முழுமை அடைந்துவிடுமானால், அவை பற்றிய செயற் குறிப்பினைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று எடுத்துச் சொல்லி, வேறுபல சீரிய கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைபற்றி, கவனித்து, தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு முனைப்புள்ளம் கொண்டு பாடுபடும் என்று கூறி, இந்தச் சட்ட முன் வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனிவிதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

1986 மே 13]

பிரிவு 14.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 14 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்"

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

" After Clause 14, *add* the following :

"14-A. Power to District Collector to amend the Schedule.

(*a*) The District Collector may from time to time amend the Schedule so as to correct the name of the villages as it stands in the Schedule by publishing a notification in the Tamil Nadu Government Gazette.

(*b*) The notification referred to in sub-section (*a*) has to be placed on the Table of the House within seven days of its publication when the House is in Session or within seven days when the Assembly meets after such publication."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே தன்னுடைய பதிலில், மாவட்ட ஆட்சியாளர்களுக்கு இந்த அதிகாரத்தை, அவர்களைக் கலந்துகொண்டு கொடுப்பதாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததை முழு அளவும் கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்கிறேன். அந்த ஊர் மட்டுமல்ல. மாநிலத்தில் உள்ள பல்வேறு ஊர்களுடைய பெயர்களும் மாற்றப்பட்டு இருப்பதன் காரணமாக எல்லா மாவட்ட ஆட்சியாளர்களும் உண்மையான பெயர்களை, சிறப்பான பெயர்களை வைத்திருப்பார்கள். அதற்கேற்றபடி மாற்றியமைக்கப்படும் என்பது பொதுவான தாக்கீதாகும். பொதுவான முறையில் இணைக்கப்படும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன். : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அமெண்ட்மெண்ட்ஸ்....(குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்ட கருத்து.

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்போது ஏற்றுக் கொண்டது என்று சொல்வது தவறு. உங்கள் கருத்தை ஏற்றாகி விட்டது. கேஸ் ஜெயிக்கும்போது, பேசியே கேஸ் தோற்றுவிடும் போல் இருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: சட்ட முன்வடிவில் இல்லாமல் எப்படி செய்ய முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னர் வேறு நேரத்தில் கொண்டு வாருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; ஷெட்யூலில் வருகின்ற பெயர்கள் பிழைபட இருக்கின்றன. அதை மாற்ற வேண்டும் என்பது. அதை சட்டம் வருகின்ற போது அதனுடைய கிளாசிலேயே இது சேர்ப்பது என்பது வருமா என்பதுதான். ஆகவே தான் கொள்கையளவில் ஏற்றுக் கொள்கின்றேன் என்று சொன்னேன். அது நிறைவேற்றப்படும் என்று சொன்னேன். மாண்புமிகுஉறுப்பினர் அவர்களின் எண்ணம் நிறைவேறுகின்றது. உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் நிறைவேறுகின்றபோது, அதைஎல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் சொல்லி தனியாக எராட்டா ஒன்று போடுவதற்கு அரசு முடிவு செய்யும் என்று சொன்னதற்கு பிறகு எண்ணம் நிறைவேற வேண்டும் என்கின்ற போது, அதை சேர்க்க இயலுமானால், சட்டத்தினுடைய ஒரு பிரிவாக சேர்க்கலாம். அப்படி சேர்க்க இயலவில்லை என்றால் அந்த கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 14 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 14 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 15 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: அட்டவணை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.

திரு. பொ. உத்திராபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :—

''விவர அட்டவணையில், தஞ்சாவூர் மாவட்டத்தின் கீழ், வட்டத்தின் பெயர் என்ற (1)-ஆம் பத்தியில் ''பேராவூரணி'' என்பதற்கு பிறகு, ''திருத்துறைப்பூண்டி'' என்றும், அதற்கு எதிரில் ''அனைத்து கிராமங்களும்'' என்ற வார்த்தைகளை சேர்த்துக் கொள்ளவும்.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

Thiau T. R, Venkataramanan : Mr. Speaker Sir, I move my amendment. It is only an error which has been accepted even by the Hon. Minister. It must be corrected.

தலைவர் அவர்களே,
நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :—

''விவர அட்டவணையில், திருநெல்வேலி மாவட்டத்தின் கீழ், தென்காசி வட்டத்திற்கு எதிரிலுள்ள கீழ்க்கண்ட கிராமத்தின் பெயர்களை திருத்தி வாசிக்கவும் :—

6	நேட்டுர்	-க்கு பதிலாக	நெட்டூர்
10	பட்டாபது	-க்கு பதிலாக	பாட்டப்பத்து
12	மத்தலம்பாறை	-க்கு பதிலாக	மத்தளம்பாறை
15	திப்பனாம்பட்டி	-க்கு பதிலாக	திப்பணம்பட்டி
21	திருச்சிட்ரம்பலம்	-க்கு பதிலாக	திருச்சிற்றம்பலம்
24	கேலபாவூர்	-க்கு பதிலாக	கீழப்பாவூர்
28	தென்போதை	-க்கு பதிலாக	தேன்பொத்தை
30	பன்போலி	-க்கு பதிலாக	பண்பொழி
31	ஆயிரபேரை	-க்கு பதிலாக	ஆயிரப்பேரி
33	இரஞ்சி	-க்கு பதிலாக	இலஞ்சி
35	மரந்தை	-க்கு பதிலாக	மாறாந்தை''

செங்கோட்டை வட்டத்திற்கு எதிரில்.

2	புலியரை	-க்கு பதிலாக	புளியரை''

திருத்தம் முறைப்படி வழி மொழியப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் சொன்னது 38/86. அடுத்த பில்லிலே அது சேர்க்கப்

1986 மே 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பட்டு இருக்கிறது. இந்த பில்லிலே சேர்க்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. திருத்துறைப்பூண்டி, அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இதில் சேர்க்கப்பட்டு, முழு நிவாரணம் அளிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதால் இந்த பில்லில் சேர்க்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

திரு. பொ. உத்திராபதி அவர்களின் திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. டி. ஆர். வேங்கடரமணனின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி : ''அட்டவணை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, அட்டவணை நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1986, மே 13

(இஇ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள்(தற்காலிகநிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கண்ட கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள் —தொடர்ச்சி.

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1986) பேரவையில்

** 1986-ம் ஆண்டு மே 10ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

1886 மே 13] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈஈ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

இந்தச் சமயத்தில் சட்ட முன்வடிவு பற்றி நான் சிறிது கூற விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் இயங்கி வரும் உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும், பிற ஊழி யர்களுக்கும் உரிய பணிப்பாதுகாப்பு வழங்கவும் அப்பள்ளிகளின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் தமிழ்நாடுஅங்கீகரிக் கப்பட்ட தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்டம், 1973 இயற்றப்பட்டு 1–12–74 முதல் இந்த மாநிலத்தில் செயல்படுத்தப் பட்டுள்ளது. மாநில சட்டப் பிரிவு 26-ன் கீழ் கல்வி அல்லது பயிற்றுவிப்பு முறை அல்லது பிற விஷயம் ஆகியவற்றின் தொடர் பாக அரசால் இயற்றப்பட்ட அரசாணை ஒன்றின் விளைவாக தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களையோ, அல்லது பிற ஊழியர்களையோ ஆட்குறைப்பு செய்ய நேரிட்டால் அந்த ஆசிரியர்களையும், பிற ஊழியர்களையும் வேறொரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ தேவைக்கேற்ப பணியில் அமர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒரு தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதன் காரணமாக ஆட்குறைப்பு செய்யப்படும் ஆசிரியர்களோ அல்லது வேறு ஊழியர்களோ, வேறு ஒரு தனி யார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ மீண்டும் பணி புரிவதற்கு திட்டவட்டமான வழி வகைகள் இல்லை. எனவே ஒரு தனியார் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதன் விளைவாக ஆட் குறைப்புக்கு உட்படும் ஆசிரியர் களோ பிற ஊழியர்களோ வேறு ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ மீண்டும் வேலை ஏற்பதற்கு மேற்படி சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட வேண்டும் எனவும், அப்படிப்பட்ட முறையில் அச்சட்ட பிரிவு 26, உரியபடி திருத்தப்

* 1986-ஆம் ஆண்டு மே 8ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பட வேண்டும் எனவும் அரசு கருதி, அதற்காக இச்சட்ட முன் வடிவு மாற்றப்பட்டுள்ளது.

அது மூலச் சட்டம் அமல் செய்யப்பட்ட நாளான 1-12-1974 முதற்கொண்டே அமல் செய்யப்படுவதற்கும் வகை செய்யப் பட்டுள்ளது. இச்சட்ட முன் வடிவை இப்போது ஆய்வுக்கு எடுத் துக் கொள்ளும்படியும் பின்பு நிறைவேற்றித் தரும்படியும் இந்த அவைக்கு பரிந்துரைக்கிறேன். இந்த ஒரே ஒரு பாதுகாப்பிற் காகத்தான் இந்தச் சட்ட முன் வடிவை நாம் கொண்டு வரு கிறோம். தனியார் பள்ளிகளிலே மாணவர்கள் குறைவதன் காரணமாக வேலை நீக்கம் செய்யப்படுகின்ற ஆசிரியர்களுக்கு வேறு ஒரு தனியார் பள்ளியிலோ அல்லது அரசு பள்ளியிலோ வேலை தர வேண்டும். அப்படி இப்போது வாய்ப்பில்லை. அப்படி வாய்ப்பு தருவதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரு கிறோம். வேறு பல பிரச்னைகள் அந்த தனியார் பள்ளிகள் சம் பந்தப்பட்டவை இருக்கின்றன. அவைகளுக்காக ஒரு குழு போட்டு, அந்தக் குழு சில பரிந்துரைகளையும் செய்திருக்கி றார்கள். ஒரு வழக்கு வேறு சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. அது முடிந்ததற்குப்பிறகு வேறு அந்தப் பிரச்னைகளைப் பற்றி நாம் சட்டமுன் வடிவைக் கொண்டு வர இருக்கிறோம். இப்போது அவையின் முன்னாலே கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தம் ஒரே ஒரு சிறிய பிரச்னை தான். சிறிய பிரச்னை என்றாலும், வேலை இழக்கின்ற ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பு தருகின்ற பிரச்னை. முக்கியப் பிரச்னை. 1974-லே யிருந்து அதை அமல் படுத்துவதற்கும் நாம் வகை செய்திருக்கிறோம். ஆகவே அதை ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் எ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் எப்போது எதிர்க்கட்சித் தலைவராக மாறி னார்? அவர் ஜனதா கட்சியிலிருந்து விலகி இந்திரா காங்கிர ஸுக்கு எப்போது போனார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்ட்டர் இல்லை. உட்காருங்கள்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இதே முறையில் டிசிப்ளின் இந்த அவையிலே கொண்டு வருவது நல்லது. அமைச்சர்கள் அமர்ந்திருக்கக்கூடிய முன் வரிசையில் சில நேரங்களில் ஆளும் கட்சியைச் சார்ந்த டிரஷரி பென்ச் நண்பர்கள் வந்து உட்காருகிறபோது, இப்படியே அந்த உறுப்பினர் அமைச்சராகி விட்டாரா என்று கேட்பதற்கு எங்களையும் விட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் பிரச்னை இல்லை. அமைச்சர்களுடன் வந்து உட்காருவதால் அவர்களும் அமைச்சராவதில்லை. இவரும் எதிர்க்கட்சித் தலைவராகவில்லை

1986 மே 13 [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத்தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இந்தச் சட்டத்தை அமல் படுத்தக் கூடிய நேரத்தில், இப்படி ஏற்படலாம் என்று உத்தேசித்து அப்போது ஆசிரியர்களிடத்திலே ஏற்படக் கூடிய சில கருத்துக்களை இங்கே சொல்வதற்கு நான் இந்த வாய்ப்பை பயன்படுத்திகொள்ள விரும்புகிறேன். அதாவது தனியார் பள்ளிக்கூடங்களிலே, சில இடங்களில் மேனேஜ்மெண்ட் கமிட்டி என்றோ அல்லது ஸ்கூல் கமிட்டி என்ற பெயராலோ சில கமிட்டிகளை அமைத்து, அந்த ஸ்கூலைச் சார்ந்தவர்கள் நடத்தி வருகிறார்கள். அந்த இடங்களிலே என்ன நடக்கிறது என்றால் நியாயமாக ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமோ அது கொடுக்கப்படாமல் வேறு சில ஆட்களை அந்தக் கமிட்டியிலே அதிகமாகப் போட்டு, அந்தக் கமிட்டி ஆட்களுக்கு வேண்டாத ஆசிரியர்களை பழி வாங்குவதற்கு உரிய வகையில் அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாணவர்களைப் பள்ளிக்கூடத்திலே சேர்க்காமல், அதாவது அட்மிஷன் அதிகமாகச் செய்யாமல் விட்டு வைத்து, ஆசிரியர்களை வெளியிலே அனுப்பக் கூடிய ஒரு ஏற்பாட்டை கடைப்பிடிக்கிறார்கள்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய விளக்கத்திலே சொல்லப் பட்டிருப்பது, அதாவது மாணவர்களின் விகிதாசாரப்படி டீச்சர் களைப் பொறுத்த வரையில், அவர்கள் வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்படக்கூடிய நேரத்தில்

"....consequent on the reduction in the strength of the pupil studying in any such school may also be appointed in any school or institution maintained by the Government or in such private school, as the case may be...."

என்று ரிடக்ஷன் இன் தி ஸ்டெங்ரெத் ஆப் தி பியப்பில் என்ற நிலையிலே சில மேனேஜ்மெண்டுகள் செய்து வருகின்றன. அதை எப்படி சரிப்படுத்த வேண்டுமோ, அல்லது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுத்தால் தான், இந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கம் நிறைவேற்றப்பட முடியும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

(பிற்பகல் 1-40.)

அதேபோல இன்னொரு பிரச்னை என்னவென்றால், பல ஸ்கூல்களைப் பொறுத்தவரையில் மைனாரிட்டி ஸ்கூல்ஸ் என்ற

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 மே 13

பெயரை வைத்துக்கொண்டு, அவர்கள் அரசாங்கத்தின் ஆணைகளை இன்றைக்கு மதிக்காமல், அவைகளுக்கு கட்டுப்படாமல் இருக்கிறார்கள். அவற்றை அமல்படுத்துவதற்கு மறுக்கிறார்கள். இன்றைக்கு பல இடங்களில் மைனாரிட்டி ஸ்கூல்சில் உள்ள டீச்சர்ஸ் பொறுத்தவரையில் அவர்கள் மீது நடவடிக்கையெடுக்கப்பட்டு வெளியே தள்ளப்படுகிற போது, அரசாங்கம் அந்த ஆசிரியர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் கொடுக்கமுடியாத துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. மைனாரிட்டி ஸ்கூல்ஸ் என்ற பெயரைச் சொல்லி, இந்த நிர்வாகம் எடுத்துக்கொள்கிற நடவடிக்கைகளில் எதிலும் அரசாங்கம் தலையிட்டு ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டால் நிச்சயமாக இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேறுமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

சென்ற கால அனுபவத்திலிருந்து பார்க்கலாம். மைனாரிட்டி ஸ்கூல்ஸ் என்ற பெயரால் கான்ஸ்டிடியூஷனில் இருக்கக்கூடிய மைனாரிட்டி ரைட்ஸ் எங்களுக்கு உண்டு என்று சொல்லி பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அந்த மைனாரிட்டி ரைட்ஸ் கொண்டாடி இன்றைக்கு செயல் படுகிறார்கள். டீச்சர்ஸ் நியமனம் செய்கிற போது, 2 டீச்சர்களை நியமனம் பண்ண வேண்டிய இடத்தில் துட்டை வாங்கி 5 டீச்சர்களை நியமனம் செய்து, அந்த 3 பேர்கள் அப்பாயிண்ட்மென்ட் அப்ரூவல் ஆகாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஊதியமும் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமைகள் தனியார் பள்ளிக்கூடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட முறையில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்களை பணத்திற்காக நியமனம் செய்கிற அந்த முறையை தடுத்து நிறுத்துவதற்கு ஏற்பாட்டை நாம் செய்தால் தான், இப்படி சர்ப்ளஸ் டீச்சர்ஸ் என்று வரக்கூடியவர்களுக்கு இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கத்தின் படி வேலை கொடுப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இன்றைக்கு பல இடங்களில், இங்கே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல,

"Consepuent on tie reduction in the strength of the pupils studying in any snch private school...."

என்பதைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட தில்லுமுல்லுகள் எல்லாம் இன்றைக்கு பள்ளிகளில் இருந்து கொண்டிருக்கின்றது. தனியார் நிர்வாகம் எடுத்துக் கொள்கிற இந்த நடவடிக்கைகளை எல்லாம் அரசாங்கம் சுமக்கக்கூடிய நிலைக்கு சென்றுவிடக்கூடாது. இன்றைக்கு தனியார் பள்ளிக்கூடங்களில் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிற கமிட்டியைப் பொறுத்தவரையில், அதிலே நியாயமான முறையில் எந்தஅளவிற்கு வெளி இடங்களில் இருக்கிறார்களோ அவர்களுக்கு தகுந்த அளவில் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய முறையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும். அதேபோல தேவைக்கு

1986 மே 13] [திரு, ஜே. ஹேமச்சந்திரன்]

அதிகமான ஆசிரியர்களை நியமனம் செய்து இப்படிப்பட்ட பிரச்னைகள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தக் கூடிய முறையில் உள்ள சட்ட திருத்தத்தைக் கொண்டு வந்து அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும். அந்த முறையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தான் இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவிகரமாக இருக்குமென்று சுட்டிக்காட்டி, இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட திருத்தம் ஆசிரியர்களுக்கு வேலை பாதுகாப்புக்காக இருப்பதால் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இந்தத் திருத்தத்தில் 1974 ஆம் ஆண்டிலிருந்து சட்டம் அமலுக்கு வரவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கான காரணம் எனக்கு தெரியவில்லை. திருத்தம் இன்று முதல் அமலானால் சரியாக இருக்கும். 11, 12 ஆண்டுகள் முன்னாலே அமலாக வேண்டுமென்றால் இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பளம் எதுவும் கொடுப்பதற்காக இப்படி சட்டத்தைக் கொண்டு வருகிறீர்களா ? இதுபற்றிய விவரம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். தனியார் பள்ளிகளில் வலைமை ஆசிரியருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் இப்போது அதிகமாக இருக்கிறது. இதுவே போதும். தனியார் பள்ளிகள் நன்கொடை மூலமாகவும், பகமை மூலமாகவும் நடத்தப்படுகிறது. ஆதலால் அவர்களுடைய நிர்வாகக் குழுவிற்கு கூடுதல் அதிகாரம் வேண்டும் எனக்கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டம் 1974 ஆம் ஆண்டிலிருந்து அமலுக்கு வருமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஒருசில தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களை ரெட்ரென்ச் செய்து அரசாங்கப் பள்ளிகளில் சேர்ந்தார்கள். அவர்களை இதுவரையில் ரெகுலரைஸ் செய்யாமல் டெம்பரரியாகவே வைத்திருக்கிறார்கள். குறிப்பாக எங்களுடைய பகுதியில் ஆர்.சி.எஸ். என்ற ஹைஸ்கூலில் ஒருசில டீச்சர்களை ரெட்ரென்ச் செய்து அரசாங்கப் பள்ளிகளில் நியமனம் செய்தார்கள்.

அந்த ஆசிரியர்களுக்கு இது வரையில் இன்கிரிமென்ட் போடாமல் டெம்ப்ரரியாக அந்த நிலையில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தின் மூலமாக, அவர்களை எந்த நாளில் நியமனம் செய்தார்களோ, அன்றிலிருந்து இன்று வரையில் அவர்களுக்கு இன்கிரிமென்ட் போட்டுத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இத்தகைய ஒரு பள்ளிக்கூடத்திலே இருந்து ஆசிரியர்களை வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாற்றினால் அவர்களை சில மேனேஜ்மெண்டுகள் எடுத்துக் கொள்ளாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. குறிப்பாக கேட்டால் மைனாரிட்டி என்று சொல்கிறார்கள். நாம் அவர்களுக்கு ரெககனிசன் கொடுத்ததற்குப் பின்னால், அதிகமாக ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள், அந்த அளவிற்கு சம்பளம் இல்லை என்று சொல்கிறார்கள் நான் காலையிலே பேசும்போது கூட சொன்னேன். எனவே இத்தகைய நிலைமை இருப்பதாலே, அத்தகைய பள்ளிக்கூடங்களில் இருந்து, வேறு பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்தால், எடுத்துக் கொள்ளமாட்டார்கள். சில கல்லூரிகளில் கூட, சர்ப்ளஸ் ஸ்டாஃப் என்று இருந்த அவர்களை டிரான்ஸ்பர் செய்ய வேண்டும் என்று சொன்னால், பல மேனேஜ்மெண்டுகளில் எடுப்பதில்லை. அப்படி அவர்களை எடுக்காமல், அங்கே, இங்கே என்று போட்டு அவர்களை அலைக்கழிக்கின்ற நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது.

எனவே இந்தச் சட்டம் வரும்போது, மைனாரிட்டி, மெஜாரிட்டி என்று வேற்றுமை இல்லாமல், எந்தப் பள்ளிக்கூடத்திலே நியமனம் செய்ய சான்ஸ் தருகிறார்களோ, அங்கே அவர்கள் வேலை செய்ய வேண்டும்.

மேலும் இன்று சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், பல இடங்களில் டொனேசன் வாங்குகிறார்கள். நானே ஒரு ஸ்கூலுக்குச் சென்று, ஆறாம் கிளாசுக்கு ஒரு இடம் கேட்டபோது—முத்தையா செட்டியார் ஹையர் செகண்டரி ஸ்கூலில் சென்று கேட்டபோது—அனுமதி வழங்குகிறோம். 2 ஆயிரம், 3 ஆயிரம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். உண்மையிலே ஒரு என். ஜி. ஓ.—வினுடைய மகளுக்கு இப்படிப்பட்ட வசதி இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். நான் இது என்ன எய்டட் ஸ்கூலா அல்லது அன்-எய்டெட் ஸ்கூலா என்று கேட்டதற்கு அவர்கள் எய்டட் ஸ்கூல்தான் என்று சொன்னார்கள். அப்படியானால் அரசாங்கத்தினுடைய பணத்தை வாங்கிக் கொண்டு, இப்படி நீங்கள் பணம் வாங்குகிறீர்களே என்று சொன்னால், எனக்குத் தெரியாது, நீங்கள் போய் கரஸ்பான்டென்டைப் பாருங்கள் என்று அங்கே இருக்கிறதலைமை ஆசிரியர் சொல்கிறார். சென்னை நகரத்தில், அமைச்சர்கள் அதிகமாக இருக்கின்ற இந்த இடத்திலே ஒரு ஏழைப் பெண்ணுக்கு இடம் கிடைக்கவில்லை என்றால், செல்ப்-பைனான்ஸ் இன்ஸ்டிடியூஷனிலே கிடைத்து விடுமா? முத்தையா செட்டியார் ஸ்கூல் என்று சொல்லக் கூடிய அந்தப் பள்ளிக் கூடத்திலேயே 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று வாங்குகிறார்கள். எனவே அரசாங்கம் அதை கண்காணிக்க வேண்டும். எனக்கு ஏற்பட்ட நேரிடையான அனுபவம் இது, அதனால் தான் சொல்கிறேன்.

1986 மே 13] [திரு. மா. சுந்தரதாஸ்]

மேலும் இந்த பிரியாரிட்டிசை மாற்ற வேண்டும். அதே போன்று சில பள்ளிக் கூடங்களில் ஸ்டாஃப் ஸ்ட்ரென்த், அதாவது அரசினுடைய முடிவை வேண்டுமென்றே திருத்திவிடக் கூடிய வகையில் பொறுப்பிலே உள்ளவர்கள் ஈடுபடுவார்கள். ஏன் என்றால், அவர்கள் எல்லாம் வாங்க வேண்டியதை வாங்கி விட்டார்கள். இனி மேல் வாங்குவதற்கு ஒன்றும் இல்லாத காரணத்தால், ஒரு ஆசிரியரைப் பழி வாங்க வேண்டும் என்று சொன்னால், சட்டத்திலே உள்ள ஓட்டைகளை வைத்துக் கொண்டு, தனியார் நிறுவனங்களில் உள்ளவர்கள் ஆசிரியர்களைப் பழி வாங்குவார்கள். எனவே இத்தகைய மோசமான மேனேஜ் மெண்டுகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பழி வாங்கப்படும் ஆசிரியர்கள், அதாவது தனியார் பள்ளிகளினுடைய நிர்வாகப் பணியிலே சொல்லப் போனால் உபரியாக உள்ள ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்பும் போது, அரசு அவர்களை அரவணைத்து அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் வழங்குகின்ற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் தனியார்கள் பள்ளிகளிலே ஒரு ஆசிரியர் வேலைக்கு அமர்த்தப் படுகிறார் என்று சொன்னால், அதே நேரத்திலே அரசாங்கப் பள்ளிகளிலே ஒரு ஆசிரியர் வேலைக்கு அமர்த்தப்படும் போது, அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகள் வழங்கப்படுகிறதோ, அவர்களுடைய வேலைக்கு எந்தவிதமான உத்தரவாதம் வழங்கப் படுகிறதோ, அதே உத்தரவாதம் தனியார் பள்ளிகளிலே வழங்கப்பட வேண்டும் என்பதையும், நான் எடுத்துரைக்க ஆசைப் படுகிறேன். தனியார் ஒருவர், ஒரு பள்ளியைத் துவக்கு கிறார் என்று சொன்னால், அந்த பள்ளியினுடைய மேம்பாட்டுக் காக உழைக்கக் கூடியவராக, அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய வளர்ச்சியிலே அக்கறை உடையவராக இருப்பவர்களைக் கண் காணித்து, அவர்களுக்குத்தான் அந்த உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்குவதன் மூலமாக, அந்த மாதிரியான ஆசிரியர்களை உபரியாக உள்ள ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப் பக்கூடிய ஒரு நிலைமை ஏற்படாது. ஆகவே அவ்வாறு உரிமங் கள் வழங்கும்போது, இப்படிப்பட்ட தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே, தனியார் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கான உரி மங்களை வழங்க வேண்டும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து செயற்கையாக பற்றாக்குறையை ஏற்படுத்தி ஒரு தனியார் பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற நிர்வாகம், ஒரு ஆசிரியரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தால், கண்டிப்பாக இந்த சூழ்நிலையில் வீட்டுக்கு அனுப்பக் கூடிய ஒரு நிலைமை

இருந்து வருகிறது. அதற்குக் காரணம் என்ன என்றால், செயற்கையாக ஒரு பற்றாக் குறையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி, சில தனியார் நிறுவனங்கள், ஒரு ஆசிரியரைப் பழி வாங்க வேண்டும் என்று நினைத்தால், எந்தத் துறையில் ஆசிரியர் ஒருவர் பணியாற்றுகிறாரோ, அந்தத் துறையில் மாண வர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களைப் புறக்கணித்து, அந்த ஆசிரியரை வேண்டுமென்றே பழி வாங்க அந்தத் தனியார் பள்ளிக்கூடங்கள் நினைக்கலாம். ஆனால் இந்தச் சட்டம் அவர்களுக்கு உறு துணையாக இருக்கக் கூடாது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1-50]

அதோடுமட்டுமல்லாமல, அப்படி அந்த தனியார் பள்ளிகளிலே வேலை செய்கிற ஆசிரியர்கலை வேறு பள்ளிக் கூடங்களுக்கு மாற்ற வேண்டுமென்று நினைத்தால் இந்தச் சட்டம் வழிவகை செய்யுமானால் அப்படி அவர்கள் மாற்றப்படும்போது அந்தத் தனியார் பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற ஆசிரியர்களுடைய கருத்தை மட்டும் கேட்டு அறியக் கூடாது. அரசாங்கத்திலே, அரசாங்க அதிகாரிகளுடைய கருத்துக்களை கேட்டறிந்து அந்தக் கருத்துக்களுக்கு, இந்தத் தனியார் பள்ளிக்கூடங்கள் உண்மையி லேயே ஆட்குறைப்பு செய்ய வேண்டுமென்று அந்த அதிகாரிகள் நினைத்தார்களானால் அப்படிப்பட்டவர்கள் தான் வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாற்றப்பட வேண்டும். அதே நேரத்திலே, எந்த ஒரு ஆசிரியரும் வேறு பள்ளிக்கு மாற்றப்பட வேண்டுமென்று இந்த அதிகாரிகள் நினைக்கின்றார்களோ, அந்த ஆசிரியர் களுடைய கருத்தையும் நாம் கேட்டறிந்து அதற்குப் பின்னாலே மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே, குருகுல மலையூர் உயர் நிலைப்பள்ளி என்று ஒரு தனியார் பள்ளிக்கூடம் இருந்தது. அந்தத் தனியார் பள்ளிக்கூடத்தை, அரசானது தன்னுடைய அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியாக எடுத்துக் கொண்டது. அந்தப் பள்ளியிலே வேலை செய்த அத்தனை ஆசிரியர்களும் அதே பள்ளிக்கூடத்திலே ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தச்சூழ் நிலையிலே அந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியராக இருந்த ஒருவருக்கு மட்டும் அவர்கள தலைமையாசிரியராகக் கொடுக்கா மல், தலைமையாசிரியருக்கு உரிய ஊதியம் கொடுக்கப்படுகிறதே தவிர அவர் தலைமையாசிரியராக அங்கே நிர்வகிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. இதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன், வணக்கம்,

மாண்புமிகு திரு. சி. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டதைப் போல, தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்து இந்தச் சட்டத்திலே என்னென்ன திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்கிற விளக்கங்களை எல்லாம் ஆசிரியப் பிரதிநிதிகளை நான் கேட்டு இருக்கிறேன். அந்த அடிப்படையிலே வேறு பல திருத்தங்களை நாம் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதற்கிடையே உச்ச நீதி மன்றத்திலே வழக்கு ஒன்று இருக்கிறது. சில பிரிவுகள் செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். அந்த வழக்கு எடுக்கப்பட்டு அதனுடைய முடிவு தெரிந்ததற்குப் பிறகு அதற்கு ஏற்ப நாம் மற்ற திருத்தங்களைக் கொண்டுவரலாம் என்று இருக்கிறோம். இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தம், ஒரு தனியார் பள்ளியிலே மாணவர்கள் குறைந்து விட்டால் அதன் காரணமாக ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்யலாம். ஆனால் அவர்களுக்கு வேலை தர வேண்டுமென்று அரசு விரும்புகிறது. ஆனால் அந்தச் சட்டத்திலே அதற்கு வழி வகை இல்லை. இப்போது மாசிலாமணி முதலியார் அவர்கள் பள்ளியிலே இருந்து — 1975 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன் — 5 ஆசிரியர்கள் இப்படி வேலை இழக்க நேரிட்டதன் காரணமாக அவர்களுக்காக எழுந்த ஒரு நேர்விலே தான் இந்தத் திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது 1975-லே இருந்து வந்தவர்களை எல்லாம் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாகத்தான் 1974-லே இருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்களுக்குச் செய்திருக்கிற உதவியை சட்ட பூர்வமாக ஆக்குகின்ற வகையிலே இந்தத் திருத்தத்தை பின் தேதியிட்டு நாம் அமுலுக்கு கொண்டு வருகிறோம். ஆகவே இந்தத் திருத்தத்தை ஆதரித்து சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 35/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

[பேரவைத் தலைவர்] [1986 மே 13

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 35/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஐ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

பேரவை இன்று மாலையிலும் கூடும்.

14-5-1986 அன்று புதன்கிழமை காலை வினாக்கள்-விடைகள்; அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு மற்றும் அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து முடித்த பின், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை நீக்குவது குறித்த அரசினர் தீர்மானம் முன்மொழியப் பெற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்று முடிவுற்றபின் அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவை மாலையிலும் கூடும். 15—5—1986 வியாழக்கிழமை அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்றப் படும்.

மற்றும் இதர அரசு அலுவல்கள் ஏதாவதேனும் இருப்பின் அவைகளும் எடுத்துக்கொள்ளப் பெற்றப் பின் பேரவையின் கூட்டம் அன்று முற்பகலுடன் முடிவு பெறும்.

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

1986 மே 13] [பேரவைத் தலைவர்]

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4—30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஐ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு 1986 (மே. செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1986) ஆய்வு செய்யப் பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உஉ) வேளாண் விளைப் பொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இந்த அவையில் எத்தனையாவது தடவை கொண்டுவருகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நிறைவு ஏற்படும்போது அவற்றை அரசாங்கம் கலைத்துவிட்டு எடுத்துக் கொள்வது, சூப்பர்ஸெஷன் என்ற நடவடிக்கை தொடர்ச்சியாக நடந்துவருகிறது. இங்கே கொடுத்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை காலமாக

** 1986 ஆம் ஆண்டு மே 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால் 1977-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பித்து இப்பொழுது 1986-ஆம் ஆண்டு மே மாதம் இந்தத் தேதி வரையில் ஒன்பது தடவைகள் இதே மாதிரி கலைத்துவிட்டு அரசாங்கம் அவற்றை எடுத்துக் கொண்டு அதிகாரிகளை வைத்துக் கொண்டு நடத்தும்படியான நடவடிக்கை தொடர்கிறது. ஒரு ஜனநாயக முறையில் இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு தேர்தல் நடத்தி அமைக்கப்பட வேண்டியதுதான் நியாயமானது, சரியானதும்கூட. விவசாய மக்களுடைய உற்பத்திப் பொருள்களை அவர்கள் அந்த முறையில் இலாபகரமாக அதைப் பயன்படுத்தி சந்தையில் விற்பனை செய்து அவர்களுடைய நிலைமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே அவர்கள் பிரதிநிதிகள் அதில் இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். ஆனால் ஏனோ இந்த ஒன்பது ஆண்டுகளாக தொடர்ச்சியாக இந்தக் கலைத்து அரசாங்கமே அதிகாரிகளை வைத்துக் கொண்டு நடத்திக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது, எதனால் இந்த நிலைமை தொடர்கிறது என்று நமக்குப் புரியவில்லை. போன தடவைகூட இம்மாதிரி சட்டம் கொண்டுவந்தபோது அந்தச் சட்டத்தை இங்கே பிரேரேபிக்கவே வேண்டாம், நீங்கள் அதை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அந்தச் சமயத்தில் நான் பேசியது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும். இந்த மாதிரி கலைப்பு என்பதுகூட, அரசாங்கம் இதை ஏற்றுக் கொண்டு நடத்துவது என்றால்கூட, இப்படி வைத்துக் கொண்டு போவது ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகக்கூடாது என்றுகூட சொல்லப்படுகிறது. ஆனால் 1977 மே மாதத்திலிருந்து எடுத்துக் கொண்டால் இது பத்தாவது ஆண்டு ஆகவில்லையா? இப்படி, இந்த மாதிரியான நடவடிக்கை ஏன் என்று புரியவில்லை. இது மிகவும் தவறானது. ஜனநாயக முறைக்கு ஒத்து வராதது; அப்படிப்பட்ட நடவடிக்கை இது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

அண்மையில்தான் நம் தமிழ்நாட்டு மக்கள் ஒரு பெருமூச்சு விட்டமாதிரி, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடி தேர்தல்கள் எல்லாம் 10 ஆண்டுகளுக்கு மேல் முடக்கி வைக்கப்பட்டு இருந்த நிலை மாறி தேர்தல் நடைபெற்று, இப்போது அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்த சபைகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த நாடு முழுவதும் இன்றைக்கும் கூட்டுறவு சங்கஸ்தாபனங்களில் தேர்தல் கிடையாது. அதற்காக ஒரு விரிவான விளக்கமான சட்டத்தை இந்த அவையிலே நிறைவேற்றினார்கள். என்ன முறையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினோம் என்பது நமது சட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதற்குப் பிறகும்கூட இன்றைக்கும் கூட்டுறவு சங்கங்களில் தேர்தல் கிடையாது. அதற்கு வேண்டிய காரியங்களை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம், ஆராய்ந்து கொண்டிருக்கிறோம், விளக்கமான, விரிவான ஒரு

காம்ப்ரஹென்சிவ் சட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்று ஒவ்வொரு தடவையும் சொல்லப் படுகிறது. ஆனால், எத்தனை காலம் இந்த அரசு இதை நீட்டித்துக் கொண்டே இருக்குமோ, தெரியவில்லை; கூட்டுறவு சங்கங்களில் தேர்தல் கிடையாது. அதே மாதிரி இந்த மார்க் கெட்டிங் கமிட்டியிலும் தேர்தல் கிடையாது. மார்க்கெட்டிங் கமிட்டி என்பது ஒரு முக்கியமான அமைப்பு. விவசாயிகளுடைய பிரச்சினைகளில் ஓரளவு தீர்வு காண்பதற்கும், அவர்களுக்கு பாது காப்பு கிடைப்பதற்கும் மக்களுடைய பிரதிநிதிகள் இருந்து நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். அப்படியிருந்தும், அந்தக் கமிட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பதற்குப் பதிலாக, அந்தக் கமிட்டி முழுவதையும் அரசாங்கமே கலைத்து விட்டு, தன் கையில் எடுத்துக் கொண்டு, அதை நடத்துவது என்பது தொடர்ந்த நடைமுறையாகி விட்டது. 10 ஆண்டு களாக இந்த நிலைமை நீடிக்கிறது. இப்போது மத்திய அரசாங் கம் 1984-ஆம் ஆண்டு இந்த கமிட்டி அமைப்பதற்கான சட்டத் தைப் படி கொண்டு வரவேண்டும் என்று சில ஆலோசனைகள் கூறியிருப்பதாகவும், அந்த ஆலோசனைகளை இந்த அரசு இன் னும் பரிசிலித்துக் கொண்டிருப்பதாகவும் அடிஷனலாக இன்னொரு காரணம் சொல்லப்படுகிறது. என்ன காரணமானாலும் சரி, இந்தச் சட்டத்தை நீட்டித்துக் கொண்டே போய், அதிகாரிகளை வைத்துக் கொண்டு, மக்கள் பிரதிநிதிகள் அதை நடத்த விடாமல் விட்டுவிடுவது, தேர்தல் இல்லாமல் விட்டுவிடுவது என்பது சரி யல்ல. ஒவ்வொரு தடவையும் அதைக் கொண்டு வரும்போது, ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்வது என்பது கொஞ்சமும் சரியல்ல. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியை அமைப் பதற்கு என்ன ஆலோசனைகள் இருக்கிறதோ, அந்த ஆலோசனை களை ஏற்று, காரியத்தை செய்ய வேண்டும்.

இதற்கு நான் ஒரு திருத்தப்பிரேரேபணையும் கொடுக்கவில்லை. இருந்தாலும்கூட, அரசாங்கத்தையும், அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இப்போது இதை ஒரு வருஷத்திற்கு நீட்டிக்கப் போகிறீர்கள், இந்த மாதிரி ஒவ் வொரு வருஷமாக நீட்டித்துக் கொண்டு போகாமல், மத்திய சர்க்கார் கொடுத்திருக்கும் ஆலோசனைகளை உடனடியாக ஆராய்ந்து, அதற்கு முன்னதாகவே தேர்தலை நடத்தி, ஒரு மார்க்கெட்டிங் கமிட்டியை அமைக்க வேண்டும். அப்படி அமைச் சர் அவர்கள் அமைப்பார்களா? அல்லது இன்னொரு வருஷம் கழித்து மறுபடியும் இதேமாதிரியான நிலைமையை உருவாக்கு வார்களா என்பதை அமைச்சர் அவர்கள் பதிலில் நமக்கு எடுத்துச் சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, தேர்ந் தெடுக்கப்பட்ட அமைப்பை அமைக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமையை நான் ஒத்துக் கொள்ளவில்லை. இது மிகவும் தவறானது என்பதைச் சுட்டிக் காட்டி நான் அமர்கிறேன்.

(மாலை 4–40)

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கடுமையாக நான் ஆட்சேபிக்கிறேன்.

பொதுவாகவே ஏனோ இந்த வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தை மேலும் திருத்துவது மட்டுமல்ல, தேர்வு செய்யப்படுகின்ற அமைப்புகளின் மீது ஒரு தீராத எதிர்ப் புணர்ச்சி மாநில அரசிற்கு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்பதை ஒவ்வொரு விஷயத்திலும் நம்மால் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

இங்கே இந்த மார்க்கெட்டிங் கமிட்டியைப் பொறுத்த வரையில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால், அது நடைபெற வேண்டும் என்பதை இந்த மாநில அரசு தொடர்ந்து கடந்த 10 ஆண்டுகளாக தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறது. எந்த ஒரு அமைப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளால், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் பிரதிநிதிகளால் நடத்தப்பட வேண்டுமென்ற நல்ல ஜனநாயகப் பண்பு ஏனோ இந்த அரசாங்கத்தால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்படுகின்ற அமைப்புகளை எதிர்க்க நெற்றிக் கண்ணை திறப்பது ஒன்றைத்தான் நிரந்தரமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கருதுகிறது என்று நான் கருதுகிறேன். இங்கே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கக் கூடிய சட்டமுன்வடிவில் கூட, தொடர்ந்து ஓராண்டிற்கு தனி அதிகாரிகள் கீழ் இந்த நிர்வாகம் ஒப்படைக்கப்படுவதற்கு சொல்லப்பட்டிருக்கக் கூடிய காரணங்கள், சொத்தையான நொண்டி காரணங்களே தவிர, உண்மையாக சொல்லப்பட்டிருக்கக் கூடிய காரணங்கள் அல்ல. அப்படி அதே மாதிரி சட்டப் பிரிவில் பல்வேறு திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று அரசு கருதியிருந்தாலும்கூட, அதற்காக தேர்தலை தள்ளி வைக்க வேண்டிய அவசியம் இல்லை, நிச்சயமாக இந்த நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் கூட, இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் மேலும் ஓராண்டு காலத்திற்கு இந்த அதிகாரியின் கீழ் இந்த நிர்வாகத்தை ஒப்படைப்பது முறையான செயல்முறை ஆகாது. இப்போதும் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, ஓராண்டு காலத்திற்கு என்று தள்ளி வைக்கிறீர்கள். அத்தோடு, இந்த ஓராண்டு காலத்திற்குள் தான் இந்தத் தேர்தல் நடத்துவது பற்றி, அதிலே ஒரு விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லியாக வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரை, இத்தகைய

அமைப்புகளுக்கு தேர்தலே ஒரு போதும் நடத்தப்படாது என்ற ஒரு நிலையை மேற்கொண்டிருக்கிறார்களா? அல்லது ஒரு ஆண்டு காலத்திற்குள் இந்தத் தேர்தல், இந்த வருடத்தில், இந்த மாதத்தில் நடத்தப்படும், தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் இந்த அமைப்புகள் நிர்வகிக்கப்படும் என்ற உறுதிமொழியையாவது தரமுடியுமா என்பதைத்தான் மாநில அரசாங்கத்தின் சார்பில் அமைச்சரிடமிருந்து எதிர் பார்க்கிறேன். அமைப்புகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகின்ற இந்த சட்டமுன்வடிவை இறுதியாக இனிமேல் கொண்டு வராது, அதுமட்டுமல்லாமல், இனிமேல் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக தேர்வு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் வராது இருக்கின்ற முறையை உருவாக்காமல் இருப்பதற்குரிய உறுதிமொழியைத் தர வேண்டுமென்று சொல்லி, இத்தகைய நடைமுறைகளுக்கு இத்தோடு இந்த அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது நான் திருத்தம் கூட கொடுத்திருக்கிறேன். ஓராண்டு காலத்திற்கு இந்த மார்க்கெட்டிங் கமிட்டியை, தனி அதிகாரி பொறுப்பில் நீட்டிக்க வேண்டுமென்று அமைச்சர் இந்த ஆண்டு மட்டுமல்ல, கடந்த ஆண்டும் கேட்டார், எனக்கு ஒரு ஆச்சரியம், மத்திய சர்க்கார் அனுப்புகிற மாடல் பில் என்கின்ற பில், அப்படி என்ன பெரிய பைபிளா, அல்லது குரானா? அந்த மாடல் பில்லை அப்படியே ரிசர்ச் பண்ணி அதிலே இருப்பதில் நல்லதை எல்லாம் எடுத்து, இதிலே இன்கார்ப்போரேட் பண்ண வேண்டும். இது ஒரு சாதாரண மாடல் பில், 1984 டிசம்பரில் இந்த பில் அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இன்கார்ப்பொரேட் பண்ண வேண்டும் என்பது தான் உண்மையான ரீசனா? இப்படி தள்ளிப் போடுவதினாலும், தனி அதிகாரிகளிடம்இந்த பவரைக் கொடுப்பதினாலும்என்னஆதாயம் என்ன நன்மை இந்த சர்க்காருக்கு? ஆகவே நான் கேட்கிறேன். எலக்டட் பாடி மேலே உங்களுக்கு நம்பிக்கையில்லை, போகப் போக சட்டசபையைக் கலைத்தால் கூட ஆச்சரியப்பட மாட்டேன். அப்படிப்பட்ட ஒரு நிலை இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. எலக்டட் பாடியால் இந்தத் துறை மட்டுமல்ல. காலையிலே கூட உள்ளாட்சித்துறை பற்றிப் பேசினார்கள். ஒவ்வொரு துறையிலும் எலக்டட் பாடி என்றாலே நமக்கு கசக்கிறது. மேலும் மார்க்கெட்டிங் கமிட்டியில் எக்கச்சக்கமாக பணம் டீல் பண்ணுவதாக நான் கேள்விப்படுகிறேன். 'ஹியூஜ் அமௌண்ட் ஹேண்டில்' பண்ணுகிறதாகத் தெரிகிறது. காட்டன், மிளகாய், புளி போன்று பல்வேறு விவசாய உற்பத்தியாளர்கள் இதனாலே பாதிக்கப்படுவதாகவும், அதிகாரிகள் இதை வைத்துக் கொண்டு, ஆதாயம் தேடுவதாகவும், கொள்ளை லாபம் அடிப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன்.

ஆகையால், அந்த 'மாடல் பில்லிலே' இருக்கிற சப்ஸ்டென்ஸை, தேவைப்படுவதை நாம் எடுத்துக் கொண்டு, இன்கார்ப்பரேட் செய்வதற்கு ஓராண்டு தேவையா? இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களை மாதிரி 4 பேரை உட்கார வைத்து செய்தால், 1 மாதத்தில் செய்து விடலாம், ஓராண்டு, ஓராண்டு என்று சொல்லி, ஆண்டுகளை நீடிப்பது சரியல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியில் மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிக்காத ஒரு மோசமான நிலை ஏற்படுகிறது. ஆகையால், தவறுகள் அங்கே நடைபெறுவதாக கருத்து இருக்கிறது. தவறுகளைக் களைவதற்கு, மக்கள் பிரதிநிதிகளை உருவாக்குவதற்கு இந்த அரசு முன் வர வேண்டும்.

அதனால் அமைச்சர் அவர்கள், இந்த பில்லை நான் கொடுத்திருக்கிற அமென்ட்மென்ட் பிரகாரம்—மே வரைக்கும் இருக்கிறது என்று கருதுகிறேன். மே வரை இருக்கிறது, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்கள் போதும். திருத்தம் கூட; 3 மாதம் போதும் என்றுதான் கொடுத்திருக்கிறேன். அதாவது Instead of one year, three months என்று கொடுத்து இருக்கிறேன்.

மூன்று மாதங்கள் என்ற திருத்தத்தை ஏற்று, மூன்று மாதத்திற்குள்ளாக மத்திய அரசினுடைய மாடல் பில்லை, இன்கார்ப்பரேட் செய்து, 'காம்ப்ரஹென்சிவ் பில்' ஆக்கி, தேர்தலை உடனடியாக மார்க்கெட்டிங் கமிட்டிக்கு நடத்தவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆக, இந்த மசோதா திருத்தத்தோடு கொண்டு வரப்படுமானால், நான் வரவேற்பேன். ஏனென்றால் விரைவிலே மக்கள் பிரதிநிதிகள் அங்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும், ஏதுவாக இருக்கும் அமைச்சர் அவர்கள் செய்வாரா? கூட்டுறவுத் துறை அமைச்சராக திரு. பொன்னையன் இருந்தபோது நான் ஒரு திருத்தம் கொடுத்தேன். பெருந்தன்மையோடு, அதை இணைத்துக்கொண்டு, அஃபிஷியலாக அப்பபேதே எடுத்துக் கொள்ளவில்லையெனினும் சட்டமாக இதே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் நல்லவர். நல்லதைச் செய்வதிலே நாட்டமுள்ளவர். ஆகவே என்னுடைய திருத்தத்தை ஏற்று, அவர் இந்த பில்லை உடனடியாக, அந்தக் கமிட்டி உருவாக்குவதற்குரிய முறையில் கொண்டு வருவார் என்று நம்புகிறேன். அதைச் செய்வார் என்று நம்பி ஓராண்டு என்பதை எதிர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது, மாண்புமிகு உறுப்

1986 மே 13] டாக்டர் கா. காளிமுத்து

பினர் பெருமக்கள் ரமணி அவர்களும், சுப்பராயன் அவர்களும், பொன்னுரங்கம் அவர்களும் வழங்கியிருக்கிற கருத்துக்களிலே இருக்கிற உணர்ச்சியை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, வேளாண் விளை பொருள் அங்காடிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்து அதனை நடத்திச் செல்வதுதான் விவசாயப் பெருமக்களுக்கு நலம் பயக்கும் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இந்த அரசுக்கு இல்லை.

திரு பொன்னுரங்கம் சுட்டிக்காட்டியதைப் போல, தனிஅதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுக்கின்ற காரணத்தினால், அரசாங்கத்திற்கு எந்த ஆதாயமும் இல்லை. ஆகவே, அப்படி அரசுக்கு எந்த ஆதாயமும் இல்லை என்கிறபோது, நீட்டிப்பு கொடுக்க வேண்டிய இன்றியமையாமை ஏன் ஏற்படுகிறது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். நான் இங்கே தெரிவிப்பது, மத்திய அரசு அனுப்பியிருக்கிற இந்த மாதிரிச் சட்ட முன்வடிவிலே இருக்கிற சில நல்ல அம்சங்களை நாம் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் வேளாண் விளை பொருள் அங்காடிகளைப் பொறுத்த வரை மாநில அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியலுக்குள்ளே இருக்கிற சட்டம்தான். ஆகவே, அதிலே இருக்கிற நல்ல அம்சங்களை ஏற்றுக் கொண்டு நாம் ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வர இருக்கிறோம்.

இப்போது இருக்கிற சட்டத்தின்படி வேளாண் விளை பொருள் அங்காடிகளை நாம் நடத்திச் செல்வது, அந்த வகையிலே தேர்தலை நடத்துவது என்பது பொருத்தமாக இராது. ஏனென்றால், விவசாயப் பெருமக்கள், வியாபாரிகள், அனைவருமே வேளாண் விளை பொருள் அங்காடிகளிலே வாக்காளர்களாக, உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, தேர்தல் நடத்த வேண்டும் என்றால், ஏறத்தாழ பொதுத் தேர்தலைப் போலத் தான் நடத்த வேண்டியிருக்கும். ஒவ்வொரு விளை பொருள் அங்காடிக் குழுவும் தேர்தலுக்காகவே, பல மடங்கு பணத்தைச் செலவு செய்யுமானால், ஆக்கபூர்வமான பல செயல் திட்டங்களுக்கு பணம் இல்லாத சூழ்நிலை ஏற்படும். அதை எல்லாம் கருத்திலே கொண்டு தான், மராட்டிய மாநிலம் போன்ற மற்றமாநிலங்களிலே இருப்பதைப்போல, நாம் இங்கே ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்தின் அடிப்படையில் நான் ஒரு உறுதி மொழியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அந்த ஒருங்கிணைந்த சட்ட முன்வடிவு வரும் என்ற உறுதியைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவை துணை தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2. சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''In clause 2, *after* ''(Tamil Nadu Act 23 of 1959)'', *insert* the following :—

(hereinafter referred to as the principal Act).

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 2, *for* the words ''ten years'' *substitute* the words ''nin years and three months''.

திரு. ம. ஆபிரகாம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

(மாலை 4-50)

திரு. ப. பொன்னுரங்கம் : அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"In clause 2, after "(Tamil Nadu Act 23 of 1959)", *insert* the following :—

"thereinafter referred to as the principal Act)".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

புதிய பிரிவு 3.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

After clause 2, add the following :—

"3. *Persons appointed to carry out the functions of certain market committees to continue.*— (1) Not-withstanding anything contained in the principal Act or in any other law for the time being in force, the persons appointed under clause (*a*) of sub-section (3) of section 24 of the principal Act and holding office immediately before the 11th day of May 1986 (hereinafter in this section referred to as the said persons) shall continue to hold office and carry out the functions of the market committees for such period or periods as the State Government may specify under sub-section (1) of section 24 of the principal Act, as amended by this Act.

(2) Anything done or any action taken by the said persons during the period commencing on the 11th day of May 1986 and ending with the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette* shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

புதிய பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In clause 1, for sub-clause (2) substitute the following (2) It shall be deemed to have come into force on the 11th day of May 1986."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1986), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஊஊ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை எதிர்ப்பதற்கான மூலகாரணமே

**1986 ஆம் ஆண்டு சனவரி 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(திரு. ப. பொன்னுரங்கம்) [1986 மே 13

இதைக் கொண்டு வந்த முறையை எதிர்த்துத்தானே தவிர, சட்டத்தைப்பற்றி அல்ல. நான் இந்தச் சட்டத்தின்மீது பலமுறை பேசியிருக்கிறேன். 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியோடு லேப்ஸ் ஆகிறது, பிறகு நீங்கள் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்தது மாதிரி கொண்டு வருகிறீர்கள். 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ஆம் தேதியிலிருந்தே, மணிலென்டர்ஸ் இருக்கிறார்களே அவர்கள் கோர்ட்டுக்குக்கூடப் போகலாம், பெட்டிஷன்கூடப் போடலாம். போடக்கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் அந்தத் தேதியில் சட்டமே இல்லை. Atleast you could have issued an Ordinance. இந்தச் சட்டத்தைப் பாஸ் செய்கின்ற வரையில் அந்தக் கட்டுப்பாடு இல்லை; in between the dates Act இல்லை. ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து, கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்கிறீர்கள். ஆனால் சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் போய் இருக்கிறார்கள் என்று தெரிகிறது, பெட்டிஷன் போட்டிருப்பதாகத் தகவல். இதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். ஏழைகளைப் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டத்தை முறையாகக் கொண்டு வந்திருக்க வேண்டுமென்றால் என்ன செய்திருக்க வேண்டும்? 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் தேதியிலேயே கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படி அந்த நேரத்தில் சட்டமன்றம் இல்லை, செஷன் இல்லை, ஆகவே கொண்டு வர முடியவில்லை என்று சொன்னால், அட்லீஸ்ட் ஒரு ஆர்டினன்ஸையாவது போட்டிருக்கலாம், அதற்கும் கவர்னருக்கு ரொம்ப வேலை, அதனால் ஆர்டினன்ஸ் போட முடியவில்லை என்று சொன்னால், நாம் பல சட்டங்களை ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுத்து எக்சிகியூட்டிவ் அத்தாரிட்டீஸ் மூலம் உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த முறையிலேயாவது செய்திருக்கலாம். ஆனால் இப்படியெல்லாம் உரிய நேரத்திலே இதைக் கொண்டு வராத காரணத்தினாலே பெரும்பாலானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல மணிலென்டர்ஸ், பான்புரோக்கர்ஸ் ஹைகோர்ட்டிலே அப்பிளிகேஷன் எல்லாம் போட்டிருப்பதாகத் தகவல். இந்தச் சட்டத்தின் மூலத் தன்மைகளையே இப்படி நாம் முறித்துவிடுகிறோம். எந்த ஏழை மக்களுக்கு, எந்தப் பாமர மக்களுக்கு, எந்த வருவாய் குறைந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கொண்டு வருகிறோமோ அந்தக் குறிக்கோளே அடிபட்டுப் போய்விடுகிறது. up to 23rd August 1985 என்று சொல்கிறீர்கள். 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் தேதி இந்தச் சட்டமே கிடையாது. இந்தச் சட்டம் இல்லையென்றால் பான் புரோக்கர்ஸ், மணிலென்டர்ஸ் ஆகியவர்கள் தங்களுக்கு ரிலாக்சேஷன் வேண்டும், சட்டம் இல்லை, அடமானம் பெற்ற பொருட்களை ஏலத்தில் விடலாம் என்று சொல்லிப் போனால் அது செல்லுபடிகூட ஆகலாம். இந்த எட்டு மாதங்களில் என்னென்ன தில்லுமுல்லுகள் நடந்திருக்கும் என்பதை சட்ட அமைச்சரவர்கள் அறிவார்கள். ஆக, ஒவ்வொரு முறையும் இப்படிப்பட்ட இடைவெளி தந்துதான் வந்து இருக்கிறது.

1986 மே 13]

3 மாதம், 6 மாதம், இப்பொழுது 8 மாதம், இன்னும் கொஞ்சம் நாள் போனால், அடுத்து, 1 வருடம் கூட வரும் போல் இருக்கிறது. ஆகவே, இப்படி இடைவெளி வராமல் இதைப் போலச் சட்டங் களைக் கொண்டு வரும்போது, (Eaither the Executive authority or the Governer., or the Assembly) இதுபோன்ற சட்டங்களை பாஸ் பண்ணவேண்டும். அதற்காகத்தான் எதிர்ப்பே தவிர, இந்தச் சட்டத்திற்கு அல்ல.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணம் திருத்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், இந்தச் சட்ட முன்வடிவு, எந்த நோக்கத்திற்காக, 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டதோ, அதிலே ஒரு அடி கூட முன்னேற்றம் ஏற்படவில்லை. அந்த அளவுக்கு அது கவனிக்கப்படாத ஒன்றாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற் குக் கொண்டு வரக்கூடிய முறையிலேதான் இதிலே கருத்தைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, 1980 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 2,400 ஆண்டு வருமானம் உள்ளவர்கள், தனியார்களிடம் பெற்றிருக்கக்கூடிய கடன்களிலிருந்து நிவாரணம் பெற வழிவகை செய்யப்பட்டது. பிறகு, 50/82 என்ற சட்டத்தின்கீழ், 1982 ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டு வருமானம் ரூ. 4,800 பெறுபவர்கள் கடன் நிவாரணம்பெற, இவர்கள் தனியார்களிடம் பெற்றிருக்கக்கூடிய கடன்களிலிருந்து நிவாரணம் பெற, வகை செய்யப்பட்டுவிட்டது.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் குறிப்பிட்டதைப் போல், 24, ஆகஸ்ட் 1985 லிருந்து சட்டமே இல்லாதிருந்து, அவசரச் சட்டமும் இல்லா மலிருந்து, இப்பொழுது இந்தச் சட்டத்தைப் பின்தேதியிட்டு அமுலுக்குக் கொண்டு வருவதற்கிடையிலே பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல இடங்களில் ஏலம் விடப்பட்டிருக் கின்றன. ஏழைகளுடைய நகைகள், பண்ட பாத்திரங்கள் எல்லாம் ஏலம் விடப்பட்டு, செட்டில் செய்யப்படுகின்றன. ஆனால், மனத்திருப்திக்காக, நோக்க காரண விளக்கங்களிலே, தமிழ்நாடு சட்டம் 50/82-ன் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண் ணிக்கையானது மிகவும் குறைவாக உள்ளது என்று தெரிய வந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆக, விண்ணப்பங்கள் குறைவாக இருக்கிற காரணத்தாலே, விண்ணப்பம் கொடுப்பதற் கான காலத்தை நீட்டிப்பதுதான் இந்தத் திருத்தத்தினுடைய முக்கிய நோக்கமாக இருக்கிறதே தவிர, கடன் பெற்றவர்களுக்கு நிவாரணத்தை அளிக்கக்கூடிய வகையில் இது ஏற்படுத்தப்பட வில்லை. எந்தக்கால அளவுக்குள் மனு செய்ய வேண்டும் என் பதை இன்னும் அறியாமல் இருக்கிறார்கள், கிராமத்திலே யிருக்கிற சாதாரண ஏழைகள், எந்தக் காலத்திற்குள் மனுசெய்து கொள்வது என்பதுபற்றி அறியாமல் இருக்கிறார்கள். அவர் களுக்கு அவகாசம் கொடுப்பதற்கு இந்த நீடிப்பு கொடுக்கிறோம்

என்று சொல்கிறார்கள். 1982 லிருந்து கிட்டத்தட்ட 4, 5 முறைகள் திருப்பி, திருப்பி அவகாசம் தருகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் விஷயம் என்ன? அந்த அளவு குறுகிய அந்த மனுக்கள் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது என்ற நிலைமை ஏற்பட்டிருக்குமானால் கொடுத்த மனுக்களுக்கு நிவாரணம் கிடைத்திருக்குமானால், மற்றவர்களும் மனுக்கள் கொடுக்க தூண்டுதல் ஏற்படுத்தி இருக்க முடியும். அப்படிப்பட்ட நிலையில், தாசில்தார்களிடம் மனுக்களைக் கொடுத்து, தாசில்தார்கள் மனுக்களை மூட்டை கட்டி, பையில் வைத்து, அதை விசாரித்து, நடவடிக்கை எடுக்காமல் இருக்கிற காரணத்தால், மனு கொடுப்பதால், எந்த நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை. அந்த பான் புரோக்கர்களும் கடன் வாங்கியவர்களும் ஏதாவது பேரம் பேசிக்கொண்டு கடனை ஓரளவு தள்ளுபடி செய்து, செட்டில் செய்து விடலாம் என்ற அளவுக்கு, சாதாரண ஏழைகள் கொடுத்திருக்கிற மனுக்களின்மீது இதுவரை எத்தனை மனுக்கள் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன, அதனால் பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர்கள். தொகை எவ்வளவு என்ற விவரத்தை அரசு அறிவிக்குமானால், மற்றவர்கள் மனு கொடுக்க வாய்ப்பு ஏற்படும். எனக்குத் தெரிந்தவரை 6 முறைகள், 6 மாதம் 6 மாதம் என்று மனு கொடுக்க அவகாசம் நீட்டிக்கப்படுகிறதே தவிர அந்த மனுக்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவகாசத்தை நிர்ணயித்து, அதைத் தீர்த்து வைக்க நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படாமல் இருக்கிறது. தாசில்தார் இன்கம் சர்ட்டிபிகேட் வழங்கவேண்டியிருக்கிறது. அதே தாசில்தார்தான் நீதிபதியாகவும் இருக்கிறார்.

(மாலை 5–00)

எனவே தாசில்தார் ரூ. 4,500 க்குள் வருமானம் உள்ளவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். அதற்கு பிறகு அவரே விசாரணை நடத்தவேண்டும். அவரே மனுக்களை வாங்கி வைக்க வேண்டும். எல்லாவற்றையும் அவரே கட்டி வைத்திருக்கிறார். ரெகுலர் தாசில்தார் பொறுப்பில் இருப்பதனால் பல வேலைகளில் அவர்களால் இதை கவனிக்க முடியவில்லை. சம்பிரதாயமாக சாதாரண மக்களுக்கு, எந்த ஒரு நிவாரணமும் இல்லாத ஒரு கடன் நிவாரணச் சட்டமாகத்தான் இது இருக்கின்றதே தவிர, நடைமுறையில் வந்திருக்கின்ற மனுக்களையாவது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பைசல் செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற நடவடிக்கையை எடுத்து, அதற்கு பிறகு மனு போடாதவர்களை மனு போடுங்கள் என்று சொல்லுகின்ற முறைதான் சரியாக இருக்க முடியும். அந்த முறையிலே இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையான நோக்கத்தை இன்று நடைமுறைப்படுத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது. சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி இந்தச்

1986 மே 13] [திரு பொ. உத்திராபதி]

சட்டத்தினுடைய அடிப்படையான நோக்கத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவகாசம் கொடுப்பதினால் எந்தவித பயனும் இருக்காது. அந்த அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுகின்ற சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கோரி இந்த திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரண திருத்தகள் சட்டத்தின் மீது நான் ஒரு சில யோசனைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலே நான் இந்த சட்டத்தை வரவேற்கிறேன். முதன் முதலில் இந்த சட்டமன்றத்தில், இந்த கடன் வாங்கியவர்கள், கடன் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் வாழக் கூடியவர்களுக்கு இந்த சலுகை அளிப்பதற்கு சட்டம் கொண்டு வந்தோம். சட்டம் கொண்டுவருகின்றபோது எல்லோருமே அதை ஆதரித்தோம். தொடர்ந்து சட்டத்தை திருத்தி வருகிறோமே தவிர, இந்த சட்டத்தினால் பலன் அடைந்தவர்கள் எவ்வளவு பேர் என்று பார்த்தால், அநேகமாக நம்முடைய அரசு எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இல்லை. காரணம் இன்றைக்கு சாதாரணமாக வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் விவசாயத் தொழிலாளர்கள்தான். தன் கையில் இருக்கக் கூடிய தவலை, செப்புக்குடம், தோடு இப்படி நகைகளை விற்று வந்தார்கள். ஒரு விவசாயத் தொழிலாளிக்கு கூலி ரூ. 10 என்று இன்றைக்கு இருக்கிறது. குடும்பத்தில் 8 பேர்கள் இருந்தால், இந்த 5 பேரும் ஒரு வருடம் வேலை செய்ததாக கணக்கு போட்டுப் பார்க்கின்றபோது 5,000, 6,000 என்று கணக்கிலே வந்துவிடுறது. விவசாயத் தொழிலாளிகளுக்கு, கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு ஒரு வருடம் பூராவும் வேலை கிடைக்கிறதா என்று பார்த்தால் விவசாயத்தில் குறைந்த பட்சம் 120, 140 நாட்களுக்கு மேலே அவர்களுக்கு வேலை கிடையாது. தாசில்தார் இந்த வேலையை, நாள் கணக்கில் போடுகிறார். வருமானத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட இந்த சட்டத்தின் பெயரால் கிராமப்புறத்தில் வாழக்கூடியவர்கள் பெரும்பகுதி பேர்கள் இந்தச் சலுகையை பெற்றிருக்கமுடியும். ஆனால் இன்றைக்கு இந்த அளவுக்கு சலுகை பெறுவதற்கு வாய்ப்பு கிடையாது. லட்சக்கணக்கில் மனுக்களைப் பெற்றார்களே தவிர, அந்த மனுக்களை இன்றைக்கு பூரணமாக பரிசீலனை செய்து இந்த நிவாரணம் யாருக்கு கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கிடைக்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு அதிகாரிகளுடைய நடவடிக்கை அமையவில்லை. யாருக்கு நிவாரணம் கிடைக்கிறது என்றால் இப்படி ஒரு தவறான புள்ளிவிவரம் போட்டு கணக்கு காண்பித்ததன் மூலமாக யாருக்கு கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கிடைக்காமல், அந்த அடகு பிடித்தவர்களுக்குத்தான் அதிகமான நிவாரணம் கிடைக்கக் கூடிய அளவிற்கு இன்றையதினம் இந்த நிவாரணம் சென்று

கொண்டிருக்கிறது. சட்டம் நல்ல சட்டம். அமைச்சருடைய நோக்கம் நல்ல நோக்கம். இதை நிறைவேற்ற வேண்டுமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நல்ல நோக்கத்தோடு இந்த நிவாரணம் யாருக்கு கிடைக்கவேண்டுமோ அவர்களுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், திருத்தப்பட்ட சட்டப்படி அந்த மக்களுக்கு போய் சேரும். அந்த அடிப்படையில் இந்த மனுக்களை பைசல் செய்வதற்கு, ஏதாவது புதியதாக ஒரு மாற்றத்தை கொண்டுவரவேண்டும். இந்த அதிகாரிகளுக்கு முழுமையான அதிகாரத்தை வழங்காமல், யார் நிரூபிக்க வேண்டுமென்றால், கடன் பெற்றவர் வருமானத்தை நிரூபித்து, அவர் கடனிலிருந்து விடுபடவேண்டுமே தவிர, அதிகாரி மூலமாக இந்த வருமானத்தினுடைய கணக்கை போடச் சொன்னால் - உங்களுக்கு தெரியாத விவரத்தை நான் சொல்லவில்லை-ரெவின்யூ துறையானாலும் எந்தத் துறையாக இருந்தாலும் கீழே இருக்கக்கூடிய அதிகாரிகளால் எந்த அளவுக்கு கடனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது என்று தெரியவில்லை.

எனவே அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து எந்தெந்த ஜில்லாக்களில், எந்தெந்த தாலுக்காக்களில் இந்த கடன் நிவாரணம் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோமோ உண்மையிலேயே அவர்களுக்கு போய் சேருகிறதா, அப்படி போய் சேரவில்லை என்றால் அதற்கு என்ன காரணம் இடையில் இந்தத் தடங்கலுக்கு யார் காரணம் என்று அறிய கூட்டத்தை கூட்டி இந்தத் தடங்கல்களை அகற்றி உண்மையிலேயே யாருக்கு நிவாரணம் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி திருத்த சட்டத்தை ஆதரித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசுகிறபோது ஏழை, எளிய மக்களின் நலனுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் பின்னோக்கி ஒரு தேதியிட்டு கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தால் இடைப்பட்ட இந்தக் காலத்தில் அந்த மக்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்பட்டிருக்காதா என்று வினா தொடுத்தார்கள். இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 1976-ஆம் ஆண்டு முதன்முதலாகக் கொண்டு வரப்பட்ட கடன் நிவாரணச் சட்டம் போதிய அளவுக்கு மக்களுக்குப் பலனை ஈட்டவில்லை என்ற நோக்கத்தோடு அதைப்பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு தான் இதற்கு மாற்றாக 1979-ஆம் ஆண்டு நகர்ப்புறத்தில் இருக்கிற, கிராமப்புறத்தில் இருக்கிற நலிந்த பிரிவினர் 2,400 ரூபாய்க்குக் கீழ் வருமானம் உள்ளவர்கள் அனைவருக்

கும் பலன் கிட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதை அடுத்து 1980-ஆம் ஆண்டு 4,800 ரூபாய்க்குக் கீழ் வருமானம் உள்ள நகர்ப்புறத்தில் உள்ள, கிராமப் புறத்தில் உள்ள நலிந்த பிரிவினருக்குப் பலன் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு சட்டம் கொண்டு வரப்பட்டது.

அதன்பிறகு 6 மாதத்திற்கு ஒரு முறை இந்தச் சட்டம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது. ஆனால் அப்படி நீட்டிக்கப் படுகிறபோது இடையிலே அவ்வப்போது சற்று காலதாமதம் ஏற்பட்டு பின்னோக்கி, ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்பட்டதால் பாதிப்பு ஏற்படாதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் கேட்டார்கள். அப்படி பின்னோக்கி இந்தச் சட்டத்தைச் செல்திறன் ஆக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் ஒவ்வொரு முறையும் இந்த சட்ட நீட்டிப்புக்கு மத்திய அரசினுடைய அனுமதியை நாம் பெறவேண்டி இருக்கிறது. மத்திய அரசின் அனுமதி பெறுகிற நடவடிக்கை எடுக்கிறபோது சிறிது காலதாமதம் ஆகிவிட்டது. ஆனால் தற்போது கூட மத்திய அரசினுடைய அனுமதி நமக்குக் கிடைத்தவுடன் அதாவது கிடைத்த ஒருவார காலத்திற்குள் சட்டமன்றம் கூடுகிற நோட்டிபிக்கேஷன் வந்துவிட்ட காரணத்தால் சட்டமன்றத்தில் நிறைவேற்றவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்ட காரணத்தால் அந்த அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப் பட்டிருக்கிறது. பின்னோக்கி போடுகிறபோது இந்த இடைப் பட்ட காலத்தில் அதாவது இந்தச் சட்டம் செயலில் இல்லாத காலத்தில் ஏழை எளியவர்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை மட்டும் அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். தொடர்புடைய அதிகாரிகளோடு இது குறித்து கலந்து பேசி தக்க நடவடிக்கையை நிர்வாக ரீதியாக அரசு எடுத்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்தில், ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்த அந்த கால கட்டத்திற்குள் யாரும் ஏழை, எளியவர்களை பாதிப்பது என்பது நடக்க வில்லை. (First action at tne Administr tive level of the Government.) நிர்வாக ரீதியில் எந்த ஒரு மனுவும் இது குறித்து முடிவுக்கு எடுக்கப்பட வில்லை என்பதை அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினால் பலன் ஏதும் உண்டா, எதிர்பார்த்த பலன் உண்டா என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்களும், திரு. பொ. உத்திராபதி அவர்களும் எழுப்பினார்கள். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு வெளியே எண்ணுகிற எண்ணத்தை விட அதிகமான பேருக்கு உண்மைப் பலன் கிட்டியிருக்கிறது. 1979-ஆம் ஆண்டு இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு கிட்டத்தட்ட 91,480 மனுக்கள் பெறப்பட்டன. அந்த மனுக்கள் இது வரையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை

(திரு சி. பொன்னையன்) [1986 மே 13

என்றும், ஏழைகளுக்கு அதில் பாதகம் ஏற்படக்கூடிய அளவுக்குக் காலதாமதம் ஏற்படுகிறது என்றும் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. 1980-ஆம் ஆண்டு இச்சட்டம் வந்து இரண்டு முறை நீட்டிக்கப்பட்ட பிறகு 949 மனுக்கள் வரப்பட்டு அதிலே தற்போது நிலுவையில் இருக்கின்ற மனுக்கள் 390 மட்டும் தான். மீதி எல்லாம் பைசல் ஆக்கப்பட்டு இருக்கின்றன.

3,45,08,017 ரூபாய் ஏழை எளியவர்களுக்கு 1980-ம் ஆண்டுச் சட்டத்தால் பலன் கிட்டி இருக்கிறது. 1982-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் நடைமுறைக்கு வந்து அதனால் 24,125 மனுக்கள் பெறப்பட்டதில் 821 மனுக்கள் இதுவரையில் நிலுவையில் இருக்கின்றன. மீதி எல்லாம் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. அந்த 24,125 மனுக்களில் 33,13,289 ரூபாய் ஏழை எளியவர்களுக்குப் பலனாக இந்தச் சட்டத்தினால் கிடைத்திருக்கிறது.

(மாலை 5–10)

அதிலேயிருந்து இந்தச் சட்டத்தினால் பலன் இல்லை என்று அல்ல, நாம் எதிர் பார்ப்பதை விட அதிகமான பலன் கிடைத்திருக்கிறது. இன்னும் மிக அதிகமாகத் தரப்பட வேண்டும், பட்டி தொட்டிகளில் இருக்கின்ற மக்களுக்கு எல்லாம் அந்த நிலைமையை போதிய அளவுக்கு தெரியப்படுத்த வேண்டும், விவரங்கள் அவர்களுடைய காதுக்குச் சென்று எட்டாத நிலை ஏற்பட்டு விடக் கூடாது, அதனால் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாது என்ற காரணத்தால் ரேடியோ, டெலிவிஷன் போன்ற பல்வேறு சாதனங்களின் மூலம் விளம்பரம் செய்கிறோம். ஆறு ஆறுமாதக் காலம் நீட்டிப்பு அவர்களுக்குத் தந்து கொண்டு வருகிறோம். ஏழைகளுக்கு உண்மையிலேயே போதிய பலன் கிட்டி வருகிறது என்பது தான் அரசினுடைய கருத்து.

அந்த இடைப்பட்ட காலக் கட்டத்தில் ஏழைகளுக்கு, சாதாரண நலிந்த பிரிவு மக்களுக்கு கடன் வசதி கிடைக்காத ஒரு இன்னல் இடர்ப்பாடு ஏற்படக் கூடாது என்பதற்காக அரசு முக்கியமாக நடவடிக்கை எடுத்து, தமிழகத்திலே இருக்கிற கிட்டத்தட்ட 2,076 கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக 1984 ஆம் ஆண்டு பிரத்தியேகமாக நகைக் கடன் தரவேண்டும் என்று ஆணையை அரசு இட்டிருக்கிறது. அதன் காரணமாக 1984–85 ஆவது ஆண்டில் மட்டும் 11 இலட்சத்து 35 ஆயிரம் நபர்களுக்கு 218 கோடி ரூபாயை நகைக் கடனாக அரசு தர நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப் போலவே 1985-86ல் 241 கோடி ரூபாயை நகைக் கடனாக நலிந்த பிரிவினர்களுக்கு தரப்பட்டு இருக்கிறது.

1986 மே 13] [திரு. சி. பென்னையன்]

1984–85 இல் தேசிய சேவா கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 65 கோடியும் 1985–86 இல் 81 கோடியும் நகைக் கடனாக நலிந்த பிரிவினர்களுக்குத் தர அரசு முடிவு எடுத்திருந்த நிலையில் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதுபோன்ற நகைக் கடன் கொடுக்க யாரும் முன் வராத நிலையில், அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடாது என்ற நோக்கத்தோடு இந்த அரசு நடவடிக்கை எடுத்த காரணத்தால் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கடன் தர அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அதற்காகவே இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தை மேலும் நீட்டிக்க அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவு ஏழைகளின் நலனைக் காக்கிற சட்ட முன்வடிவு என்பதால் அவை இதனை ஏற்கவேண்டும் என்று வேண்டுகிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதிலே நகைக் கடன் வழங்குவது முழுவதும் ஏழைகளுக்கும், நலிந்த பிரிவினர்களுக்குமே போய்ச் சேருகின்ற வகையிலே இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு ஆண்டுக்கு ரூ. 4,800 வருமானம் வரக்கூடிய சாதாரண ஏழைகளுக்கு, இந்த நகைக் கடன் எல்லாம் 10 15 சதவீதம் தான் போய்ச் சேருகிறது. அதற்கு மேல் வசதி படைத்தவர்களுக்குத்தான் போய் சேருகிறது. அந்த நிலையில் கடன் வழங்கியது பூராவும் நலிந்த பிரிவினர்களுக்காகவே வழங்கியிருக்கிறோம் என்று அமைச்சர் சொன்னதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நகைக் கடன் என்பது நலிந்த பிரிவினர்களுக்கு மட்டும் அல்ல. நலிந்த பிரிவினர்கள் உட்பட எல்லோருக்கும் தான் வழங்கப்படுகிறது. ஆனால் நலிந்த பிரிவினர்களுக்கு முன் உரிமை தரச் சொல்லி, அரசு கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

1986 மே 13]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஏஏ) மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு 1986

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1986) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த சட்டமுன்வடிவை நான் ஆதரித்தாலும் அதிலே ஒன்றிரண்டு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இதன் காரண நோக்க விளக்கத்திலே அந்தத் தனியார் சிறப்பு பேருந்துகள் எனப்படும் ஆம்னி பஸ்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகத்தான் இந்தப் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டாலும் கூட, அவை சுற்றுலா பயணிகள் மட்டுமே ஏறிச் செல்கிற பேருந்துகளாக இல்லாமல் வழக்கமான பயணிகள் செல்கிற பேருந்துகளாகத் தான் அவைகள் தற்போது இருக்கின்றன.

அதை ஒழுங்கு படுத்துவதற்கும், தவறாக அந்தப் பேருந்துகளை உபயோகிப்பவர்களைத் தண்டிக்கிற வகையிலும் இங்கே பல கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமான கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

* 1986 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1986 மே 13 (திரு. ஈ.வே.கி.ச. இளங்கோவன்)

ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையில் எதற்காக அவர்களுக்கு பெர்மிட் வழங்கப்பட்டதோ அந்தக் காரணத்திற்காக அவர்கள் பயன்படுத்தவில்லை என்ற குறையிருந்தாலும் கூட அதைவிட மோசமான நிலைமை இன்றைக்கு இருக்கிறது. குறிப்பாக போலி பெர்மிட்டுகளை, போர்ஜ்ட் டாக்குமெண்ட்சை வைத்துக் கொண்டு அவர்கள் இந்தப் பேருந்துகளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மிசோரம், மணிப்பூர் போன்ற பகுதிகளில் மத்திய அரசு 25 பேருந்துகளுக்குத்தான் ஆம்னி பஸ்களுக்கான பெர்மிட்டை வழங்கியிருக்கிறார்கள். அப்படி மணிப்பூர், மிசோரம் போன்ற பகுதிகளில் வழங்கப்பட்டதாக போலி பெர்மிட்டுகளை, நூற்றுக்கும் மேற்பட்ட பெர்மிட்டுகளை வைத்துக் கொண்டு, போர்ஜ்ட் டாக்குமெண்ட்சை வைத்துக் கொண்டு தமிழகத்தில் ஆம்னி பஸ்களை அதிக அளவில் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அத்தகையோர் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கையெடுக்க வேண்டும். போர்ஜ்ட் டாக்குமெண்ட்சை வைத்துக் கொண்டு தவறு இழைப்பவர்களை கடுமையாக தண்டிக்க, சிறையில் தள்ளுவதற்கு ஏற்ற வகையில் சட்டங்களில் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக 'நேம் ட்ரான்ஸ்பர்' செய்வதில் பல சிக்சல்கள் உருவாகியிருக்கின்றன. உதாரணமாக திருநெல்வேலியில் ரெஜிஸ்டர் செய்த காரை சென்னையில் இருப்பவர் வாங்கினால் 'நேம் ட்ரான்ஸ்பர்' திருநெல்வேலியில தான் செய்ய முடியும், சென்னையில் செய்ய முடியாது என்ற நிலை இருக்கிறது. தமிழகத்தில் எங்கே வண்டி வாங்கினாலும் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் 'நேம் ட்ரான்ஸ்பர்' செய்வதற்கு வசதியாக நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து லட்சக்கணக்கில் பணம் செலவழித்து கார், பேருந்து வாங்குபவர்களுக்கு 'ஆர்.சி. புக்' என்ற பெயரில் மஞ்சள் பேப்பரில் ஒரு புத்தகத்தை தருகிறார்கள். முன்பு பைண்ட் செய்யப்பட்ட புத்தகத்தைத் தருவது வழக்கமாக இருந்தது. அந்த வழக்கத்தை திரும்பவும் கொண்டு வர வேண்டும். காரணம் 'ஆர்.சி.புக்' என்பது பல ஆண்டுக்காலம் பாதுகாப்பாக வைத்திருக்கிற டாக்குமெண்ட் ஆகும். ஆகவே இது குறித்து அருள் கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மோட்டார் வாகன வரியாக பல கோடி ரூபாய் அரசுக்கு வருகிறது. அதிலே ஒரு குறிப்பிட்ட சதவீத தொகையை ஒதுக்கி ரோடுகளை செம்மைப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் அதிகப்படுத்துவதற்காக சில திருத்தங்களை தமிழ்நாடு மோட்டார் வெகிகிள்ஸ் வரி விதிப்புச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசுக்கு வருவாய் அதிகப்படுத்துவதைப் பொறுத்தவரையில் யாருக்கும் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. இதிலே சில நல்ல அம்சங்களும் இருக்கின்றன. அதே நேரத்தில் தனியார் ஒரு வண்டி, இரண்டு வண்டி தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக வைத்திருப்பவர்களை பாதிக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டம் அமையக்கூடும் என்ற அபாயம் இருக்கிறதென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக,

"Period within which the tax should be paid" என்பதைப் பொறுத்தவரையில் எட்டாவது ஷரத்திலே,

"Provided that in the case of transport vehicles in respect of which temporary permits are granted under the Motor Vehicles Act, the tax due under this Act shall be paid on the date of commencement of the quarter.... "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்த குவார்ட்டருக்குள்ளே கட்டினால் போதுமென்று இருந்தது. ஒரு மோட்டார் வைத்திருக்கிறவர்களுக்கு சில நேரங்களில் அதைக் கட்டுவதற்கு முடியாமல் போனால் இன்றைக்கு அவர்களை தண்டிப்பதற்கு அல்லது அபராதம் விதிப்பதற்கு வகை செய்யக்கூடிய அளவிற்கு இந்தத் திருத்தம் அமையும் என்று நான் எண்ணுகிறேன்.

அதைப்போலவே இன்னொரு பக்கத்தில் 'ரீபண்ட் ஆப் டாக்சை' பொறுத்தவரையில் செக்ஷன் 11-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

"..application made within such period as may be prescribed.." என்று இருக்கிறது.

(மாலை 5–20)

| இன்றைக்கு அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மனு போடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அந்த பீரியடைக் கூட சுருக்கிக் கொள்வதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், எந்த டாக்ஸ் போட்டாலும் இன்றைக்குக் குறிப்பாக மோட்டாரைப் பொறுத்த வரையிலும், இந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

டாக்சை இறுதியாக கொடுக்கக் கூடியது, அதை உபயோகப் படுத்தக்கூடிய பாசஞ்சர்களதான். ஆகவே இன்று இப்படிப் பட்ட கன்டிஷன்களை எல்லாம் போட்டு இறுதியாக அதைக் கொடுக்க வேண்டியது பாசஞ்சர்கள்தான். ஆனால் இவர்களுக்கு எந்த அளவிற்கு வசதிகள் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை யும் நாம் பார்க்க வேண்டும். ஏற்கெனவே இதைப் பற்றி பேசிய மாண்புமிகு உறுப்பினர் இளங்கோவன் அவர்கள் சொன்னதைப் போல, இன்று நம்முடைய பேருந்துகள், அது லாரிகளானாலும் சரி, அல்லது டிரான்ஸ்போர்ட் பஸ்களாக இருந்தாலும் சரி, அவைகள் எல்லாம் எங்கே ஓடுகின்றன என்றால், நம்முடைய ரோடுகளிலே ஓடுகின்றன. அந்த ரோடுகளினுடைய கன்டிஷன் கள் இன்றைக்கு மிக மோசமான நிலைமையில் இருந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இந்தப் பேரவையிலே முன்னாலே சில கேள்விகளுக்கு பதில் சொல்லக் கூடிய நேரத்திலே மத்திய அரசு போதுமான நிதி தரவில்லை, ஆகவே ரோடுகளைப் பராமரிக்க முடியவில்லை என்று சொன் னார்கள். நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்ப வில்லை. யதார்த்தமான நிலைமைகளை தான் நான் சொல்கிறேன்.

ஆகவே, இன்று உள்ள ரோடுகளினுடைய கண்டிஷன்களில் இந்தப் பேருந்துகள் ஓடக் கூடிய நேரத்திலே பல பேருந்துகள் பழுது அடைகின்றன. ஆகவே பேருந்துகளை ஓட்ட முடியாத நிலைமையில், அதிகமாக அவைகளை ஒர்க் ஷாப்புக்கு அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஒர்க் ஷாப்புக்கு போகக் கூடிய நேரத்தில், என்ன ஏற்படுகிறது என்றால், ஒரு மாத காலத்திலே அதை ரிப்பேர் பண்ணி, ரோட்டிலே இறக்கலாம் என்று ஒருவேளை நினைத்தாலும், அது ஒரு மாத காலத்திற் குள்ளாக ரிப்பேர் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அந்தக் குறிப்பிட்ட பீரியடிற்குள்,

" such period as may be prescribed"

அந்த மனுக்களைக் கொடுத்தாக வேண்டும். அதைப் போன்று அந்த குறிப்பிட்ட காலத்திற்குள்,

" shall be paid at the commencement of the quarter "

கட்டியாக வேண்டும். சில நேரங்களில் பேருந்துகளை,

" commencement of the quarter. . . . "

ஓட்ட முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த வண் டியை மெயின்டெனன்ஸ் பண்ணி, திருப்பி ரோட்டிலே இறக்கக் கூடிய நேரத்திலே அதையொட்டி, இன்றைக்கு டாக்சை அடைக் கக்கூடிய நிலை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அப் படிப்பட்ட செதிகளை இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத் தினால் [illegible] ஆப்பரேட்டர்ஸ் பொறுத்த வரையில், அல்லது ஒரு கார், ஒரு பஸ் இதையெல்லாம் வைத்துக் கொண்டு

இருப்பவர்களுக்கு அந்த முறையில் பாதிப்பு ஏற்படாமல் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பக்கத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால், இன்றைக்கு இந்த காரண காரிய விளக்கத்திலே, ஆம்னி பஸ் களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அதிகமாக அவர்கள் பெர்மிட் வாங்கி திருட்டுத்தனமாக அவர்களால் ஸ்டேஜ் காரியர்ஸ் ஆக ஓட்டப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. நிச்சயமாக துறையினுடைய உதவி இல்லாமல் எந்த முறையிலும் அதை அனுமதிக்க முடியாது. நான் எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், இன்று ஆம்னி பஸ்களைப் பொறுத்த வரையில் எப்படி அந்த விஷயங்கள் நடைபெறுகின்றன என்பதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கூட ஒரு தடவை இதைக் கொண்டு வந்தேன். இன்றைக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் சாதாரணமாக ஆர்டினரி பஸ்களை ஓட்டிக் கொண்டிருந்தது, பல ரூட்களிலே. அந்த பஸ்களை எல்லாம் சூப்பர் டீலக்ஸாக மாற்றியதன் காரணமாக ஏறக்குறைய 15 ரூபாய், 20 ரூபாய் அதிகமாகக் கட்டணம் இருப்பதன் காரண மாக இந்த ஆம்னி பஸ்களுக்கு போகக்கூடிய நிலைமை ஏற் பட்டு இருக்கிறது. ஆகவே ஒருவேளை ஆம்னி பஸ்களை ஆத ரிப்பதற்காக வேண்டி ஒரு சில எம்.டி.க்கள் அப்படிப்பட்ட நிலையை எடுத்து இருக்கிறார்களோ என்ற மக்களிடையே ஐயப் பாடு ஏற்பட்டு இருக்கிறது. நான் எதற்கு இதைச் சொல்லு கிறேன் என்றால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்குக் காரண மாக இந்த ஆம்னி பஸ்களை பெர்மிட் வாங்கி, அதை நிரந்தர மான பஸ்களாக அநேகமாக தமிழகத்தினுடைய எல்லாப் பகுதி களிலும் எல்லா முக்கியமான ரூட்களிலும் ஓட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. எனவே, இதை நிச்சயமாக தடுக்க வேண் டும். எனவே, இத்தகைய இடங்களில் அதிகமாக அரசினுடைய போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்களை விடுவதற்கு ஏற் பாடுகளைச் செய்ய வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்று மட்டுமல்ல, மற்ற போக்குவரத்துக் கழகங்களும், சென்னை நக ரத்திற்கு பஸ்களை விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக் கின்றன. அதேபோன்று அந்தக் கழகங்களுக்கு அதிகமாகப் பேருந்துகளை விட்டு இப்படி ''ஆம்னி'' பஸ்களுடைய பர்மிட் வாங்கி ''Stage Carriages'' நடத்திக் கொள்ளை இலா பம் அடிக்கின்ற அந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் மூலம் அரசுக்கு மேலும் அதிகமான வருவாயை ஏற்படுத்துவதற்கு நட வடிக்கை எடுப்பதற்கு இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று ஒரு சிறிய விஷயத்தைக்கூட நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இன்று இது அமுல்படுத்தப்

படவேண்டுமேயானால், ''எபக்டிவ்-வாக'' இந்த டிபார்ட்மெண்ட் செயலாற்ற வேண்டும். நான் யாரையும் குறை சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஆனால், நடைமுறையிலே நாம் இன்றைக்கு என்ன பார்க்கிறோம் என்றால், இந்த ஆர்.டி.ஓ. ஆபீஸிலே வேலை செய்கின்ற பல அதிகாரிகள் இப்படிப்பட்ட மோட்டார் கம்பெனிகளுக்கு, இந்தச் சட்டத்திலிருந்து வரியைச் செலுத்துவதிலிருந்து எப்படி எப்படி தப்பித்துக் கொள்வதற்கு வழிகளைச் செய்து கொடுக்க முடியுமோ அதற்கு அவர்கள் ஆலோசனைகளை வழங்கக்கூடிய ஒரு நிலையை நம் நாட்டிலே பார்த்துக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அதை எந்த அளவிற்கு கண்காணித்து அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியுமோ அந்த முறைகளில் உள்ள நடவடிக்கையைத்தான், இன்று இந்தச் சட்டத்தை தன்னுடைய யதார்த்தமான நோக்கத்துடன் நிறைவேற்றவேண்டுமென்ற முறையிலே விஷயங்களை அமைத்துக்கொள்வதற்கு வழிசெய்யும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் இன்றைக்கு பிரைவேட் பஸ்களைப் பொறுத்த அளவிலே ''டாக்ஸ்'' அவர்களுக்குப் போடப்படுகிறது. அவர்கள் ''டாக்ஸை'' பாசஞ்ஜர்களிடமிருந்துதான் வசூலித்துக் கொடுக்கிறார்கள். அந்த அளவிற்கு வசதிகள் பாசஞ்ஜர்களுக்குச் செய்யப்படுகிறதா? இல்லை. அதைக் கண்காணிக்க வேண்டிய இலாக்கா சரியான முறையிலே கண்காணிப்பதில்லை. இன்று பல இடங்களிலே, அரசு பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் ஓடக்கூடிய இடங்களில், பல பல ஆர்.டி.ஓ.-க்கள்-எக்ஸாம்பிள் சொல்ல முடியும்—நேரம் இல்லாத காரணத்தினால் நான் அந்த விஷயத்திற்கு வரவில்லை இன்று அரசினுடைய வருவாய் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை, தனியார் பேருந்துகளுக்கு அதிகமான வருவாயை ஏற்படுத்தக் கூடிய முறையில் அவர்கள் அந்த 'டைமிங்ஸ்'-ஸை போட்டுக் கொடுக்கிறார்கள். நான் எதற்கு இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தோடு இன்றைக்கு செயலாற்றக்கூடிய சில அதிகாரிகள்தான் இந்தச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டியவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய முறையிலே நாம் கடுமையான நடவடிக்கை எடுத்து அரசினுடைய வருவாயை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டி நான் முடித்துக் கொள்கிறேன். பேருந்துகளில் வேலை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். இந்த ஊழியர்களைப் பொறுத்த அளவில் எந்தவிதமான வசதிகளும் அவர்களின் வேலை நேரத்தைப் பொறுத்த அளவில்கூட கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நிலைமை இல்லை. Motor Vehicles Act-ஐ பொறுத்த அளவில், இதை அமல்படுத்தக்

கூடிய அதிகாரிகள் என்ற முறையில் ஆர்.டி.ஓ.க்கள் அந்த விஷயத்தைக் கவனிப்பதற்கு பொறுப்புள்ளவர்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Taxation Law-லே தொழிலாளர்களைப் பற்றி பேசினால் சரியாக வருமா? சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அதாவது இந்த வருவாய், அவர்கள் இந்த ''டாக்ஸ்''-ஐ கொடுக்க அந்த ''டாக்ஸ்''-ஐ இன்னொரு முறையில் மக்களிடமிருந்து வசூலிக்கிறார்கள். அந்த மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்கள் இந்த முதலாளிகள் அல்ல. அந்த ஊழியர்களின் நிலை மிக மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. 12 மணி நேரம்; 18 மணி நேரம் வேலை செய்ய கூடிய ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ''பில்'' லில் பேசுங்கள். ரெலவண்டாக பேசுங்கள் (குறுக்கீடு).

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : Mr. Deputy Speaker Sir. when we are demanding money from the people we should see that we give them facilities.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசுவதை அந்தந்தத் துறையின் மானியத்தின்மீதுதான் பேச வேண்டும் (குறுக்கீடு).

திரு. ஜே. ஹேமச்சந்திரன் :

அதேபோன்று இன்னொன்று; ரோடுகளைப் பராமரிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் இளங்கோவன் குறிப்பிட்டது போல, மோட்டார் வெகிகில்ஸ் டாக்ஸிலிருந்து ஒரு பகுதியை எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இன்று ரோடுகள் நல்ல முறையிலே இருந்தால்தான் இந்த முறையை சரியான முறையில் அமல்படுத்த முடியும். ஆகவே, அந்த முறையிலே ஒரு திட்டத்தை வகுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்ட இந்தத் திருத்தங்களை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் இரண்டு சந்தேகங்களை மட்டும் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. சு. முத்துசாமி] [1986 மே, 13

(மாலை 5–30)

மற்றபடி அவர்கள் சொல்லியது பொதுவான கருத்து என்றாலும் தனிப்பட்ட முறையில் இந்தத் துறையிலிருந்து அதற்குத் தக்க கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கால் ஆண்டு வரியை முதல் தேதியே—தற்காலிக உரிமைப் பெற்றவர்கள் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறோம். இத் றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக ஒரு திருத்தம் சுற்றனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 45 நாட் களுக்குக் குறைவாக யார் யார் இந்த பயணப் பேருந்துகளை இயக்குவதற்கு தற்காலிக அனுமதியை பெறுகிறவர்களோ அவர் கள் முதல் தேதியிலேயே அந்த வரியைக் கட்ட வேண்டும் என்று இந்தத் திருத்தத்தில் வழி வகை செய்து இருக்கிறோம். அதற் குக் காரணம் பல நேரங்களில் 15 நாட்களுக்கு என்று பர்மிட் கொடுக்கிறோம், ஒரு மாதத்திற்கு என்று பர்மிட் கொடுக்கி றோம், இப்படி கொடுக்கிற போது 3 மாதத்திற்கு ஒரு முறை தான் அந்த டாக்ஸ் கட்டப்படுகிறது. அதிலும் ஏறத்தாழ 24 நாட்கள் அந்த டாக்ஸ்க்கு காலம் முடிந்தும் கூட அவர்கள் அந் தப் பணத்தை, வரியைக் கட்டுவதற்கு கால அவகாசம் கொடுக் கப்படுகிறது. அந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு அந்த 24 நாட்களுக்கு அந்த வண்டிகளை ஓட்டுகிறார் கள். ஆனால், பின்னால் அந்த டாக்ஸை கட்டாமலேயே அந்த வண்டியை நிறுத்தி விடுகிற நிலைமை ஏற்படுகிறது. எனவே அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் குறைந்த பட்சம் 45 நாட்களுக்குக் குறைவாக யார் யார் இந்த தற்காலிக அனு மதியை பெறுகிறார்களோ அவர்களிடமிருந்து மட்டும் இந்த டாக்ஸை முதலில் அந்த வரியை கட்டக்கூடிய மாதத்தில் முதல் தேதியில் கட்டப்பட வேண்டும் என்ற அந்த வழிவகையை செய்து இருக்கிறோம். மற்றவர்களுக்கு இதில் எந்தவிதமான பாதிப் பும் இருக்காது. இதிலே மற்ற எந்த சிறிய பேருந்துகளை ஓட்டக் கூடிய சிறிய முதலாளிகளுக்கு இதில் எந்த இடையூறும் வருவ தற்கோ அதேபோல் தனியாருக்கு இதில் எந்த பிரச்சினையும், (நான்-டிரான்ஸ்போர்ட் வெகில்களுக்கு) இதில் எந்த பிரச் சினையும் வருவதற்கோ வாய்ப்பு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இது யாரும் ஏமாற்றி விடாமல் அந்த வரியை வசூல் செய்வதற்கான வழிவகையே ஒழிய எந்தத் தொந்தரவும் இதில் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இந்தக் கட்டணவரியை திருப்பிப் பெறுவதற்கு அவர்கள் விண்ணப்பம் கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே நமக்கு இருக்கின்ற சட்டத்தில் வழிவகை இல்லை. நாம் அந்த ஏற்பாட்டை செய்திருக்கிறோம். அதற்கு அந்தப் பணத்தை திருப்பிக் கொடுப்பதற்கான வழிவகை இருந்தாலும் விண்ணப்பங்களுக்கு வேண்டிய அவசியம் அதிலும் இல்லாமல்

இருக்கின்ற காரணத்தால் இப்படி அந்த விண்ணப்பம் கொடுக்கப் பட வேண்டும், அதற்கு ஒரு கால அளவை நிர்ணயம் செய்யப் படும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். எனவே, இதன் மூலம் வேறு எந்தப் பிரச்சினையும் அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிற வாய்ப்பு இல்லை. துறையில் ஒரு முறையாக செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

எனவே, மற்றவற்றைப் பொறுத்தவரையில் எந்த பிரச்சினையும் இங்கே எழவில்லை. எனவே, இந்த இரண்டிலேயும் எந்தப் பிரச்சினையும் அந்த வண்டியை வைத்து இருக்கக்கூடிய முதலாளிகளுக்கு ஏற்படாது என்ற உத்திரவாதத்தை இங்கே தந்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு-2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்."

The Hon. Thiru S. Muthusamy : Sir, I move the following amendment :

In clause 2, in the proposed provise, after the words "Motor Vehicles Act" insert the words "other than stage carriages in respect of which temporary permits are granted for any period exceeding forty five days".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

1986 மே 13] [திரு. சு. முத்துசாமி]

பிரிவுகள் 3 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1986), திருத்தப்பெற்றபடி, நிறை வேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஓ) மது விலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1986) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்டமுன்வடிகள்—தொடர்ச்சி.

(ஏஏ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1986)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

@ 1986 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை, அமைச்சரவர்கள் உண்மைக்கு புறம்பான சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதற்காக கடுமையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கண்டிக்கிறேன். காரணம் இது மது விலக்குச் சட்டமல்ல, தவறாகச் சொல்கிறார்கள். மது விலக்கு என்றால், சாராயக் கடை இருக்கக்கூடாது, கள்ளுக்கடை இருக்கக்கூடாது. ஆனால் பிராந்திக் கடை இருக்கலாம், ஜின் கடை இருக்கலாம் என்று சொன்னால், இது எப்படி மதுவிலக்கு ஆகும்? பஞ்சமா பாதகங்களை ஒழிக்கக் கூடிய சட்டமுன்வடிவையா கொண்டு வந்திருக்கிறார்கள்? பஞ்சமா பாதக ஒழிப்புச் சட்டம் என்றாலே கொலை, களவு, கற்பழிப்பு, சூது, மது இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஒழிப்பதற்கு சட்டம் கொண்டு வருவது. ஆனால் கொலை இருக்கலாம். களவு இருக்கலாம், கற்பழிப்பு இருக்கலாம். இதற்கெல்லாம் அரசாங்கம் அனுமதிக்கிறது. இதுபோன்றுதான் நீங்கள் கள்ளுக் கடைகளை மூடுகிறோம் சாராயக் கடைகளை மூடுகிறோம் என்று சொல்வது. ஆனால் சொல்லப்போனால், 'இந்தியன் மேட் பாரின் ஸ்பிரிட்' இதை உற்பத்தி செய்வதும், விற்பனைசெய்வதும், அரசாங்கத்தினுடைய சட்டபூர்வமான காரியம்.

It shall be the law for the State Government to issue licences.

ஆகையால் நான் கேட்கிறேன். இது மதுவிலக்குக் கொள்கையல்ல, இது மதுவிலக்கை அமல் நடத்துகின்ற கொள்கையும் அல்ல. ஆகவே மதுவிலக்கை அமல்படுத்துவது என்று சொன்னால் அந்தப் பொருட்கள் பரிபூர்ணமாக நீக்கப்படவேண்டும்.

ஆகவேதான் நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். மது அருந்துகிறவர்கள்தான் தள்ளாடுகிறார்கள் என்று சொன்னால், உங்கள் மதுக்கொள்கையும் தள்ளாடுகிறது. மதுவிலக்குச் சட்டமும் தள்ளாடுகிறது, இந்த அரசாங்கமும் தள்ளாடிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது மெத்த வருத்தமாக இருக்கிறது.

இன்னொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே முதன் முதலாக சட்டப் பேரவைக் கூட்டம் நடக்கிறபோது ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனை முரண்பாடுகள் இருக்கின்றன? மதுவிலக்குக் கொள்கை பூரணமாக அமல் படுத்தப்படவேண்டுமென்ற நிலையில் இப்போது ஊசலாட்டம் கண்டிருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

We are committed to the policy of prohibition என்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையில் எங்களை அர்ப்பணித்துக் கொண்டோம் என்று முதன் முதலாகச் சொன்னீர்கள். சொன்னது மட்டுமல்ல. உங்களுக்கு

எல்லாம் தெரியும். அந்தக் காலத்திலே ஜாமீனிலே வரக்கூடியதாக இருந்தது. ஆனால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்தபிறகு அது நான்-பெய்லபிளாக ஜாமீனிலே விடக்கூடாததாக ஆக்கப்பட்டிருக்கிறது அதோடு மட்டுமல்ல. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷனிலே யாராவது ஜாமீனிலே எடுக்கின்றார்கள் என்று சொன்னால், அப்படி ஜாமீனிலே எடுக்கச் சொன்னவனைக் கைது செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு குற்றமாக அஃபென்சாக, நான்-பெய்லபிளாக மாற்றப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இதற்கெல்லாம் சட்டம் கொண்டுவரப்பட்டது. ப்ரொபேஷன் ஆக்ட் என்று ஒன்றிருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு, அவர் ஒரு வக்கீல் என்ற முறையில் அவருக்குத் தெரியும். ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையில் சில தவறுகள் செய்துவிட்டால் நீதிமன்றம் கருணை காட்டி அவர்களை மன்னித்துவிடலாம். விபச்சாரம் செய்தால் கூட இப்போது மன்னிக்கலாம். ஆனால் குடித்துவிட்டு தப்பு செய்தவனை இந்த ப்ரொபேஷன் ஆக்ட்டின்படி அனுமதிக்கவே முடியாது என்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். நான் சபையிலே பேசுவதற்காக மன்னிக்கவேண்டும். நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இரண்டு அதிகாரிகள். பப்ளிக் சர்வெண்ட் குடித்தால் அதற்கு ஒரு தண்டனை. கவர்ண்மென்ட் சர்வெண்ட் குடித்தால் அதற்கு ஒரு தண்டனை. ஒரே இடத்தில் இரண்டு அதிகாரிகள். ஒரே கோப்பை, ஒரே சரக்கு. உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன். போலீஸ் கமிஷனர் குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை. கார்ப்பொரேஷன் கமிஷனர் குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை. ஒரே இடத்தில்தான் இருக்கிறார்கள். ஒரேவிதமான கோப்பையிலே குடிக்கிறார்கள். ஒரே மதுவைத்தான் குடிக்கிறார்கள். ஆனால் பப்ளிக் சர்வெண்ட் குடித்தால் அதற்கு ஒரு தண்டனை, கவர்ன்மெண்ட் சர்வெண்ட் குடித்தால் அதற்கு ஒரு தண்டனை; ஆக ஒரே தண்டனையைப் பெறவேண்டுமென்ற அளவிற்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு............ (குறுக்கீடு)

(மாலை 5–40)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் என்று பொதுவாகச் சொன்னாலே எல்லோருக்கும் புரியும். அதற்கு உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் யாரை வேண்டுமானாலும் சொல்லலாம். யாருடைய பெயரை வேண்டுமானாலும் பயன்படுத்திச் சொல்லலாம். அது நல்ல மரபாக இருக்காது என்பதற்காக இதைக் கூறிக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் புண்படுத்துவதற்காகவோ, கேலி பேசுவதற்காகவோ, உள்நோக்கத்தோடு பேசவில்லை. கவர்ன்மெண்ட் சர்வண்ட் என்றால் என்ன ? பப்ளிக் சர்வண்ட் என்றால் என்ன என்று கொண்டு வரப்பட்ட சட்டத்திலே ஒரு சிக்கல் ஏற்பட்டது. அதை சபையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் எளிமையாகப் புரிந்து கொள்வதற்காகத்தான் ஒரு உதாரணத்திற்கு— எக்ஸ், ஒய் என்று கூட சொல்லிவிடலாம்— அதற்குள்ள வேறுபாடுகள் சட்ட ரீதியாக சில இருப்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். வழக்கறிஞராக இருக்கக்கூடிய நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் அறிவார்கள். போலீஸ் கமிஷனர், கவர்ன்மென்ட் சர்வன்ட், கார்ப்பரேஷன் கமிஷனர், பப்ளிக் சர்வன்ட் ஆகையால் இப்போது அவர்களை மறந்து விடுங்கள்.

இந்த வாதத்திற்கு அவர்கள் தேவையில்லை. பப்ளிக் சர்வன்ட் குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை. கவர்ன்மென்ட் சர்வன்ட் குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை. ஆனால் ' அஃபன்ஸ்' ஒன்றுதான். குற்றம் ஒன்றுதான். ஆனால் தண்டனை மட்டும் வேறுவிதமாக இருக்கக்கூடிய விதத்தில் சட்டம் கொண்டுவரப் பட்டது. அதுமட்டுமல்ல, 'Vicarious liability' என்று கூட, சட்டத்திலே வந்தது. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். பழைய படி உதாரணம் சொன்னால், மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடும். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். நான் யாரையும் புண்படுத்துவதற்காகச் சொல்ல வில்லை.

** நல்லவராக இருக்கலாம். ஆனால் வேண்டப்படாத ஒருவர் ** வந்து, அவருடைய காரைக் கொடுங்கள் என்று கேட்டு ஒரு இடத்திற்குப் போய் அந்தக் காரிலே சாராயத்தைக் கடத்திக் கொண்டு போய்விட்டால், கடத்தியவர் மட்டும் குற்றவாளி அல்ல. ** குற்றவாளி என்கின்ற அளவுக்கு சட்டம் இந்த ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது காரணம், ...

திரு. மா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே, உதாரணம் சொல்வதைப்பற்றி ஒன்றும் தவறில்லை. ரகுமான் கான் தன்னையே உதாரணமாகச் சொல்லிக்கொள்ளலாம். 'நான் ஒரு காரில் போய், என்னுடைய காரில், என்று ** பற்றி சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : **- எடுத்துவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * என்ற வார்த்தையை நீக்க உத்திரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 13]

திரு. அ. ரகுமான்கான்: நீங்களும், நானும் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களையே வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: சரி, என்னையே வைத்துக்கொள்ளுங்கள். மற்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஒரு '' எக்ஸ் '' என்று வைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு வேகமாக ** பற்றிச் சொன்னீர்கள். உங்களை என்று சொல்லும் போது '' எக்ஸ் '' என்று ஏன் சொல்லுகிறீர்கள். எல்லோரையும் ஒரே மாதிரிப் பாருங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: ** வருத்தப்பட வேண்டாம். துணை சபாநாயகர் அவர்கள் வருத்தப்பட வேண்டாம். எனக்கேத் தெரியாமல் என் காரைத் தவறாகப் பயன்படுத்தி சாராயம் கடத்தினால் நிச்சயமாக நான் அந்தக் குற்றத்தைச் செய்ததாக தண்டனைக்குள்ளாக்கப்படுகின்ற சூழ்நிலையிலே சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆகையால், இதை எல்லாம் நான் சொல்லுவதினுடைய நோக்கம், மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகச் சட்டம் எவ்வளவு கடுமையாக்கப்பட்டது, எவ்வளவு இறுக்கமாக்கப்பட்டது என்பதை எடுத்துச் சொல்வதற்காகத் தான் நான் இந்த மதுவிலக்குக் கொள்கையிலே, எப்படி அணுகுமுறை—பல்வேறு விதங்களிலே மாறுபட்டு, முரண்பட்ட, வேறுபட்ட, ஊசலாட்டப் போக்கிற்கு உள்ளாக்கப்பட்டு, சந்தர்ப்பவாத வேகத்திற்குப் பலியாகி, சூழ்நிலைகளுக்குத் தகுந்தபடி ஊசலாடிக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதற்காகச் சொல்கிறேன்.

ஊர் கடத்துகிற சட்டமே கொண்டுவரப்பட்டது. குடித்து விட்டு தப்பு செய்தால் ஊரை விட்டே அவர்களை வெளியேற்றி விடுவது என்று சட்டமே கொண்டுவரப்பட்டது. ஒரு இடத்தில் ஒரு பெண் விபச்சாரம் செய்கிறாள். இன்னொரு இடத்தில் ஒரு பெண் விபச்சாரம் செய்கிறாள். அவர்களை ஊர் விட்டு ஊர் மாற்றினால் அந்தக் குற்றம் நீங்கிவிடுமா? அந்த வாதத்திற்குள் போகவில்லை. ஆட்கள் வேண்டுமானால் மாறலாமே தவிர அடிப்படை மாறுமா என்பது வேறு விவகாரம். ஆனாலும் கூட, ஊர் விட்டு ஊர் கடத்தினால், செய்கின்ற தப்புக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1986 மே 13

நீக்கப்படும் என்று சொல்லி, ஊர் கடத்துகிற சட்டமே கூட இந்த அவையிலே கொண்டு வரப்பட்டது. அது ஒரு நிலை. மது அரக்கனை ஒழிப்பேன் என்று ஒரு நிலை. We a e committed to the policy of prohibition என்றார்கள். அது ஒரு நிலை. இதை அமல்படுத்துகிற விதத்திலே ஒரு சட்டம். இவைகளை எல்லாம் சேர்த்துப் பார்த்தால், மதுவிலக்குக் கொள்கை அண்ணாவின் கொள்கை, ராஜாஜியின் கொள்கை, அதற்கு எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அதை மக்களிடத்தில் சொல்லிவிட்டு, நான் அதை அமுல்படுத்துவேன் என்று உறுதியான கொள்கை பேசப்பட்டது ஒரு காலம். அதற்குப் பிறகு இதே அவையில் எப்படி அந்தச் சட்டமும், கொள்கையும் தள்ளாடுகிறது என்பதற்கு உதாரணம் — உறுப்பினர்களைப் பார்த்து பட்ஜெட்டிலே கேட்கப்பட்டது' " மனம்திறந்து பேசுங்கள் " என்று கேட்டார்கள்.

சாராயக் கடைகள், கள்ளுக்கடைகள், இன்றைக்கு கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. ஆகவே, மனம் திறந்து பேசுங்கள் என்று கேட்டு விட்டு,...............

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, சட்டம் தள்ளாடுகிறது, கொள்கை தள்ளாடுகிறது, அரசாங்கம் தள்ளாடுகிறது என்றே பேசிக்கொண்டு வருகிறார்கள். சில நேரங்களில் தள்ளாடுகிறவர்களுக்குக்கூட, மற்றவர்களைப் பார்த்தால் தள்ளாடுவது போல் தோன்றுவது உண்டு.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் தயவு செய்து நான் திருப்பிக் கேட்டால் கோபித்துக் கொள்ளக் கூடாது. எனக்குக்கூட அவரைப் பார்த்தால் அப்படித் தான் தோன்று கிறது.

மாண்புமிகு டாக்டர் காளிமுத்து : எனக்கும் கூட அப் படித்தான் உங்களைப் பார்க்கும்போது இப்போது தோன்றுகிறது. ஏனென்றால் மாறி, மாறிப் பேசுகிற முறைகளைப் பார்க்கும் போது, மதுவிலக்குக் கொள்கையைப் பற்றிப் பேசுகிறபோதே இவ்வளவு தள்ளாட்டம் எதற்கு என்பது தான் எனக்குப் புரிய வில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை வர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையிலே இந்த அரசாங்கம் தள்ளாடுகிறது, சட்டமும் அதுபோன்றே கொள்கையும் தள்ளாடு கின்றது என்று நான் சொல்லுகின்ற பொழுது பேசுகின்ற நானே தள்ளாடுகிறேன் என்று.......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற ஆளை நான் குறிப்பிடவில்லை. பேச் சைத்தான் நான் குறிப்பிட்டேன்.

[1986 மே 13

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சு தள்ளாடுகிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய பேச்சு தள்ளாடுகிறதா அல்லது இந்த அரசின் கொள்கை தள்ளாடும் நிலையில் உள்ளதா என்பதைப் பற்றி மக்கள் மன்றமும், சட்டமன்றமும் முடிவு செய்யும் என்பதைக் கூறி சபாநாயகரின் முடிவிற்கே இதை விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, ஒரு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பேச்சை ஆரம்பிக்கின்றபொழுதே அவர்கள் இது மது விலக்குக் கொள்கையே அல்ல, இது மதுவிலக்குச் சட்டமே அல்ல என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அவர்களே பேசுகிறபொழுதுகூட ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். கள், சாராயக் கடைகளை மட்டும் மூடுவது பூரண மது விலக்கு ஆகாது என்று. எனவே, பூரண மது விலக்குக் கொள்கைக்கும், மது விலக்குக் கொள்கைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இப்பொழுது பேசுவது உண்மைக்குப் புறம்பான முறையில் இருப்பதால்தான் அதிலே தள்ளாட்டம் இருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கையைத் தெளிவாகச் சொல்லட்டும். சிலவற்றிற்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். சாராயக்கடை, கள்ளுக்கடை ஆகியவைகளுக்கு அனுமதி இல்லை; அதைப்போல பிராந்தி, விஸ்கி போன்ற அனைத்தையும் மூட வேண்டும். ஆகவே, மதுவிலக்கு என்ற பெயரே தப்பு. இதிலே போட்டிருக்கிறார்கள். Prohibition in respect of arrack and toddy அப்படி என்றால் என்ன பொருள்? இந்த அரசைப் பொறுத்த வரையில் கள்ளுக்கடை, சாராயக் கடை ஆகியவைகளைப் பொறுத்த வரையில் உள்ள மது விலக்குச் சட்டம்.........

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மது விலக்கு என்பதற்கும், பூரண மது விலக்கு என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதைத்தான் குறிப்பிட்டேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தொல்காப்பியம், இலக்கியமெல்லாம் படித்தவர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இப்பொழுது உங்களிடத்திலேயிருந்து கற்றுக்கொண்டதைத்தான் சொன்னேன். நீங்கள் பேசும்பொழுதே, பூரண மது விலக்கு வேறு, இது வேறு என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

1986 மே 13]

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இது பூரண மதுவிலக்கு என்பது அல்ல. இப்படி மது விலக்குக் கொள்கையை அமல் நடத்துவதில் முரண்பாடு ஏன்? கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் மூடுகின்ற பொழுது பிராந்திக் கடைகளையும், விஸ்கி கடைகளையும் ஏன் மூட மறுக்கிறீர்கள் ? மீசை வைக்கின்ற பொழுது பாதியை வைத்துக் கொண்டு........

மாண்புமிகு டாக்டர் கா. காளி முத்து : துணைத் தலைவர் அவர்களே, மீசையிலேகூட ரகுமான்கான் அவர்களுடைய மீசைக்கும், மற்றவர்களுடைய மீசைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர் வைத்திருப்பது பாதி மீசை. முழு அளவு மீசை வைத்திருப்பது என்பது வேறு.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து மீசை ஆராய்ச்சி வரைக்கும் சென்றால் பிறகு தலையில் இருக்கின்ற பாதியைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து.......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதிலும்கூட ரகுமான்கான் அவர்களுக்கும் எனக்கும் ஒற்றுமை இருக்கிறது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஆரம்பித்ததே இப்பொழுதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : : ஆரம்பித்து ரொம்ப நேரமாகிவிட்டது. 5—37 மணிக்கே ஆரம்பித்து விட்டீர்கள். சுருக்கமாகச் சொன்னால் பரவாயில்லை. சட்டமுன் வடிவின்மீது பேசுங்கள்.

Thi u A. Rahumankhan : Mr. Depty Spe ker, Sir, please don't gain time by this......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நிறையப் பேசாதீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைச் சபாநாயகர் அவர்களே, நேரம் அதிகமாகி விட்டது என்று சொல்லுங்கள், அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பேசுகின்ற முறையே தவறு என்று சொன்னால் எப்படிப் பேசுவது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டமுன்வடிவிற்குத் தொடர்புடையதாகப் பேசுங்கள் என்றுதான் சொன்னேன். நிறைய உறுப்பினர்கள் இப்படிப் பேசவில்லை.

[1986 மே 13]

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கையில் எவ்வளவு முரண்பாடு இருக்கிறது என்பதற்கு உதாரணம் சொல்கிறேன். கள்ளுச்சாராயக் கடைகளையெல்லாம் அரசாங்கமே எடுத்து, கார்ப்பரேஷன் மூலமாக—வணிக கழகத்தின் மூலமாக நடத்துவோம் என்று திடீர் முடிவெடுக்கிறீர்கள். பிறகு ஏஜண்டுகள் போடுவோம் என்று சொல்கிறீர்கள். ஆரம்பத்தில், மது அரக்கனை ஒழிப்போம் என்று சொல்லிய நிலையில், We are committed to the policy of prohibition. என்று சொல்லிய நிலை, பிறகு bailable offence என்ற நிலையிலேயிருந்து மாறி, கள்ளுக்கடைகளும், சாராயக் கடைகளும் திறக்கப்பட்டு, அரசாங்கமே கள்ளுக்கடைகளையும், சாராயக் கடைகளையும் வணிக கழகத்தின் மூலம் நடத்துவது என்று ஏற்படுத்திய பிறகு, நான் கேட்க விரும்புகிறேன், இது முரண்பாடு அல்லவா ? ஆகவேதான் நான் இப்பொழுது சொல்கிறேன், நீங்கள் அமல்படுத்துகின்ற மதுவிலக்குக் கொள்கையில் இப்பொழுது கூட அந்த முரண்பாட்டை வைத்திருக்கிறீர்கள். என்னவென்று சொன்னால், நான் ஏற்கெனவே தெரிவித்த மாதிரி, ஒரு பகுதியில் மதுவிலக்கு உண்டு; மற்றொரு பகுதியில் மது விலக்கு இல்லை என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் ? இதை அமைச்சரவர்கள் தங்களுடைய பதிலுரையில் சொல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பாட்டிலிங், பிளெண்டிங். குதிரைப் பந்தயத்தை உடனடியாகச் சர்க்கார் எடுக்கிறது; இலாப நட்டத்தைப் பற்றிக் கவலை இல்லை. பாட்டிலிங், பிளெண்டிங்கைப் பொறுத்தவரையில் கணக்கு பார்க்க வேண்டாமா ? அரசாங்கத்திற்கு வருமானம் வர வேண்டும், குதிரைப் பந்தயத்தின் மூலம் வரும் வருமானம் தனி நபருக்குப் போகக்கூடாது என்று அக்கறையோடு.......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கிலிருந்து குதிரைக்குத் தாவுவது சரியாகுமா ? முறையாக வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவரிடத்திலே சொல்லியாகிவிட்டது. இந்த பில்லுக்கு உட்பட்டு பேசுங்கள்; நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஒரு கருத்தை எடுத்துச் சொல்லுகின்றபொழுது உதாரணங்களைச் சொல்கிறோம். மதுவிலக்கை அமல் நடத்தப் போகிறோம் என்று சொல்கிறீர்கள்.

1986 மே 13]] [திரு. அ. ரகுமான்கான்]

(மாலை 5—50)

பாட்லிங், பிளன்டிங் மூலமாகக் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. அது தனி நபருக்குப் போகக் கூடாது, மக்களுக்குப் பயன்பட வேண்டும், அரசாங்கத்திற்கு வர வேண்டு மென்பது உங்களுக்கு கொள்கை. ஆகவே, தனி நபர் கொள்ளை அடிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தக் கூடாது என்று சொல்லி விட்டு, பாட்லிங், பிளன்டிங் தொழிலை அரசாங்கம் எடுத்து நடத்த மறுக்கிறதே, அதே நேரத்தில், இதே கொள்கை எல்லா வற்றிலும் இருக்கிறதா? குதிரைப் பந்தயத்தில் இருக்கிறதா என்று உவமை சொல்லி, அதற்கான ஆதாரத்தைக் கேட்கிற பொழுது, திடீரென்று மதுவிலிருந்து குதிரைக்குப் போகிறாரா என்று கேட்பது, வேண்டுமென்றால், சபையிலே அமைச்சர் இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அது உவமை அல்ல. அது மற்றொரு பிரச்னை. ஏற்கனவே, இங்கே பேசப்பட்ட மற்றொரு பிரச்னை, ஒரு பிரச்னையை விவாதிக்கும்போது, மற்றொரு பிரச்னையை நீங்கள் தொடவேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. அ. ரகுமான்கான் : நிலைமையை எடுத்துச் சொல்கிற பொழுது, எடுத்துக் காட்டுகிற பொழுது, எடுத்துக்காட்டாகத் தான் அதைச் சொல்கிறேன். உதாரணம் சொல்கிறேன், இங்கே கூட சொன்னால், வேறு பிரச்சினைக்குப் போய் விட்டேன் என்று சொல்லி விட்டார்கள். ஒரு உதாரணம் சொல்கிற பொழுது, மேல் சபை கலைப்பு தீர்மானம் வருகிற பொழுது, ஆந்திரா விலே இல்லை, மற்ற மாகாணங்களிலே இல்லை என்று உதாரணம் சொல்லவில்லையா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இப்படியே பேசுவது சரியல்ல. இல்லாத யானை யைத் தேடிப் பார்க்கச் சொன்ன கதையாக மாறி விடும், சரியாக வராது.

திரு. அ. ரகுமான்கான் : காணாமல் போன யானை எங்கே என்று கேட்டதற்குப் பிறகுதான், ** ஏலம் போட்டுக் கொண்டோம் என்ற நிலைமை வந்திருக்கிறது. ஆகை யினாலே, மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே,..

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ** ஏலம் போட்டு விட்டோம் என்று சொல்லவில்லை. ஏலம் போடப்பட்டு விட்டது என்று

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

சொன்னார். அதைத் தவறாகப் புரிந்து கொண்டு சொல்கிறார். திரு. ரகுமான்கான் அவர்கள்தான் ஒரு உதாரணம் சொல்வார்கள். இல்லாத கருப்புப் பூனையை இருட்டிலே தேடிப் பார்ப்பது போல் என்று சொல்வார்கள். அது இல்லாத யானையைத் தேடிப் பார்க்கிற முயற்சியாக இருக்கிறது. குதிரையிலிருந்து யானைக்குப் போகிறார் என்று சொல்வதாக நினைக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற வார்த்தையை நீக்கிவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நான் குதிரையிலேயிருந்து யானைக்குப் போயிருப்பதாகச் சொல்கிறார். யானை இரண்டு நாட்களுக்கு முன்பு மேயப் போய், இரண்டு நாட்களுக்குப் பிறகு ஏலம் போனது என்ற கதை வந்திருக்கிறது. அந்தப் பிரச்சினைக்குள்ளே போக விரும்பவில்லை. உதாரணத்திற்காக, யானையைப்பற்றி கூறியதற்குப் பிறகுதான் நாவலர் அவர்கள் சொல்கிறபொழுது அது மேயப் போயிருக்கிறது என்று சொன்னார். மேயப் போன யானை, உடுப்பி ஓட்டலுக்குப் போய் டீ சாப்பிட்டுவிட்டு.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அந்த யானையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். புகாரே வரவில்லை. அப்படி எதுவும் இல்லாத ஒரு பிரச்னை என்றுதான் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உறுப்பினர் சொன்னதுதான் தவறே தவிர, கிளப்பிய பிரச்னையே தவறு; நாவலர் சொன்ன பதிலில் ஒன்றும் தவறில்லை.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் பேசிவிட்ட காரணத்தாலே, அதுபற்றி திரும்பப் பேசுகிறேன். ஏனென்றால் அவர் பேச்சை மட்டும் சபைக் குறிப்பிலே ஏற்றிவிட்டு, பதில் சொல்ல என்னை அனுமதிக்காமல் போனால் அது சரியாக வராது. ஆகையினால் அடுத்து வருகிறேன். அதற்கு முன்பாக ஒரு சிறு விளக்கம். யானை காணாமல் போனது சம்பந்தமாக, எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அதுபோல் மற்றவர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. அந்த ஊரிலே இருப்பவர்களும் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். 1977-லே ஏலம் போடப்பட்ட விவகாரம் பொது மக்களுக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. யானை காணோம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் கடந்த 10 நாட்களாகவே இந்த யானையைப் பற்றி மிகுந்த கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இல்லாத யானையை, திருடு போய் விட்டதாக ஒரு நடக்காத நிகழ்ச்சியை இந்த அவையிலே எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெற

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

1986 மே 13] திரு. ஆர். எம். வீரப்பன்.

வில்லை, அப்படிப்பட்ட புகாரும் யாரிடத்திலும் தரவில்லை யென்று தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு அதற்கு விளக்கம் தரப்பட்டது. 1977-லேயே, அந்த ஆலயத்திலேயிருந்த யானை பொது ஏலத்திலே விற்கப்பட்டுவிட்டது என்று இந்த அவையிலே, தெரிவித்து விட்டோம். அப்படியானால், யார் எடுத்தார்கள், எப்பொழுது விட்டார்கள், விளம்பரப்படுத்தினார்களா என்று அவர்கள் கேட்டார்கள். அது முறையாக, விளம்பரப்படுத்தப் பட்டு, பொது ஏலத்திலே போடப்பட்டிருக்கிறது. அந்த யானை இருவரை காயப்படுத்தி, துன்புறுத்தி, அதிலே ஒருவர் வழக்கு மன்றத்திற்குச் சென்று நஷ்டஈடு கேட்டு வழக்கும் போட்டிருக் கிறார். இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு தான் அப்படி நஷ்டஈடு கேட்க வேண்டியதில்லையென்று நீதிமன்றத்திலே கூட தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்த யானையை அங்கே வைத்துக் கொண்டிருப்பது பாதுகாப்பாக இராது என்று முடி வெடுத்து, ஆலயப் பொறுப்பிலே இருப்பவர்கள், அந்த யானை யைக் கட்டுப்படுத்த முடியாது என்று தெரிந்ததற்குப் பிறகு, 1977 ஆம் ஆண்டு அது பொது ஏலத்திலே விடப்பட்டது என்றும் அந்தப் பொது ஏலத்திலே விடப்பட்ட யானையை, நாகர்கோவி லைச் சேர்ந்த ஒரு வனத் துறை ஒப்பந்தக்காரர் எடுத்திருக் கிறார் என்றும் பெறப்பட்ட அந்தத் தொகை, தனியாக, வங்கி யிலே முதலீடு செய்யப்பட்டு, அது இப்பொழுது ரூ. 40,000 ஆக அதிகமாக, நிதி சேர்ந்து, அந்தக் கணக்கிலேயே இருந்து வருகிறது என்றும் மாண்புமிகு நிதி அமைச்சரிடத்திலே நானே தகவலைக் கொடுத்து, அவருடைய பதில் உரையிலே அதைச் சொல்வதாக அவர்கள் தெரிவித்து இருந்தார்கள். அவர்கள் அறிவித்தார்களா இல்லையா என்பது தெரியாது. அப்படி அறிவித்ததற்குப் பிறகும் மாண்புமிகு உறுப்பினர் திட்டமிட்டு அதைக் கிளப்பிக் கொண்டே இருக்கிறார்கள். நான் அன்றைக்கே சொன்னேன். அப்படி மாண்புமிகு உறுப்பினர் கிடைத்த ஒரு தகவலை இந்த அவையில் சொல்வது என்பது வேறு. விவரங்கள் தரப்பட்டதற்குப் பிறகு, மீண்டும், மீண்டும், வற்புறுத்திக் கொண் டிருப்பதால் அவர் ஒரு நோக்கத்தை வைத்துக் கொண்டு, அரசின் மீது பழி போடுகின்ற வகையிலே, இந்தச் சபைக்குத் தவறான தகவலையே தந்து கொண்டிருக்கிறார். ஆகவே இந்த சபைக் குத் தவறான தகவல்களை தந்து சபையினுடைய உரிமையை மீறுகின்ற குற்றத்திற்கும் மாண்புமிகு உறுப்பினர் ஆளாகியிருக் கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையிலே ஒரு முறை பேசி பதில் அளித்ததை திரும்பத்திரும்ப பேசாதீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குதிரைக்குப் போகிறார், யானைக்குப் போகிறார் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிய நேரத்திலேதான் நான் இதுகுறித்து சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அமைச்சர்

திரு. அ. ரகுமான்கான் [1986 மே 13

அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அதே நேரத்தில விளக்கம் தெரிந்ததற்குப் பிறகும் அதையே ஒரு பிரச்சினையாக ஆக்கிக் கொண்டிருக்கலாமா அரசாங்கத்தை பழி போடுகின்ற விதத்தில் என்று கூட கேட்டார்கள். அவர் கோபிக்கக் கூடாது. நீங்களும் கோபிக்க வேண்டாம். உங்களுக்கே தெரியும். முருகனுடைய வேல் திருட்டுப் போய்விட்டது என்ற குற்றச்சாட்டு வந்து அதற்கு ஒரு கமிட்டி போட்டு அதற்குப் பிறகு தான்.....(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருட்டுப் போய் விட்டதாக சட்டமன்றத்திலே ஒரு தவறான தகவல் தந்தார்கள். அந்தத் தகவலின் மீது அரசு, ஒரு நபர் குழுவைப் போட்டு அதை விசாரணை செய்யச் சொன்னது. அப்படி எந்த விதமான வேலும் திருட்டுப் போகவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெறவே யில்லை. அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறாத ஒரு சூழ்நிலையில் பழி போட வேண்டும் என்று தான் அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் பழி போடுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு ஈடுபட்டுத்தான் நீங்கள் பழி பாவத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறீர்கள். தயவு செய்து இனிமேலாவது பழி போட்டு தலை வாங்குகின்ற முயற்சியில் ஈடுபட வேண்டாம். இவ்வளவு பொறுப்புமிக்க ஒரு அவையில், பொறுப்புமிக்க ஒரு கட்சியைச் சார்ந்த, ஒரு பொறுப்புமிக்க உறுப்பினர், விவரங்களைத் தந்ததற்குப் பிறகு ஒன்று ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையானால் அரசு தரப்பிலே தருகின்ற தகவல் தவறு என்று நீங்கள் நிரூபிக்கத் தயார் என்றால் அதற்கும் அரசும் தயாராக இருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள மீண்டும் மீண்டும் இந்த யானை பிரச்சினையை இங்கே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சுவாமிமலையிலே யானை ஒருவராலே இனாமாக வழங்கப் பெற்றது. 1977 ஆம் ஆண்டு பொது ஏலத்திலே போடப்பட்டிருக்கிறது. சட்டப்படி போடப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் அறிவித்து போடப்பட்டிருக்கிறது. அதை விற்று வந்த தொகை இன்றைக்கும் வங்கியிலே தனியாக வட்டியோடு சேர்ந்து காப்பாற்றப்பட்டு வருகிறது. அது இருவருக்கு ஆபததை விளைவித்து, ஒருவர் வழக்கு மன்றத்திலே நஷ்டஈடு வேண்டுமென்று வழக்குப் போட்டிருக்கிறார். இவ்வளவு விவரங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். தவறான தகவலைத் தெரிவித்து விட்டேன் என்று வருந்த வேண்டும் அல்லது மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையென்றால் தவறான தகவல் என்பதையாவது ஒத்துக் கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் அவர்கள் இந்த தவறான தகவலை இங்கே தந்து அதையே பிடிவாதமாக இங்கே சொல்ல முயல்வாரானால், சபைக்குத் தவறான தகவலை தந்துக் கொண்டிருக்கின்ற சபையின் உரிமையை மீறுகின்ற குற்றத்திற்கும் அவர்கள் ஆளாகிறார்கள். சபையில்

நடவடிக்கைகளிலே தொடர்புள்ள இந்த அவை மீறல் நடவடிக்கையை, இந்த அவையினுடைய உரிமையை மீறுகின்ற நடவடிக்கையை அருள்கூர்ந்து மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக நீங்கள் எழுப்ப வேண்டிய சூழ்நிலையை இங்கே உருவாக்க வேண்டும் என்று உங்களிடத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதையெல்லாம் விட்டுவிட்டு பில்லிலே பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்) கொஞ்சம் உட்காருங்கள். நானும் ரகுமான்கான் அவர்களும் பேசிக் கொண்டிருக்கிறோம். (கூச்சல்-குழப்பம்.)

திரு. அ. ரகுமான்கான்: நான் அமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

(கூச்சல்-குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாம் ஒரு முறையை கையாள வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதிலுக்கு வருவதற்கு முன்பாக, மன்னிப்பு கேட்க வேண்டும், மரியாதையாக பதில் சொல்ல வேண்டும். தவறை ஒப்புக் கொள்ள வேண்டும். தவறான தகவலுக்காக என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நான் திருப்பக் கேட்கிறேன். அந்த வாதத்தை சொல்லிவிட்டு யானைக்கு வருகிறேன். (கூச்சல்-குழப்பம்.)

(மாலை 6-00)

மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே போலீஸ் மானியத்தில் நான் பேசுகிறபோது பல்வேறு குற்றச் சாட்டுக்களை நான் சொல்லியிருக்கிறேன். கல்வி மானியத்திலே பேசுகிறபோது வேல் முருகன் விவகாரம் பற்றி பல்வேறு பிரச்சினைகளை நான் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இங்கே முடிந்து போன விவாதங்களைப் பற்றி பதில் சொல்ல முடியாத நிகழ்ச்சிகளைப் பற்றி நான் இப்போது எழுப்பவில்லை. அன்றைக்கே அது தீர்ந்துபோனதாகக் கருதிக்கொண்டிருக்கிற ஒரு செய்தியை, அவைக்கு அரசின் சார்பில் தெளிவான விளக்கம் தந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு நிகழ்ச்சிகளில் இந்த யானைப் பிரச்சினையைத் தொடர்பு படுத்தினார்கள் என்ற அந்தக் காரணத்தைக் காட்டி மீண்டும், மீண்டும் அந்தக் குற்றச் சாட்டுக்களை இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். என்னுடைய

திரு. ஆர். எம். வீரப்பன் [1986 மே 13

கேள்வி இதுதான். தெளிவான ஒரு விளக்கத்தைப் பெற்றதற்குப் பிறகும் அரசின் விளக்கம் தவறானது, அல்லது உண்மைக்கு மாறானது, இது நடக்கவில்லை, ஏலம் போடப்படவில்லை, 1977-க்குப் பிறகும் அங்கே யானை இருந்தது, அந்த யானை திருடு போய்விட்டது, அதை அரசாங்கம் மறைக்கிறது என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்களா? இதற்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு அவர்கள் மற்ற விஷயத்திற்குள்ளே போகலாம். ஆனால் நடந்து முடிந்த விவாதங்களைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்பதில் பலன் இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் யானையோடு நிறுத்துகிறார்கள். நான் அதற்கு வருகிறேன். நான் வரமாட்டேன் என்று சொல்ல வில்லை. நான் அதற்குப் பதில் சொல்லத் தான் விரும்புகிறேன். ஆனால் ஒரு உறுப்பினரைப் பற்றி, தவறான தகவல் கொடுக் கிறார், ஆகவே மன்னிப்பு கேட்கவேண்டும் என்று சொன்ன காரணத்தால் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கேள்வி கேட்டிருக்கிறார். அதற்கு நேரடி யாகப் பதில் சொல்லவேண்டும். மற்ற பிரச்சினைகளைப் பேச வேண்டியதில்லை. அவ்வாறு பேசுவது திறமையான பேச்சாக இருக்கலாம். ஆனால் முறையான பேச்சாக அது இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுகிறேன். ஆனால்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் கேட்கின்ற கேள்விக்கு பதில் சொல்லுங்கள். மற்றவற்றைச் சொல்லவேண்டியதில்லை.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்குகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியாதது அல்ல. ஒரு உறுப்பினரைப்

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 13] திரு. அ. ரகுமான்கான்.

பற்றி எப்போதுமே பொய்யான தகவலைத் தரக்கூடிய அர்த்தத்தில்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினையில் நீங்கள் பொய் சொல்கிறீர்கள் என்று அமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்ட பாணியிலேயே அவரிடத்தில் நான் கேட்கிறேன். யானை என்ன ஆயிற்று? யானை எங்கே? அதைச் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அமைதியாகக் கேளுங்கள். சொல்கிறேன். எனக்குக் கிடைத்த தகவல்படி (கூச்சல்—குழப்பம்) நான் சொல்லுகிற விளக்கம் அவர்கள் ஏற்றுக்கொள்வதாகவும் இருக்கலாம்; மறுப்பதாகவும் இருக்கலாம். அல்லது பொய்யான தகவலைக் கொடுத்துவிட்டேன் என்று சொல்லி எப்படி வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். அது வேறு விவகாரம். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் (குறுக்கீடு) என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு அனுமதியுங்கள். அதைத்தான் நான் தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன். எனக்கு ஒரு தகவல் தரப்பட்டது. நான் பேசுகிறபோது மிக ஜாக்கிரதையாக, கவனத்தோடுதான் சொன்னேன். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு புகார் வந்திருக்கிறது. அந்தப் புகார் அடிப்படையில் கேட்கிறேன். நான் சொன்ன வாசகத்தையே திருப்பிக் கேட்கிறேன். கோயிலிலே உண்டியல் திருடு போய் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. கோயில்களில் இன்னும் பல சிலைகள் திருடு போவதாகச் செய்திகள் வருகின்றன. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் எந்த ஆட்சிக் காலத்தில் என்று சொன்னால்தான் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள், நேரடியாக அமைச்சர் கேட்ட கேள்விக்கு விளக்கம் கொடுக்க வேண்டும். வளைத்துக் கொண்டு வர வேண்டாம். (கூச்சல், குழப்பம்.)

திரு. அ. ரகுமான்கான்: துணைச் சபாநாயகர் அவர்களே, ஒவ்வொன்றாகச் சொல்லிவிட்டு கோயில் யானையைக் காணோம் என்று நான் சொன்னேன். நான் கோவில் யானையை (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) வேண்டுமானால் படித்துப் பாருங்கள், அவைக் குறிப்பிலே இருக்கிறது. புரொசீடிங்சிலே இருக்கிறது பாருங்கள். (குறுக்கீடு) பூனை காணாமல் போயிருந்தால் கண்டு

பிடித்துக் கொள்ளலாம். யானையே காணாமல் போய் இருக்கிறது என்று நான் கேட்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். முடிக்கட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொன்ன நேரத்தில் அப்போது நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இருந்தார்கள். நாவலர் அவர்கள் பதில் சொன்னார்கள். நாவலர் அவர்கள் பதில் சொன்ன போது அந்த யானையை பாகன் கொண்டு போய் இருக்கலாம் அல்லது அது மேயப் போய் இருக்கலாம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு புதிய தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தகவலின் அடிப்படையில் சொன்னார். அது ஏலம் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் பத்திரிகையிலே விளம்பரம் செய்யப்பட்டு டென்டர் கால் பார் பண்ணி எல்லோருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டு அது ஏலம் போடப்பட்டதா என்று கேட்டேன். அதற்கு என்னிடத்திலே இப்போது தகவல் இல்லை, நான் சொல்கிறேன் என்று சொன்னார்கள்.

அதற்குப்பிறகு அவர்கள் இந்த அவையிலே அவர்கள் எலக்ஷன்ஸ், மினிஸ்டர்ஸ் என்று டிமாண்டிற்கு சம்பந்தம் இல்லாது இருந்தாலும்—பத்திரிகையிலேயும், ரேடியோவிலேயும் சொல்லி விட்டார்கள், அதனால் விளக்கம் சொல்கிறேன் என்று விளக்கம் கொடுத்தார்கள். அந்த விளக்கங்கள் எல்லாம் அவர் கொடுத்ததற்குப் பிறகு, அவர் கொடுத்திருக்கிற விளக்கம் அரசாங்கத்தின் தரப்பிலே சொல்லப்பட்டது சரியாக இருக்கிறதா என்பது குறித்து எனக்கு யார் புகார் கொடுத்தார்களோ அவர்களை விசாரித்துக் கொண்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் ராஜாராம் அவர்களையும் நான் விசாரித்துக் கொண்டிருக்கிறேன். இது சம்பந்தமாக தேவையான விவரங்கள் எனக்கு கிடைத்தவுடன் நான் விளக்கங்கள் தர தயாராக இருக்கிறேன்....

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவருடைய பெயரைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அவர் சபையிலே இல்லை. அவர் வந்ததற்குப் பிறகு, அவரை கேட்டுக் கொண்டதற்குப் பிறகு அதை குறிப்பிலே ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அதுவரையில் அது வேண்டுமா வேண்டாமா என்று தாங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் அரசின் சட்டமுன் வடிவுகளை நிறைவேற்றிக்

கொண்டிருக்கிற நேரத்திலே அவசியம் இல்லாத ஒரு விவாதத்தை தொடங்கி மீண்டும் மீண்டும் இந்த அவையினுடைய மாண்பை குறைத்துக் கொள்கிற வகையிலே அவர்கள் தங்களுடைய கருத்து துக்களை வலியுறுத்திக் கொண்டிருப்பதற்காக நான் உங்கள் மூலம் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசியபோது தொடர்ந்து பத்திரிகை யிலே வந்த செய்திகளையெல்லாம் இங்கே குற்றச்சாட்டுகளாக அவர் பேசிக் கொண்டிருந்த நேரத்தில், அவர் மேடையிலே அதிகமாகப் பேசி பழக்கப்பட்டு இருக்கிற காரணத்தாலே, சட்ட மன்றத்திலே அங்கே அது காணப்படவில்லை, காணாமல் போய் விட்டது, இங்கே இது காணாமல் போய்விட்டது என்று சொல்லிக் கொண்டே வந்து கடைசியில் கோவில் யானையே காணாமல் போய் விட்டது என்று சொல்லிவிட்டார்கள். அப்போது நானும் இங்கே தான் இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஒரு குறிப் பிட்ட ஆலயத்தினுடைய பெயரைச் சொல்லி, அதுவும் அந்த தொகுதியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் என்னிடத்திலே அந்தத்தகவலைத் தந்தார் என்று சொல்லி, அவர் சொன்னதற்குப் பிறகு, அவரே நேரிடை யாகத் தந்திருக்கலாமே என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர் கள் கூட கேட்டார்கள்.

நான் அன்றைக்கு எதுவும் பதில் சொல்லாமல் அமைதியாக அமர்ந்திருந்ததற்குக் காரணமே அது உண்மையாக நடந்த செய்தியா என்று தெளிவாகத் தெரிந்து கொண்டு, மறுநாள் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று, அரசின் சார்பிலே நாங்கள் இருக்கிற காரணத்தால், பொறுப்பும் கடமையும் எங்க ளுக்கு அதிகமாக இருக்கிற காரணத்தால் நான் அமைதியாக இருந்தேன். பிறகு அன்றைக்கு அந்த நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு, அந்தச் செய்திகளை சேகரித்து வைத்து, நான் மாண்பு மிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே அந்த தகவல்களை கொடுத் தேன்.

(மாலை 6–10.)

அப்படிப்பட்ட ஒரு யானை 1977 ஆம் ஆண்டிலே பொது ஏலத்திலே விடப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்திலே 6 ஆலயங்களில் மட்டும் தான் யானைகள் இருக் கின்றன. அந்த ஆலயங்களில் இப்போதும் யானைகள் இருக் கின்றன. அவைகள் இருக்கின்றன. எந்த யானையும் திருடு போகவில்லை. ஆகவே 1977லே பொது ஏலத்திலே விடப்பட்ட தற்குப் பிறகு சுவாமிமலை ஆலயத்திற்கு என்று யானை வாங்கப்படவும் இல்லை என்ற தகவலை அவர்களிடத்திலே

திரு ஆர். எம். வீரப்பன் [1986 மே 13

கொடுத்து, அவர்கள் அந்தப் பதிலை தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போதாவது அந்தப் பொறுப்பை உணர்ந்து அதை விட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அவர் சொன்னது யானை திருடு போனது என்று. திருடு போக யானையே இல்லை. 1977லேயிருந்து 8 ஆண்டுகளாக, 9 ஆண்டு களாக யானையே இல்லை என்று. சொன்னதற்குப் பிறகு, அரசு தரப்பிலே விளக்கத்தை பொறுப் போடு தருவதை கேட்டதற்குப் பிறகு, அவர்கள் அதையும் ஏற்றுக்கொள்ளாமல், ஏலம் போட்டீர்களா, யாருக்குப் போட்டீர்கள், விளம்பரம் செய்தீர்களா, எப்போது ஏலம் போட்டீர்கள் என்று நடைமுறையைப் பற்றி கேள்வி கேட்டார்கள். குற்றம் சாட்டியது காணாமல் போயிற்று என்று, அதைக் கண்டு பிடிக்கவில்லையென்று காணாமல் போகவில்லை, கண்டுபிடிக்கிற சூழ்நிலையே எழவில்லை. அது முறையாக ஏலம் போடப் பட்டது 8 ஆண்டுகளுக்கு முன்னாலே என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். நான் துறையோடு தொடர்பு கொண்டு, சுவாமிமலை ஆலயத்தோடு தொடர்பு கொண்டு, அடுத்த நாளே அதற்கான செய்திகளை பழைய கோப்புகளிலிருந்து தேடி அவர்களை கொடுக்கச் சொன்னேன். அந்த விவரத்தையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்து, அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில் இந்த நடவடிக்கைகளைப் பற்றி மானியக் கோரிக்கையின் மீது பேசியது பரவலாக வெளியே வானொலியிலும் மற்றும் செய்தித் தாள்களிலும் வந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே விளக்கம் அளித்து விடுங்கள் என்று அவர்களிடத்தில் சொல்லி, இது எப்படி ஏலம் போடப்பட்டது, யார் ஏலம் எடுத்தார்கள், எப்படி பணம் இருக்கிறது, இன்றைக்கு அது எப்படி வட்டியோடு சேர்ந்து தனியாக அந்தக் கணக்கிலே இருக்கிறது. யானை தாக்கியதால் ஒருவர் வழக்கு போட்டு 5, 6 ஆண்டுகளாக வழக்கு நடந்து, சென்ற ஆண்டோ அதற்கு முந்தைய ஆண்டோ அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று இவ்வளவு விவரங்களையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகும் நான் கேட்க விரும்புவது, சுருக்கமாக, தெளிவாக, அரசு தரப்பில் தெரிவித்திருக்கிற விவரங்களை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, மறுக்கிறீர்களா ? மறுக்கிறீர்கள் என்றால் இங்கே இந்தச் சபையில் அந்த சுவாமிமலை உறுப்பினர் சொன்னால் தான் நான் நம்புவேன் என்று சொல்வார்களானால், நீங்கள் யாரிடத்தில் கேட்கிறீர்களோ, யார் உங்களுக்கு தகவல் தருகிறார்களோ, அது சரியான தகவலா, தவறான தகவலா, அதைப்பற்றியெல்லாம் இந்த அவைக்கு அக்கறை இல்லை. இங்கே பொறுப்புமிக்க மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் மறுத்திருக்கிறோம். இப்போது எங்களுக்குத் தெரிய வேண்டியது, மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, அரசினுடைய இந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, இந்தக் குற்றச்சாட்டை தான் இங்கே தந்தது தவறு என்று அல்லது

தவறாகச் சொல்லிவிட்டேன் என்று ஏற்றுக்கொள்கிறார்களா ? இல்லை, நான் அந்த உறுப்பினரைக் கேட்டுக்கொண்டு தான் ஏற்றுக்கொள்வேன், அரசினுடைய விளக்கத்தை நம்புவேன் என்று சொன்னால், மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இங்கேதான் அவையில் தவறான தகவலைத் தந்து, அவையினுடைய உரிமை மீறல் பிரச்னை எழுகிறது என்பதை நான் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அரசு தருகிற தகவல்கள் எல்லாம் சரியாக இருக்குமானால் விதி 111-ன் படி அமைச்சர்கள் சில நேரங்களில் தகவல்களைத் தருகிற அவசியம் ஏற்பட்டிருக்காது. தகவல் தந்திருக்கிறார்கள். ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறேன். சம்பந்தப்பட்டவர்களை விசாரித்து அது உறுதியாக இருக்குமானால் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதற்குப் பிறகு, அவர்கள் விசாரித்ததற்குப் பிறகு, அரசு தந்த தகவல் சரியானது என்று சொன்னால், அன்றைக்கு அவர்களுடைய குற்றத்தை இங்கே ஒப்புக்கொள்கிறார்களா என்று உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அதே பாணியில் கேட்கிறேன். இந்தப் பிரச்னை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேட்ட கேள்விக்குப்பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பில்லிலும் பேச மாட்டேன் என்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் கேள்வி கேட்டாலும் பதில் சொல்லமாட்டேன் என்கிறீர்கள். இது ஜனநாயகம் கிடையாது. (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். நேரிடையாக பதில் சொல்லுங்கள். உறுப்பினர் அவர்களை விசாரித்த பிறகு தவறு என்று தெரிந்தால் அப்போதாவது ஒப்புக் கொள்வீர்களா என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : என்னிடத்தில் புகார் சொன்னவர்களிடத்தில் விசாரிக்க வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விசாரித்த பிறகு தவறு என்று தெரிந்தால் அப்போதாவது ஒப்புக்கொள்வீர்களா என்பது தான் கேள்வி.

திரு. அ. ரகுமான்கான் : துணைத்தலைவர் அவர்களே, இந்த சபையில் இந்தப் பக்கத்திலிருந்தும் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. அந்தப்பக்கத்திலிருந்தும் சொல்லப்படுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் விசாரித்த உங்கள் முடிவைத் தெரிந்து கொண்டு, இங்கே அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கிற வரையிலும் யானை விவகாரத்தைப் பற்றி நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான்: நான் ஏன் பேசப் போகிறேன், யானை தான் போய் விட்டதே?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: இப்படிப் பேசுவது சரியல்ல இந்தப் பக்கம் இருக்கிறவர்கள் உங்களைப் பற்றி பேசினால், 'இட் வில் ஆட்டோமேடிக்கலி கோ ஆன் ரெக்கார்ட்' நீங்கள் சொன்னபடி விசாரித்து இங்கே சொல்கிறவரையில் யானையைப் பற்றி நீங்கள் பேசக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே அந்த யானை துன்புறுத்தியதாக, புண்படுத்தியதாக வழக்கு போடப் பட்டது என்று. மறுபடியும் உறுப்பினர் அவர்கள் யானையை துன்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, பிரச்னை எங்கெங்கோ போய் கடைசியாக மதுவிலக்குச் சட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறோம். (குறுக்கீடுகள்).

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்றத்திலே ஒரு உறுப்பினர் ஒரு கருத்தை எடுத்து வைக்கிறார்கள் என்று சொன்னால், ஆதாரம் இருக்க வேண்டும். ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டால் அதை அவர்கள் திரும்பப் பெறவேண்டும். அல்லது மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆகவே அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்....(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் வேறு வழிகளைப் பின்பற்றுங்கள். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத்தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குக் கொள்கையில் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை தெளிவாக இருக்க வேண்டும். இப்போது நீங்கள் அமுல்படுத்துங்கள் என்று சொன்னால், 1987 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் என்று சொல்கிறீர்கள். அதற்கு முன்பு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி அண்ணா பிறந்த நாளில் அமுல்படுத்துவோம் என்று சொன்னீர்கள். வாக்குறுதி என்ன ஆச்சு என்று கேட்டபோது, அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். சபையிலே சொல்லப்படவில்லை, வெளியிலே தான் பேசப்பட்டது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு 1987-லே அமுல்படுத்துவோம் என்று சொன்னார்கள். ஏனய்யா இப்போது அமுல் நடத்தக்கூடாது என்று கேட்டால், கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டஈடு ஏற்படுகிறது, அதைப்பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும் என்று சொன்னார்கள். செப்டம்பரிலே அறிவிக்கிறபோது, இந்தச் சிந்தனை வந்திருக்கலாம். பரவா யில்லை. இப்போது கள்ளுக்கடைகள் இருந்து கொண்டு இருக் கின்றன. சாராயக் கடைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. இங்கே ஆதாரம் தராவிட்டால் தப்பு என்று நண்பர்கள் சொன் னார்கள். ஆதாரத்தைக் கொடுத்து நிரூபித்து விட்டால் என்ன செய்வது என்பதையும் நீங்கள் பேசவேண்டும். கள்ளுக் கடைகள், சாராயக்கடைகள் அரசாங்க உத்தரவிற்கு மாறாக பல்வேறு இடங்களில் இருக்கின்றன. ஆதாரங்கள் வைத்தி ருக்கிறேன். கேட்டால் சொல்கிறேன். இதை நிரூபித்து விட்டால் என்ன செய்வது ? நீங்கள் தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். அகில இந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த வர் அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்து சாராயக் கடைகளை நடத்துகிறார். அதிகாரிகள் உத்தரவு போட்டு இருக்கி றார்கள். நான் கேட்கிறேன், நிரூபித்து விட்டால் என்ன செய்வது ? நீங்கள் நிருபிக்கவில்லை என்றால் என்ன செய் வது என்று என்னைக் கேட்டார்கள். வாதத்திற்காக. நான் கேட்கிறேன், நான் நிரூபித்து விட்டால், என்ன செய்வது என்ற தீர்ப்பை நீங்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டு அமைகி றேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு எனக்கு வந்த தகவல் தவறான தகவல், எனக்கு தகவல் கொடுத்தவர்கள் அப்படி கொடுத்து விட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர் கள் சொல்லக்கூடாது. (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : நான் ஆதாரத்தைத் தருகிறேன். நான் நிரூபிக்காவிட்டால், நீங்கள் சொல்கிற தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நிரூபித்து விட்டால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டும் சேர்த்துத்தானே, யானைக்கும் சேர்த்துத் தானே.

திரு. அ. ரகுமான்கான் : இரண்டுக்கும் சேர்த்துத்தான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யானை விவ காரம் தப்பு என்றால், தண்டனையை ஒத்துக் கொள்கிறீர்கள். (குறுக்கீடு).

[1986 மே 13

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு இரண் டாவது மதுவிலக்கு சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகிற போதே, அதனுடைய தலைப்பில், மிகத் தெளிவாக, நோக்க காரணத்தை விளக்குகிறபோது, கள்ளுக்கடைகள், சாராயக் கடைகளை நீக்குகிற, 1-1-1987-முதல் மதுவிலக்கு சீர்திருத்தச் சட்டம் என்று மிகத் தெளிவாகக்கூறப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கத்தில் இப்படி தெளிவாகக்கூறாமல் மதுவிலக்கு திருத்தச் சட்டம் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னதைப் போன்று, அவர்கள் உண்மையை மறைக்கிறார்கள் என்று சொல்ல லாம். ஆனால் மிகத் தெளிவாக இந்த சீர்திருத்தச் சட்டத்தி னுடைய நோக்கத்தில் கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் 1-1-1987 முதல் நீக்கப்போவது சம்பந்தமான திருத்தச் சட்டம் என்று சொன்ன பிறகும், இப்படி வாதத்தைக் கிளப்புவது, யார் தள்ளாடுகிறார்கள் என்பதை இந்தச் சபையின் முடிவிற்கே விட்டு விடுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். பஞ்சமா பாதங்களில் ஒன்றான அந்த மதுவைப்பற்றி—நாங்கள் கொண்டுவரவில்லை என்று சொன்னார்கள்—இந்தியாவில் முதன் முதலாக மதுவிலக் கைக் கொண்டு வந்த மாநிலம் தமிழ்நாடு தான், என்று 1947-லே இருந்து கால் நூற்றாண்டு வரை இருந்த, அழியாத புகழை, முதன் முதலாகக் கெடுத்து, பஞ்சமா பாதகங்களில் ஒன்றான இந்த மதுவைப் புகுத்தியதே மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சார்ந்த கட்சி தி. மு. க. தான் என்பதை யாரும் மறந்துவிட மாட்டார்கள்.

(மாலை 6.20).

இந்தச் சட்டத்தை ஏன் இப்போதே கொண்டுவரக் கூடாது என்று கேட்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய கொள்கையை அறிவிக்கின்றபோது, கொள்கை முடிவாக 1–1–1987 முதல் கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் ஒழிக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்குக் காரணத்தை யும் சொன்னார்கள். 1986–87 நிதி நிலை அறிக்கை தயாரிக்கிற போது 1987 மார்ச் முடிய நிதி ஆதாரங்களைக் கணக்கிட்டு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்ததால் இந்த ஆண்டு 1986-87 நிதியில் சுமார் 60 கோடி நஷ்டம் ஏற்படுகிறது என்பதை விளக்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 மே 13]

கியே சொல்லி இருக்கிறார்கள். 1987—88லிருந்து ஆண்டொன்றுக்கு கள்ளுக்கடை, சாராயக்கடை மூடுவதன் மூலம் தமிழக அரசுக்கு சுமார் 250 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும். மாதம் ஒன்றுக்கு கள்ளு, சாராயம் இரண்டிலும் வருமானம் வருவது ரூ. 20 கோடியாகும். 17 கோடியே சொச்சம் சாராயத்திலும், 2 கோடியே சொச்சம் கள்ளுக் கடையிலிருந்தும் ஒவ்வொரு மாதமும் அரசுக்கு வருமானம் வருகிறது. இதை ஆதாரமாக வைத்து (குறுக்கீடு) இந்த நிதி ஆதாரத்தை கணக்கிலே வைத்து தான் நிதி நிலை அறிக்கையின் போது 1–1–1987 முதல் கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் மூடப்படும் என்று சொன்னார்கள். 1–1–1987 முதல் இந்தியாவில் குஜராத்துக்கு அடுத்தப்படி மது விலக்கைஅமல்படுத்துகிற மாநிலம் தமிழகம் தான்என்ற பெயரை நாம் இப்போது எடுத்திருக்கிறோம். குஜராத்தில் கூட அயல் நாட்டு மதுபானக் கடைகள் இருக்கின்றன. பர்மிட்டுகள் மீது அங்கே மக்கள் மதுவை குறைவாக அருந்துகிறார்கள். ஆகவே மதுவிலக்கு மாநிலம் என்று சொல்லப்படுகிற ஒரே மாநிலமாக இருந்த குஜராத்துக்கு அடுத்தபடியாக தமிழக மாநிலம் 1–1–1987 முதல் மதுவிலக்கை அமல் படுத்துகிற மாநிலமாக வருகிறது. இந்த அயல் நாட்டு மதுக்கடைகள் மூலம் (குறுக்கீடு).

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதத்தை முடித்து வைக்கிற பேச்சை பேசுகிறாரா ? விவாதம் முடிந்து விட்டதா ? என்ன விஷயம் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியில் 'கிளாரிபிகேஷன்' கேட்டுக் கொள்ளலாம். பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் தான் உங்களைக் கேட்டேன். பேச வேண்டிய நேரத்தில் நீங்கள் பேசவில்லை ; முடிந்து விட்டது என்று நினைத்தேன். சரி பேசுங்கள் ; இனிமேல் கொஞ்சம் விஜிலெண்டாக இருங்கள். நான் வாய்ப்பு கொடுத்ததற்குப் பிறகுதான் பேசி இருக்கிறீர்கள். சரி பேசுங்கள். The Hon. member should be vigilant. I do not deny the opportunity to you. The Hon. member can talk.

திரு. பாப்பா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றுமுன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே பேசுகிறபோது கள்ளுக்கடை வைப்பதற்காக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சட்டத்தை மீறி ஆக்கிரமணம் செய்து வைத்திருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். அதற்கு நான் இங்கே விளக்கத்தை அறிய விரும்புகிறேன். அரசாங்கத்தினுடைய உத்தரவு, அரசாங்கத்திலே ஒரு குறிப்பிட்ட சர்வே நம்பர் குறிப்பிட்டு அதுவும் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் என்று குறிப்பிட்டு அங்கே

1986 மே 13] [பாப்பா சுப்பிரமணியன்]

கள்ளுக் கடைகளை வைக்க வேண்டுமென்று அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கிறது. அரசாங்கத்திடம் அனுமதி பெற்று, இப்படிப்பட்ட புறம்போக்கு இடங்களில் கள்ளுக் கடைகளைக் கட்டலாம் என்று அரசு அனுமதி தந்திருக்கிறது என்பதை (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளையெல்லாம் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்து விட்டுப்பேச வேண்டும். அது சம்பந்தமாக எந்தப் பக்கமாக இருந்தாலும் அதைப் பற்றி தலைவர் அவர்கள் ஒரு முடிவு எடுத்த பிறகுதான் அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடு, கூச்சல்,—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் இந்தக் குற்றச்சாட்டை சொல்லும்போது அதை காண்பித்தீர்களா ? (கூச்சல் குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான் : அதனால் தான் ஊரை சொல்லவில்லை, பெயரைச் சொல்லவில்லை. (கூச்சல்,—குழப்பம்).

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது புறம்போக்கு நிலத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவருக்கு சாராயக் கடை வைக்க அனுமதியை கொடுத்திருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். எனது ஊர் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரம், ரொம்பவும் பிரசித்திப் பெற்ற ஊர். அந்த ஊரில் அரசாங்கத்தினுடைய புறம்போக்கு நிலத்திலே தி.மு.க. வைச் சேர்ந்தவர், தி.மு.க.வில் இந்த ஆண்டு எம்.எல்.ஏ. சீட் வேண்டும் என்று கேட்ட தங்கம் என்பவர் சாராயக் கடை வைத்து இருக்கிறார்கள். இதற்கு அவர் என்ன காரணம் சொல்ல இருக்கிறார். நான் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (கூச்சல்—குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கு சம்பந்தப்பட்ட நபர் இது பற்றி என்ன சொல்கிறார் என்று தெரிந்தால்தான் நான் பதில் சொல்ல முடியும். (கூச்சல்—குழப்பம்) ஏன் என்று கேட்டால் இது பற்றி எனக்கு இந்த இடத்திலே எந்தத்தகவலும் கிடையாது. ஆனால் நான் சொல்லிய குற்றச்சாட்டே அரசாங்க அதிகாரியே தப்பு செய்து இருக்கிறார்கள் என்று எழுதி இருக்கக் கூடிய குற்றச்சாட்டின் நகல். ஆகவே அவர் குற்றச்சாட்டு.... (கூச்சல் குழப்பம்).

[1986 மே 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் எழுதியது, யார் பெயர் என்று எல்லாவற்றையும் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, எனக்கு ஒரு புகார் சில ஆதாரங்களோடு (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் கொஞ்சம் பொறுமையாக, அமைதியாக இருங்கள். வாய்ப்பு தருகிறேன். நான் என்ன புகார் என்று கேட்டுவிட்டு பதில் சொல்லுகிறேன். (குறுக்கீடு) புகார் என்றால் வரக்கூடிய கடிதங்களைக்காட்டினால் அது புகார் அல்ல. அதை யார் வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம், யார் மேலும் எழுதிக்கொள்ளலாம், வேறு ஏதாவது 'அபிஷியல் டாகுமெண்டு' இருந்தால் சொல்லுங்கள். அபிஷியல் டாகுமெண்டு இல்லை என்று சொன்னால் அதை கொடுக்க வேண்டாம். '' Any report can be concocted by anybody.''

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம் நான் தெரிந்து கொள்ள விரும்புவது, கள்ளுக் கடைக்கோ, சாராயக்கடைக்கோ, அரசுக்குச் சொந்தமான இடங்களில் அனுமதி அளித்து இருக்கிறார்கள் என்றுதான் குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அரசுக்குச் சொந்தமான....

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தப்பான சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள் என்று நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒன்றைவிட்டு ஒன்றுக்கு போகக்கூடாது. சால்வன்சி சர்ட்டிபிகேட் என்பது வேறு விவகாரம். அவர்கள் சொன்ன குற்றச்சாட்டிலிருந்து பின் வாங்கக் கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : நான் இங்கே முழுமையாக பேசவில்லை. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் தெரிந்து கொள்ள வேண்டியது ஒரு அரசு அதிகாரி அரசுக்குச் சொந்தமான இடத்திலே கள்ளுக்கடைக்கோ, சாராயக்கடைக்கோ வைக்க அனுமதி கொடுத்து இருக்கிறார் என்பது தான் அவர் சொன்ன குற்றச்சாட்டு (குறுக்கீடு) அதைத் தான் நீங்கள் சொன்னீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் என்ன குற்றச்சாட்டு சொன்னேன் என்பதை முழுமையாகக்கேட்காமல்...

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புறம்போக்கு நிலத்தில் வைத்ததாக நீங்கள் சொல்லவில்லையா? எனக்கு ஒரு சந்தேகம், அதை என்னிடம் கொடுங்கள் நான் ஒரு நிமிடத்தில்— I can see and tell you. பார்த்து விட்டு கொடுத்து விடுகிறேன். (கூச்சல்—குழப்பம்)

(திரு. அ. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும், தனியார் இடமாக இருந்தாலும் எந்த இடத்தில் லைசன்ஸ் கொடுக்க வேண்டும் என்று விதிமுறைகளை வகுத்து வைத்து இருக்கிறோம். அந்த விதி முறைகளுக்கு உட்பட்டு அரசாங்க அதிகாரிகள் உரிமம் வழங்குவதில் எந்தவிதத் தவறும் கிடையாது.

(மாலை 6-30)

உரிமம் வழங்காத இடத்தில் ஒரு கடையை வைத்திருக்கிறார்கள் என்பது தான் குற்றம். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பேசும்போது அரசு அதிகாரி அரசுக்குச் சொந்தமான இடத்தில் கள்ளுக்கடைகள் வைப்பதற்கு உரிமம் கொடுத்திருக்கிறார்கள்என்ற குற்றச்சாட்டை எடுத்துச் சொன்னார்கள். அது தவறு கிடையாது. அப்படி உரிமம் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். குற்றச்சாட்டு என்ன என்பதை அவர் சொல்லட்டும்.

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்றது ஒரு நீண்ட நேர தர்க்கம். அந்த தர்க்கத்தின் மத்தியிலே இந்தச் சட்டத்தின் மீது பேச வேண்டிய நாங்கள் எங்களுடைய பெயர்களை கொடுத்து வைத்தோம். பெயர்கள் கொடுத்தால் பேசச் சொல்லி கூப்பிடுவது வழக்கம். கூப்பிடவில்லை என்றுசொன்னால் ,அதற்கு என்ன காரணம் என்பது நமக்குத்தெரியாது.நாங்கள் எழுந்து நின்று கையைத்தூக்கிக் கொண்டு இருக்கமுடியாது. அது சட்டசபையில் ஒழுங்கான நடவடிக்கையும் அல்ல. அந்த முறையில் இன்றைக்கு காரியங்கள் நடந்தன என்பதை எங்களைப் பொறுத்தவரையில் நான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது, இந்தச் சபையினுடைய விலை மதிப்புள்ள நேரத்தை இந்த முறையில் பயன்படுத்துவது முறையல்ல. அப்படிப்பட்ட முறையில் இது போய்க் கொண்டிருந்தால் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சிக்கோ, மற்றொரு கட்சிக்கோ மட்டும் அல்ல, எல்லா கட்சிகளுக்கு இதில் பொறுப்புள்ளது. இதைக்கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்

[திரு. கு. ரமணி] [1986 மே 13

இப்போது நான் விவாதத்திற்கு வருகிறேன். மதுவிலக்குச் சட்டத்தில் ஒரு தர்க்கம் வந்துவிட்டது. கள்ளையும் சாராயத்தையும் மட்டும் ஒழிக்கிற சட்டம். அதை அவரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சீமைச் சாராயம், '' இந்தியன் மேட் பாரின் லிக்கர் '' அதுவும் விற்பனையாகிறது. அது இனிமேலும் விற்பனையாகும். இந்தக் கள்ளும், சாராயமும் ஒழிக்கப்படும். அதற்கு மதுவிலக்கு என்று சொன்னாலும் சரி, கள், சாராயம் ஒழிப்பு என்று சொன்னாலும் சரி, அல்லது 'இந்தியன் மேட் ஃபாரின் லிக்கர்' ஒழிப்பு என்று சொன்னாலும் சரி மற்றும் எந்தப பெயர் வைத்து ஒழிப்பு என்று சொன்னாலும், நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்று சொன்னால், இந்த மது விலக்கைக் கொண்டு அத்தனை மனிதர்களையும் நல்லவர்களாக ஆக்கி, இந்த சமூகப் பொருளாதார அரசியல் கஷ்டங்கள் எல்லாம் இத்தோடு தீர்ந்து புதியதாக ஒரு சமுதாயம் உருவாக்கப் படுவதாக நாங்கள் அன்றைக்கும் கருதவில்லை. இன்றைக்கும் கருதவில்லை. நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்று சொன்னால், மேற்கொண்டு கள்ளச் சாராயத்தினுடைய சாம் ராஜ்யம் வளர்ந்து ஜனங்களுக்கு மிகப் பெரிய கஷ்டங்களை ஏற் படுத்தக் கூடிய ஆபத்து இருக்கிறது. அந்த ஆபத்தை இந்த அரசு தடுக்க வேண்டும். அது இல்லையென்று சொன்னால், அதற்காக ஜனங்கள் சங்கடங்களை அனுபவிக்க வேண்டிவரும். உதாரண மாக இந்தச் சட்டமுன்வடிவிலே அதனுடைய அம்சங்களை நாம் பார்க்கமுடியும். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். இதிலே ஃபைனான்சியல் மெமோரண்டத்திலே குறிப்பாகச் சொல் கிறார்கள்.

The proposed amendment to the Tamil Nadu Prohibition Act, 1937, may result in the employment of additional shaff in the police and prohibition and Excise Departments to cope with the increased quantum of work on account of the implementation of the policy of prohibition. இப்படி நாம் கொண்டு வந்திருக்கிற மது விலக்குக் கொள்கையில் இந்த லிமிட்டிற்குள் இருந்தால், இதை அமல்படுத்துவதற்கு ஏராளமான போலீஸ்காரர்கள் ஏற்படுத்த வேண்டி வரும் அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டி வரும். பல ஊழியர்களை ஏற்படுத்த வேண்டி வரும். இன்றைக்கு இருப் பதைவிட, இதற்கு மேலே எல்லாம் ஏற்படுத்த வேண்டி வரும். அப்படித்தான் நீங்கள் அமல்படுத்த வேண்டி வரும். சட்டத்தை அமலாக்க வேண்டி வரும். போலீஸ் அதிகாரிகளும் அப்படித்தான் இந்தச் அவர்களுடைய சக்தியைக் கொண்டு தான் இந்த மது விலக்குச் சட்டத்தை அமலாக்க வேண்டி வரும் என்று சொன்னால், அதற்கு இரையாக வேண்டியவர்கள் சாதாரண ஜனங்கள், குடிக்கின்ற வர்கள், குடிக்காதவர்கள், பல்வேறு விதமான மக்கள் இதற்கு இரையாக வேண்டி வரும். இந்த நிலைமை வராதபடி பாது காப்பதற்கு அரசாங்கம் அதற்கான வழியைத் தேடியாகவேண்டும்.

1986 மே 13] [திரு. கு. ரமணி]

அது இல்லையென்று சொன்னால், குளிக்கப் போய் சேற்றைப பூசிக் கொள்வதுபோல் ஆகிவிடும்.

1937-ல் கொண்டுவரப்பட்ட சட்டம். இதை ஆராய்ந்து பார்த்து, ஒரு மதிப்பீடு செய்து, ஒரு அசெஸ்மெண்ட் செய்து, பரிசீலனை செய்ய வேண்டும். அன்றைக்கு மகாத்மா காந்தி அவர்கள் மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி இந்த நாட்டுக்குச் சொல்லி, காங்கிரஸ் கட்சி அரசாங்கம் வந்து, நாடு முழுவதும், இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய மதுவிலக்குச் சட்டத்தை உருவாக்கி அதன் மூலம் நல்ல விடிவு காலத்தை ஏற்படுத்தி, நாடு முழுவதும் உள்ள ஜனங்கள் இம்சை இல்லாமல் வாழ்வதற்கு ஒரு நாட்டினுடைய அபிவிருத்தி ஏற்பாடு இருக்க வேண்டும் என்ற முறையில் இந்தச் சட்டம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஏற்படவில்லை.

அப்படி ஒரு சட்டத்தையும் உண்டாக்கவில்லை. ஏனென்றால் அவர்களுக்கே தெரியும். அவர்களும் எங்கேயும் போய்ச் சொல்ல வில்லை. இதே அரசாங்கம் தாங்கள் இங்கே மதுவிலக்குக் கொண்டு வருவதனால் ஏற்படக் கூடிய நஷ்டம் இருக்கிறதே, ரெவின்யூ நஷ்டம்—அந்த நஷ்டத்தை ஈடுகட்டுவார்களா என்று கேட்டால் இன்றைய வரைக்கும் அதற்குப் பதில் கொடுத்தது கிடையாது. அப்படி எல்லாவற்றையும் ஈடுகட்டக்கூடிய நிலைக்கு மத்திய அரசு வரப்போவதும் இல்லை. ஆனால் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டியது மாநிலங்கள். அதனுடைய பொறுப்பு முழுவதும் அவர்கள் தேடிக் கொள்ள வேண்டும். கள்ளச் சாராயம் ஏற்படுவதனாலே ஏற்படக்கூடிய ஆபத்தினை ஜனங்கள் ஏற்றுக் கொள்வது மட்டும் அல்ல. இந்த மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய வரி நஷ்டங்களுக்கு முழுவதும் அதிக வரி அந்த ஜனங்கள் கட்டவேண்டி வரும். இது இல்லை என்று சொன்னால் அரசாங்கத்தினுடைய. .

திரு. இரா. தாமரைக்கனி : ரகுமான்கான் சபைக்குள் பூனையை விட்டு இருக்கிறார்கள். .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுகூட உங்களுடைய விவாதத்தைக் கேட்க ஆசைப்படுகிறது. (சிரிப்பு).

திரு. கு. ரமணி : அப்படி எந்த மாநிலத்திற்கும் அவர்கள் நஷ்ட ஈடு கொடுத்து, இந்தக் கொள்கைதான் சிறந்த கொள்கை, அதை அமலாக்க வேண்டும் என்று எந்த உத்தரவாதமும் இன்றைக்கு வரைக்கும் செய்யப்பட்டது கிடையாது. எந்த அரசாங்கமும் அப்படிக் கேட்டும், இதுவரைக்கும் அவர்கள் கொடுத்ததும் இல்லை. அப்போது இதை முழுவதும் மாநிலங்கள்தான் தாங்கிக் கொள்ள வேண்டி வருகிறது. எவ்வளவு நஷ்டம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எவ்வளவு நஷ்டம் வரும், 1 மாதத்திற்கு எவ்வளவு நஷ்டம், ஒரு வருடத்திற்கு

எவ்வளவு நஷ்டம் என்று சொன்னார். அப்படிச் செய்தால் கூட என்ன நிலைமை ஏற்படுகிறது? உயர்ந்த மட்ட சாராயத்தைக் குடிப்பதற்கு உரிமை இருக்கிறதா என்றால் இருக் கிறது.

கள்ளும், சாராயமும், சாதாரண 'கன்ட்ரி அர்ராக்'—அது குடிப்பதற்கு மட்டும் உரிமை இல்லை. அந்த உரிமையைக் கொடுங்கள் என்று வாதாட நான் வரவில்லை. ஆனால் அவர் களுக்கு அந்த உரிமையில்லை. ஆனால் சீமைச் சாராயம் சாப்பிடுகிறவர்களுக்கு, சீமைச் சாராயத்தை இந்தியாவில் உண்டாக்கியது—அது சாப்பிடுகிறவர்களுக்கு என்ன தடை இருக் கிறது என்றால் ஒரு தடையும் இல்லை. அவர்கள் வேண்டு மானால் லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். லைசென்சு வாங்குவதில் பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லை. அது இன் றைக்கு நன்றாகப் பழக்கப்பட்டுவிட்டது. இந்தக் காலத்திற் குள்ளேயே அதற்கு நல்ல டிரெயினிங் வந்தாகிவிட்டது. இப் போது அவர்கள் சாப்பிடலாம், வசதிக்காரர்கள், பணக்காரர் கள் சாப்பிடலாம். யார் வேண்டுமானாலும் சாப்பிடலாம். சீமைச் சாராயத்தைச் சாப்பிடலாம். ஆனால் சாதாரண ஜனங் களுடைய கள்ளும், சாராயமும்தான் ஒழிக்கப்படுகிறது. அப்படி யானால் எந்த அளவுக்கு எஃபெக்டிவாக, கூர்மையாக, திறமை யாக கள்ளும், சாராயமும் ஒழிக்கப்படும். அதன் மூலமாக நாட்டிலே நல்ல நிலைமை உருவாக்கப்படும் என்பதற்கு நீங்கள் எப்படி உத்திரவாதம் கொடுக்கிறீர்கள்?

எந்த முறையில் நீங்கள் அதனுடைய பலனைக் கணக்கிட்டு இருக்கிறீர்கள்? அதெல்லாம் ஒன்றும் இதிலே வரவில்லை. ஆகவே தான் சொல்கிறோம். ஜனங்களுக்கு மேலும், மேலும் 1937–லே இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு மாறி, மாறி இதே அவையில் எத்தனை தடவை மதுவிலக்கு என்ற சட்டம் வந்திருக்கிறது? மதுவை ரத்துச் செய்வது என்ற சட்டம் வந்திருக்கிறது. திரும்பத் திரும்ப வந்திருக்கிறது. இன் றைக்கு வந்து இருக்கிறது. நாளைக்கு வராது என்பதற்கு என்ன உத்திரவாதம்?

மறுபடியும் அது வரலாம். ஆகவேதான் சொல்கிறோம். அப்படிப்பட்ட ஒரு விளையாட்டுக்கு நாம் ஜனங்கள் முழுவதையும் ஆளாக்க வேண்டியிருக்கிறது. நான் கேட்கிறது ஒன்றே ஒன்று தான். ஜனங்களுக்கு கள்ளச் சாராயத்தினால் அபாயம் ஏற்படக் கூடாது. ரெளடித்தனமும், அட்டகாசமும் இன்றைக்கும் இருக் கிறது. கள்ளச் சாராயம் வந்தால் அது இன்னமும் ஜாஸ்தி ஆகும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண் டும். அதற்காக புதியதாக வரிகளை உருவாக்கி மக்களின் தலை யிலே போடுவதும் கூடாது. அந்த முறையில் பாதுகாப்புத் தேட அரசு என்ன செய்வார்களோ செய்யட்டும் என்று சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன்.

1986 மே 13]

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது பேசும்போது ஜனதாக் கட்சியின் சார் பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லும்போது, மதுவிலக்கு முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயும், தொடர்ச்சியாகவும் எங்கள் கட்சியின் சார்பாக வற்புறுத்தி வருகிறோம். ஆனால் அப்போது எல்லாம் கள்ளச் சாராயத்தை நிறுத்துவதற்காக, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக நாங்கள் இந்த மதுவிலக்கை தளர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதன் பிறகு சென்ற உள்ளாட்சித் தேர்தலிலே ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு 1—1—1987 ஆம் தேதி முதல் மதுவிலக்கை அமல் செய்ய இருக் கிறோம் என்று சொன்னார்கள். அப்பொழுது முழுவதுமாகத்

(மாலை 6-40)

தான் அமல் செய்வார்கள் என்று நாங்கள் நம்பினோம். ஆனால், கள்ளச்சாராயக் கடைகளை மட்டும்தான் மூட இருக்கிறோம். மற்ற மது பானங்களெல்லாம் இருக்கும் என்று அரசு அறிவித் திருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம், கள், சாராயக் கடைகளை எடுக்கின்ற நீங்கள் அன்னிய மது பானங்களை மட்டும் ஏன் விட்டு வைக்கிறீர்கள்? அன்னிய மது பானங்களின் மூலம் வருமானம் எவ்வளவு இருக்கிறது? கள், சாராயக் கடைகளின் மூலமாக வருகின்ற வருமானம்தான் 75 சதவீதம், 80 சதவீதம் என்று கருதுகிறேன். அன்னிய மது பானங்களை நம் நாட்டிலே தயாரித்தாலும் கூட அதையும் ஏன் மூடக்கூடாது என்பதுதான் எங்கள் கேள்வியாகும்.

திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான ஒரு கருத் தை இந்தச் சபைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். உள் ளாட்சித் தேர்தலில் தோற்றுப் போனதற்குப் பிறகுதான் மது விலக்கைக் கொண்டு வருகிறோம் என்று குறிப்பிட்டுக் கொண் டிருக்கிறார்கள். அதற்கு முன்பாகவே, தேர்தலுக்கு முன்பாகவே, ஜனவரி முதல் கொண்டு வருவோம் என்ற திட்டத்தை அறிவித் திருக்கிறார்கள் என்பதை அவர்கள் கவனத்திற்குத் தங்கள் மூல மாகக் கொண்டு வருகிறேன். மேலும் ஆளுநர் உரையிலே யும் கூட இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பாகவே சொல்லி விட்டோம் என்று சொல்கிறார்கள். பரவாயில்லை, வாக்கு களைச் சேகரிக்க வேண்டுமென்பதற்காக அப்படிச் சொல்லியிருக் கலாம். அதைப்பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. ஆனாலும்

கூட அப்படியும்கூட நீங்கள் வாக்குகளைப்பெற முடியவில்லை: உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே தோல்வி அடைந்தீர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தோல்வி தோல்வி என்று ஜனதாக் கட்சித் தலைவரவர்கள் பேசுவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. எங்களுக்கு மதுவிலக்கு பற்றி யோசனை சொல்பவர்கள், கர்நாடகத்தில் ஹெக்டே அவர்களிடத்தில் சொல்லிவிட்டு வந்தால் பரவாயில்லை. கொஞ்சப் புத்திசாலித்தனமாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: நான் இந்தச் சட்டமன்றத்திலேதான் உறுப்பினராக இருக்கிறேன். இங்கேதான் எங்களால் பேச முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் பேசும்பொழுது ஜனதாக் கட்சி என்றுதான் பேசுகிறீர்கள். ஆகவே, ஜனதாக் கட்சி எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் சொல்லுங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: சொல்வதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. ஆனால் இங்கு சொல்வது என்னவென்றால் இங்கே மதுவிலக்கு ஏற்கனவே இருந்து, பிறகு எடுக்கப்பட்ட மாநிலம் இது. அங்கே எப்பொழுதும் மதுவிலக்கு அமலில் இருந்தது இல்லை. அதைப்பற்றியெல்லாம் அங்கேயுள்ள எதிர்க்கட்சியினர் பார்த்துக் கொள்ளுவார்கள். உங்களுக்கு அங்கே இருந்த ஒரு சீட்டையும் கோட்டை விட்டுவிட்டீர்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருப்பீர்கள், இப்பொழுது அதுகூட இல்லை. கர்நாடக மாநிலத்தில் மதுவிலக்கு என்பது எப்பொழுதுமே இருந்தது இல்லை. ஆனால் இங்கே ஏற்கனவே அமலில் இருந்தது, திருப்பி மதுவிலக்கு ரத்தை இங்கே கொண்டு வந்துவிட்டீர்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே கோட்டை விட்டு விட்டீர்கள் என்று சொல்கிறார்கள்; செங்கோட்டையை விட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: : தலைவரவர்களே, செங்கோட்டை விட்டவர்கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் சென்னை மாநில எல்லைக்குள்ளேயேதான் இருக்கிறீர்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த சென்னை மாநிலத்தின் எல்லைக்குள்ளேயே தான் உங்களுடைய கட்சி இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே நாங்கள் சொல்ல விரும்புவது என்னவென்றால், அனைத்து கடைகளையும் மூட வேண்டும் என்பதைத்தான்.

கள், சாராயக் கடைகளை மூடுவதற்கு இன்னும் ஏழெட்டு மாதங்கள் இருக்கின்றன. அதுவரைக்கும் அந்தக் கடைகள் இருக்கத்தான் போகின்றன. அவைகளில் பல கடைகள் முறையான லைசென்ஸ் பெற்ற இடங்களில் இல்லை. காவல்துறை ஏ.சி.யைக் கேட்டால், முறையான இடத்தில்தான் கொடுத்திருக்கிறோம், அதை மாற்று இடத்தில் வைத்தால் கலால்துறை தான் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். காவல் துறையிடம் புகார் சொன்னால், பார்த்துச் செய்து விடுகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அவர்களால் அருகில் நெருங்க முடியவில்லை. ஒன்று, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் அல்லது செல்வாக்கு பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் போய் இவர்கள் சொல்ல முடியாத நிலை இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். விருதுநகரில் பல சான்றுகளைக் காட்ட முடியும். லைசென்ஸ் எடுத்த இடம் ஒன்றாக இருக்கும் ; கடைகள் இருக்கும் இடம் ஒன்றாக இருக்கிறது. பொதுமக்கள் அதிகமாக உள்ள இடத்திலேயும், பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற இடத்திலேயும், காய்கறி சந்தை இருக்கின்ற இடத்திலேயும், பொது சாவடி இருக்கின்ற இடத்திலேயும் சாராயக் கடைகள் வைக்கப்பட்டு சாராயம் விற்கப்படுகிறது. இதையெல்லாம் தடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்; சாராய, கள்ளுக் கடைகளை லைசென்ஸ் பெற்ற இடத்தில் மட்டுமே வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல் நாட்டு மதுபான வகைகள் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு 45 கோடி ரூபாய் வருகிறது. ஜனதா கட்சி உறுப்பினர் - மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் அதையும் எடுத்தால் என்னவென்று கேட்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள், கள், சாராயக் கடைகளை ஒழிப்பதன் மூலம் நாட்டில் சீர்திருத்தம் வந்துவிடுமா, கள், சாராயம் வராமல் நின்றுவிடுமா என்று ஆழ்ந்த சிந்தனைக்குரிய விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

இச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கு முன்னால், இந்தியாவில் சிறந்த டாக்சேஷன் லாயர் பால்கிவாலா, மேற்கு வங்க நிதியமைச்சராக இருந்த அசோக் மித்ரா, ஐ. நா. சபையில் வேலை பார்த்தவரும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருந்தவருமாகிய மால்கம் ஆதிசேஷையா போன்ற பெரிய பொருளாதார நிபுணர்களையெல்லாம் கேட்டேன். தமிழ்நாட்டுக்கு, கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளை, ஒழிப்பதால் மாத்திரம், ஆண்டொன்றுக்கு ரூ. 200 முதல் ரூ. 250 கோடி வரை ஏற்படுகிற நஷ்டஈட்டை ஈடுகட்டுவதற்குத்

தாங்கள் நல்ல யோசனை ஏதாவது கூறமுடியுமா என்று கேட்டதற்கு ஒவ்வொரு பொருளாதார நிபுணரும் இவ்வளவு அதிகமான வருமானத்தைக் கொடுக்க மாற்று வரி யோசனை எங்கள் யாராலும் சொல்ல முடியாது என்று தான் சொல்லியிருக்கிறார்கள். சமூகத்தில் எதைச் சீர்திருத்தம் அல்லது அவசியம் என்று கருதுகிறோமோ அது நம்மைப் பொறுத்துதான் இருக்கிறது. ஏற்கனவே, பீகாரில் மதுவிலக்கு இருந்தது. அங்கு நிலக்கரிச் சுரங்கம் உள்ள தன்பாத்தில் கள்ளச் சாராயம் சாப்பிட்டு 200 பேர்கள் ஒருநாள் இறந்து விட்டதால், பீகார் அரசு மதுவிலக்கை ரத்து செய்து, மீண்டும் அவர்கள் அந்த இடத்திலே மதுக் கடைகளைத் திறந்தார்கள்—பீகார் மாநிலத்தில். இது சிந்தனையாளர்கள் சிந்திக்க வேண்டிய விஷயம். ஆனால், நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1–1–1987 முதல் கள்ளுக்கடை, சாராயக் கடை ஒழிக்கப்படும் என்று சொன்ன கொள்கை முடிவை செயலாக்கவும் அமுலாக்கவும் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். எதிர்காலத்தில், 15–7–1986-க்குப் பிறகு, 5½ மாதம், 1–1–1987 வரை—சாராயக் கடைகளை இதற்கு முன்பு டாஸ்மாக் என்ற வணிக நிறுவனம் முகவர்களை நியமித்து நடத்தி வந்தது. ஆனால் இந்தச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம், சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரத்திற்கும் டாஸ்மாக் பெற்றிருந்த உரிமத்தையும் நாம் ரத்து செய்கிறோம். 15–7–1986-க்குப் பிறகு, சாராயக்கடைகள் பொது ஏலத்தில் விடப்படும். 30–9–1986 வரை தற்போது கள்ளுக் கடைகளுக்கு உரிமை இருக்கிறது. அக்டோபர் 1 ஆம் தேதிக்குப் பிறகு 3 மாத காலம் 31–12–1986 வரை கள்ளுக் கடைகளுக்கு ஏற்கனவே கள்ளுக் கடைகள் வைத்திருப்பவர்கள் இந்த வருஷம் ஆகஸ்ட் 1 ஆம் தேதிக்கும் அதற்கு முன்பும், ஏற்கனவே விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் வரைமுறைகளுக்கும் கட்டுப்பட்டு, நாங்களே கள்ளுக் கடைகளை நடத்துகிறோம் என்று விருப்பம் தெரிவித்து அவர்கள் மனு கொடுத்தால், அவர்களே தொடர்ந்து நடத்த அனுமதி கொடுப்பதும், முடியாதவர்கள் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி அந்தக் கடைகளை சரண்டர் செய்து விடலாம் என்று இந்தத் திருத்தச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறோம். அதைப் போல், ஏற்கனவே கொள்கை முடிவு அறிவித்ததைச் செயல்படுத்தவும், அமுலாக்கவும்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பற்றி மாண்புமிகு ரகுமான்கான் விமர்சிக்கிறபொழுது, பப்ளிக் சர்வன்ட், கவர்ன்மெண்ட் சர்வன்ட் என்று சில வேறுபாடுகள் இருப்பதாகவும், அது சாதாரணமாக உள்ள மனிதனுக்கும் அரசாங்க அலுவலகத்தில் உள்ளவருக்கும் தண்டனையில் வேறுபாடு இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால், சட்டத்தைப் பொறுத்த வரையில், பப்ளிக் சர்வன்ட் என்றுதான் இருக்கிறதே தவிர, கவர்ன்மெண்ட் சர்வன்ட் என்று அதிலே குறிப்பிடப்படவில்லை. ஆனால் இதில் அதற்குக் கூட வழியில்லை. சாராயக் கடைகளை, கள்ளுக் கடைகளை 1–1–1987 முதல் மூடுவதால் இதுபோன்ற விவரங்களுக்குள் போக வேண்டியதில்லை.

[1983 மே 13

திரு. அ. ரகுமான்கான் : பப்ளிக் சர்வன்டுக்கு வேறு ; கவர்ன்மெண்ட் சர்வன்டுக்கு வேறு.....

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : நான் பப்ளிக் சர்வன்ட் என்று இருக்கிறது என்றுதான் சொன்னேன். கவர்ன் மெண்ட் சர்வன்ட் என்று இல்லை. " Less than one year for public servant and less than six months for persons other than public servants ''....

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை முடிவு அறிவிப்பின் அடிப்படையில் கொண்டு வரப் பட்ட, 1986 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்தச்) சட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பிரிவு 9-க்குக் கொடுத்துள்ள திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இச்சட்ட முன்வடிவை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 41/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(மாலை 6—50)

பிரிவு 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 9 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

1986 மே 13]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 9, in the proposed new section 23-B, in sub-section, in item (c), *delete* the word "and" and after item (d), *add* the following :—

"(e) of manufacturing Indian-made foreign spirits; and
(f) of selling by retail Indian-made foreign spirits."

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. அ ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இந்த சாராயக்கடை, கள்ளுக் கடைகளுக்கு மட்டும்தான் இந்த மதுவிலக்குச் சட்டம் அமுல் நடத்தப்படும். அதே நேரத்தில் இண்டியன்-மேட் போரின் ஸ்பிரிட்ஸ் அவைகளை விற்கலாம், தயாரிக்கலாம், அவைகளுக்கு இது பொருந்தாது. பிராந்தி, விஸ்கி போன்ற பானங்களுக்கு மதுவிலக்கு பொருந்தாது என்று இருப்பது தவறானது. எனவே மதுவிலக்கு என்று சொன்னால் இவைகளையும் சேர்த்து இணைத்தால்தான் மதுவிலக்காகும் என்பதால் இந்த திருத்தத்தை நான் சொல்கிறேன். அதோடு உங்களிடத்தில் நான் பேசுகின்றபோது ஒரு குற்றச்சாட்டை சொல்லி.....(குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தினால் ஆதாரம் இல்லாமல் பேசுகிறேனா இல்லையா என்று பார்க்கலாம்....(குறுக்கீடு) அமைச்சருக்கு கொடுத்துவிடுகிறேன்....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கெடுப்பு நடத்தும் போது இடையிலே பேசுவது நல்லதல்ல.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 9 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 9 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 10 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1986) நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஐஐ) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

(ஒஒ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

(ஓஓ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 32/1986), 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1986), மற்றும் 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1986) ஆகிய மூன்று சட்டமுன்வடிவுகளும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட

*1986-ம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது

1986 ஆம் ஆண்டு மே 5 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது,

முன்வடிவு எண். 33/1986) † ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1986) † ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

***திரு. கி. ராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1950-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தை திருத்துவதற்கான சட்டமுன்வடிவு எண். 32/1986 பற்றி சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

காணொலிப் பேழை இயக்குப் பொறிகள் மற்றும் காணொலிப் பேழை பதிவுப் பொறிகள், காணொலிப் பேழை நாடாக்கள் ஆகிய கருவிகளுக்கு 1—10—1985-லிருந்து 15 சதவீதம் விற்பனை வரி அமல் படுத்தப்படும் என்று திருத்தம் கொண்டுவரப் பட்டு இருக்கிறது. இது ஏற்கனவே இருந்த விழுக்காடுதான். ஆனால் இந்த கருவிகளைப் பொறுத்தவரையில் ஒரு சந்தேகம் இல்லாத வகையில் அதை உறுதிபடுத்தும் வகையில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அடிப்படையாகவே இந்தப் பொருட்களை ஆடம்பரப் பொருட்களாகக் கருதி இவ்வுளவு அதிகமான விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் உண்மையிலேயே இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் இவை ஆடம்பரப் பொருட்கள் இல்லை. இதுதான் என்னுடைய கருத்து. தொலைக்காட்சிப் பெட்டியும் ஒரு சமயத்தில் ஒரு ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்டது. ஆனால் டி.வி. செட் என்பது இப்போது சாதாரண வருமானம் உள்ளவர்களுக்குக் கூட ஒரு சாதாரண பொழுதுபோக்குச் சாதனமாக ஆகிவிட்டது. அதுபோல் வி.சி.ஆர். என்று சொல்லப்படுகிற வீடியோ கேசட் ரிக்கார்டர் மற்றும் வி.சி.பி. என்று சொல்லப்படுகிற வீடியோ கேசட் ப்ளேயர் போன்ற கருவிகளும் டி.வி. யோடு இணைந்த கருவிகளாக ஆகிவிட்டன. ஆகவே டி.வி. செட் வைத்திருப்பவர்கள் வி.சி.ஆர் மற்றும் வி.சி.பி. வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். ஆனால் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் வாங்கவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் கூட அவற்றை ஒரு சில மணி நேர உபயோகத்திற்காக 40 ரூபாய் வாடகை கொடுத்து எடுக்கிறார்கள். வீடியோ கேசட்டுக்கு 10 ரூபாய் வாடகை கொடுக்கிறார்கள். இந்த நிலையை நாம் மாற்ற முடியும்.

† 1986-ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு **சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு கி. இராமன்] [1986 மே 13

வி.சி.ஆர். மற்றும் வி.சி.பி. போன்ற கருவிகள் நம் நாட்டில் தயாரிக்கப்படுகின்றன என்று சொன்னாலும் அவை முழுவதுமான நம்முடைய நாட்டில் தயாரிக்கப்படவில்லை. அதாவது இறக்குமதி கொள்கைப்படி

CKD—Completely knocked down condition.
SKD—Semi-knocked down condition,

என்ற நிலைமையில் இறக்குமதி செய்து பிறகு அவற்றை இங்கே அசம்பிள் செய்து அவரவர்களுடைய கம்பெனி பெயரில் விற்பனை செய்கிறார்கள். ஆகவே உண்மையிலேயே இந்தக் கருவிகளுக்கும், இறக்குமதி செய்யப்படுகின்ற கருவிகளுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. ஆனால் விலை அதிகமாக இருப்பதால் இறக்குமதியான பொருளைத்தான் மக்கள் நாடுகிறார்கள். உதாரணமாக லோக்கல் வி.சி.ஆர்-க்கு விலை 15,000 ரூபாய். அதற்கு மேலாகவும் கூட விற்கப் படுகிறது. இறக்குமதியான வி.சி.ஆர். என்பதைப் பொறுத்த வரையில் 11,500 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. வெளி நாட்டுக்குப் போய்த் திரும்புகிறவர்கள் இந்தப் பொருட்களைக் கொண்டுவராமல் டிஸ்கரேஜ் செய்யவேண்டும் என்பதற்காக வி.சி.ஆர். ஐப் பொறுத்தவரையில் மொத்த C.I.F. விலையில் 500 ரூபாய் free allwance என்று கழிவு போக பாக்கியுள்ள தொகைக்கு 240 சதவீத இறக்குமதி வரி போடுகிறார்கள். இவ்வளவு தொகை கட்டியதற்குப் பிறகும் இறக்குமதியாகும் வி.சி.ஆர்.-ன் விலை மலிவாகத்தான் இருக்கிறது. முன்பு சுங்க இலாக்கா விதிப்படி free allwance 1,250 ரூபாயாக இருந்தது. இப்போது 500 ரூபாயாக குறைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இறக்குமதி மோகத்தைப் போக்க வேண்டுமென்றால் நம்முடைய பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் முன்பே வி.சி.ஆர்-க்கு 15 சதவீதம்தான். இப்போது அதே 15 சதவீதம்தான்.

டி. வி. செட்டை பொறுத்தவரையில் 1985–86-ல் விற்பனை வரி 10 விழுக்காடாக இருந்தது. இப்போது 6-ஆகக் குறைத்திருக்கிறோம். பாண்டிச்சேரி, ஆந்திரா போன்ற மாநிலங்களைப் பொறுத்த வரையில் டி.வி. செட்டுக்கு 15 விழுக்காடு என்று இருந்ததை இப்போது 4 விழுக்காடாகக் குறைத்திருக்கிறார்கள். டெல்லியில் வி.சி.ஆர்.-க்கு விற்பனை வரி 10 விழுக்காடுதான். டி.வி., வி.சி.ஆர். வி.சி.பி. போன்ற சாதனங்களைப் பொறுத்தவரையில் டெல்லியில் பெருமளவு தயாரிக்கப் படுகிறது. டெல்லியில் உள்ள லஜபத்ராய் மார்க்கட் ஒரு சிறிய ஜப்பான் என்று கூடச் சொல்லலாம். அந்த அளவுக்கு அங்கே உற்பத்திப் பெருக்கம் இருக்கிறது. தமிழ்நாட்டில் ஓரிரு டி.வி. உற்பத்தியாளர்களைத் தவிர வி.சி.பி., வி.சி.ஆர்.

1986 மே 13] (திரு. கி. இராமன்)

மற்றும் வீடியோ மேக்னட் டேப் போன்ற பொருட்களைப் பொறுத்தவரையில் யாரும் தயாரிக்கவில்லை. ஆகவே தற்போதுள்ள 15 சத வீத விற்பனை வரியை 10 சதவீதமாகக் குறைத்து உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் கொடுத் துஅனைவரும் பயன்படக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது சாத்தியம் இல்லை என்றால் வி.சி.பி. என்ற ஒரு கருவியைத் தனியாகப் பிரித்து அதற்கு மட்டுமாவது விற்பனை வரியைக் குறைக்கவேண்டும். இந்த வி.சி.பி-யில் கேசட் பதிவு செய்ய முடியாது. டேப்பை மாத்திரம் இயக்க செய்ய முடியும். எனவே இந்த கருவியைப் பொறுத்த வரையிலாவது 15 சதவீதம் என்பதை 10 சதவீதமாகக் குறைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் வி.சி.ஆர்., வி.சி.பி ஆகியவற்றைத் தயார் செய்கிற வகையில், ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தவேண்டுமென்றால் நீங்கள் விற்பனை வரியைக் குறைத்து உற்பத்திப் பெருக்கத்தை உண்டாக்கவேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

(இரவு 7-00)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, விற்பனை வரி உயர்வு என்பது எப்போதுமே பொதுவாக எல்லா மக்களையும் தாக்கக்கூடிய ஒரு வரி என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. அந்த வரியை தமிழ்நாட்டிலே கொண்டு வரப்பட்டதற்கு மிகப் பெரிய சரித்திரமே இருக்கிறது. ஆரம்பத்திலேயிருந்து இன்றைக்கு அது எந்த அளவிற்கு போயிருக்கிறது என்பதை நாம் கவலையோடு கவனிக்க வேண்டிய விஷயம் அது. மாநில அரசுக்கு வரி என்று மக்களிடத்திலே போடுவதற்கு வசதியான வரித்துறை இது ஒன்றுதான். தமிழ் நாட்டிலே இருக்கிற ஜனங்களிடத்திலே, அத்தனை கோடி ஜனங்களிடத்திலேயும் வரியை பெறுவதற்கான ஒரு வழி இந்த விற்பனை வரி. ஏனென்றால் பொருள்களின் மீது போடும் போது, எந்தப் பொருள்களானாலும் ஜனங்கள் வாங்காமல் இருக்க முடியாது. இப்போது வீடியோவிற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல முன்பு முந்திரி பருப்பு முந்திரிக் கொட்டை என்று வந்தது. எங்காவது எதையாவது சமப்படுத்த வேண்டும் அல்லது வேறு விதமான அட்ஜெஸ்ட்மெண்ட்டுகள் செய்ய வேண்டும் என்றால், அது இந்த விற்பனை வரியின் மூலமாகத்தான் வரும். அதற்கு ஒரு நல்ல உதாரணத்தை தர முடியும்.

பட்ஜெட்டிலே 10 பொருள்களுக்கு இருந்த பலமுனை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாக ஆக்குகிறோம்

என்று சொல்லப்பட்டு இங்கே விவாதிக்கப்பட்டு அது முடிவாகி இருக்கிறது. ஆகவே பட்ஜெட்டிலே பேசும்போது நான் குறிப்பிட்டேன். பலமுனை வரி என்று சொன்னால், பல இடங்களிலேயும் வியாபாரிகள் அதற்கு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது என்றும், அத்தோடு வியாபாரிகளைப் பொறுத்த வரையில் அப்படி கணக்கிட்டு வரி போடுவதும் பெரிய சிரமமாக இருக்கிறது. அதனால் பொது மக்களுக்கும் பல்வேறு விதமான தொல்லைகள் ஏற்படுகிறது என்று வியாபாரிகளிடத்திலேயிருந்து புகார்கள் வந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே வியாபாரிகளுக்கு சௌகரியம் ஏற்படுத்துவதற்காகவும் அதனால் மக்களுக்கு விலைவாசி உயர்வும் இருக்கக் கூடாது என்ற முறையிலேயும், அவைகளுக்கு ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கப்படுகிறது என்று அன்றைக்கு விளக்கங்கள் சொல்லப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன? 5 சதவீதமாக சில பொருள்களுக்கு இருந்த விற்பனை வரி 8 சதவீதமாகக் கூட ஆகியிருக்கின்றன. ஏன் அப்படிப்பட்ட நிலைமைகள் வந்திருக்கிறது.

அமைச்சர் அவர்கள் ஓப்பன் மார்க்கெட்டிலே போய் ஒரு கிலோ கொத்தமல்லியை விலைக்கு வாங்கிப் பார்க்கட்டும். இன்றைக்கு அது ரூ. 24-க்கு மேல் விலை போகிறது. 5 பெர்சென்ட் சேல்ஸ் டாக்ஸ் இருந்த போது இந்த விலை விற்கவில்லை. சீரகம் என்ன விலைக்கு விற்கிறது? அமைச்சர் அவர்கள் அது போலவே ஒரு கிலோ சீரகத்தை வாங்கிப் பார்க்கட்டும். கொத்தமல்லி சீரகம் போன்ற சாதனங்கள் இருக்கிறதே அவைகள் அனேகமாக எல்லா தரப்பு மக்களும் பயன்படுத்தக்கூடிய பொருள்கள். அந்தப் பொருள்கள் இன்றைக்கு என்ன விலைக்கு போய் விற்கிறது என்று பார்த்தார்களேயானால், மிக பயங்கரமான நிலைமை அது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் சட்டமன்றத்திலே சட்டங்கள் கொண்டு வந்து ஏதேதோ விளக்கங்கள் தந்து, வியாபாரிகளுக்கு வசதி ஏற்படுத்த வேண்டும், பொதுமக்களுக்கு அதனால் விலை ஏற்றம் அதிகமாகக் கூடாது என்றெல்லாம் சொல்லுகிறோம்.

ஆனால் 3 விதமான நூல்கள் இருக்கின்றன. அந்த நூல்களுக்கு இருந்த விலைகளை மூன்றையும் ஒன்றாகப் போட்டு, 3 சதவீதமாக வரியைப் போட்டிருக்கிற நேரத்தில், அதில் சில ரக நூலின் விலை 2 சதவீதமாக ஏற்கெனவே வரி இருந்தது, இதன் காரணமாக 3 சதவீதமாக உயர்ந்துவிட்டது. மற்ற மூன்றையும் சேர்த்து, 9 சதவீதம் என்பதை வகுத்து 3 சதவீதமாக ஆக்கிய பிறகு, அந்த 2 சதவீதம் என்று முன்பு இருந்தது 3 சதவீதமாக ஆச்சு. அதுதான்

லாபம். ஆகவே பேசப்படுகிற கருத்து வேறு. ஆனால் முடி வில் விலை உயர்வுக்குத்தான் அது போய்ச் சேருகிறது.

அதைப்போல இன்றைக்கு வீடியோ மற்ற சாதனங்கள் எல்லாம் முக்கியமாக வசதி படைத்தவர்களுக்குத்தான் பயன் படுகிறது என்பது அல்ல. ஜனங்கள் அதை பரவலாக உபயோ கப்படுத்துகின்ற ஒரு நிலைமை இப்போது வந்திருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியினுடைய முன்னேற்றத்தில், தாங்கள் குறைந்த செலவில் அதை அனுபவிக்க வேண்டும் என்று, கலை கலாச்சார மறுமலர்ச்சி போன்ற நுட்ப நோக்கத்தைக் கொண் டிருக்கிற மக்கள், இப்படிப்பட்ட கருவிகள் தங்களுக்கு வேண்டும் என்று நினைப்பது தவறு அல்ல. ஆனால் அப்படிப்பட்ட பொ ருள்களுக்கு எல்லாம் வரி உயர்வு என்பது, அதனுடைய விலை உயர்விலேதான் போய்ச் சேரும். நிச்சயமாக அது குறித்து நீங்கள் என்ன வாக்குறுதி கொடுத்தாலும், "Taste of the pudding is the eating" என்று சொல்லு கிறபோது நடைமுறையில் என்ன நிலைமை என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அதன் நடைமுறைகளை சிந்திக்க வேண்டும். நீங்கள் போய் வேண்டுமானால் மார்க்கெட்டிலே பாருங்கள். நிச்சயமாக விலை ஏறும். ஆகவே எக்காரணத் தைக் கொண்டும் விலைவாசி ஏற்றம் ஏற்படக் கூடாது அதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லி முடித்துக் கொள் கிறேன்.

திரு. எ.எஸ்.எ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர் களே, வணிக வரித்துறையின் சட்டமுன்வடிவுகளின் திருத்தங் களில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணிகவரித் துறையைப் பொறுத்தவரையில் வணிக வரிகளை எந்தெந்த விதத்தில் திருத்தினால் நல்ல முறையில் அரசாங்கத்திற்கு வருமானம் வருமென்பதை ஏற்கன வே சொல்லியிருக்கிறேன். இப்போது திரும்பவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு விளக்க முற்படுகிறேன்.

5 சதவீத பலமுனை வரியாக இருந்த சரக்குகள் எல்லாம் 8 சதவீதம் ஒரு முனை வரியாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதை 5 சதவீதம் போட வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. அதேபோல 8 சதவீத ஒரு முனை வரிக்கு பிறகு வெளி மாநிலங் களுக்கு ஏற்றுமதி செய்ய 4 சதவீதம் வரி போடுகிற திட்டத்தை போட்டிருக்கிறார்கள். ஆகவே 12 சதவீதம் ஆகிவிடுகிறது, இந்தக் காரணத்தால் ஏற்றுமதி செய்கிற வியாபாரிகள் கிரா மங்களில் பர்சேஸ் செய்து நேரடியாக சி.எஸ்.டி. கட்டி விடுகிறார்கள். அப்போது அரசுக்கு 4 சதவீதம் தான் வரி யாக கிடைக்கிறது. இதைப் போக்குவதற்கு தான் உங்களுக்கு சொல்கிறேன். பர்சேஸ் டாக்சாக முதல் கொள்முதலில் போடுவீர்களானால் கமிஷன் கடைக் காரர்களிடம் வாங்கினாலும் கூட அந்த வரியை வாங்கி கட்டி

விடுவார்கள். ஒருமுனை வரி உங்களுக்கு 8 சதவீதம் கிடைத்து விடும். சி.எஸ்.டி. வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே நான் சொல்ல விரும்புவது, அரசுக்கு 4 சதவீதம் வருகிற வரி 8 சதவீதமாக கிடைப்பதற்கான வழியைச் சொல்கிறேன். அரசு அதை ஏற்றுக்கொண்டால் இந்த வருடம் அதிகமான வருமானம் அரசுக்கு கிடைக்கும் வணிக வரித் துறையில் என்பதை மறுபடியும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கோழித் தீவனத்திற்கு 2 சதவீதம் வரி விதித்திருக்கிறீர்கள். கோழி வளர்ப்பது குடிசைத் தொழிலாகும். கோழி முட்டை என்பது ஏழை எளியவர்கள் சாப்பிடுகிற உணவுப் பொருளாக இருக்கிறது. இந்த 2 சதவீதத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பிண்ணாக்குக்கு போட்டிருக்கிற வரியை நீங்கள் நீக்க வேண்டும். பிண்ணாக்கு ஏழை விவசாயிகள் மாடுகளுக்கு கொடுக்கக்கூடிய உணவு. அதற்கும் வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கேளிக்கை வரிகளைப் பொறுத்தவரையில் எங்களுக்கு கவலையில்லை. சினிமா கொட்டகைகளில் எப்படி வசதிகளை செய்திருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். 2 ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கியவர்கள் இப்போது 4 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. காரணம் ஏதோ சில வசதிகளை செய்து கொடுத்திருப்பதாகவும், அதனால் டிக்கட் விலையை உயர்த்த அரசாங்கம் ஒப்புக்கொண்டதாகவும் சொல்கிறார்கள். சின்ன வசதியை செய்து, மரச்சேர் இருந்த இடத்தில் குஷன் சேரைப் போட்டுவிட்டு 2 ரூபாய் டிக்கட் என்பதை 4 ரூபாயாக வசூலிக்கிறார்கள். இந்த ஒரே காரணத்திற்காக டிக்கட் விலையை உயர்த்தியிருப்பதை அரசு சரிபார்க்க வேண்டும். மரச்சேர் என்பது குஷன் சேராகியுள்ளது. வேறு எந்த வித்தியாசமும் கிடையாது. டிக்கட் விலையை உயர்த்துகிற போது அவர்கள் மக்களுக்கு என்ன வசதிகளை சினிமா கொட்டகைகளில் செய்திருக்கிறார்கள் என்பதை அரசு சரிபார்க்க வேண்டுமென்று கேட்டு, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு விற்பனை வரி திருத்த சட்டமுன்வடிவுகள் கொண்டு வந்ததின் நோக்கம் சில வரி ஏய்ப்புகளைத் தடுக்கவும், சில புதிய இனங்களை உற்பத்தி செய்கிற நிலையில் இருக்கிற சட்ட விதிகளைக் கொண்டு வரி விதிக்க முடியாத நேரத்தில் விற்பனை வரி முதல் அட்டவணையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்த நேரத்தில் தான் திருத்தங்கள் கொண்டு வரப்

[திரு. தா. வீராசாமி] 1986 மே 1்]

பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் தமிழ்நாடு பொது விற்பனை வரி திருத்த சட்டமுன்வடிவு கொண்டு வரப் பட்டிருக்கிறது. இங்கே அந்தவகையில் இந்த ஐந்து இனங்களுக்கு மாற்றங்கள், திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு வரி ஏய்ப் பைத் தடுக்கவும், புதிய வரி விதிப்பின் கீழ் கொண்டு வந்து வருவாய் பெருக்கத்திற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

அதேபோலதான் கேளிக்கை வரிகள் என்று சொல்லு கிறபோது இங்கே உள்ளாட்சித் துறையால், உள்ளாட்சி நிறுவனங்கள், மக்கள் தொகை, வருவாய் பெருக்கத்திற் கேற்ற அதனுடைய தகநிலையை உயர்த்த வேண்டிய நேரத்தில், அதன் விளைவாக இணக்க வரியில் உள்ள திரையரங்குகளில் அதனுடைய சதவீதத்தை உயர்த்தி, வரு வாயைப் பெருக்குவதற்கு, வசதிகளைப் பெருக்குவதற்கு இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

(இரவு 7-10)

இந்த சட்டமுன்வடிவில் மூன்று மாண்புமிகு உறுப் பினர்கள் பேசியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு ராமன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் நம் முடைய நாட்டில் மின் அணு கருவிகள் உற்பத்தித் தொழிலை ஆதரிக்கின்ற அல்லது உற்சாகப்படுத்துகின்ற வகையில் வரி குறைப்பு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப் படையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அரசு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், உள் நாட்டிலே இருக்கிற எலக்ட்ரானிக்ஸ் இண்டஸ்ட்ரிஸ் பொருட்களை உற்சாகப்படுத்துகின்ற வகையில், இன்று வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்கின்ற பொருட்களுக்கு எலக்ட்ரானிக்ஸ் குட்ஸ்க்கு 10 சதவீதம் வரி என்றும், தமிழகத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற மின் அணு பொருட்களுக்கு 6 சதவீதம் வரி என்றும் வழிவகை செய்யப்பட்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்கு அறிவார்கள். அவர்கள் சொன்னார்கள், இன்றைய ஆடம்பரம் நாளைய சாதாரண வாழ்க்கை, இது ஒரு அத்தி யாவசிய நிகழ்ச்சியாக இருக்கிறது என்று சொன்னார்கள். மனிதனுடைய வருவாய்ப் பெருக்கத்திற்கு, கால சிந்த னைக்கு ஏற்ப, சமுதாய மாற்றத்திற்கு ஏற்ப, இவைகள் எல்லாம் மாறி மாறி வரக்கூடியவைகள். அந்த அடிப்படை யில்தான் இந்த அரசு அதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, வரி விதிப்பிலே பல்வேறு மாற்றங்களைச் செய்து

வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

வி.சி.ஆர்., வி.சி.பி. போன்ற பொருட்களுக்கு எல்லாம் வரியினை குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். 17-3-1986 முதல் உள் மாநில தயாரிப்புக்கு 6 சதவீதமும் வெளி மாநில தயபரிப்புக்கு 10 சதவீத மும் வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது என் பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்த வகையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு ஜனதா கட்சி உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்று சொன்னார்கள். எனக்குக் கூட ஆசைதான். வரியே போடாது, மக்கள் நல்ல முறை யில் வாங்கி உண்ணுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு உண்டு, இந்த ஆட்சிக்கு உண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவருக்கு உண்டு. மாண்புமிகு உறுப்பினர் ரமனி அவர்களுக்கு நான கூறிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன், வரி இல்லாத ஆட்சி நடத்த முடியாது. வருவாய் வேண்டும். அந்த வகையில் வருவாயைத் தேடுகின்ற நேரத்தில், வரியைப் போடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஏதோ விரும்பிப் போடு வதாக யாரும் எண்ண வேண்டாம். கட்டாயத்தின் பேரில், நிர்பந்தத்தின் பேரில் வரி விதிக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நேரத தில், வரி விதிக்கின்ற நேரத்தில், யார் மேல் விதிக்க வேண டும், யாரிடத்திலே இருந்து வரி மூலம் வருவாயைப் பெற வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிச் சென்று இருக்கிறார்கள். அந்த வகையில் நடைபெறுகின்ற ஆட்சி தான் புரட்சித் தலைவர் ஆட்சி. எனவே அந்த வகையிலே தான் வரிகளை எல்லாம் விதிக்கிறோம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக் களை எல்லாம் மனதில் கொண்டு, அந்த அடிப்படையிலே இந்த அரசு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, இந்த மூன்று சட்ட முன்வடிவுகளையும் இந்த அவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தை நான் பொதுவாக ஒத்துக்கொள்கிறேன். இதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் இந்த எலக்ட்ரானிக்ஸ் குட்ஸ் பொறுத்தவரையில், ஏற்கனவே 1985–86-லே 10 சதவீதமாக இருந்ததை நாம் 6 சதவீத மாக குறைத்து இருக்கிறோம். பக்கத்தில் உள்ள ஆந்திரா

[1986 மே 13

திரு. சி. ராமன்

விலும், பாண்டிச்சேரியிலும், டி.வி.க்கு 15 சதவீதம் என்று இருந்ததை 4 சதவீதம் என்று குறைத்திருக்கிறார்கள், வி.சி. ஆருக்கு டெல்லியிலே இன்னும் 10 சதவீதம்தான். நான் ஏற்கனவே சொன்னதைப் போலவே, தமிழ்நாட்டில் யாருமே வி.சி.ஆர்., வி.சி.பி. உற்பத்தி செய்வதில்லை. எல்லாமே வட மாநிலங்களிலிருந்து, டெல்லியிலிருந்துதான் வருகிறது. டெல்லியிலே இன்றும் வி.சி. ஆருக்கு 10 சதவீதம், இதுபோன்று நாமும் ஏன் செய்யக்கூடாது என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தவர்களை எப்போதுமே நம்பி இருந்து விடக் கூடாது. நாம் சொந்தக் காலிலே நிற்க வேண்டும். அதைத் தயாரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட வரிச் சலுகையைக் கொடுத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு

மாண்புமிகு பேரவை தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 32/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன் வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 33/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1986.—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1986) நிறை வேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஔ) திறந்த வெளிகள் (அழுகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (1986) (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு: தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிதுள்ளார்கள்.

7, அரசினர் சட்ட முன்வடிவுகள் தொடர்ச்சி.

(அஅஅ) திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. 1986.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''1986-ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத் தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1986)**ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

* 1936ஆம் ஆண்டு......தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.

4. 1986ஆம் ஆண்டு மே 10ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. அ. ரகுமான் கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் பொது இடங்களில் வைக்கப்படுகின்ற விளம்பரங்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்குமேயானால் அப்படி இடையூறு விளைவிப்பவர்களை தண்டிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அடுத்து, ஒருவருடைய வீடுகளிலோ அல்லது கட்டிடத்திலோ அதன் அழகைக் குலைக்கின்ற விதத்திலே யாராவது ஈடுபடுவார்களேயானால் அவர்களை தண்டிக்கிற விதத்திலேயும், அதே நேரத்திலே அந்த 'ஆக்குபையரோ' அல்லது 'ஓனரோ' அல்லது அந்தக் கட்டிடத்தினுடைய நிர்வாகத்தில் இருப்பவருக்கு அந்த மாதிரி அழிவை செய்தவர்—டிஸ்பிகர்மென்ட் செய்தவர் நஷ்ட ஈடு தரவேண்டும் என்ற ஒரு புதிய ஷரத்தை உள்ளடக்கி இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இதில் நான் முக்கியமாக அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு கேள்வி, என்னுடைய பெயரை பயன்படுத்தி ஒரு போஸ்டர் அடித்து ஒரு கட்டிடத்தில் அவர் அதை ஒட்டியோ அல்லது என் பெயராலே ஒரு கட்டிடத்தினுடைய அழகைக் குலைக்கின்ற காரியத்தை ஒரு போஸ்டர் ஒட்டியதன் மூலமாகவோ அல்லது வேறு கோஷங்கள் எழுதியதன் மூலமாகவோ செய்து விட்டால் நான் தண்டனைக்கு உரியவனாக ஆக்கப்படுகின்ற ஒரு அபாயம் இருக்கிறது. ஆகையினாலே இந்த நிலையில் இந்தச் சட்டம் என்ன சொல்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது, இதிலே கமிட்டி ஒன்று போடப்படுகிறது. உதாரணமாக இங்கே இருக்கக்கூடிய சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் டெபுடி கமிஷனர் அவர்களை, அதைப்போல் 2 பெண்கள், மற்றபடி நான் அபிஷ்யல் என்று அரசாங்கம் பார்த்து சில உறுப்பினர்களை போடுகிறார்கள்.

(இரவு 7.20)

இவர்களைக் கொண்டதுதான் கமிட்டி. இந்த கமிட்டி பார்த்து பொது இடத்தில் வைக்கப்பட்டு இருக்கக்கூடிய விளம்பரங்கள் பொது இடத்தில் ஆபத்தை விளைவிக்கக்கூடியது. போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று அவர்கள் கருதி விடுவார்களானால் விளம்பரங்கள் மறுக்கப்படுகிற நிலமை, தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றன. ஆகவே, இந்த கமிட்டியில் போடப்பட்டு இருக்கின்ற உறுப்பினர்கள் எந்த முடிவுக்கு வருகிறார்களோ அந்த முடிவு ஒரு அரசியல் கண்ணோட்டத்தோடு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற ஒரு சூழ்நிலைக்கு இடம் தந்து விடுமோ என்ற ஒரு ஐயப்பாடு இருக்கிறது.

அதிலே கூட போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்றவிளம்பரங்கள் என்று சொல்லுகிறபோது ஒரு அரசியல் கட்சி ஒரு தலை

வருடைய கட் அவுட்டை ஒரு இடத்தில் வைத்தால் இது போக்கு வரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று சொல்லிநடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு நிலமை ஏற்பட்டுவிடும். ஆனால் நமக்கு வேண்டியவர்கள் ஒருவருடைய கட் அவுடடை வைக்கிற போது அது அவர்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறாக விளங்கக் கூடியதாக இருக்கிறது என்ற நிலைமை இல்லாமல் போய்விடும். ஆகவே அரசியல் கண்ணோட்டத்தோடு அநீதி விளைவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடக்கூடாது. காரணம் என்ன என்று கேட்டால், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வருத்தப்பட்டுக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். இப்போது கூட நகராட்சி மன்றங்களில், பஞ்சாயத்து யூனியன்களில் யார் யார் படம் வைக்கப்படவேண்டும் என்று படங்களை மட்டும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அந்த படத்தில் ஔவையார் வந்திருக்கிறாரா என்றால் இல்லை. கம்பர் வந்து இருக்கிறாரா என்றால் கிடையாது. அதிகாரிகளுக்கே ஒரு சந்தேகம் வந்து அமைச்சர் கொடுத்து இருக்கக்கூடிய இன்ஸ்ட்ரக்ஷனில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு, அது வேறு, இதனால் தான் பிரச்சினையே உருவாகிறது.

திரு. அ. ரகுமான்கான்; பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கு சொல்லுகிறேன் என்று சொன்னால் இந்த கமிட்டி போக்கு வரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று சொல்லுகிற அபாயத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். அரசியல் விளம்பரங்கள் மற்றவைகள் எல்லாம் இது போன்றபோக்குவரத்துக்கு இடையூறு என்று சொல்லி அரசியல் இயக்கங்களுடைய நடவடிக்கைகளை கட்டுப் படுத்துவதற்கு இது ஒரு கருவியாக பயன்பட்டு விடக்கூடாது என்று எடுத்துச் சொல்லி, காலத்தின் அருமை கருதி, தங்கள் வேண்டுகோளுக்கு இணங்க அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தினுடைய நோக்கத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஏற்கனவே, ஆபாச சுவரொட்டிகள், போட்டோக்கள் பல பிரச்சினைகளை இந்த நாட்டில் ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது என்பதும், அதுவும் குறிப்பாக பெண்களை கேலி செய்யக்கூடிய முறையில் உள்ள சுவரொட்டிகள் இன்று ஒட்டி அதனால் பல பிரச்சினைகள் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே ஆபாச சுவரொட்டிகள் தடுக்கப்படவேண்டும். அதற்குத் தகுந்த அளவில் உள்ள சட்டங்களைக்கொண்டு வர வேண்டும் என்று இந்த நாட்டில் மாதர் இயக்கங்கள் கோரிக்கைகளை வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய நேரம் இது என்பதும் நாம் நன்கு அறிவோம்.

ஆனால் இந்தச் சட்டம் உண்மையிலேயே அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய முறையில் உள்ள சட்டம் அல்ல. இந்த காரிய காரண விளக்கத்திலே குறிப்பிட்டுள்ளதுபோல இன்று

objectionable advertisements அதை உண்மையிலேயே தடுக்கக்கூடிய முறையிலேயும், அல்லது அதை ஒழுங்குபடுத்தக் கூடிய முறையிலேயும் உள்ள ஓர் முழுமையான ஏற்பாடாக இந்தச் சட்டம் அமையவில்லை. அதே நேரத்திலே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், இன்று ஒரு டிராபிக் கமிட்டி போடப்பட்டு அந்தக் கமிட்டியினுடைய அனுமதி இல்மாமல் இந்த மாதிரி ஒட்டுநர்களுக்கோ, அல்லது மற்ற மக்களுக்கோ பிரச்சினை ஏற்படுத்தக் கூடிய முறையில் உள்ள சுவரொட்டிகளை ஒட்டக்கூடியவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கிற முறையில் இந்தச் சட்டம் அமைகிறது.

இன்று நமது நாட்டிலே ஒரு மிக முக்கியமான பிரச்சினை பார்க்கவேண்டியது என்ன என்றால், பலஇடங்களிலே அனுமதி இல்லாமலேயே சுவர்களில் இன்று சுவரொட்டிகளை ஒட்டி விட்டு சென்று விடுகிறார்கள். ஆனால் இங்கே சட்டத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால், Penalty for Disfigurement by certain categories of unauthorised advertisements without permission என்ற முறையில் போட்டு அந்த மாதிரி ஒட்டக்கூடியவர்களை இன்று தண்டிப்பதற்கு இந்தச் சட்டத்தை கொண்டு வந்து, இருக்கிறார்கள். ஆனால், 'அன் ஆத்தரைஸ்டாக' இந்த மாதிரி ஒட்டி விட்டு செல்லக்கூடியவர்கள் மேல் இன்று கடுமையாக தண்டிக்கப்படக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தை இம்பிளிமெண்டு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

பல இடங்களில் 'ஸ்டிக் நோ பில்ஸ்' என்று போட்டிருந்தாலும் கூட, அதற்கு மேலே கூட இன்றைக்கு விளம்பரங்களை ஒட்டுகிறார்கள். அதே மாதிரி பல இடங்களில் ரோடுகளிலே போடப்பட்டிருக்கின்ற 'நேம் போர்ட்ஸ்' லே கூட இன்றைக்கு விளம்பரங்களை ஒட்டிவிட்டுச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட அன்-ஆத்தரைஸ்டு ஏற்பாடுகளை தடுக்கக் கூடிய முறையில் நடவடிக்கைகள் இன்றைக்கு சட்டப்படி எடுக்கப்படவேண்டும். இன்றைக்கு இந்தச் சட்டம் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட முடியவில்லை என்றால் அதற்குத் தகுந்த அளவிலே திருத்தங்களை இந்தச் சட்டத்திலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்று ராஜ்ய கமிட்டி போடப்பட்டு இருந்த போதிலும், பெண்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடிய அளவிலே இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் என்ன சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என்றால் இன்று பெண்களை கேலி செய்யக் கூடிய முறையிலேயே உள்ள ஆபாச சுவரொட்டிகளை தடுக்கக் கூடிய முறையில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அதற்குத் தகுந்த அளவிலே இதிலே திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அல்லது சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கூறி இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

1986 மே 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தைத் தொடர்ந்து, இன்றைக்கு வளர்ந்துள்ள சூழ்நிலையில் இந்த விளம்பரம் செய்கின்றவர்கள், அல்லது சுவர்களில் விளம்பரம் செய்கின்றவர்கள். விளம்பர போர்டுகளை வைத்திருப்பவர்கள், இன்றைக்கு அதிகமான எண்ணிக்கையில் பெருகி, கண்ட கண்ட இடங்களில் எல்லாம் இந்த விளம்பர போர்டுகள் மற்றும் விளம்பர சாதனங்கள் எல்லாம் வைத்து, வண்டி ஓட்டுகின்றவர்களுடைய, கவனத்தை ஈர்க்கின்ற வகையிலும், நடைபாதையிலே பிளாட்பாரத்திலே நடந்து செல்கின்ற நடைபாதை வாசிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகின்ற வகையிலும், இன்றைக்கு இந்த விளம்பர தட்டிகள் அல்லது விளம்பர போர்டுகள் வைக்கப்படுகின்ற முறை வளர்ந்து, தொல்லை கொடுக்கக்கூடிய சூழ்நிலையில், முன்பே இயற்றப்பட்ட சட்டத்தில், அதற்கான நடவடிக்கை எடுத்ததில், சில இடையூறுகள் ஏற்பட்டன என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தச் சட்டத்தினுடைய திருத்த முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனை நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு ரகுமான்கான் வரவேற்றாலும், வழக்கம்போல அவருக்குத் தோன்றிய சந்தேகத்தை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அரசு ஒரு சட்டத்தை அல்லது சட்ட திருத்தத்தை கொண்டுவருகிற போது நல்ல நோக்கத்தில் கொண்டுவருகிறது. இதைப்பற்றி இப்படி நடக்குமா அல்லது அப்படி நடக்குமா என்ற ஐயப்பாடு கொண்டால், அதற்கு எல்லையே இருக்காது. ஆனால் இன்றைக்கு நான் ஒரு சம்பவத்தை அவர்களுக்குச் சொன்னால் இந்த ஐயப்பாடு அவருக்குப் போய்விடும் என்று கருதுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவை 1973–74-ஆம் ஆண்டில் அன்றைக்கு இருந்த அரசு முயற்சி எடுத்து, உருவாக்கி, 1975-ஆம் ஆண்டில் இப்படி ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வரலாம் என்று முடிவு எடுத்திருந்தார்கள். அதற்குப் பிறகு காலமாகிவிட்ட காரணத்தினாலோ, சட்டமன்றம் கூடாத சூழ்நிலையிலோ இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படாமல் தடுக்கப் பட்டிருக்கிறது அல்லது நின்று போய்விட்டிருக்கின்றது. அன்றைக்கு எடுக்கப்பட்ட முடிவுகளை யொட்டித்தான் இந்தச் சட்ட திருத்த முன்வடிவு கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால், மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுக்கு இந்த ஐயப்பாடு போய்விடும் என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும் யார் ஒட்டுகிறார்கள் அல்லது என் பெயராலே யாராவது ஒட்டினால் எப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதற்குப் பிறகு விவாதத்திலே சட்ட முன்வடிவிலே, எல்லாம் இந்த சந்தேகத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மதுவிலக்கு திருத்த சட்ட முன்வடிவிலே கூட என்னுடைய காரிலே யாராவது எடுத்துக் கொண்டு போனால் என்று தொடங்கினார்கள். இப்போது இப்படி பொதுமக்களுக்கு அல்லது பயணிகளுக்கு, கார் ஓட்டுகின்றவர்களுக்கு, நடை பாதையில் செல்கின்றவர்களுக்கு துன்பத்தை விளைவிக்கின்ற முறையில்

விளம்பரங்களுக்கு ஏற்பாடு செய்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது விரும்பத்தகாத முறையிலே அந்த வீட்டினுடைய அழகை கெடுக்கின்ற வகையிலே சுவர்களிலே எல்லாம் அப்படி விளம்பரங்கள் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னால்-என்னுடைய பெயர் என்று அவர் சொல்லவில்லை. ஆனால் என்னுடைய பெயரால் யாராவது செய்தால் என்ன கதி என்று கேட்டார்கள்.

(இரவு 7—30)

ஆகவே, நாம் நல்ல எண்ணத்தோடு, நல்ல முயற்சிகளை மேற்கொள்கிறோம். அப்படிப்பட்ட ஐயப்பாடுகள் இங்கே தேவை இல்லை. நாம் எல்லோருமே சேர்ந்து இந்த அழகைப் பாதுகாக்கின்ற, சூழ்நிலையைப் பாதுகாக்கின்ற, திறந்தவெளிகளை, நல்ல கண்காட்சியோடு பாதுகாக்கின்ற முறையிலே அந்த முயற்சியிலே நாம் ஈடுபடுவோம். இங்கே போடப்படுகின்ற அந்தக் குழுவிலே கூட யார் இருப்பார்கள், எப்படி முடிவு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதிகாரிகள் பொறுப்பிலே விட்டுவிட்டால் அவர்கள் இஷ்டத்திற்கு எதையாவது செய்வார்கள் என்று தான் அதிகாரிகள் அல்லாத ஒரு குழுவைப் போடுகிறோம். அதிகாரிகள் அல்லாத குழுவைப் போட்டாலும் அதற்கும் நாம் ஐயப்பட்டால், அதற்கு நாம் எங்கே போவது?

ஆகவே, இருக்கின்ற நம்முடைய நடைமுறைகளை வைத்து, நம்மிலே இருக்கிறவர்களை வைத்துத் தான் இதை எல்லாம் நிறைவேற்ற இருக்கிறோம். ஆகவே, நம்பிக்கையோடு, இந்தச் சட்டத் திருத்த முன் வடிவை நிறைவேற்றித் தாருங்கள். நம்பிக்கையோடு நாம் இந்தக் காரியத்திலே ஈடுபடுவோம் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

1986 மே 13]

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு-3. சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause-3, in the proposed new section 3-A(1) for the words" "One thousand Rupees" occurring at the end *substitute* the words "Five Thousand Rupees".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைக் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

பேரவைத் பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (14—5—1986) காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7—33 மணிக்கு ஒத்திவைக்கப் பற்றது.

1986 மே 13

(8) பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

98. தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்படி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு-1) துறையின் 27—1—1986-ஆம் நாளிட்ட 147-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு சாராய (மொத்த விலையில் வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 24—3—1986-ஆம் நாளிட்ட 332-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

100. மதுரை மாவட்டம், வேடசந்தூர் தாலுக்காவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 18—10—1985-ஆம் நாளிட்ட 780-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

101. தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழித்தல் மற்றும் ரயத்துவாரி முறையில் மாற்றுதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 23-8-1984-ஆம் நாளிட்ட 914-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழித்தல் மற்றும் ரயத்துவாரி முறையில் மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

102. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையகத்தின் 1983–84-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

103. பட்டுக்கோட்டை அழகிரி போக்கு வரத்துக் கழகத்தின் 1983–84-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

1986 மே 13]

104. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1982—83-ம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

105. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1983—84-ம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].(தமிழ், ஆங்கிலம்).

106. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தின் 1982—1983-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

107. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தின் 1983-84ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

108. அண்ணா பொறியியல் கழகத்தின் 1982-83-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

109. மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 1982—1983-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

110. மதுரை பாண்டியன் பொறியியல் கழகத்தின் 1983—1984-ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனையதாள்கள்.

185. 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1986). (இணைப்புடன்).

186. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பதினைந்தாவது பட்டியல்).

1986 மே 13

இணைப்பு

(....-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் எண் 757 (5285) க்கான விடையைக் காண்க).

1982–83-ஆம் ஆண்டில் பாசன வளம் பெருக்குதல், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்: கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம், உபரி நிலம் பகிர்ந்தளித்தல், கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டம்: பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவியளித்தல், வீட்டு மனை ஒதுக்குதல்: குடிசை வாழ் மக்களுக்கு உதவி அளித்தல்: பொருளாதார வகையில் நலிவுற்றபிரிவினருக்கு வீடுகள் அளித்தல், மரம் நடுதல், கரிம வாயு நிலையம் அமைத்தல் சுகாதார துணை நிலையங்கள், சிறார் நல மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம், 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் சேர்த்தல், முதியோர்க் கல்வி, சிறு தொழில்கள் தொடங்குதல் ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தமிழ்நாடு மிஞ்சிவிட்டது.

1983–84-ல் தமிழ்நாடு பாசன வளம் பெருக்குதல், பயறு வகைகள் உற்பத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம், உபரி நிலம் பகிர்ந்தளித்தல், கொத்தடிமை மறுவாழ்வுத் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவியளித்தல், குடிநீர் வழங்குதல் வீட்டு மனைகள் வழங்குதல், கட்டுமான உதவியளித்தல், மரம் நடுதல் கரிம வாயு நிலையம் அமைத்தல்: கருத்தடை அறுவை சிகிச்சை: ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல், சிறார் நல மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம், 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகள் சேர்த்தல், முதியோர்க் கல்வி ஆகியவற்றில் தமிழ்நாடு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சிவிட்டது.

1984–85-ல் பாசன வளம் பெருக்குதல், பயறு வகைகள் உற்பத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், உபரி நிலம் பகிர்ந்தளித்தல், கொத்தடிமை மறுவாழ்வு திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினர் குடும்பங்களுக்கு உதவியளித்தல், குடிநீர் வழங்குதல்: வீட்டு மனைகள் வழங்குதல், கட்டுமான உதவியளித்தல், குடிசை வாழ் மக்களுக்கு உதவியளித்தல், பொருளாதார வகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வீடுகள் அளித்தல், கிராமங்களுக்கு மின் இணைப்பு அளித்தல்,, விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளித்தல், மரம் நடுதல்: கரிம வாயு நிலையம் அமைத்தல், கருத்தடை அறுவை சிகிச்சை, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல், சுகாதார துணை நிலையங்கள் அமைத்தல், 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகளைச் சேர்த்தல்: முதியோர்க் கல்வி சிறு தொழில் நிலையங்கள் அமைத்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விஞ்சியுள்ளது.